தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம்

பகுதி-2

முதுமுனைவர்
ம.சா. அறிவுடைநம்பி

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம்

பகுதி-2

முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி
இணைப்பேராசிரியர் - தலைவர்
அரியகையெழுத்துச்சுவடித்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

ISBN : 81-7090-319-X

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 259

திருவள்ளுவராண்டு 2034 மார்கழி - திசம்பர், 2003

நூல்	:	தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் - பகுதி 2.
ஆசிரியர்கள்	:	முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி
மொழி	:	தமிழ்
பொருள்	:	இலக்கியம்
பதிப்பு	:	முதற்பதிப்பு - 2003
பக்கம்	:	viii +292 = 300
தாள்	:	டி.என்.பி.எல்.மேப்லித்தோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	உரூ. **85.00**
படிகள்	:	1000
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் இ. சுந்தரமூர்த்தி

துணைவேந்தர்

அணிந்துரை

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் பல்வேறு கலைகளையும் பாராட்டிப் போற்றி வளர்த்த பெருமைக்குரியவர்கள்.

மராட்டிய மன்னர்கள் காலத்தில் தோன்றிய இசை, சிற்றிலக்கியம், மொழிபெயர்ப்பு இலக்கியம், பத இலக்கியம், வண்ண இலக்கியம் ஆகியவற்றை இந்நூலாசிரியர் இந்நூலில் தொகுத்து நன்கு விளக்கி எழுதியுள்ளார்.

மராட்டியர் காலத்தில் விளங்கிய சமய, சமுதாய நிகழ்வுகளை இவ்விலக்கியங்கள் எவ்வாறு பதிவு செய்துள்ளன என்பதை இவ்வாய்வு நூல் நன்கு புலப்படுத்துகிறது.

இசைப்பாட்டு வகைகளுள் ஒன்றான பத இலக்கியம் குறிப்பிடத்தக்கது. இறைவன் மீது பக்தி உணர்வோடு பாடிய இசைப் பதங்கள் இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

பக்திப் பதங்கள், பாவ பதங்கள், வைராக்கிய பதங்கள், சிருங்காரப் பதங்கள், நகைச்சுவைப் பதங்கள், நீதிப் பதங்கள், மங்களப் பதங்கள் எனப் பதங்களின் பல்வேறு வகைகளைச் சுட்டிக்காட்டுவது குறிப்பிடத்தக்கது.

வண்ணங்கள், ஓசை விகற்பங்கள் ஆகியவை சந்தங்கள் பற்றியதாகும். பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த புலவர்கள் இறைவன் மீதும், தம்மை ஆதரித்தவர்கள் மீதும் பல்வேறு வகையான வண்ணக் கவிகளைப் பாடினர்.

தஞ்சை நாயகன்பிள்ளை வண்ணம் இரண்டாம் சகசி மன்னர் காலத்தைச் சேர்ந்தவர். வண்ண இலக்கியம் பற்றிய பாடல்கள், அக்காலத்துச் சூழலை விரிவாக விளக்கி உள்ளன.

தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் என்னும் இந்நூலினை வெளியிட்ட நூலாசிரியர் முனைவர் ம.சா. அறிவுடைநம்பி அவர்களுக்கும், நூலாக நன்முறையில் வெளியிட்ட தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையினருக்கும் பாராட்டுதல்கள்.

தஞ்சாவூர் (இ. சுந்தரமூர்த்தி)
1.12.2003

முன்னுரை

"தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம்" என்ற ஆய்வுத்திட்டத்தின் முதல் பகுதியில் பத்து நூல்கள் திறனாய்வு செய்யப் பட்டுள்ளன. இரண்டாம் பகுதியான இதில் ஏழு நூல்கள் திறனாய்வு செய்யப்பட்டுள்ளன. இப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஏழு நூல்களின் மூலச்சுவடிகள் தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஆய்வுப் பகுப்பு

இதில் இடம்பெறும் இலக்கிய வகைகள் வருமாறு :

1. நாடக இலக்கியம்
   - அ) விலாச நாடகங்கள்
   - ஆ) பிற நாடகம்
2. மொழிபெயர்ப்பு இலக்கியம்
3. பத இலக்கியம்
4. வண்ண இலக்கியம்

நாடக இலக்கியத்தில் முதல் பகுதியில் மூன்று விலாச நாடகங்கள் திறனாய்வு செய்யப்பட்டன. இப்பகுதியில் மதன சுந்தரப் பிரசாத சந்தான விலாசம், பாண்டி கேளீ விலாசம் எனும் இரு நாடகங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. தஞ்சை மராட்டியர் வளர்த்த விலாச நாடகங்கள் ஏழு ஆகும். இவற்றுள் இதுவரை ஐந்து நாடகங்கள் கிடைத்துள்ளன. இரண்டாம் சகசி மன்னர் எழுதிய சங்கர நாராயண விலாசமும், ஆசிரியர் பெயர் தெரியாத சகசிராச விலாசமும் கிடைக்கப் பெறின் அடுத்துவரும் பகுதிகளில் ஆய்வு செய்யப்பெறும்.

'பிற நாடகங்கள்' என்ற பகுதியில் இரண்டாம் சகசி மன்னர் எழுதிய 'காவேரி கல்யாணம்', 'அதிரூபவதி கல்யாணம்' என்ற இரு நாடகங்களில் 'காவேரி கல்யாணம்' முதல் பகுதியில் வெளியிடப்பட்டது. இப்பகுதியில் 'அதிரூபவதி கல்யாணம்' இடம்பெறுகிறது. தவிர

அருணாசலக் கவிராயர் எழுதிய 'அசோமுகி நாடகம்', இரண்டாம் சரபோசி எழுதிய 'இராதா கிருட்டிண நாடகம்', அனந்தபாரதி இயற்றிய 'பாகவத தசம ஸ்கந்த நாடகம்' ஆகிய மூன்று நாடகங்களும் கிடைக்கப் பெறின் அடுத்துவரும் பகுதிகளில் ஆய்வு செய்யப்பெறும்.

ஐந்து பல்வேறு வகைப்பட்ட நூல்கள் 'மொழி பெயர்ப்பு இலக்கியம்' என்ற வகையில் அடங்குகின்றன. ஆயின் இப்பகுதியில் இடம்பெறும் 'சிவகாமசுந்தரி பரிணயம்' எனும் நூல் நாடகத்தைச் சேர்ந்தது. இந்நாடகம் தெலுங்கு மொழியிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய நான்கு நூல்களும் அடுத்துவரும் பகுதி களில் இடம்பெறும்.

'பத இலக்கியம்' என்ற வகையில் வாசுதேவகவி, இராமபாரதி ஆகிய இருவரும் பாடிய 'சிங்காரப் பதங்கள்' இப்பகுதியில் இடம் பெறுகின்றன. இவ்விரு நூல்களும் இதுவரை அச்சாகவில்லை. இவற்றின் மூலப்பிரதிகள் சரசுவதி மகால் நூலகத்தில் சுவடிகளாக உள்ளன. எனவே இவ்விரண்டு நூல்களின் திறனாய்வை அடுத்து அவற்றின் மூலப்பாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. வாசுதேவகவி பாடிய பதங்களில் தமிழ்ப் பதங்கள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன.

'வண்ண இலக்கியம்' என்ற வகையில் தஞ்சை நாயகம்பிள்ளை வண்ணம்' என்ற நூல் இப்பகுதியில் இடம் பெறுகிறது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள ஏழு நூல்களில் 'தஞ்சை நாயகம் பிள்ளை வண்ணம்' எனும் நூலுக்கு மட்டும் ஆசிரியர் பெயர் தெரிய வில்லை. வாசுதேவகவியின் சிங்காரப் பதங்கள், இராமபாரதியின் சிங்காரப் பதங்கள், முத்துக்கவியின் அதிரூபவதி கல்யாணம், தஞ்சை நாயகம்பிள்ளை வண்ணம் ஆகிய நான்கு நூல்கள் இரண்டாம் சகசி மன்னர் காலத்தைச் (1684–1712) சேர்ந்தவையாகும். சிவகாமசுந்தரி பரிணய நாடகத்தைத் தெலுங்கு மொழியில் முதலாம் துளசா மன்னர் (1728–1736) எழுதியுள்ளார். இந்நூலே தமிழில் மொழிபெயர்த்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அருணாசலக்கவியின் மதனசுந்தரப் பிரசாத சந்தான விலாசமும், நாராயணகவியின் பாண்டி கேளீ விலாசமும் கடைசி சிவாசி மன்னர் காலத்தைச் (1832–1855) சேர்ந்தனவாகும்.

இருபகுதிகளிலும் இடம்பெறாத நாடகங்கள், கோவை, சதகம், பிள்ளைத்தமிழ், ச 'த்திரம், பிரபந்தம், அம்மானை, புராணம், தலபுராணம்,

பிற இலக்கியம், மொழிபெயர்ப்பு, மருத்துவம் போன்ற இலக்கிய வகைகள் அடுத்துவரும் பகுதிகளில் இடம்பெறும்.

தஞ்சை மராட்டியர் வளர்த்த தமிழ் இலக்கியம் முழுவதையும் ஆய்வு செய்த பின்னரே அவர்கள் காலத்து மக்களின் பழக்க வழக்கங்கள், ஆடை, அணிகலன்கள், மொழி நடை போன்ற செய்திகள் முழுமையாகக் கிடைக்க முடியும். அதனால் இப்பகுதியில் மராட்டியர் களின் 'சமூக வாழ்க்கை' என்ற இயல் இடம்பெறவில்லை.

இந்நூலுக்கு உறுதுணையாக இருந்த நூல்கள், சுவடிகளின் பட்டியல் 'துணைநூற்பட்டியல்'லாக இடம் பெறுகிறது.

பின்னிணைப்புகளில் இருபகுதிகளிலும் ஆய்வு செய்யப் பெற்ற நூல்களில் இடம்பெற்ற பேச்சுவழக்கு, வடமொழி, பிறமொழி, அடுக்கு, சிதைவு, எதிர்மறை ஆகிய சொற்களின் பட்டியல் அகரவரிசையில் தரப் பட்டுள்ளன. பதம், வண்ணம் ஆகிய இலக்கியங்களின் பட்டியல் கால முறைப்படித் தொகுத்துத் தரப்பட்டுள்ளது. இந்நூலில் இடம்பெற்ற வாசு தேவகவி, இராம பாரதி ஆகியோர் பாடல்களின் அகரவரிசைப் பட்டியலும் இடம் பெற்றுள்ளது.

ஆய்வுப் போக்கு

டாக்டர் உ.வே.சாமிநாதையர் தாம் பதிப்பித்துள்ள நூல் களுக்கு விரிவாகத் தந்துள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்று இந் நூலில் இடம்பெறும் நூல்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆய்வுரையைப் படித்தால் மூல நூலைப் படித்தது போன்று அமையும் விதத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நூலில் புதிதாக இடம் பெற்ற பதங்கள், வண்ணங்கள் ஆகிய இலக்கிய வகைகள் தோன்றித் தஞ்சை மராட்டியர் காலம் வரை வளர்ந்த செய்திகள் பொது முன்னுரை யாக இடம்பெற்றுள்ளன.

நன்றியுரை

இந்த ஆய்வை மேற்கொள்வதற்குப் பெரிதும் ஊக்க மளித்த முன்னாள் துணைவேந்தர்கள் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கட்கும், முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கட்கும் நன்றி.

குறுந்தகட்டில் பதிவு செய்து வெளிவருவதற்குப் பல வகை

களிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துப் பேருதவி செய்த முன்னைத் துணைவேந்தர் முனைவர் கதிர் மகாதேவன் அவர்களுக்கு நன்றி.

குறுந்தகட்டில் வெளிவருவதுடன் அமையாமல் நூலாகவும் வெளியிடுவது சிறந்தது என்ற முடிவை எடுத்துத் தற்பொழுது நூலாக்கி, அரியதொரு அணிந்துரையையும் வழங்கிய துணைவேந்தர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கு நன்றி.

கணினியில் பதிவு செய்து உதவிய நிலஅறிவியல் துறையின் முன்னாள் தலைவர் முனைவர் ஞா. விக்டர் இராசமாணிக்கம் அவர்கட்கும், அத்துறையைச் சார்ந்த அலுவலக நண்பர்களுக்கும், பதிவாளர் (பொறுப்பு) திரு இரா. ஜெயக்குமார் அவர்களுக்கும், உதவிப் பதிவாளர் திரு செ. பழனியப்பன் அவர்களுக்கும், பதிப்புத்துறையைச் சார்ந்த நண்பர்களுக்கும் நன்றி.

வாசுதேவகவியின் பதங்கள், இராமபாரதியின் பதங்கள் ஆகிய நூல்களின் மூலச்சுவடிகளைப் படித்துப் படியெடுப்பதற்கு உதவிய சரசுவதி மகால் நூலகத்தாருக்கு நன்றி.

இந்த ஆய்வறிக்கையைப் படித்துப் பயனுள்ள கருத்துக்களை வழங்கி நூலாக வெளியிடுவதற்குப் பரிந்துரை செய்த அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையின் முன்னாள் பேராசிரியர் முனைவர் எம்.எஸ். கோவிந்தசாமி அவர்களுக்கும் நன்றி.

(ம.சா. அறிவுடைநம்பி)

பொருளடக்கம்

			பக்கம்
	அணிந்துரை		iii
	முன்னுரை		v
1.	நாடக இலக்கியம்		
	அ) விலாச நாடகங்'கள்		
	1.	மதனசுந்தரப் பிரசாத சந்தான விலாசம்	1
	2.	பாண்டி கேளீ விலாசம்	10
	ஆ) பிற நாடகம்		
	3.	அதிரூபவதி கல்யாணம்	.22
3.	மொழிபெயர்ப்பு இலக்கியம்		
	4.	சிவகாமசுந்தரி பரிணய நாடகம்	37
4.	பத இலக்கியம்		63
	5.	வாசுதேவகவியின் சிங்காரப் பதங்கள்	67
		வாசுதேவகவியின் பாடல்கள்	85
	6.	இராமபாரதியின் சிங்காரப் பதங்கள்	120
		இராமபாரதி பதங்கள் (ஸாஹுராஜனைப் பற்றியவை)	134
5.	வண்ண இலக்கியம்		185
	7.	தஞ்சை நாயகம்பிள்ளை வண்ணம்	190
6.	துணைநூற்பட்டியல்		199
7.	பின்னிணைப்புகள்		203
	1.	பேச்சு வழக்குச் சொற்கள்	206
	2.	வடமொழிச் சொற்கள்	241
	3.	பிறமொழிச் சொற்கள்	273
	4.	அடுக்குச் சொற்கள்	274
	5.	சிதைவுச் சொற்கள்	280
	6.	எதிர்ச் சொற்கள்	284

7.	பத இலக்கியங்கள்	285
8.	வண்ண இலக்கியங்கள்	287
9.	வாசுதேவகவியின் பதங்கள் பாடல் முதற்குறிப்பு அகரவரிசை	289
10.	இராமபாரதியின் பதங்கள் பாடல் முதற்குறிப்பு அகரவரிசை	290

நாடக இலக்கியம்

அ) விலாச நாடகங்கள்

1. மதனசுந்தரப் பிரசாத சந்தான விலாசம்
2. பாண்டி கேளீ விலாசம்

ஆ) பிற நாடகம்

3. அதிரூபவதி கல்யாணம்

1

மதனசுந்தரப் பிரசாத சந்தான விலாசம்

இந் நாடகத்தை இயற்றியவர் அருணாசலக் கவியாவார். இதனை,

".அருணாசல கவி அன்புடன் இசைத்த
திருவளர் நாடகம் செழிக்கவே வாழி" (35 – 36)

எனவரும் பகுதியால் அறியமுடிகிறது. இவர் வரலாறு எதுவும தெரியவில்லை. இந்நூலில்,

"மன்னவர் மன்னன்மணி முடிதரித் தோன்
போசல குலத்தில் புகழுடன் உதித்த
ராஜசர பேந்திரன் ரமணீய பாலன்
சித்தம் மகிழ்ந்த சிவாஜிரா ஜேந்திரன்" (30 – 33)

எனவரும் பகுதியினால் இவர் தஞ்சை மராத்திய மன்னன் கடைசி சிவாஜியின் அவைக்களப் புலவராக இருந்திருக்கலாம் என எண்ணமுடிகிறது. எனவே இம்மன்னன் ஆட்சியிலிருந்த காலமாகிய 1832 முதல் 1855 வரை இவரது காலத்தையும் குறிப்பிட்டுக் கூறலாம்.

கதாசங்கிரக அகவலிலேயே இக்குறிப்புகள் காணப்படுகின்றன. நூலின் இடையில் வேறு எந்தப் பகுதியிலும் இவரைப்பற்றியும், இவரை ஆதரித்துப் போற்றிய கடைசி சிவாஜியைப் பற்றியும் எவ்விதக் குறிப்பும் காணப்பெறவில்லை. இந்நூலின் ஓலைச்சுவடிகள் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் இருக்கின்றன.[1] 18 ஏடுகளைக் கொண்ட இந்நூலின் ஒவ்வொரு ஏட்டிலும் 3 முதல் 5 வரிகள் வரை காணப்படுகின்றன. இந்நூலைக் கி. வா. செகன்னாதன் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.[2]

நூலமைப்பு

இந்நூல் பின்வருமாறு அமைந்துள்ளது.

---

1. L. Olaganatha Pillay, **A Descriptive Catalogue of the Tamil Manuscripts, Volume I**, T.M.S.S.M. Library. Tanjore. 1964. pp. 327-329. Mss 646 No 600.
2. கி. வா.ஜகந்நாதன் (ப.ஆ.), 'மதனசுந்தரப் பிரசாத சந்தான விலாசம்', **மூன்று தமிழ் நாடகங்கள்**, தமிழ்நாடு அரசு, சென்னை, 1950.

1. காப்பு	–	விருத்தம்
2. கதாசங்கிரக அகவல்		
3. கட்டியக்காரன் வருகை	–	விருத்தம்
4. விருத்தப் பாக்கள்	–	4
5. கொச்சகம்	–	1
6. சிந்து	–	16
7. வசனம்	–	4

மொத்தம் 24 பாக்கள் உள்ளன.

முதலில் விநாயகர் காப்புடன் நாடகம் தொடங்குகிறது, அடுத்துக் கதைச் சுருக்கத்தை ஓர் அகவல் தெரிவிக்கிறது. இதன் பிறகே நாடகம் தொடங்குகிறது.

நூல் நுதலிய பொருள்

மதன சுந்தரேசரைக் குலதெய்வமாக உடைய சோழ மன்னன் ஒருவன் பாண்டியன், சேரன், கொங்கு நாட்டரசன், கேரள நாட்டு வேந்தன் ஆகிய நால்வருடைய புதல்வியர் நால்வரை மணந்து நான்கு புதல்வர்களைப் பெற்றுச் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வருகிறான். இந்நால்வரும் சேர்ந்து கழற்சிக்காய், ஊசல், ஆனைப்பந்து, குதிரைப்பந்து, கிட்டிப்பந்து, பாண்டி, உப்புக்கோடு, நாலுமூலைத்தாச்சி, கண்ணாமூச்சி, கொப்பி ஆகிய விளையாட்டுக்களைப் பாடி ஆடினார்கள்; மதன சுந்தரேசுவரரைப் புகழ்ந்து பாடினார்கள்.

குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்து மகிழ்ந்த மன்னன் மதன சுந்தரேசுவரரைப் போற்றி வணங்கி, இந்தப் புதல்வர்களுக்கு நீண்ட வாழ்நாளும் பிற நலங்களும் அருளவேண்டும் என்று வேண்டினான். அவனுடைய பக்திக்கு இரங்கிய இறைவன் காமசுந்தரி அம்பிகையோடு எழுந்தருளினார். அரசன் பெருமானைத் துதித்துப் பரவினான். காம சுந்தரேசுவரியைப் பார்த்து, 'தாயே! எங்களுக்குத் திருவருள் புரியவேண்டும்' என்று வேண்டித் துதித்தான். இறைவியும் இறைவனிடம், அந்த நால்வருக்கும் சீரும் வெற்றியும் செல்வமும் சித்தியும் நீண்ட வாழ்நாளும் உடல் வலுவும் இன்னும் பிற நலங்களும் கிடைக்கும்படிச் செய்ய வேண்டுமென்று திருவாய் மலர்ந்தருளினாள். அப்படியே அரசனும் அரசியும் புதல்வர்களும் எல்லா நலங்களும் எய்தி வாழுமாறு சிவபெருமான் அருள் செய்தார்.

– இத்துடன் நாடகக்கதை முடிகிறது.

பாத்திரப் படைப்புகள்

சோழேந்திரன், சோழன் மனைவியர், புதல்வர்கள், கட்டியக்காரன் ஆகியோரே பாத்திரங்களாவர். இவர்களுள் கட்டியக்காரன் நாடகத்தைத் தொடங்கி வைத்து நாடகக் கதையை நடத்திச் செல்பவனாக வருகின்றான். சோழேந்திரன் இந்நாடகத் தலைவனாவான். ஏனையோர் இந் நாடகத்திற் குரிய துணைப் பாத்திரங்களாகவே படைக்கப்பட்டுள்ளனர்.

கட்டியக்காரன் :– அரசனுக்குக் கட்டியம் கூறும் தொழிலை உடைய இவன் மேடையில் தோன்றி அவையோர்க்கு நாடகத்தைத் தொடங்கி வைக்கிறான். வாசனை மிக்க மலர்களை அணிந்துள்ளான். அனைவரிடமும் இனிமையாகப் பேசும் இயல்புடையவன். அழகிய மணிமாலை அணிந்த மார்பன். அழகாய் ஒயிலாக நடந்து செல்பவன். தந்திரங்கள் மிக அறிந்தவன். வெள்ளியினாலான பிரம்பைக் கையில் ஏந்தியவன். கெண்டைத்துகில் ஆடை அணிந்து தலையில் முண்டாசு வைத்துக்கொண்டு கண்டசரம் பதக்கம் பூண்டு மேடையில் தோன்றுகிறான்.

சோழேந்திரன் :– இவன் இந்நாடகத் தலைவன். சோழேந்திரன் என்று மட்டும் காணப்படுகிறது. சோழ நாட்டை ஆண்ட மன்னர்களில் இவனும் ஒருவன் என்ற அளவிலேயே கொள்ளவேண்டும். சோழேந்த்ர துரை, சோழ ராஜேந்திரன், சோழேந்த்ர பூமன் என அழைக்கப்பெறுகின்றான்.

தலையில் நவரத்தினங்களாலான மகுடத்தையும், மார்பினில் மணம் வீசும் மாலையையும், இரத்தினங்களாலான ஆபரணங்களையும் அணிந்திருக் கிறான். இவன் சபைக்கு வரும்பொழுது ஏழுலகத்தவர்களும் இவனைக் கொண்டாடுகின்றனர்; மகிழ்ச்சியுடன் மங்களம் பாடுகின்றனர். தனக்கு இரு பக்கத்திலும் மனைவியர் நால்வருடனும், புதல்வர்கள் நால்வருடனும் வருகின்றான்.

பிறருக்குத் தான தருமங்கள் செய்கின்ற பிரபு. பிறநாட்டு மன்னவர் களும் பணிந்து வணங்கும் பெருமையுடைய மலர்ப்பாதங்களை உடையவன். சித்த சுத்தி உள்ள நல்ல அன்பன். சார்வபூமன்.

தான் குலதெய்வமாகப் போற்றி வழிபடும் சிவபெருமானிடம் தனக்கு உலகம் போற்றுமளவிற்குப் புகழையும், நீண்ட வாழ்நாளையும், திடத்தையும், மிகுந்த செல்வத்தையும், வன்மை மிகும் வெற்றியையும் அருளுமாறு வேண்டுகிறான். மேலும் நித்திய மங்களம் நிறைந்த சாம்ராஜ்யம், நெஞ்சம் மகிழ்ச்சி பெறும் பொருட்டு நீர்மை, பாக்கியம், வித்தை, அறிவு, வேண்டிய சுபங்கள் முதலானவற்றை மேன்மேலும் பெறும்பொருட்டு அருள வேண்டு கிறான். அதன்படியே இவன் பக்திக்கு மெச்சிய இறைவனும் பல வரங்களையும்

அருள்கின்றான்.

சோழன் மனைவியர் :- சோழ நாட்டு வேந்தன் ஒருவன் பாண்டியன், சேரன், கொங்கு நாட்டரசன், கேரள நாட்டு மன்னன் ஆகிய நால்வரின் புதல்வியர் நால்வரை மணந்துள்ளான். இவர்கள் நால்வரும் திங்களைப் போன்ற முகமுடையவர்களாவர். இவர்கள் பெயர் குறிப்பிடப்படவில்லை. மாறாகப் பாண்டிய அரசன் பெற்ற மயிலும், சேரன் பெற்ற இன்பக் குயிலும், கொங்கு நாட்டரசன் பெற்ற அன்னமும், கேரள நாட்டு வேந்தன் மகளாம் சொன்னமும் (சுவர்ணம்) என்று காணப்படுகின்றன.

சோழ இளவரசர்கள் :- சோழன் புதல்வர்களாக நால்வர் வருகின்றனர். இவர்கள் ஒற்றுமையுடன் திகழ்கின்றனர். பல நற்குணங்களை உடையவர் களான இவர்கள் ஒன்று சேர்ந்து பல விளையாட்டுகளை ஆடுகின்றனர். சிவபெருமான்மீது அளவுகடந்த பக்தி கொண்டவர்கள்.

இறைவன் பெருமை

விநாயகர், மதன சுந்தரேசுவரர், உமையவள், இந்திரன் ஆகியோர் பெருமைகள் பேசப்படுகின்றன.

சோழன் புதல்வர்கள் நால்வரும் ஒன்று சேர்ந்து கழற்சிக்காய்களைக் கொண்டு விளையாடுகின்றனர். அப்பொழுது அவர்கள் 1 முதல் 10 வரை எண்களைக் கூறி ஆடும்பொழுது,

"ஒன்றே தெய்வமதாம் இரண்டு சக்திசிவமாம்
மூன்றேமும் மூர்த்திகளாம் நான்கென் பதுவேதமாம்
அஞ்சேபஞ் சவர்ணமாம் ஆறென் பதுசாஸ்திரம்"[3]

என்று இறைவனோடு எண்களை இணைத்துக் கூறுகின்றனர்.

விநாயகர் :- 'நாடகம் தொடங்குவதற்கு முன்னர் விநாயகர் பெருமை கூறி வழிபாடு செய்யப்பெறுகிறது. அப்பொழுது இவர் பெருமையைக் கட்டியக்காரன் கூறுகின்றான்.

ஐங்கரர், இன்ப விநாயகர், செல்வ விநாயகமூர்த்தி, தந்திமுகச்செல்வ விநாயகர் என அழைக்கப் பெறுகின்றார். எப்பொழுதும் தன்னை நாடி வருகின்ற அடியவர்களுக்கு வரம் நல்குபவர்; அருள் வழங்கும் கண்களினன்; இவரணிந்துள்ள கனகரத்தின முத்து நகை ஒளிவீசுகிறது; கற்பக மாலையும் புனைந்த மலர்களும் மணம் வீசுகின்றன. உமையவள்/தவம் செய்து பெற்றவர்.

3. கி. வா. ஜகந்நாதன், மு. கா. நூல், பாடல் 9.

மதன சுந்தரேசுவரர் :- சோழ மன்னனின் குலதெய்வமாக விளங்குபவன். மதன சுந்தரர், ஈசுவரர், சுந்தரமூர்த்தி, சதாசிவன் என அழைக்கப் பெறுகின்றனன். சுவாமி, தேவனே, தயாபரனே எனவும் அழைக்கப் பெறுகின்றனன். பொன்னாலான ஆபரணங்கள் அணிந்த மார்பினன்; சுகரூபன்; அடியார்கள் மகிழும்பொருட்டு இன்பம் நல்கி நன்னயம் செய்தவன்; மங்கள கல்யாண வைபவன்; பங்கயச் செங்கைகள் கூடிப் பணிந்திடப் பலன்கள் எல்லாம் கைகூட அருள் புரிபவன்; இன்பத்தை நல்கும் மதனசுந்தர ஆண்டவன்.

இத்தகைய பெருமை பெற்ற இறைவனைச் சோழனின் புதல்வர்கள் தங்களுக்கு வரங்கள் நல்கும்படி வேண்டி வழிபட்டனர். இந்திர வைபவமாகிய வாழ்வுகள் எல்லாம் தந்து காப்பவராகிய அவரைக் கொண்டாடுகின்றனர்.

சோழேந்திரன், "அழகுக்கு அழகு சேர்ந்த மனத சுந்தரேசுவரரே! எங்களுக்கு நலம் உண்டாகச் சந்ததிகள் அருள் செய்தீர். இப்பாலகர்களின் விளையாட்டுகளை, விந்தைகளைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தோம். இவ்விளம் சிறுவர்களுக்கு எல்லா நலன்களும் கிடைக்க அருள் செய்ய வேண்டும்" என்று இறைஞ்சுகிறான்.

சோழனின் அன்புக்கு இரங்கிய இறைவன் அவனுக்கு அருள் செய்யும் நோக்கத்துடன் தம் துணைவி காமசுந்தரேசுவரியுடன் காட்சி தருகின்றான். சோழன் விரும்பியவாறு புதல்வர்களுடன் நீண்ட வாழ்நாளுடன் நினைத்த சித்திகளைப் பெறுவதற்கும், நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமுமாக இவ்வுலகில் வாழ்ந்து உலகம் போற்றும் வகையில் செங்கோல் நடத்துவதற்கும் வரம் அருளுகின்றார்.

உமையவள் :- சங்கரி, கிருபாகரி, காமசுந்தரேசுவரி என அழைக்கப் பெறுகின்றாள். சோழனுக்கு வரங்கள் நல்குவதற்காகத் தம் கணவருடன் சேர்ந்து அவனுக்குக் காட்சி தருகின்றாள். தாமரை முகத்தினள். இவ்வுலகிற்குத் தாயானவள்.

இந்திரன் :- இந்திரன், தேவேந்திரன் என அழைக்கப் பெறுகின்றான். தேவேந்திரன் போன்று செல்வத்திலும் பிறவற்றிலும் சோழன் இருக்கிறான். சோழனை இந்திரனோடு ஒப்பிடுவதற்காக ஆசிரியர் இவ்வாறு கூறியுள்ளார். இந்திரன் பெற்ற செல்வம் போலத் தனக்கும் அருளச் சிவபெருமானிடம் சோழன் வேண்டுகிறான்.

விளையாட்டுகள்

சோழன் புதல்வர்கள் நால்வரும் ஒன்று சேர்ந்து பல விளையாட்டுகளை

விளையாடுகின்றனர்.

"விளையாடு வோம்வாரும் - தம்பிமாரே
விளையாடு வோம்வாரும் தம்பிமாரே"[4]

என அழைத்துக்கொண்டு விளையாடத் தொடங்குகின்றனர்.

கழற்சிக்காய்களைக் கையில் எடுத்து முதலில் விளையாடுகின்றனர். கழற்சிக்காய்களைக் கோட்டில் வைத்து ஆடுகின்றனர். நான்கு பேரும் நடுக் கோட்டில் காய்களை வைத்து நான்கு திசையில் உள்ளவர்களும் போற்றிப் புகழும்படி வெற்றியுடன் விளையாடுகின்றனர்.

அடுத்ததாக ஆனைப்பந்து, குதிரைப்பந்து ஆகிய விளையாட்டுகளை ஆடுகின்றனர். ஒருவருக்கொருவர் எதிரெதிராக நின்று உற்சாகமாய் மகிழ்ச்சியுடன் விளையாடுகின்றனர். ஒருவர் எறிந்த பந்தை இன்னொருவர் கையால் பிடித்துச் சரிசமமாய் வெற்றியைத் தங்களுக்குள்ளே தரித்து, சாதுரியத்தோடு மகிழ்ச்சியுடன் விளையாடுகின்றனர். மூத்தபிள்ளை அழகிய பந்தை எடுத்துக் கிட்டியால் வீசுகின்றான். அதனை இளைய பிள்ளைகள் தாவித் தடுக்கும்படியாகப் பிடிக்க முயல்கின்றனர்.

அடுத்ததாகப் 'பாண்டி' என்று சொல்லப்படும் 'சில்லு' விளையாட்டை ஆடுகின்றனர். தம்பிமாரே! அழகிய சில்லைத் தொட்டுக் கோட்டில் எறிந்து சுகமாக விளையாடுவோம்! வாரும்! இவ்விளையாட்டு விந்தையானது. இதனை விளையாட விளையாட ஆர்வம் அதிகரிக்கும்.

"ஒண்ணானில் சில்லெறிந்து
ஒடிக்கா லால்எற்றி
உசிதமாய் ரெண்டான்மூணான்
நாலான் வரைக்கும்ஆடி
வண்ணச் சிறுகோட்டில்
வகையாய்ச்சில் லையெறிந்து"[5]

விளையாடுகின்றனர்.

அடுத்து 'உப்புக்கோடு' விளையாட்டை மகிழ்ச்சியுடன் ஆடுகின்றனர். யாரும் தடுக்காதவண்ணம், முன்னதாகவே தாண்டி எடுத்து உப்பு விளையாடுகின்றனர்.

பின்னர் நன்மைகள் உண்டாகும் பொருட்டு 'நாலுமூலைத்தாச்சி'

---

4. கி. வா. ஜகந்நாதன், மு. கா. நூல், பாடல் 9.
5. மேலது, பாடல் 13.

விளையாடுகின்றனர். ஒரு மூலையை விட்டு ஒரு மூலையில் பாய்ந்து ஒருவர்க்கொருவர் முந்தி உல்லாசமாக உலகம் போற்றும்படி விளையாடு கின்றனர்.

அடுத்து, 'கண்ணாமூச்சி' ஆடுகின்றனர். இதற்காக ஒரு தாச்சியை நியமித்து அவர் உத்தரவுப்படி அங்கங்கே தேடி விளையாடுகின்றனர். கையில் அகப்படாமல் மறைந்திருப்பவர்களைக் கண்டு பிடித்தார்க்குக் கண்ணாமூச்சி பொத்தி உண்மையாகவே தொட்டுத் தாச்சியின் முன்பாக மகிழ்ச்சியுடன் விளையாடினர்.

பந்து அடிக்கும் கோல் 'கிட்டி' என்றும், நடுநிலையிலிருப்பவர் 'தாச்சி' என்றும், மறைந்திருப்பவர் 'கரந்திருப்பவர்' என்றும் கூறப்படுவதைக் காணமுடிகின்றன.

இசைப் பனுவல்

சிந்துப்பாக்கள் மிகுதியும் கொண்ட இந்நூலில் கல்யாணி, இந்துத் தானி, கமாசு, தோடி, நாதநாமக்கிரியை, மோகனம், பந்துவராளி, சௌராட்டிரம், மத்தியமாவதி, மாஞ்சி, ஆனந்தபைரவி, புன்னாகவராளி, பியாகடா, சகானா, கமாசு, செஞ்சுருட்டி ஆகிய பதினைந்து இராகங்களும் ஆதி, மிசிரம், சாபு ஆகிய தாளங்களும் பாடப்பட்டுள்ளன.

நாடகநூல்

ஒருசில பாத்திரங்களை மட்டும் கொண்ட இந்நூல் சிறந்ததொரு நாடகமாகத் திகழ்கிறது. பாத்திரங்கள் தங்களுக்குள் பேசிக் கொள்கின்றன. இடையிடையில் வசன நடையும் காணப்படுகிறது. சோழன் மதன சுந்தரேசு வரரிடமும், புதல்வர்களுடனும் உரையாடுகின்றான்.

உவமைநலம்

இந்நூலில் இடம்பெற்றுள்ள உவமைகள் 'போல' எனும் உருபையே பெற்றுள்ளன.

சோழேந்திரன் இந்திரன் போன்று இருக்கிறான் (பா.7,8). பாலும் தேனும் இனிய பழரசமும் போலப் பழகிய மழலைச் சொற் பாலகர்கள் சோழனின் புதல்வர்களாவர் (பா.15). இந்திரன் போலச் செல்வம் பெற இறைவனிடம் சோழன் வேண்டுகிறான் (பா.22).

இயற்கைநலம்

பாண்டியன், சேரன், கொங்கு நாட்டரசன் ஆகிய மூவரின்

புதல்வியர்கள் மயில், குயில், அன்னம் ஆகிய பறவைகளோடு ஒப்பிடப்படு கின்றனர் (பா.8). விநாயகர் கற்பக மாலையையும் (பா.5), சோழன் கந்த மண மாலையையும் (பா.7) அணிந்துள்ளனர். சோழன் புதல்வர்கள் கைகள் தாமரை மலரோடு (பா.17) ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளன. ஏழு கடல் 'ரத்னாகரம்' எனக் கூறப்படுகிறது (பா.9).

எண்கள்

ஒன்று முதல் பத்து வரை எண்கள் கூறப்பட்டுள்ளன. கழற்சிக்காய் விளையாட்டில் பத்து எண்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதில் கூறப்பெற்ற எண்களும் அவற்றுக்குச் சொல்லப்பெற்ற பொருள்களும் வருமாறு :-

1	–	தெய்வம்
2	–	சக்தி, சிவம்
3	–	மும்மூர்த்தி (நான்முகன், திருமால், உருத்திரன்)
4	–	வேதம் (இருக்கு, யசூர், சாமம், அதர்வணம்)
5	–	பஞ்சவர்ணம் (கறுப்பு, வெள்ளை, சிவப்பு, பச்சை, மஞ்சள்)
6	–	சாத்திரம் (வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூருவமோஞ்சை, உத்தரமோஞ்சை)
7	–	கடல் (உப்புக்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், மதுக்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், சுத்தநீர்க்கடல்)
8	–	அட்டகசம் (அயிராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாளுவபூபம், சுப்பிரதீபம்)
9	–	நவரத்தினம் (மரகதம், பவளம், நீலம், வச்சிரம், பதுமராகம், முத்து, கோமேதகம், புருடராகம், வயிடூரியம்)
10	–	திசை (கிழக்குக் கருடதிசை, தென்கிழக்குப் பூனைத் திசை, தெற்குச் சிங்கத்திசை, தென்மேற்குக் கனக திசை, மேற்கு நாகத்திசை, வடமேற்கு எலித்திசை, வடக்கு யானைத்திசை, வடகிழக்கு முயற்றிசை,

மேல் விசும்புத்திசை, கீழ் பாதாளதிசை)

வசனம்

இந்நூலில் நான்கு இடங்களில் வசனப்பகுதி அமைந்துள்ளது. இந் நான்கிற்கும் முன்னதாக இடம்பெற்றுள்ள பாடல்களுக்கு அப்படியே உரைநடையாக இவ்வசனப்பகுதி அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது, இவற்றைப் பெரும்பாலும் கட்டியக்காரனே பேசி விடுகின்றான்.

ஆடை ஆபரணங்கள்

கட்டியக்காரன் கெண்டைத்துகில் ஆடை அணிந்துள்ளான் (பா.4). கட்டியக்காரன், விநாயகர், சோழன் ஆகியோர் கண்டசரம், பதக்கம், கனகரத்ன முத்துநகை, நவரத்தினம், சொர்ணமகுடம், பொன் போன்ற ஆபரணங்களை அணிந்துள்ளனர்.

பிற

வெள்ளிப்பிரம்பு (பா.3), பால் (பா.15), தேன் (பா.15), பழரசம் (பா.15), செங்கோல் (பா.24) ஆகிய பொருள்களும் இடம் பெற்றுள்ளன.

கை, கால், மெய், மார்பு, இதயம், நெஞ்சு ஆகிய உடல் உறுப்புகளும் கூறப்பட்டுள்ளன.

சொற்கள்

காமித்த, சாமி, மெச்ச, வேணும முதலான 66 பேசசுவழக்குச சொற்களும், அஷ்டகஜம், கிருபை, சந்தோஷம், சாஸ்திரம், லீலை, ராஜா, ஜயம் முதலான 82 வடசொற்களும்,[6] அங்கங்கே (பா.16), ஒருவர்க்கொருவர் (பா.11,15), தனித்தனி (பா.10), மிகமிக (பா.24), விளையாட விளையாட (பா.13) ஆகிய அடுக்குச் சொற்களும் இடம்பெற்றுள்ளன.

சோழனின் புதல்வர்கள் விளையாடுகின்ற பொழுது பேச்சு வழக்குச் சொற்கள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

6. இச்சொற்களின் பட்டியல் பின்னிணைப்பில் உள்ளது.

2
பாண்டி கேளீ விலாச நாடகம்

பாண்டிய மன்னன் ஒருவன் தன் மனைவியோடு மகிழ்ச்சியுடன் விளையாடுவதைச் சொல்லும் நாடகமாகும். பாண்டியன் பெயர் இன்னதென்று நூலில் குறிப்பிக்கப்படவில்லை. ஆசிரியரின் கற்பனையால் அமைத்த அரசனாக வைத்துக் கொள்ளலாம். இந்நூலின் மூலம் ஓலைச்சுவடியில் எழுதப்பட்டுள்ளது. இச்சுவடி தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது.[1] 56 ஏடுகளைக் கொண்ட இச்சுவடியில் 3 முதல் 5 வரிகள் வரை ஒவ்வொரு பக்கத்திலும் உள்ளன.[2] இச்சுவடியை கி. வா. சென்னாதன் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.[3] இப்பதிப்பை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் ஆய்வு செய்யப்பெறுகிறது.

நூலாசிரியர்

இந்நூலை இயற்றியவர் நாராயணகவி என்பவராவார். இவரைப் பற்றிய வேறு எச்செய்தியும் கிடைக்கப் பெறவில்லை. நூலின் தொடக்கத்தில் இடம் பெறும் கதாசங்கிரக அகவலில்,

"செந்திரு மார்பன் சிவாஜீந்த்ர பூபதி
இந்தநல் விலாசம் இயம்புவீர் என்ன
....
இத்தமிழ்க் கவிதை இயம்பிடக் கேட்டுச்
சித்தம் மகிழ்வீர் சீருள்ள கவிகள்
என்பதாய் நாரா யணகவி இயம்பியது
அன்புடன் அனைவரும் ஆனந்த முறவே"[4]

என்று கூறப்பெறுகின்ற வரிகளில் ஆசிரியர் பெயரை அறியமுடிகிறது. இதில் குறிப்பிடப்பெறும் மன்னன் கடைசி சிவாஜியாவார். இவர் தஞ்சைப் பகுதி

1. L. Olaganatha Pillay, **A Descriptive Catalogue of the Tamil Manuscripts, Volume I**, T.M.S.S.M. Library, Tanjore, 1964, p. 520.
2. சுவடி எண் 640/170.
3. கி. வா.ஜகந்நாதன், (ப.ஆ.), 'பாண்டிய கேளி விலாச நாடகம்', **மூன்று தமிழ் நாடகங்கள்**, தமிழ்நாடு அரசு, சென்னை, 1950.
4. மேலது 41-60.

யைக் கி.பி. 1832 முதல் 1855 வரை ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார். எனவே இந்நூலாசிரியர் காலமும் இம்மன்னர் ஆட்சியிலிருந்த காலமாக இருக்கலாம் எனத் துணியமுடிகிறது.

கடைசி சிவாஜி

நூலின் தொடக்கத்தில் இடம்பெறும் 'கதாசங்கிரக அகவலி'லும், இறுதியில் இடம்பெறும் வாழ்த்திலும் இம்மன்னர் பெருமை கூறப்பட்டுள்ளது. நூலின் ஏனைய பாக்களில் எக்குறிப்பும் இடம்பெறவில்லை.

கடல் சூழ்ந்த இவ்வுலகில் சோழ நாட்டை ஆட்சி செய்பவன். சத்திரபதி, யாரையும் பணியாது அரசாளுவோன், எல்லாத் திசையில் உள்ளோரும் பாராட்டும் பெருமை பெற்றவன், எப்பொழுதும் திருமகள் விருப்பத்துடன் தங்கி யிருக்கும்படிப் பேறு பெற்றவன், மன்னர்களும் பிறரும் போற்றும் பெருமை உடையவன், மகளிர் போற்றும் மன்மதன் போன்ற அழகினன், கற்றறிந்த புலவர்கட்கெல்லாம் பொன்னும் மணியும் கொடுத்துப் போற்றுபவன், எப்பொழுதும் வெற்றி பெற்ற தீரன்.

இறுதியில் போசல குலத்திற்கும், மன்னருக்கும், செங்கோலாட்சிக்கும், வெற்றிக் கொடிக்கும், வெண்கொற்றக் குடைக்கும் மன்னருக்கு உறுதுணை யாக இருக்கின்ற அமைச்சர் முதலானோருக்கும், மக்களுக்கும் வாழ்த்துக் கூறி நூலை முடிக்கின்றார்.

நூலமைப்பு

இந்நூல் பின்வருமாறு அமைந்துள்ளது.

1. அகவல்	–	2
2. விருத்தம்	–	3
3. வெண்பா	–	2
4. கலித்துறை	–	5
5. கண்ணி	–	4
6. சிந்து	–	14
7. கொச்சகம்	–	2
ஆக	–	32 பாக்கள்

வசனப் பகுதிகளாக 13 இடம்பெற்றுள்ளன.

நூல் நுதலிய பொருள்

பாண்டிய மன்னன் தன் மனைவியுடன் பூஞ்சோலைக்குச் செல்கிறான். அங்கு இருவரும் பல இயற்கைக் காட்சிகளைக் காண்கின்றனர். ஒவ்வொரு

காட்சியையும் கண்டு மகிழ்ச்சி கொண்டு தங்களுக்குள் உரையாடிக் கொள்கின்றனர். பறவைகள் தங்கள் தங்கள் துணையுடன் இருக்கின்றன. இவற்றையெல்லாம் பார்த்து உளம் மகிழ்கின்றனர்.

அரசன் செண்பகம், பன்னீர், முல்லை, சாதி ஆகிய மலர்ளைப் பறித்துத் தன் மனைவியின் கூந்தலில் சூட்டுகிறான். இவ்வாறு இருக்கின்ற வேளையில் இரு வணிகர்கள் அங்கு வருகின்றனர். அவர்கள் அரசனிடமும், அரசியிடமும் தாங்கள் கொண்டு வந்திருந்த நவமணிகளையும், ஆபரணங்களையும் காட்டி விலை பேசி விற்பனை செய்கின்றனர்.

தமக்கு வேண்டிய ஆபரணங்களை விற்ற பின்னர் வணிகர் சென்று விடுகின்றனர். அதன் பிறகு குறி சொல்கிற இருபூசாரிகள் கையில் உடுக்கை ஏந்தி அங்கு வருகின்றனர். இவர்கள் கணபதியைத் துதித்துப் பின்னர்க் கலைமகள், முருகன், மீனாட்சி ஆகியோரை வணங்கிப் பின் இவர்களுக்குக் குறி பார்க்கத் தொடங்குகின்றனர். முத்தை வைத்துக் குறி பார்த்துச் சொல்கின்றனர். நற்குறிகளைக் கூறிய நிகழ்ச்சிக்குப்பின் வாழ்த்து வருகிறது.

– இத்துடன் நாடகக்கதை முற்றுப்பெறுகிறது.

பாத்திரப் படைப்புகள்

இந்நூலில் பாண்டிய மன்னன் மட்டுமே முதன்மைப் பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளான். அரசி, வணிகர்கள், பூசாரிகள், கட்டியக்காரன் ஆகியோர் நாடகத்திற்குத் துணைப்பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

பாண்டியன் :– பாண்டியன், பாண்டியராஜன், பாண்டிய தேசாதிபதி, பார்த்திபன் என அழைக்கப்படுகின்றான். மன்னன் பெயர் எதுவும் குறிக்கப் பெறவில்லை. இவன் கேரளேந்திரனின் மகளை மணந்தவன். தன் மனைவியுடன் அரச சபைக்கு வருகின்றான். இவர்களுடன் பணிவிடை செய்கின்றவர்கள் கூட்டமாக உடன் வருகின்றனர்.

மன்மதனைவிட அழகுடையவன் என்று இவனைப் பார்க்கின்ற இள மங்கையர்கள் இவன்மீது காதல் கொள்கின்றனர். நிதியினில் குபேரனைவிட வளமை மிக்கவன். பெண்களுடன் விளையாடுவதில் சிறந்தவன். பல பருவப் பெண்கள் இவன்மீது மோகம் கொண்டு இவனைப் பின்தொடர்ந்து வருகின்றனர். வெற்றி வீரனாக விளங்குபவன்.

தன் உடலைச்சுற்றி ஆடை அணிந்துள்ளான். இடுப்பில் வாளினை இறுக்கிக் கட்டியுள்ளான். நெற்றியில் திருநீறு அணிந்து, அதன்மீது வாசனை மிக்க கத்தூரித் திலகம் இட்டுள்ளான். பரந்த மேனி முழுவதும் திருநீறு பூசிச் சுத்தமான சவ்வாது அணிந்துள்ளான். தங்கத்தினாலான உருமால்

கட்டியுள்ளான். அதில் வெற்றி மாலை வாசனை விளங்குகிறது. முத்தாரம், இரத்தின நகைகள் அணிந்துள்ளான்.

வேந்தர் எல்லாம் கொண்டாடும் வேந்தர். இராச உல்லாசன். குபேரனைப் போன்றவன். காமுக சிங்காரன். காதல் விளையாட்டில் சிறந்து விளங்குபவன். தன்னை நாடி வருகின்றவர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுப்பதில் கர்ணனுக்கு நிகரானவன். திடமான பாண்டியனாகிய கனவான்.

பாண்டியன் மனைவி :- கேரளேந்திரன் செல்வி, கேரள பார்த்திவன் மகள், கேரளேந்திரன் புதல்வி என்ற அளவிலேயே பாக்களில் காணப் பெறுகின்றன. ஆனால் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை. சுகபாஷிணி, ரத்னபூஷணி எனப் பாண்டியன் இவளை அழைக்கிறான். அமிர்தம் போலப் பேசுவதில் சிறந்தவள். அழகில் சிறந்தவள். மங்கையர்களுக்கெல்லாம் சிறந்து விளங்குபவள்.

பாண்டியன், 'என்னுடைய ஆசைக்குகந்த மேன்மையான கரும்பே! அன்னமே!' என இவளை அழைக்கிறான். நாவிற் சிறந்தவர்கள் கொண்டாடும் நல்ல மலர்களை எடுத்து விருப்பத்துடன் அணிந்து மகிழ்ச்சி கொள்கிறாள். பெண்களுக்கெல்லாம் தலைவியாவாள்.

"எப்பொழுதும் மனோரம்யச் சரசசல்லாபமாய் மந்தகாசம் செய்து மருவும் என் நாதனே!" என்று தன் கணவனிடம் கூறுகிறாள். பூங்கரும்பே! அன்னமே! பூவையே! என அழைக்கப்பெறுகிறாள்.

வணிகர்கள் :- பாண்டியன் தன் மனைவியுடன் சோலையில் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்புடன் இருக்கின்ற வேளையில் இரு வணிகர்கள் அங்கு வருகின்றனர். இவர்கள் செட்டி இனத்தைச் சார்ந்தவர்கள். மாணிக்கம், பச்சை, வயிடூரிய மணிகள், ஆணித்தரமுத்து முதலான அனேக நகைகளை விற்பனை செய்கின்றவர்கள். வகை தொகை தெரிந்து நன்முறையில் வியாபாரம் செய்கின்றவர்கள். விலை மதிப்புடைய உயர்ந்த இரத்தின நகைகள், முத்து முதல நறபவளம் வரை உள்ளவறறை விற்பனை செய்பவர்கள்

மேலும் ஆடைகளையும், பலநாட்டு நாகரிகப் பொருள்களையும் விற்பனை செய்பவர்களாவர். இவர்கள் மன்னனிடம் நாணயமாகப் பேசித் தாங்கள் கொண்டு வந்த பொருள்களை விற்பனை செய்கின்றனர்.

வர்த்தகம், வர்த்தகத் தொழில், விலை, தீர்மானவிலை, நாணயம் ஆகியன வணிகர்கள் பயன்படுத்தும் சொற்களாக இடம்பெற்றுள்ளன.

பூசாரிகள் :- இரண்டு சகுனம் சொல்லும் பூசாரிகள் மன்னனைக் காண வருகின்றனர். இவர்கள் ஆடை உடுத்து, நல்ல உருமால் கட்டி, தொங்கும் குஞ்சம் விட்டு, நாடு போற்றும் சிறிய உடுக்கையினைக் கையில் ஏந்தி வருகின்றனர். நாட்டு மக்களுக்கும், நாட்டையாளும் மன்னனுக்கும் தேர்ந்த குறிகளைச் சொல்லிப் பரிசுப் பொருள்களைப் பெற்றுச் செல்வது இவர்கள் வழக்கமாகும்.

உருமாலைத் தொங்கவிட்டுக் கொண்டு, உடுக்கையைத் தட்டிக் கொண்டு, திருநீற்றைத் தரித்துக்கொண்டு, தெய்வங்களைத் துதித்துக் கொண்டு, முக்காலங்களையும் தேர்ந்து சகுனம் சொல்பவர்கள் இவர்களாவர்.

விநாயகர், முருகன், வாணி, மீனாட்சி முதலான தெய்வங்களைத் துதித்து வழிபட்டு முத்தெடுத்துக் குறி சொல்கிறார்கள். மூன்று முறை முத்துக்களைப் போட்டு எடுத்துப் பின்வருமாறு குறி சொல்கிறார்கள்.

"செல்வமும், வெற்றியும், சிறந்த வைபவமும், நல்ல அழகும், நானிலம் போற்றும் ஈகையினால் வரும் புகழும், வீரத்தினால் வரும் புகழும், கிளர்ச்சியும் பெற்றுப் பார்த்திபனான பாண்டிய மகிபனே! கடல் சூழ்ந்த இவ்வுலகினில் எங்கும் சமர்த்தாய்ச் சுற்றிவருவாய்! மன்னவர்களுக்கும், மற்றும் உள்ளவர் களுக்கும், அன்னநடை பயின்ற அரிவையர்களுக்கும் நினைத்த குறிகள் நிலவரமாக இனத்துடன் சொல்லி இனிதுடன் பெருமைகள் ஓங்கிடச் செய்யு மளவில் வெகுமதிகள் உற்சாகமாய்ப் பெறுவதற்காகப் பூசாரி இங்கு வந்தேன். உம் முகத்தில் நற்குறிகள் தெரிகின்றன. உமக்கு விருப்பமான தெய்வத்தின் அருள் எப்பொழுதும் உண்டு. குலதெய்வம் உம்மீது குளிர்ந்த நற்பார்வை வீசுகிறாள். பலவிதக் குறிகள் பார்ப்பதற்காக நான் முத்தைக் கருத்துடன் எடுத்துப் பார்க்கையில் உண்மையாய்க் குறிகள் வெளிப்படையாகத் தோணுது! தலைவனே! உமக்கு நல்ல சுபகாரியங்களும், அன்பு காட்டுகின்ற பெண்களின் நிறைந்த கூட்டுறவும், முகவசீகரமும், மோகனசித்தியும், சுகமும், நீண்ட வாழ்நாளும், பெண்ணின்பங்களும், நற்புதல்வர்களும், பிற தேசத்தவர் நட்புறவும் விரைவில் பெற்று நீண்ட நாள் வாழ்வீர் பாக்கியவானே! என் குறி பலித்திடும்!"

இரு பூசாரிகள் வந்து குறி சொல்வதாக முதலில் காணப்பெறுகிறது. ஆனால் இவர்கள் ஒருமையிலேயே பேசுவதாகப் பாக்களில் காணமுடிகின்றன.

கட்டியக்காரன் :- நாடகத்தைத் தொடங்கி வைப்பதற்காக மேடையில் வருகின்றான். வாசனை நிரம்பிய தேன் துளிக்கும் மாலையினை மார்பில் அணிந்துள்ளான். மன்னவர் மெச்சப் பேசும் இயல்புடையவன். புகழ் பெற்ற மணியணிகள் அணிந்த யோகன். திங்கள் போன்ற முகத்தினில் திலகம் திகழும் மோகன். இவ்வுலகமெங்கும் புகழ் படைத்தவன். புன்னகை தவழப்

பேசுபவன். வெள்ளிப் பிரம்பினைக் கையில் ஏந்தி வருகின்றான். உல்லாசமாக மகிழ்ச்சியுடன் வருகின்றான். விநாயகர்மீது அளவில்லாத பக்தி கொண்டவன். நல்ல ஆடை அணிந்துள்ளான். நகைச்சுவை உண்டாகும்படிப் பேசி மகிழ்ந்து, தலையில் முண்டாசு கட்டியுள்ளான். நவரத்தினங்களாலான நகைகளை அணிந்துள்ளான்.

இறைவன் பெருமை

விநாயகர், முருகன், சொக்கர், மீனாட்சி, வள்ளி, தெய்வானை, வாணி, பிரகதீசர் ஆகிய கடவுளர்களின் பெருமைகள் பேசப்பட்டுள்ளன.

விநாயகர் :- விநாயகர், ஐங்கரர், கணபதி, தும்பிமுகத்தோன் என அழைக்கப்பெறுகின்றனன். நாடகத்தைத் தொடங்குவதற்குமுன் கட்டியக்காரன் இவர் பெருமைகளைப் போற்றிக் கூறி வழிபடுகின்றான்.

தலையில் அணிந்துள்ள இரத்தினத்தினாலான மகுடம் ஒளி வீசுகிறது. நறுமணம் கமழும் பூமாலை மணம் வீசுகிறது. மதியின் ஒளியைவிடத் திகழும் முத்து கதிர் விளைக்கிறது. செழுமையான மலர் போன்ற கண்கள் கருணை தவழ்கின்றன. அனைவரையும் காப்பதற்காகவும், சுகம் மிகுந்த வரம் கொடுப் பதற்காகவும் வருகின்றனன். நன்மை சுகம் தரும் மெய்யன்; புதுநளினம் என்று இடுகின்ற கையன்; நால்வேதங்களின் உட்பொருள் ஓங்கும் அற்புதன்; தேங்குகின்ற நல்லருள் தாங்குகின்ற மெய்ப்பொருளானவன்.

பூசாரிகள் குறி சொல்லத் தொடங்குவதற்குமுன் முதலில் விநாயகரை வழிபடுகின்றனர். அப்பொழுது, "ஆதி விநாயகனே! ஐங்கரனே! சித்தியைத் தருகின்ற சோதிப் பொருளான தும்பிமுகத்தோனே! அம்பிகையாள் பெற்றெடுத்த அற்புதக் கற்பகமே! உன்னை நம்பினவர்களுக்கு நன்மை தருபவனே! மந்திரத்திற்குள்ளே மகா மந்திர உருவாய்த் தந்திரமாய் அட்டசித்தி தரவல்லவனே! எப்பொழுதும் மங்களங்கள் தந்து காப்பவனே! கந்தனுக்கு மூத்தவனே! கணபதியே! கற்பகமே!" என்று விநாயகர் பெருமைகளைப் போற்றி வழிபடுகின்றனர்.

மீனாட்சி :- பூசாரி குறி சொல்லத் தொடங்குமுன் பல தெய்வங்களை வழிபடுகின்றான். பாண்டிய நாடானபடியினால் மதுரை மீனாட்சியின் பெருமையைக் கூறத் தவறவில்லை.

"அம்பா பராசக்தியே மீனாட்சி - சக
தாதார மானவளே மீனாட்சி

இன்பச் சொரூபியான மீனாட்சி - எங்கள்
இஷ்டதெய்வம் ஆனவளே மீனாட்சி

சொக்கருக் கமுதமான மீனாட்சி - வந்து
சொல்லவேணும் நிஜமாக மீனாட்சி

சிற்றுடுக்கில் வந்துநின்று மீனாட்சி - தாயே
செயமாய் நிஜம்சொல்லம்மா மீனாட்சி

கையுடுக்கில் வந்துநின்று மீனாட்சி - நினைத்த
காரியத்தை நீ சொல்லம்மா மீனாட்சி

உன்னடிமை நானல்லவோ மீனாட்சி - என்சொல்
உறுதி பலிக்கவேணும் மீனாட்சி

வள்ளியம்மை மாமியான மீனாட்சி - என்றன்
வாக்கில்நின்று காக்கவேணும் மீனாட்சி

அரசன் நினைத்தகுறி மீனாட்சி - எனக்கு
அற்புதமாய்த் தோன்றவேணும் மீனாட்சி

தாமசங்கள் இல்லாமல் மீனாட்சி - குறி
தான்விளங்க வேணுமம்மா மீனாட்சி

பாண்டியன் குமாரியே மீனாட்சி - சுபம்
பலிக்கவரம் தாருமம்மா மீனாட்சி"[5]

இவ்வுலகிலுள்ளவர்களுக்கு எப்பொழுதும் மகிழ்ச்சியும், தெம்பும் கொடுப்பவள். இவள் திருவடியை நம்புகின்றவர்களுக்கு நன்மை செய்பவள். வாக்கில் துதித்து மனத்தில் வழிபட்டு நிற்கின்றவர்களுக்கு அருள்பவள்.

அம்பிகை, அம்பா, பராசக்தி, பாண்டியன் குமரி என மீனாட்சி அழைக்கப் பெறுகின்றாள்.

பிற கடவுளர் :– பூசாரி வேண்டி வழிபடும்பொழுது சொக்கர், வள்ளி, தெய்வானை, வாணி, முருகன் ஆகிய கடவுளர்களைக் குறிப்பிடுவதைக் காண முடிகின்றது. முருகன் 'கந்தன்' எனவும் 'வள்ளி தெய்வானை மணவாளன்' எனவும் அழைக்கப்படுகின்றனன்.

நூலின் இறுதியில் இடம்பெறும் வாழ்த்துப் பாடலில் தஞ்சையில் எழுந்தருளியுள்ள பிரகதீசுவரரையும், பிரகந்நாயகியையும் வாழ்த்திப் பாடியுள்ளார் ஆசிரியர்.

மன்மதன் தொடர்பான செய்திகளையும் ஆசிரியர் பாடியுள்ளார். பூஞ்சோலையில் மலர்ந்துள்ள மலர்கள்மீது மன்மதன் வீற்றிருந்து அழகுடன் செங்கோல் ஓச்சுகிறான். ஆசைகளைத் தோற்றுவிக்கும் மன்மதன் அரசு நடத்துவதற்கும் புகழ் பெற அமைத்த சிறந்த கொலுவாகப் பூஞ்சோலை

5. கி. வா. ஜகந்நாதன் (ப. ஆ.), மு. கா. நூல், பாடல் 26.

திகழ்கிறது. மதன், மதனன், மன்மதன், சித்தசன் எனும் பெயர்களால் இவன் அழைக்கப்பெறுகிறான்.

இசைப் பனுவல்

சிந்துப் பாக்கள் பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் அமைப்பில் உள்ளன. சாவேரி, நாதநாமக்கிரியை, சுருட்டி, பிலகரி, சங்கராபரணம், ஆகிரி, பூர்விகல்யாணி, யதுகுலகாம்போதி, மஞ்சரி, கும்மகாம்போதி ஆகிய பத்து இராகங்களிலும் ஆதி, சாபு ஆகிய தாளங்களிலும் பாக்கள் பாடப்பட்டுள்ளன.

குயில்கள் ஒன்றுசேர்ந்து இசை பாட, வண்டுகள் சுருதி கூட்டிப் பாட, மயில்கள் தோகை விரித்து ஆடுகின்றன. பூசாரி குறி சொல்வதற்காக உடுக்கையை அடித்து இசை எழுப்பி அதன்பின்னரே குறி சொல்கிறான்.

நாடக நூல்

அரசனும் அரசியும் பொழிலில் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்துத் தங்களுக்குள் உரையாடிக் கொள்கின்றனர்.

அரசன் : கிளி மொழியை யுடையவளே! மாதுள மலரின் இதழ்கள் உன் உதட்டை ஒவ்வாததனால் கிளிகள் அவற்றைக் கோதி, உன்னைப் போல இனியமொழிகளை உள்ளங்குளிரப் பேசுகின்றன.

அரசி : காமுக சிங்காரனே! என் நாதனே! இந்த மாமரத்தில் தளிருக்கிடையே சிவந்த பழம் தென்றல் காற்றாய் அசைகிறது. இக்காட்சியானது இப் பூம்பொழிலாகிய பெண் தங்களைக் காணப் பொன் தட்டில் பழத்தை வைத்திருப்பதைப் போலத் தோன்றுகிறது.

அரசன் : என் ஆசைக்குகந்த மேன்மையான கரும்பே! அன்னமே! அதோ பார்! கோங்கு அரும்புகள் உன் நகிலைப் போலத் தோன்றுகின்றன

அரசி : என் நாயகனே! லீலை செய்வதில் சிறந்த என் நாயகனே! இங்குள்ள கொடிகள் பூங்கொத்துக்களைச் சுமந்து கொண்டு வளைந்திருப்பது, தங்களைக் கண்டு மாதர் வணங்குவது போல விளங்குகின்றது.

மேடையில் நடிக்கப்பெறும் நாடகத்திற்கு உரையாடல் மிக அவசியம். அதனையே இப்பகுதி காட்டுகிறது. பாத்திரங்களை அவையோர்க்குக் கட்டியக்காரன் அறிமுகம் செய்து வைத்துக் கதை நிகழ்ச்சிகளையும் கூறுகின்றான்.

இயற்கை வளம்

பாண்டிய மன்னன் தன் மனைவியோடு ஒரு பூங்காவிற்குச்

செல்கிறான். அப் பூங்காவில் இவர்கள் இருவரும் பல்வேறு இயற்கைக் காட்சிகளையும், பொருள்களையும் கண்டு மகிழ்கின்றனர். பூங்கா, பூங்காவனம், பூஞ்சோலை, சோலை எனப் பூங்கா அழைக்கப்பெறுகிறது.

அழகாகவே சேர்ந்த பல தருக்களின் வாசனை மிகுந்த மலர்களின் கொத்துக்கள் மலர்ந்துள்ளன. முல்லை அரும்பு பெண்களின் தோற்றும் சிரிப்புக்கு ஒப்பாகும்படி மெல்ல மலர்ந்துள்ளது. செல்வரைப் போலவே சிறந்த சண்பக மலர்கள் நிறைந்து மலர்ந்து நடுவில் விளங்குகின்றன.

மயில்கள் கூட்டமாகச் சுற்றித் திரிகின்றன. அன்னங்கள் அழகாக நடை நடந்து உலாவுகின்றன. இச்சோலையில் மலர்ந்திருக்கின்ற மலர்கள் வாசம் கொண்டு இனிதாகப் பூத்துள்ளன. குயில்கள் ஒன்றுசேர்ந்து இசை பாடுகின்றன. மயில்கள் தோகை விரித்தாடுகின்றன. வண்டுகள் சுருதி கூட்டிப் பாடுகின்றன. மந்தாரை, கோங்கு முதலான மலர்கள் கொத்தாக நிறைந்து மன்மதன் கொலுவினில் வந்திருப்பவரைப் போன்று விளங்கு கின்றன.

புன்னை மலரில் உள்ள பூந்தாதுக்களைக் கிண்டிப் புள்ளிகளை உடைய வண்டு தன் பெண் துணையை விட்டுப் பிரியாமல் இருக்கின்றது. அழகு மிக்க குயிலினங்கள் கூடிக் குலாவி மருவுகின்றன. புன்னை மலரிலுள்ள இனிய தேனை ஆண் வண்டுகள் நாடிப் பெற்றுப் பெண் வண்டுகளுக்கு ஊட்டி என்றும் பிரியாமல் காத்திருக்கும்.

ஆண் குயில் பெண் குயிலைக் கோதி நல்ல பழங்களைப் பக்குவத் துடன் கொடுத்து மகிழ்ச்சியாகக் கொஞ்சுகிறது.

மங்கையர்கள் தங்கள் கணவர் மெச்சுவதற்கேற்ற சொற்களைப் பேசுவதைக் கேட்டுப் பெண் கிளிகளும் பேசுகின்றன.

சோலையில் சண்பகமலர், பன்னீர்மலர், முல்லை, அரும்பு, சாதி மலர் போன்ற மலர்கள் மலர்ந்துள்ளன. முல்லை அரும்புகள் நல்ல மணம் வீசி மோகத்தை உண்டுபண்ணுகின்றன. இம்மலர்களைப் பாண்டியன் தன் மனைவியின் கூந்தலில் சூட்டி மகிழ்கிறான்.

மலர், புஷ்பம் என மலர் அழைக்கப்படுகிறது. மலர் மாலை, மலர்க் கொடிகள் ஆகியன கூறப்பட்டுள்ளன.

வண்டு, குயில் (கோகிலம்), மயில், அன்னம், கிளி (சுகம்) ஆகிய பறவைகளும் மாதுளை, மாங்கனி ஆகிய பழங்களும் கூறப்பட்டுள்ளன. விலங்குகளில் மான் மட்டும் கூறப்பட்டுள்ளது. ஆழி, தேன், திங்கள், கரும்பு,

தென்றல், தளிர் போன்ற இயற்கைப் பொருள்களும் இச்சோலையில் காணப்படுகின்றன.

உவமை நயம்

'போல' எனும் உவம உருபுமட்டும் கையாளப்பட்டுள்ளது. முகம், திங்களுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது (பா.1). அரசி அமிர்தம் போலப் பேசுவதில் சிறந்து விளங்குகிறாள் (6).[6] செல்வரைப் போலச் சண்பக மலர்கள் சிறந்து மலர்ந்துள்ளன (9). குபேரனைப் போன்று செல்வ வளம் படைத்தவனாக மன்னன் விளங்குகின்றான் (12). கோங்கரும்பின் நுனியில் வண்டு அமர்ந்திருப்பது, அரசியின் தனங்கள் போலத் திகழ்கின்றன (16). பெண்கள் மன்னன்மீது காதல் கொண்டு வணங்குவது போலச் சோலையின் பூங்கொடிகள் பூக்களைத் தாங்கித் தலைவணங்கி நிற்கின்றன (17).

பிற

ஆடை ஆபரணங்கள் :- அங்கி (7), நல்ல வஸ்திரங்கள் (20), உருமால் (7,21,,22), தூசு (ஆடை21) ஆகிய ஆடைகள் அக்கால மக்களால் அணியப்பட்டுள்ளன. உருமாலில் சாதாரண உருமாலையும், தங்கத்தினாலான உருமாலையும் அணிந்துள்ளனர்.

பொன், நவரத்னம், முத்து, மாணிக்கம், பவளம், வயிடூரியம் போன்றவற்றால் செய்யப்பெற்ற ஆபரணங்களை மகளிர் அணிந்துள்ளனர்.[7]

மகளிர் :- மங்கை, தையல், மாது, மாதர், வனிதையர், பெண், அரிவை எனப் பலவாறு பெண்கள் அழைக்கப்படுகின்றனர். பருவ வயதடைந்த மகளிர் பாண்டிய மன்னன்மீது காதல் கொள்வதாகப் பாடப்பட்டுள்ளனர்.

நாடு :- நாடு என்றும், தேசம் என்றும் அழைக்கப்படுகிறது. சோழநாடு, பாண்டியநாடு, சேரளதேசம் ஆகிய மூன்றும் கூறப்பட்டுள்ளன. தஞ்சையை ஆண்ட கடைசி சிவாஜியைக் குறிப்பிடும்பொழுது சோழநாடும், நாடகத் தலைவன் பாண்டியனைக் குறிப்பிடும்பொழுது பாண்டியநாடும், இப் பாண்டியன் கேரளதேசத்து அரசன் மகளை மணந்ததைக் கூறும்பொழுது கேரள தேசமும் கூறப்பட்டுள்ளன.

உடலுறுப்புகள் :- நெஞ்சம், நெற்றி, மேனி, மனம், மூக்கு, கை, முகம் ஆகிய உடலுறுப்புகள் கூறப்பட்டுள்ளன.[8]

6. பிறைவளைவிற்குள் உள்ள எண்கள் பாடல் எண்களைக் குறிக்கும்.
7. கி. வா. ஜகந்நாதன் (ப. ஆ.), மு கா. நூல், பா. 1, 3, 4, 7, 8, 19, 20, 27, 31.
8. மேலது, பா. 1, 7 & 14, 21, 28, 30, 31.

எண்கள் :– 2,3,4 ஆகிய எண்கள் கூறப்பட்டுள்ளன. பூசாரிகள் இருவர், வேதம் நான்கு. இரண்டாவது முத்து, மூன்றாந்தர முத்து போன்றவை இடம் பெற்றுள்ளன.[9]

குறி பார்க்கும் வழக்கம் :– குறிபார்க்கும் பூசாரிகள் தொன்று தொட்டே இந்நாட்டில் இருந்து வருகிறார்கள். சங்க இலக்கியங்களில் 'வேலன்' என்று பூசாரி அழைக்கப் பெறுகிறான். முருகனை வழிபடும் இப் பூசாரி நெல்லை முறத்தில் இட்டுக் கட்டுப்பார்ப்பதும், கழற்சிக் காய்களைக் கொண்டு குறி பார்ப்பதும் பண்டைய வழக்கங்களாகும். இந்நாடகத்தில் வருகின்ற பூசாரிகள் முத்தைக் கொண்டு குறி பார்த்துச் சொல்கின்றனர்.

குறி சொல்வதற்குமுன் பல தெய்வங்களை வழிபடுகின்றனர். பிறகு முத்தை வைத்துக் குறி பார்க்கத் தொடங்குகின்றனர். இராசிச் சக்கரம் ஒன்றை எழுதி, சிங்க இராசியில் முத்து விழுந்தால் நல்லகுறி என்று ஒரு பூசாரி முத்தைப் போடுகிறான். அவன் கேட்ட இராசியிலேயே முத்து விழுகிறது. இப்படி மூன்று முறை போட்டுப் பார்த்து மும்முறையும் அதே இராசியிலே விழுந்ததைக் கண்டு 'ஜயம் ஜயம்' எனப் பெருமகிழ்ச்சி கொண்டு அதன்பின்னர்க் குறி சொல்லத் தொடங்குகிறான். மன்னன் முகத்தைப் பார்த்து அதிலுள்ள குறிகளையும் வேறு குறிகளையும் பார்த்துப் பலன் அறிந்து சொல்கிறான்.[10]

பொருள்கள் :– வெள்ளிப்பிரம்பு (2), சமுதாடு – வாள் (7), கஸ்தூரி (7), சவ்வாது (7), பொன்தட்டு (15), பன்னீர் (18), திருநீறு (22) ஆகிய பொருள்கள் கூறப்பட்டுள்ளன. தொங்கும் குஞ்சம் 'கங்கு' என அழைக்கப் பட்டுள்ளது (21, 22).

வசனநடை :– இந்நாடகத்தில் 13 வசனப்பகுதிகள் இடம் பெற்றுள்ளன. இப்பகுதிகள் முன்னுள்ள பாட்டின் கருத்தையே கூறுகின்றன. இவ் வசனத்தில் அக்காலத் தமிழ் நடையைக் காணமுடிகின்றது. வடசொற்களைத் தாராளமாகத் தமிழில் கலந்து மணிப்பிரவாளமாகப் பயன்படுத்தி யுள்ளனர். மொத்தம் 43 வடசொற்கள் இப்பகுதியில் ஆசிரியரால் பயன்படுத்தப் பட்டுள்ளன.[11] சான்றுக்கு ஒருபகுதிமட்டும் பின்வருமாறு கொடுக்கப்படுகிறது.

> *"ஸ்திரீகளுக்கெல்லாம் சிரோரத்தினமே! ஸ்திரீகளுடைய மந்தகாசத்தைக் கண்டு ஆனந்தங் கொள்ளா நின்ற பிரபுக்களைப் போல, முல்லையரும்பு மலர்கிறதைப்*

9. கி. வா. ஜகந்நாதன் (ப. ஆ.), மு கா நூல், பா. 1, 5, 20, 21, 28, 29.
10. மேலது, பா. 21, 22, 24, 27, 31.
11. இச்சொற்கள் பின்னிணைப்பில் உள்ளன

பார்த்து, புஷ்பங்களால் பூரித்து விளங்குகின்ற சண்பகங் களைப் பார்த்தாயா? உன்னுடைய அழகானது காணுகிற இரண்டு கண்ணுக்கு அடங்காதென்று தேகமுழுதும் கண்ணாய் மயில்கள் உன்னைப் பார்க்கிறதைப் பார்த் தாயா? உன் நடையைக் கற்றுக்கொண்டு அன்னங்கள் நடக்கிறதைப் பார்த்தாயா பெண்ணே?"

சொற்கள்

பாடுது, ஆடுது, உண்டாக்குது, மெச்சி, வேணும், சமர்த்தாய் முதலான 64 பேச்சுவழக்குச் சொற்களும், அஷ்டதிக்கு, ஆச்யம், க்ருபை, சகிதம், நிஜம், பிரதாபம், ஜயம் முதலான 126 வடமொழிச் சொற்களும்[12] ஒருத்தருக் கொருத்தர் (1), ஒருவர்க்கொருவர் (20), நடைநடந்து(9) ஆகிய அடுக்குச் சொற்களும், ஆணும் பெண்ணும் (1), மணியணி (2), முன்பின் (20), வகைதொகை (20) ஆகிய எதிர்மறைச் சொற்களும், சேவை என்பது சேர்வை (1) என்றும், நாயகனே என்பது நாயனே (31) என்றும் சிதைவுச் சொற்களாக இடம்பெற்றுள்ளன.

12. இச்சொற்கள் அனைத்தும் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன

3
அதிரூபவதி கல்யாணம்

தமிழிசை நாட்டிய நாடகமாகத் திகழும் இந்நூலை இரண்டாம் சகசி மன்னர் ஆட்சிக்காலத்து (1684 – 1712) அரசவைப் புலவர்களில் ஒருவரான முத்துக்கவிஞர் பாடியுள்ளார். இந்நாடகத்தை வ. வேணுகோபாலன் பதிப்பித்துள்ளார்.[1] இந்நாடகக் கதை நிகழ்ச்சிகள் அங்கத நாட்டிலும், தஞ்சை அரண்மனையிலும் நடந்துள்ளன.[2] தஞ்சை, சகசி மன்னனின் அரண்மனை நாடக சாலையில் இந்நாடகம் நடிக்கப்பட்டுள்ளது.[3] தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையத்தில் இந்நாடகத்தின் மூன்று ஓலைச்சுவடிகளும், படியெடுக்கப் பட்ட காகிதச்சுவடி ஒன்றும் உள்ளன.[4]

நூலாசிரியர்

இந்நாடகத்தைப் பாடியவர் முத்துக்கவிஞர் என்ற புலவராவார். சகசிராசன் குறவஞ்சியைப் பாடிய முத்துக்கவிராயரும், இவரும் ஒருவரே என்று வ. வேணுகோபாலன் குறிப்பிடுகின்றார்.[5] பொதுவாக இவரைப்பற்றிய செய்திகள் எதுவும் புலனாகவில்லை. இக்கவிஞர் சகசி மன்னரால் பெரிதும் ஆதரிக்கப்பெற்றவர். அரசவைப் புலவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்.

இந்நூலில் பலவிடங்களில் தம்மைப்பற்றிக் கூறியுள்ளார். 'முத்துக்கவி தமிழ்',[6] 'செந்தமிழ் பாட முத்துக்கவி'[7], 'பசுந்தமிழ் முத்துக்கவி'[8] எனத் தமிழோடு இணைத்தே பாடியுள்ளார். இந்நூற் பாடல்களைப் பார்க்கும் பொழுது முத்துக்கவி பாடிய தமிழ்ப் பாக்களுக்கு மன்னரும், மக்களும் எத்தகைய மதிப்புக் கொடுத்து வந்துள்ளனர் என்பது புலனாகிறது.

---

1. வ. வேணுகோபாலன் (ப. ஆ.), அதிரூபவதி கல்யாணம், தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூல்நிலையம், தஞ்சாவூர், 1985.
2. மேலது, ப. 12.
3. மேலது, ப. 12.
4. சுவடி எண்கள் 634, 635, 636, காப்பீடு வால்யூம் 367.
5. வ. வேணுகோபாலன் (ப. ஆ.), மு. கா. நூல், ப. 46.
6. மேலது, பக். 15, 17, 26, 27.
7. மேலது, ப. 30.
8. மேலது, ப. 33.

பாக்களை இசையுடன் இயற்றுவதிலும், நாட்டியக் கூறு அமையப் பாக்களை இயற்றுவதிலும் இவர் சிறந்து விளங்கியுள்ளதை இந்நாடகம் உணர்த்துகிறது.

நூலமைப்பு

எட்டுக் கதாபத்திரங்களைக் கொண்ட இந்நாடகம் இசைப் பாக்களைக் கொண்டும் இடையிடையே உரைநடை கலந்தும் பின்வருமாறு அமைந்திருக்கிறது.

1. தோடய மங்களம்	–	1
2. மங்களம்	–	1
3. கதாசங்கிரக அகவல்	–	1
4. தருவுகள்	–	37
5. விருத்தம்	–	2
6. தனித் தருவு	–	1
7. பதம்	–	2
8. மங்களம் – சோபனம்	–	1
		46

சூத்திரதாரன், இந்நாடகத்தைத் தொடங்கி வைக்கக் கட்டியக்காரனை அறிமுகம் செய்து வைக்கிறான். கட்டியக்காரன் அரங்கிற்கு வந்து நாடகத்தைத் தொடங்கி வைக்கிறான்.

நூல் நுதலிய பொருள்

அங்கத நாட்டு அரசன் தம் மனைவி அம்புசபாணியிடம், இளவரசி அதிரூபவதிக்குத் திருமணம் செய்வது குறித்துப் பேசுகிறான். மகளின் கருத்தை அறிய அம்புசபாணி விரும்பி மகளின் தோழி மூலம் அறிந்துவரச் சொல்கிறாள். அதிரூபவதி, 'ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களையும் பார்த்துத் தனக்கு விரும்பிய மன்னனைத் தேர்ந்தெடுத்துப் பிறகு மணம் செய்து கொள்கிறேன்' என்கிறாள்.

மன்னனும் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டு மந்திரி சுமதியை அழைத்து ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களின் உருவங்களை ஓவியர்களைக் கொண்டு வரைந்து தருமாறு ஆணையிடுகிறான். மந்திரியும் அவ்வாறே செய்து எல்லாத் தேசத்து மன்னர்களின் உருவங்களையும் வரையச் செய்து அவற்றை வரிசைப்படுத்தி மன்னனிடம் கொண்டு வந்து தருகிறார். மன்னன் எல்லா ஓவியங்களையும் பார்வையிட்டு, சகியை அழைத்துத் தன் மகளிடம் அவற்றைக் காட்டுமாறு கூறுகிறான்.

'என் அழகுக்கு இவ்வரசன் ஒப்பாகுமா? இப்படத்தைத் தள்ளு. வேறு படம் எடு' என்று ஒவ்வொரு படமாகப் பார்த்துத் தள்ளி விடுகிறாள். இறுதியில் சோழமன்னன் சகசேந்திரன் படத்தைப் பார்த்த அதிரூபவதி, 'எந்தன் மனத்துக்கிசைந்த நாயகன் இவன்' என்று கூறுகிறாள். மோகம் கொண்டு பலவாறு தன் தோழியிடம் புலம்புகிறாள். காதல் மயக்கம் கொண்டு புலம்பிய அதிரூபவதி தன்னிலை மறந்து, தோழியிடம் 'அளகை வாழும் சகசி பூபனை அழைத்து வா' என்கிறாள்.

இவள் நிலையைக் கண்ட தோழி மன்னனிடம் சென்று 'சகசி மன்னன் படத்தைப் பார்த்தது முதல் உணவு உறக்கமின்றித் தன்னிலை மறந்திருக் கிறாள்' என்கிறாள். மன்னன், சுமதி மந்திரியிடம் சகசி மன்னனைப்பற்றி வினவியறிந்து கொள்கிறான்.

அதன் பின்னர் மன்னர் தம் பரிவாரங்களுடனும், அதிரூபவதியுடனும் புறப்பட்டுத் தஞ்சை சகசேந்திரனைக் காணப் புறப்பட்டான். இன்னிசைக் கருவிகள் முழங்கப் பல்வகைப் படைகள் சூழ வந்த மன்னன் தஞ்சை அரண்மனைக்கருகில் நின்று தன் மகளிடம், சகசேந்திரனைச் சுட்டிக் காட்டி அவன் பெருமைகளைக் கூறுகிறான்.

அதிரூபவதி மனமகிழ்ந்து தன் தோழியிடம் , 'சகியே! என் நிலையைச் சகசேந்திர மன்னனிடம் சொல்வாயாக! என் விரகதாபத்தைக் கூறுவாயாக!' என்கிறாள். தோழியும் அவ்வாறே சகசி வேந்தனிடம் கூறுகிறாள்.

அங்கதராசன் சகசேந்திரனை வணங்கித் தன் மகளைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டுகிறான். சகசி மன்னனைப் புகழ்ந்து கூறிய மன்னன் அதிரூபவதியிடம், 'பெண்ணே! உன்னைப்பற்றிச் சொல்ல வேண்டியதை எல்லாம் நான் கூறிவிட்டேன். இனி நீயே சகசி மன்னனிடம் நேரில் பேசிக் கொள்வாய்' என்கிறான்.

அதிரூபவதி மகிழ்ச்சி கொண்டு, 'தந்தையே! நான் புண்ணியம் செய்தேன்' எனக் கூறிச் சகசியிடம் தன்னை மணம் செய்து கொள்ள வேண்டுகிறாள். அப்பொழுது நிலவு தோன்றுகிறது. நிலவைக் கண்ட அதிரூபவதி விரகவேதனை அடைந்து சகசிமீது பாடி ஆடுகிறாள்.

"மன்னரே! என்னைக் காத்தருள வேண்டும். இதுவரையில் நான் கன்னி மாடத்திலிருந்தேன். தங்கள் சித்திரப் படத்தைக் கண்டு காதல் கொண்டேன். தங்களுக்குப் பதினாயிரம் அழகு மங்கையர் இருந்தாலும் என்னையும் ஒருத்தியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். என்னை மணம் செய்து கொள்ளவேண்டும்" என்று வேண்டுகிறாள்.

சகசி மன்னன் மணம் செய்து கொள்ள இசைவு தெரிவித்ததை உணர்ந்த அங்கதராசன் தன் பெண்ணுக்குப் பல அறிவுரைகள் கூறுகிறான். பின்னர் அனைவரும் புகழ்ந்து பாராட்டுகின்றனர்.

எல்லா மக்களும் மகிழ்ச்சியுடன் மங்களம் பாட நாடகம் நிறைவு பெறுகிறது.

பாத்திரப் படைப்புகள்

அங்கதராசன் அம்புசபாணி, அதிரூபவதி, சகசி மன்னன், சுமதி, பாங்கி, சூத்திரதாரன், கட்டியக்காரன் ஆகிய பாத்திரப் படைப்புகளில் அதிரூபவதியே முதன்மைப் பாத்திரப் படைப்பாகும். ஏனையோர் துணைப் பாத்திரங்களாவர்.

அதிரூபவதி :– அங்கதராசனின் மகள். அங்கததேசத்தரசன் அளித்த கன்னிகையான இவள் மங்கைப் பருவ வயதினள்; அன்னம் போல நடை பயின்றவள்; மயில் போன்ற சாயலை உடையவள்; தன்னை ஈன்றெடுத்த தந்தையின் மனம் குளிர நடப்பவள்; தோழியர்கள் எப்பொழுதும் இவளுடனேயே இருக்கின்றனர்; கன்னி மாடத்தில் இருந்த இவளைப் பெண்ணே!, மானே!, குயிலே!, மின்னே! என்று பலரும் பலவாறாக அழைக்கின்றனர். தன் தந்தையைப் பார்ப்பதற்காகச் சந்திரமுகம் துலங்க, அழகாகத் தன்னை இரதியைப் போல அலங்கரித்துக் கொண்டு, ஒய்யாரமாகச் சித்திரப்பாவை போல நடந்து வருகிறாள். பெற்றோரிடம் தான் மணம் செய்ய விரும்புபவரது ஓவியத்தைப் பார்த்துப் பிறகு முடிவு செய்வதாகக் கூறுகிறாள். அதன்படி ஐம்பத்தாறு தேசத்து அரசர்களின் உருவங்களை ஓவியமாகத் தீட்டச் செய்து இவளிடம் காட்டுகின்றனர். அவற்றுள் சோழ தேசத்து மன்னன் சகசேந்திரனின் அழகைக் கண்டு காதல் மயக்கம் கொண்டு அவனை மணப்ப தென முடிவு செய்கிறாள். சகசியின் ஓவியத்தைக் கண்டு, "தீராத மையல் கொண்டேன்; தளராத சிந்தை தளர்ந்தேன்; உடல் மெலிந்தேன்; பாராத மடல் பார்த்தேன்; மானே! என்ன செய்வேன்? மன்னன் சகசேந்திரன் தந்த மையல் பொறுக்குதில்லை; சகசிராசர்க்கு மனம் வராதோ?, அவர் தழுவி எந்தன் ஆசை தீராதோ?" என்று பலவாறாகப் புலம்புகிறாள்.

பெற்றோருடனும் ஏனைய அரச பரிவாரங்களுடனும் சகசி மன்னனைக் காணச் செல்கிறாள். சகசி மன்னனிடம் தன்னை மணம் புரிந்து கொள்ளு மாறு வேண்டுகிறாள். அந்நேரம் மாலைப்பொழுது முடிந்து நிலவு தோன்று கிறது. இதனால் மேலும் மயக்கங்கொண்ட இவள் சகசி மன்னனிடமே தன் மோகத்தைத் தீர்த்து வைக்குமாறு வேண்டுகிறாள். "பதினாயிரம் பெண்கள் இருந்தாலும் என்னைப் பத்திலே பதினொன்றாய்ப் பூரக்க வேணும்; கல்யாணம்

செய்து என்னைக் கலந்தாள நினையும்" என்று கூறுகிறாள்.

அங்கதராசன் :- அங்கத நாட்டு அரசன். இவன் மனுநீதி வழுவாமல் தம் நாட்டை ஆள்கிறான். பிற நாட்டு மன்னர்கள் பணிந்து போற்றும் பெருமை உடையவன். தம்மை நாடி வருகின்றவர்களுக்குப் பல பொருள்களைப் பரிசிலாக நல்கும் தன்மை உடையவன். அன்னதானம் செய்வதிலும் புலவர்களை மதிப்பதிலும் சிறந்து விளங்குபவன். 'உலகை மலரடியால் அளந்த மாயன்' (ப. 8) என்றும் 'செந்தாமரைக் கண்ணன்' (ப. 8) என்றும் 'இந்திரன்' (ப. 23) என்றும் போற்றப்படுபவன். தன் மனைவியிடம் தன் மகளின் திருமணம் குறித்துக் கலந்து பேசி மனைவி, மகள் ஆகிய இருவர் கருத்துக் களையும் கேட்டு அறிகிறான். அதன்படி அமைச்சரை அழைத்துத் தன் மகளுக் கேற்ற கணவனைத் தேர்வு செய்வதற்காக ஐம்பத்தாறு தேசத்து அரசர்களின் உருவங்களையும் ஓவியமாகத் தீட்டிவரக் கட்டளையிடுகிறான். அதன்படி வரையப்பட்ட எல்லா ஓவியங்களையும் தன் மகளிடம் கொடுத்து அவளையே தேர்ந்தெடுக்குமாறு கூறுகிறான். பின்னர்த் தன் மகள் விருப்பப்படியே அவள் தேர்ந்தெடுத்த சகசி வேந்தனைப்பற்றி அமைச்சரிடம் கேட்டறிகிறான். பின்னர் எல்லோரையும் அழைத்துக் கொண்டு சகசி மன்னனைக் கண்டு அவனிடம் மணம் பேசித் தன் மகளுக்கு அறிவுரைகள் பலகூறி அவனுக்குத் திருமணம் செய்து வைக்கிறான்.

அம்புசபாணி :- அங்கதராசன் மனைவி. தன் மகளுக்குத் திருமணம் செய்வதற்காக இவளை மன்னன் அழைத்துவரச் செய்கிறான். அன்னம் போல நடந்து வருகிறாள். மேகலை அணிந்துள்ளாள். பின்னர்த் தன் மகளிடம் நேரடியாகவே கேட்டுவிடலாம் என்று தன் கணவனிடம் கூறி அதன்படியே தோழியை அனுப்பித் தன் மகளை அழைத்துவரச் செய்கிறாள். தன் மகளின் கருத்தை அவள் தோழி மூலம் அறிந்து மன்னனிடம் சொல்கிறாள். இவள் பணி இத்துடன் முடிவடைந்துவிடுகிறது. பின்னர் இறுதியில் மன்னனுடன் இவளும் வருவதாகச் சூத்திரதாரன் கூறுகிறான்.

சகசி மன்னன் :- இந்நாடகத் தலைவன். தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு 1684 முதல் 1712 வரை ஆட்சி செய்தவன். இம்மன்னனைப் புகழ்ந்து பாடும் நோக்கத்திலேயே இந்நாடகம் முத்துக்கவிஞரால் இயற்றப் பட்டுள்ளது. நாடகத் தலைவனாக இம்மன்னன் கருதப்பட்டுப் படைக்கப் பட்டிருந்தாலும் நாடகத்தில் எந்தவோர் இடத்திலும் இம்மன்னன் பேசுவதாகப் படைக்கப்படவில்லை. நாடகத்தின் பிற பாத்திரங்கள் மூலம் இம்மன்னன் புகழ் போன்ற சிறப்புக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

சகசேந்திரன், சோழன், சோழ ராஜேந்திரன், சகசிராசதீரன், சோழேந்திரன், சகசிராசன், சகசிபூபன், சத்திரபதியரசன், சதுரன் என்று

பலவாறாகப் பலரால் அழைக்கப்படுகின்றான். "அழகில் சிறந்தவன்; மணம் வீசும் மலர்களைத் தோள்களில் அணிந்தவன்; அழகிய மார்பில் கேயூரம் தரித்தவன்; அழகில் முருகன், மன்மதன் ஆகியவர்களுக்கு இணையானவன்; மேகத்தை ஒத்த மாயன்; போசல குலத்தில் தோன்றியவன்; சத்திரபதி அரசன்; பல விருதுகள் பெற்ற வீரன்; கல்வியில் சிறந்தவன்; மாதர்க்கெல்லாம் ஏற்ற மாறன்; ஏகோசி ஈன்றளித்த குமாரன்; சிவபூசை செய்யும் நேமன்; கொடையில் கர்ணன்; பல மன்னர்கள் பணியும் சிறந்த வீரன்" என்றிவ்வாறு பலவிடங்களில் பலரால் போற்றிப் பாராட்டப்படுகின்றான்.

கதைத் தலைவி அதிரூபவதி பல நாட்டு மன்னர்களின் உருவப் படங்களைப் பார்த்து அதில் தன் அழுகுக்கு ஈடாகச் சோழ நாட்டு மன்னன் சகசியைத் தேர்ந்தெடுக்கிறாள். இவன் ஓவியத்தைப் பார்த்தது முதல் இவன்மீது அளவிட முடியாத அளவுக்குத் தீராக் காதல் கொள்கிறாள். "அவன் மார்பில் அணிந்துள்ள மாலையைத் தரச்சொல்; இன்றேல் வாய் முத்தமாவது தரச்சொல்; என் மேனியில் பூசியுள்ள சந்தனம் கொதிக்கிறது; இவன்தான் எனக்கேற்ற மணாளன்" என்று பலவாறாகத் தன் தோழியிடம் புலம்புகிறாள்.

அதன்பின்னர்த் தன் தாய், தந்தையர்களுடனும் மற்றுமுள்ள ஏனையோருடனும் சக்சி மன்னனைக் காணச் செல்கின்றாள். மன்னனிடம் தானே நேராகவே தன்னை மணம் செய்து கொள்ள வேண்டுகிறாள். இறுதியில் 'மன்னன் மனமிரங்கி அங்கீகரித்தார்' என்று சூத்திரதர்ரன் சொல்கிறான். பின்னர் இறுதியில் அனைவரும் மங்களம் பாடுகின்றனர்.

சுமதி :– அங்கதநாட்டு அமைச்சரான இவரைப் பெண் பாத்திரமாக ஆசிரியர் படைத்துள்ளார். இக்காலத்தில் தோன்றிய பல நாடகங்களில் அமைச்சராக ஆண் பாத்திரங்களையே ஆசிரியர்கள் படைத்திருக்க இந் நாடகத்தில் மட்டும் பெண்ணாகப் படைத்திருப்பது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும்.

ஓவியர் தீட்டிய ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களின் படங்களை எடுத்துக்கொண்டு மன்னரைக் காண வருகின்ற மந்திரியைப் பற்றி,

"அங்கத ராசன் மனதுக் கான
யோசனைகள் சொல்லும்
துங்க வைபோக முடன்
சுமதி மந்திரி வந்தானே!" (பக். 10 – 11)

என்று சூத்திரதாரன் பாடுகிறான். இதில் 'சுமதி மந்திரி வந்தானே!' என்றுள்ளது. அடுத்து அரசனுக்கு அவன் மனம் அறிந்து அறிவுரைகள் சொல்வது அமைச்சரின் கடமை என்பதையும் இப்பாடல் மூலம் அறிய

முடிகிறது.

சுமதி மந்திரி அரசனிடம் ஓவியங்களைக் கொடுப்பதுடன் நில்லாது ஓவியர்கள் இப்படங்களை எப்படியெப்படியெல்லாம் வரைந்தனர் என்பதையும் கூறுகின்றார். மேலும் சகசி மன்னனை ஓவியமாக வரைவதில் ஓவியர் மிகவும் துன்பப்பட்டு வரைந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

அதன்பின்னர் அதிரூபவதி சகசியை மணப்பதாக இசைவு தெரிவித்த பின்னர் அரசன் அமைச்சரை அழைத்துச் சகசியைப்பற்றி வினவுகிறான். அதற்கு அமைச்சர், சகசியின் முன்னோரைப்பற்றியும், அவன் பிறந்து வளர்ந்ததைப்பற்றியும், அவன் ஆட்சிச் சிறப்பையும் சுருங்கக் கூறுகிறார்.

பாங்கி :– சகி, பாங்கி, சேடி என அழைக்கப்படுகின்ற இப்பாங்கியர் அரண்மனையில் அரசிக்கும், இளவரசிக்கும் உற்ற தோழியர்களாக உள்ளனர். இவர்களில் யாருடைய பெயரும் குறிக்கப்படவில்லை. 'பெண்ணே, மானே, மாதே, தோகையே' என்று பலரால் அழைக்கப்பெறுகின்றனர். மன்னன் தன் மனைவியையோ, மகளையோ அழைத்துப் பேசுவதானாலும் முதலில் பாங்கியிடம் சொல்லி அவளை விட்டே இருவரையும் அழைத்துவரச் செய்து பேசுகிறான். அம்புசபாணிகூடச் சேடியை அனுப்பித் தன் மகளை அழைத்து வரச் சொல்கிறாள். அதன்பின்னர் அதிரூபவதியின் மனக்கருத்தை அறிந்து வந்து அவள் பெற்றோரிடம் பாங்கி தெரிவிக்கிறாள். இவ்வாறு அரச குடும்பத்தவர்க்குப் பணிபுரியும் பாங்கிமார்கள் அவர்கள் இட்ட பணி எதுவாக இருந்தாலும் அவற்றைச் செய்து முடிக்கின்றனர்.

சூத்திரதாரன் :– நாடகத்தை அறிமுகம் செய்வதிலிருந்து இவன் பணி தொடர்கிறது. கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்துவதோடு கதை நிகழ்ச்சிகளையும் சபையோர்க்கு விளக்கிக் கூறுகிறான். இவன் பேச்சு உரைநடையிலேயே அமைந்திருக்கிறது. பலவிடங்களில் பேச்சுத் தமிழில் இவன் பேசுவதையே காண முடிகிறது.

கட்டியக்காரன் :– சபையோர்க்குச் சூத்திரதாரன் இக்கட்டியக்காரனை முதலில் அறிமுகம் செய்து வைக்கிறான். நாடகத்தைத் தொடங்கி வைப்ப துடன் இவன் பணி முற்றுப்பெற்று விடுகிறது.

இன்னிசை நாட்டியப் பனுவல்

இந்நூலில் இடம்பெற்றுள்ள பாக்கள் 'தருவு' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றன. இந்நூலில் மங்கள தருவு, அகவல், தருவுப் பாக்கள், விருத்தம், தனித் தருவு, பதம் ஆகியவை காணப்படுகின்றன. இவற்றுள் அகவல், விருத்தம், தருவு ஆகிய மூன்றும் தமிழிசை யாப்புக்குரியவையாகும்,

பதம் என்பது நாட்டியத்திற்குரியதாகும்.

நாடகம் தொடங்கும்பொழுதும், முற்றுப்பெறும்பொழுதும் 'மங்கள தருவு'ப் பாக்கள் பாடப்படுகின்றன. கதைச் சுருக்கம் 'கதாசங்கிரக அகவலி'ல் கூறப்படுகிறது. ஏனைய பாக்கள் அனைத்தும் நாட்டியத்திற்கேற்ற அமைப்பிலேயே அமைந்துள்ளன.

தோடய மங்களம் சிவன் துதியாகவும், மங்களம் தியாகேசர் துதியாகவும் அமைந்துள்ளது. இவ்விரு பாக்களும் வடமொழியில் தமிழ் எழுத்துக்களால் ஆனவை. அதேபோன்று நாடக இறுதியில் 'மங்களம் – சோபனம்' பாடப்படு வதற்கு முன்னர் இடம்பெற்ற பாடலும் வடமொழியில் தமிழ் எழுத்துக்களால் அமைந்திருக்கிறது.

நாட்டை, மதியமாவதி, சௌராட்டிரம், ஆகரி, கும்மகாம்போதி, தோடி, பைரவி, நாதநாமக்கிரியை, பிலகரி, உசேனி, பூபாலம், சுரடி, நீலாம்பரி, கல்யாணி, பந்துவராளி, தேசாட்சி ஆகிய பதினாறு இராகங்களில் சம்பை, சாபு, ஆதி, அட ஆகிய நால்வகைத் தாளங்களில் இந்நாடகப் பாக்கள் அமைந்துள்ளன.

நாடகநூல்

இரண்டாம் சகசி மன்னரின் ஆட்சிக்காலத்தில் அரண்மனை நாடக சாலையில் மன்னர் முன்னிலையில் இந்நாடகம் இசையுடன் பாடி நடிக்கப் பெற்றுள்ளது. எட்டுக் கதாபத்திரங்களைக் கொண்ட இந்நாடகத்தில் இன்னிசைப்பாக்களும் இடையிடையே உரைநடை கலந்தும் நடிக்கப் பெற்றுள்ளது.

சூத்திரதாரன் பெரும்பாலும் வசன நடையிலேயே பேசுகின்றான். அங்கதராசன் – கட்டியக்காரன், சூத்திரதாரன் – அம்புசபாணி, அங்கதராசன் – சகி, அங்கதராசன் – சுமதி மந்திரி, அங்கதராசன் – அதிரூபவதி ஆகியோர் வசன நடையில் பேசியுள்ளனர். அங்கதராசன் – அம்புசபாணி, அதிரூபவதி – சகி ஆகியோர் உரையாடியதைப் பாக்களிலும் காணமுடிகின்றன.

இறைவன் தொடர்பான குறிப்புகள்

திருமால், சிவன், முருகன், இந்திரன், இலக்குமி, மன்மதன் ஆகியோர் தொடர்பான குறிப்புகளைப் பாக்களில் காணமுடிகின்றன,

அங்கதராசனைப்பற்றி அம்புசபாணி கூறும்பொழுது உலகை மலரடி யால் அளந்த **மாயன்** போன்றவன் என்கிறாள். அதிரூபவதியிடம் ஒவ்வொரு நாட்டு மன்னர் ஓவியம்பற்றியும் விளக்கிக் கூறுகிறாள் சகி. அப்போது

திருமாலைப் போன்றவன் என்கிறாள். அதிரூபவதி சகசியைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது 'இராமனின் அவதாரம்' என்கிறாள். பாங்கியும் சகசி மன்னனைத் திருமாலுக்கு ஒப்பிட்டுக் கூறுகிறாள்.

சகசி மன்னனைத் திருமாலுக்கும், சிவனுக்கும், இந்திரனுக்கும், முருகனுக்கும் ஒப்பிட்டுப் பலரும் பேசுகின்றனர். பாங்கி, அதிரூபவதி சகசி யின் ஓவியத்தைப் பார்த்துக் காதல் கொண்டதை மன்னனிடம் கூறும் பொழுது சிவனருளால் இச்செயல் நிகழ்ந்தது என்கிறாள்.

சக்சி மன்னன் தியாகராசரை நாளும் வழிபடுபவன்; நாளும் சிவபூசை செய்பவன் என்று நூலாசிரியர் குறித்துள்ளார். இவனிடம் எப்பொழுதும் இலக்குமி வாசம் செய்வாள் என்றும் கூறியுள்ளார்.

மாரன், மதனன், காமன், மன்மதன் என்று அழைக்கப்படுகின்ற மன்மதன் காதல் வயப்பட்ட பெண்களை எந்தவிதத்தில் துன்புறுத்துகிறான் என்பதை இக்கதைத் தலைவி மூலம் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். சகசி மன்னன் ஓவியத்தைக் கண்டு அவனையே மணப்பதெனை முடிவு செய்த அதிரூபவதி மீது மாரன் மலர்க்கணைகள் தொடுக்கிறான். மாலை நேரத்தி லேயே இம்மதனன் கணை தொடுத்துத் தொல்லைப்படுத்துகிறான். மன்மதனுக்கு இணையானவன் சகசி வேந்தன் என்கிறாள் அதிரூபவதி. மேலும் 'மாதர்க்கெல்லாம் ஏற்ற மாரன் சகசேந்திரன்' என்றும் கூறுகிறாள்.

உவமைகள்

போல, போலும், நிகர், நிகர்த்த, எனும், என்ன, ஒத்த ஆகிய உவம உருபுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அம்புசபாணி நடந்து வரும் அழகைக் கூறவந்த கவிஞர் 'அன்னம் போல', 'சுவர்ணம் போல', 'இன்ப மயிலென்ன', 'சித்திரப்பாவை போல', 'பூவைப் போல' நடந்து வந்தாள் என்கின்றார். அதிரூபவதியின் முகம் சந்திரனைப் போன்றிருந்தது எனக் கூறியவர் இவள் அழகில் இரதியைப் போலவும், இலக்குமியைப் போலவும் விளங்குகிறாள் என்றும் இவள் முலையானது குன்றைப் போன்றிருந்தது என்றும் கூறுகின்றார்.

சகசியின் அழகுக்கு ஈடு யாருமில்லை என்பதை 'அவனுக்கொத்தபேர் ஆகாது' என்று சுமதி மந்திரி கூறுகின்றார். மேலும் சகசியைப்பற்றிப் பின்வருமாறு பலரும் கூறுகின்றனர்.

1. தாமரை நிகர்த்த கரம் (ப.14)
2. சாமளம் நிகர்த்த பூமன்னர் வணங்குந்தாள் (ப. 14)
3. மா கனக மேரு நிகர் போசன் (ப. 24)

4. கொடைக் கர்ணன் (ப. 27)
5. குளிர்ந்த குணத்தைப் போல (ப. 27)
6. மலரயன்தனைப் போலும் (ப. 27)
7. தாமரைக் கழல் (ப. 28)
8. சந்தனம் ஒழுகிய மந்தரகிரி நிகர் சூந்தரமான புயன் (ப.31)
9. மாரன் போல் வந்தவன் (ப. 31)
10. மேக நிகர் மாயன் (ப. 35)

அதிரூபவதி சகசி மன்னன் ஓவியத்தைப் பார்த்தது முதல் அவன்மீது காதல் கொள்ளத் தொடங்குகிறாள். மாலை வேளையில் நிலவு தோன்றுகிறது, தென்றல் காற்று வீசுகிறது, மன்மதன் இவள் நிலையைக் கண்டு மலரம்புகளை எய்கிறான். இந்நிலையில் அதிரூபவதி தன் தோழியிடம் பலவாறு புலம்புகிறாள். அப்பொழுது 'மலைய மாருதம் வந்தாலும் கலங்கிய என் மனது உலையில் மெழுகென்னவே நிலை தளர்ந்தது' என்கிறாள்.

ஏனையவை

1. ***இசைக் கருவிகள்*** :– அங்கதராசன் தன் மகளுடனும் பிற அரச பரிவாரங்களுடனும் சகசி மன்னனைக் காணப் புறப்படுகிறான். அப்பொழுது பேரி (முரசு), பூரி (ஊதுங்கருவி வகை), கடாம் (கடம் – குடமுழவு), தடாரி (மத்தளம், கிணைப்பறை), பெரிய மேளம் ஆகிய இசைக் கருவிகள் இசைக்கப்பட்டன; பல யானைகளும், காசுகளும் திறையாகக் கொண்டு செல்லப்பட்டன.

2. ***ஓவியக்கலை*** :– மடல் என்று ஓவியம் பாடலில் குறிக்கப் பட்டிருக்கிறது. உரைநடையில் படம் எனக் கூறியிருக்கின்றனர். ஓவியத்தை 'மடல்' என்று கூறுவதை மராத்தியர் காலத்திலேயே அதுவும் இவ்விலக்கியத்திலேயே காணமுடிகிறது. இதற்கு முன்னர்த் தோன்றிய நூல்களில் இவ்வாறு அழைப்பதைக் காணமுடியவில்லை.

ஒவ்வொரு தேசத்து மன்னரையும் ஓவியமாக வரைந்து அதிலிருந்து தேர்ந்தெடுப்பதையும் இந் நாடகத்திலேயே காணமுடிகிறது. அங்கதராசன், "ஐம்பத்தாறு தேசத்துக்குச் சித்திரகாரரை அனுப்பி அந்தந்த தேசாதிபரை அந்தமாய் ஸ்வரூபப்படிக்குப் படத்தில் எழுதி அழைப்பித்து அந்தப் படங்களை மதி மந்திரியைக் கொண்டுவரச் சொல்" என்று கூறுகிறான். ஓவியம் வரைவது 'எழுதுதல்' என்றும் ஓவியக்காரரைச் 'சித்திரகாரர்' என்றும் அழைத்துள்ளமையைக் காணமுடிகிறது.

ஓவியங்களை எப்படி வரைந்தனர் என்பதைச் சுமதி மந்திரி பின்வருமாறு கூறுகிறார்.

"அவரவர் நிற மாக
வண்ணம் அடைத்து
அவரவர்க் காபரண மெல்லாம்
எழுதித் தீர்த்து
வகை வகை யாகவே கறுப்பு
ரேகை காட்டி - அந்த
மன்னர் பாவம்
அறிவதே மட்டும் - அதிலும்
சகசேந்திரனை எழுதப் போகாது
அவன முகைக் கண்டால்
அவனுக் கொத்த பேர் ஆகாது
பதனம் பதன மாகவே எழுதியதைப்
பாரும் அவன் பாவனை!
எழுத வல்லவ னாரையா?" (ப. 11)

இப்பாடலில் ஓவியர் எவ்வாறு ஓவியத்தை வரைந்தார் என்பதைக் காணமுடிகிறது. ஓவியத்தில் இரேகையை வெளிப்படுத்துவதைக்கூட அறியமுடிகிறது.

3. **நாட்டுவளம்** :- அங்கத நாட்டு வளத்தை ஆசிரியர் ஒரு பாடலில் விளக்கியுள்ளார். இந்நாட்டில் செந்நெல் மிகு நன்றாகச் செழித்துள்ளது. அரிவைப் பெண்கள் வாசனை மிக்க பொருள்களை உடம்பில் பூசி நீராடுவர். வசந்த விழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

4. **பெண்கள்** :- அந்நாளில் திருமணம் ஆகாத பெண்கள் கன்னிகை என அழைக்கப்பட்டுள்ளனர் (பக். 6,14,21). திருமணமாகாத இளவரசிகள் கன்னிமாடத்திலிருப்பது வழக்கம் (ப. 33). சிகரமுலையார் (ப. 16), தத்தை நல்லார் (ப. 17), காரார் குழலார் (ப. 12), அரிவை மாதர் (ப. 14), தையலர்கள் (ப. 14) என்று பெண்கள் அழைக்கப்பட்டுள்ளனர். சகசி மன்னன் அரண்மனையில் பல நாட்டைச் சேர்ந்த அழகிய இளம் பெண்கள் பலர் அந்தப்புரத்தில் இருந்துள்ளனர். இதனை இந்நாடகத் தலைவி அதிரூபவதி 'மட்டில்லாத மாதர்கள் பலர் மன்னனிடத்தில் உண்டு' (ப. 22) என்றும் 'அதிரூப வஞ்சியர் ஆயிரம் பேர் உண்டு' (ப. 29) என்றும் 'பதினாயிரம் பெண்கள் உண்டு' (ப. 33) என்றும் கூறுவதனால் அறியமுடிகிறது.

5. **அணிகலன்கள்** :- கட்டியக்காரன் கையில் கங்கணம் கட்டுவது வழக்கம். அம்புசபாணி செம்பொன் மேகலை அணிந்துள்ளாள். ஓவியம் தீட்டுவோர் மன்னர்கள் அணிந்துள்ள ஆபரணங்கள் நன்கு தெரியும்படி வரைந்துள்ளனர். சகசி மன்னன் தன் தோள்களில் கேயூரம் அணிந்துள்ளான். வேசிப் பெண்கள் எப்பொழுதும் பொன்மீதுதான் அதிக ஆசை கொள்வது

வழக்கம்.

6. ***அரசர்கள்*** :- பல்வேறு அரசர்களும் இந்நூலில் ஏற்றவிடங்களில் கூறப்பட்டுள்ளனர். சகசி மன்னன் கொடைத் தன்மைக்குக் கர்ணன் ஒப்பிட்டுக் கூறப்பட்டதை அறியமுடிகிறது. சகசி மன்னனே முன்பொரு காலத்தில் இராம அவதாரம் எடுத்தவன் என்று ஆசிரியர் புகழ்ந்து கூறியுள்ளார். ஐம்பத்தாறு தேசத்து அரசர்களின் உருவங்களை ஓவியர் தீட்டினார் எனப் பொதுப்படையாக ஆசிரியர் கூறியுள்ளார். ஆயின் பாஞ்சால ராசன், சீனதேசராசன், வடகலிங்கராசன், ஆரியராசன், சேர ராஜேந்திரன், பாண்டியராசன் என்று சில தேசத்து மன்னர்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளனர்.

7. ***எண்கள்*** :- பத்து, பதினொன்று, பதினாறு, ஐம்பத்தாறு, பதினாயிரம் ஆகிய எண்கள் கூறப்பட்டுள்ளன.

8. ***இயற்கைப் பொருள்கள்*** :- பெண்ணின் நடைக்கு அன்னம், மயில் ஆகிய பறவைகள் கூறப்பட்டுள்ளன. சொல் இனிமைக்குக் குயில் கூறப் படுகிறது. தவிரப் பெண்ணை மயிலே! என்றும் குயிலே! என்றும் அழைத்து முள்ளனர். மான், வாரணம் (யானை) ஆகிய விலங்குகளும், பங்கயம், பூ, (செந்)தாமரை, முல்லை, மல்லிகை ஆகிய மலர்களும் கூறப்பட்டுள்ளன. மலய மாருதம், கா, முகில், மழை, செந்நெல், தேன், சங்கு போன்ற இயற்கைப் பொருள்களும் இடம்பெற்றுள்ளன. நிலவு, சந்திரன் என்றழைக்கப்பட்ட வெண்ணிலா, காதல் வயப்பட்ட பெண்ணுக்குத் துன்பத்தைத் தருவதாக இந்நூலாசிரியர் பாடியுள்ளார். வைகை நதி, காவேரி ஆகிய ஆறுகளும் கடலும் கூறப்பட்டுள்ளன. மலையும் கூறப்பட்டுள்ளது.

9. ***வசனங்கள்*** :- சூத்திரதாரன், கட்டியக்காரன், அங்கதராசன், அம்புசபாணி, அதிரூபவதி, சுமதி மந்திரி, சகி ஆகியோர் வசனங்களைப் பேசுகின்றனர். நாடக நிகழ்ச்சிகளையும் நாடகப் பாத்திரங்களையும் அறிமுகப் படுத்தும்பொழுதும் சூத்திரதாரன் வசன நடையில் பேசுகின்றான். இவன் பேச்சில் 'இந்தப்படிக்கு', 'இந்தப்படியெல்லாம்', 'கதாசம்விதானம்' போன்ற சொற்கள் அடிக்கடிப் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றன.

பொதுவாகப் பேச்சுத் தமிழில் சொச்சை நடையிலேயே வசனங்களைப் பாத்திரங்கள் பேசுகின்றனர். இவற்றில் பிறமொழிச் சொற்கள் தாராளமாகக் கலந்திருக்கின்றன. அதிலும் குறிப்பாக வடமொழிச் சொற்களைத் தாராளமாகக் கலந்து பேசும் நிலையைக் காணமுடிகின்றது.

10. ***சொற்கள்*** :- 81 வடமொழிச் சொற்களை ஆசிரியர் இந் நாடகத்தில் பயன்படுத்தியுள்ளார். இவற்றில் ஒரே சொல்லைத் தமிழ் எழுத்திலும் வடமொழி எழுத்திலும் பயன்படுத்தியிருப்பதையும் காணமுடிகிறது.

உதாரணமாகச் 'சயராமன்' என்றும் 'ஜயராமன்' என்றும் பயன்படுத்தப் பட்டுள்ளன. ஆசிரியர் 50 விழுக்காடு பாக்களிலும் எஞ்சிய 50 விழுக்காடு உரைநடையிலும் இச்சொற்களைக் கையாண்டுள்ளார்.

மக்கள் அன்றாட வாழ்க்கையில் பேசுகின்ற பேச்சு வழக்குச் சொற்களாக 50 சொற்கள் இடம்பெற்றுள்ளன. இச்சொற்களும் 50 விழுக்காடு பாக்களிலும் மீதி 50 விழுக்காடு உரைநடையிலும் வந்துள்ளன. உரைநடையில் பேசும்பொழுது அடியே, எடடி, தாடீ போன்ற சொற்களைச் சர்வ சாதாரணமாகக் கையண்டுள்ளார்.

அந்தந்த, வகைவகை, சரணம் சரணம் முதலான 16 அடுக்கு மொழிச் சொற்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இச்சொற்கள் பாக்களிலேயே வந்துள்ளமை இவண் குறிக்கத்தக்கது.[9]

9. இந்நூலில் இடம்பெற்றுள்ள சொற்கள் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

மொழிபெயர்ப்பு இலக்கியம்

தெலுங்கு - தமிழ்

சிவகாமசுந்தரி பரிணய நாடகம்

4
சிவகாமசுந்தரி பரிணய நாடகம்

தஞ்சை மராத்திய மன்னர் முதலாம் ஏகோஜிக்கும் தீபாம்பிகைக்கும் பிறந்தவருள் மூன்றாவது மகன் துக்கோஜி என்ற முதலாம் துளஜா இயற்றிய நூல்களுள் இந்நாடகமும் ஒன்று. இவர் 1728 முதல் 1736 வரை தஞ்சை அரசுப் பொறுப்பில் இருந்தார். இவர் தெலுங்கு மொழியில் இராசரஞ்சன வித்யா விலாசம், சிவகாமசுந்தரி பரிணயம் எனும் இரண்டு யட்சகான நாடகங்களை எழுதியுள்ளார். இதில் 'சிவகாமசுந்தரி பரிணய நாடகம்' மட்டும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர், சரசுவதி மகால் நூலகத்தில் இந்நூலின் மூன்று தெலுங்கு ஓலைச்சுவடிகள் உள்ளன.[1] இவற்றை அடிப்படையாகக் கொண்டு எஸ். சீதா, சுவர சாகித்தியத்துடன் 1971இல் தமிழிலும், தெலுங்கிலும் பதிப்பித்துள்ளார்.[2] தமிழ் மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டு இந்நாடகம் ஆய்வு செய்யப்பெறுகிறது.

நூலமைப்பு

உருவகக் கதையைப் (allegory) பொருளாகப் பெற்ற இந்நாடகம் 64 சாகித்தியங்களைக் கொண்டு அமைந்துள்ளது. மொத்தம் 41 இராகங்களையும், 5 தாளங்களையும் கொண்டுள்ளது. நாற்பத்தொரு இராகங்களில் கும்மகாம்போதி, கௌளிபந்து, மல்லாரு, பாடி, கௌரி, பிருந்தாவனி, கண்டா ஆகிய ஏழு அபூர்வராகங்கள் அமைந்துள்ளன. இசை நாடக மரபிற்கேற்பத் தொடக்கப் பாடல்கள் கும்மகாம்போதி, சௌராட்டிர இராகங்களிலும், இறுதிப் பாடல் சுரடி இராகத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. நாடகத்தில் வரும் நிகழ்ச்சிகளுக்கும், அதன் உணர்ச்சிகளுக்கும் பொருத்தமான வகையில் இராக தாளங்கள் அமைந்துள்ளன. இயற்கையின் ஒவ்வொரு சக்திக்கும் ஓர் உருவத்தைக் கொடுத்துத் தேவதையாக நினைத்துத் தொடக்கம் முதல் முடிவு வரை நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. வேதாந்தத் தத்துவத்தையும் அதன் உயரிய நோக்கையும் சாதாரண எளிய மக்களும் படித்துப் புரிந்து கொள்ளும் முறையில் இந்நாடகம் அமைந்துள்ளது. பாடல்களும் இடையிடையே

1. எண்கள் 633, 634, 635.
2. எஸ். சீதா (ப. ஆ.), துளஜா மஹாராஜா இயற்றிய **சிவகாமஸுந்தரீ பரிணய நாடகம்** (ஸ்வர ஸாஹித்யத்துடன்), தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு, 1971.

வசனங்களும் அமைந்து இசை நாட்டிய நாடகமாக ஆசிரியர் படைத்துள்ளார்.

நூலாசிரியர்

இந்நூலை இயற்றியவர் துளஜா மன்னராவார். நாடகத் தொடக்கத்தில் இறைவணக்கப் பாடல் முடிந்ததும் மேடையில் சூத்திரதாரன் தோன்றுகிறான். இவன் அவையோர்க்கு நாடகத்தை அறிமுகம் செய்கின்றபொழுது, "போஸல குலமென்ற பாற்கடலுக்குப் பூரணச்சந்திரனாய் விளங்கிய மாளோஜி ராஜேந்திரன் மகனான, ஸாஹஸாங்கன் என்னும் பட்டப்பெயர் பெற்ற சாஹ ராஜனுக்குப் புத்திரனும் பெண்களுக்கு மன்மதன் போல் விளங்குகின்றவரு மான ஏகமஹாராஜனின் பிள்ளைகளுள் சாஹமஹாராஜனுக்கும் சரப பூபாலனுக்கும் இளைய சகோதரனான துளஜராஜன், ஸ்ரீ ஆதிவராக சுவாமிக்கு உத்ஸவம் செய்து கொண்டிருக்கிறார்." "ஜனங்கள் கொண்டாடுவதற்காக, துளஜராஜன் இயற்றிய சிவகாமசுந்தரியின் திருக்கல்யாணம் என்கிற நாடகத்தை நன்றாக இந்தச் சபையில் நடித்துக் காட்டலாம்" (பக். 4, 5) என்று கூறுகிறான்.

தன்னை ஈன்றெடுத்த பெற்றோர்களுக்கு வணக்கம் கூறிப் போற்று கின்றார். கலைமகள், திருமகள் ஆகியவர்களுடைய முழு அருளைப் பெற்றவரும், நற்குணமுள்ளவரும், சிறந்த வழியில் தர்மங்களைப் பாது காப்பவரும், அறிவு, ஆனந்தம் என்கிற பாற்கடலுக்கு முழுநிலவு போன்றவரும், சிவபெருமானிடத்தில் பேரன்பு கொண்டவரும், மக்களுக்கு நன்மை செய்து மக்களால் வணங்கப்பெறுபவரும் ஆகிய சாகமகாராசாவினுடைய பிள்ளையு மான ஏகமகாராசாவை எப்பொழுதும் மனத்தில் நினைத்து வணங்குகின்றார்.

சாதுவானவன்; நல்ல குணங்களுள்ளவன்; விரதங்களைக் கடைப் பிடிப்பவன்; கருணை, இரக்கம் கொண்டவன்; அழகினில் பார்வதி போன்றும், மனத்தை மகிழ்விப்பதில் இலக்குமி போன்றும் திகழ்பவன்; இத்தகைய அருங்குணங்களை உடைய தீபாம்பிகையை எப்பொழுதும் மனத்தினில் நினைத்து வணங்குகின்றார்.

பெற்றோர்களை வணங்கியதுடன் அமையாமல் தன் உடன் பிறந்தவர்களான சகஜியையும், சரபோஜியையும் வணங்குகிறார். மகிழ்ச்சி யூட்டும் கலைகளில் சிறந்தவர், உரைநடை, செய்யுள் இயற்றுவதில் நவீன போசனாக விளங்குபவர், அரசர்களிலே முதன்மையானவர், தியாகேசருக்கு ஒப்பான சகஜி என்றும்; மன்மதனை ஒத்த அழகுள்ளவர், சிரித்த முகத்தோடு கூடியவர், சகல கலைகளிலும் வல்லவர், பொறுமை உடையவர், பகைவர் களுக்கு அச்சத்தை உண்டு பண்ணுகின்ற சரபோஜி என்றும் இருவரையும் போற்றிப் பரவுகின்றார்.

போசல குலத்திற்குச் சந்திரன் போன்று துளஜா விளங்குகின்றார் என்று நாரதர் கூறுகின்றார் 'சிவாம்சமான ஸ்ரீ துளஜ மஹாராஜா' என்று திருமால் இமவானிடம் கூறுகின்றார்.

நாரதர், சிவபெருமானிடம் துளஜாவைப்பற்றிப் பெருமையுடன் பின்வருமாறு கூறுகின்றார்

"சோழ நாட்டைப் பாதுகாப்பவன். போசல குலத்திற்கு முழு நிலவு போன்றவன். ஏகபூபாலனுடைய மகன். சாக மகாராசாவுக்கும், சரப ராசனுக்கும் இளையவர். நல்ல அறிவாளி. நீதி சாத்திரங்களில் வல்லவர். சாகசாங்கன் என்ற பட்டம் பெற்றவர். பரமசிவனிடம் ஆழ்ந்த பக்தி பூண்டவர். மகா உத்தமர். மகாதேவப்பட்டணத்தைப் புதிதாக உருவாக்கி அங்கே ஆதி வராக சுவாமியைப் பிரதிட்டை செய்து, அந்த சுவாமிக்குப் பெரியதொரு விழா நடத்தி வருகிறார்".

நூல் நுதலிய பொருள்

துளஜா மன்னர் மகாதேவப்பட்டணத்தில் ஆதிவராக சுவாமிக்குக் கோயில் எடுத்துப் பெரியதொரு விழாவாக அதனை நடத்துகிறார். இவ் விழாவைக் காண்பதற்காகவும், ஆதிவராகரை வழிபாடு செய்வதற்காகவும் நாரதர் மகாதேவப்பட்டணத்திற்கு வருகிறார். திருமால் தன் சகோதரி பார்வதி யைக் காண்பதற்காக இமயமலைக்குச் சென்று விட்டார். அதனால் அவரை அங்கு நாரதரால் காண முடியவில்லை. உடனே நாரதர் இமயமலைக்குச் செல்கிறார். அங்கு இமவான், ஆறு ருதுக்கள் புடைசூழ வசந்தனால் வரவேற்கப்பட்டு அரசவை மண்டபத்திற்கு வருகிறார். இதன் பிறகு வன மாலைகள் அசையத் திருமால், இலக்குமியுடன் கருடன் மீதேறி அங்கு வந்து சேருகிறார். நாரதர், திருமாலை வணங்கிப் பாடுகிறார். அப்பொழுது நாரதர், துளஜா மன்னர் மகாதேவப்பட்டணத்தில் ஆதிவராக சுவாமிக்கு விழா எடுத்திருப்பதைத் தெரிவிக்கிறார். இதைக் கேட்ட திருமால் இவ்விழாவில் தாமும் பங்குபெறுவதோடு மற்றத் தேவர்களையும் பங்குபெற விரும்பி, இமவானிடம் எல்லோரையும் அழைக்கும்படி வேண்டுகிறார். இதன்படித் திருமால், இலக்குமி, இமவான், மாயா, தேவேந்திரன், மன்மதன், இரதி, வருணன், கங்கை, சந்திரன், மைனாகன், தேவி, பிரகஸ்பதி, சயை, பார்வதி, தாயார் மேனகை, உபேந்திரன் போன்றவர்கள் மகாதேவப்பட்டணத்திற்கு வருகின்றனர். ஆதிவராக சுவாமி கோயில் உற்சவமண்டபத்திற்கு வந்து இறைவனை வணங்கித் துதித்துப் பின் சபா மண்டபத்திற்கு அனைவரும் வந்து கூடுகிறார்கள்.

இதற்கிடையில், சிதம்பரத்திலுள்ள நடனசபையில் பரமசிவன்

வருகைக்காக நந்திகேசுவரர் பாடித் துதிக்கிறார். அதன் பின்னர்ச் சிவபெருமான் சபைக்கு எழுந்தருளினார். அப்பொழுது நான்முகன், கலைமகள், வித்யை, அவித்யை, வாயு, ஆகாயம், சூரியன், சுகமுனிவர், வியாக்கிரபாதர், பதஞ்சலி, குபேரன், தேசசு, கணபதி முதலானோர் சிவபெருமானை வணங்கிப் போற்றுகின்றனர். அச்சமயம் நாரதர் இங்கும் வந்து துளஜா மன்னர் ஆதிரவாக சுவாமிக்கு எடுப்பிக்கும் விழாபற்றியும், பார்வதியின் அழகைப்பற்றியும் கூறுகின்றார். எல்லாத் தேவர்களும் இவ்விழாவைக் காணச் சென்றதையும் தெரிவிக்கிறார். இச்செய்தியைக் கேட்டுப் பரமசிவனும் ஏனைய தேவர்களும் இவ்விழாவிற்குச் செல்ல விரும்பிப் புறப்படுகின்றனர்.

மகாதேவப்பட்டணத்தில் திருவிழாவிற்கான ஏற்பாடுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அங்கு ஏற்கெனவே சென்றிருந்த திருமால், பரமசிவனையும் பிற தேவர்களையும் எதிர்கொண்டு அழைக்கிறார். அங்கிருந்த பார்வதி, பரமசிவனிடம் காதல் கொள்கிறாள். பரமசிவன்மீது தீராக்காதல் கொண்ட சிவகாமசுந்தரி (பார்வதி) அங்குள்ள பூங்காவிற்குச் செல்கிறாள். மாலை நேரமானபடியினால் மன்மதன், சிவகாமசுந்தரிமீது மலர்க்கணைகளைத் தொடுக்கிறான். காதல் வேதனையால் மிகவும் துன்பங் கொண்ட சிவகாமசுந்தரி, தன் காதலைத் தோழி சயையிடம் முறையிடுகிறாள். இதனைக் கேட்ட சயை, நான்முகனிடம் எடுத்துக்கூறி, இருவருக்கும் திருமணம் செய்து வைக்க வேண்டுகிறாள். அதன்பின்னர்ப் பரமசிவனிடம் ஒப்புதலைக் கேட்டுப் பெறுகின்றனர்.

திருமால் தன் சகோதரிக்கும், பரமசிவனுக்கும் நடக்கவிருக்கும் திருமணத்தைச் சிறப்பாக நடத்தும்பொருட்டு வருணன், மன்மதன், குபேரன், மாயா ஆகிய இவர்களுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கிறார். கலைமகளும், இரதியும் மணமேடைக்குப் பலவகை மங்கலப்பொருள்களுடன் சிவகாம சுந்தரியை அழைத்து வருகின்றனர். இமவான் பெருமகிழ்ச்சியோடு தன் மகளைப் பரமசிவனுக்குத் தாரை வார்த்துக் கொடுக்க, சிவபெருமான் நல்வேளையில் சிவகாமசுந்தரிக்கு மங்கலநாண் கட்டுகிறார். அவ்வேளையில் சுமங்கலிப் பெண்கள் மங்கள இசை முழக்கத்துடன் அவர்களை வாழ்த்து கின்றனர்.

– இத்துடன் நாடகக்கதை முற்றுப்பெறுகிறது.

மகாதேவப் பட்டணம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்குடி – பட்டுக்கோட்டைச் சாலையில் உள்ளிக்கோட்டைக்கருகில் இவ்வூர் உள்ளது. அஃதாவது மன்னார்குடிக்குத்

தென்மேற்கில் 10 கி.மீ தொலைவில் உள்ளது. தஞ்சை மராத்திய மன்னர் துளஜா இந்நகரை உருவாக்கினார். தன் சகோதரர் சகஜி தஞ்சையை ஆண்ட பொழுது இவர் இப்புதிய ஊரை உருவாக்கி அரண்மனை, கோட்டை இவற்றை அமைத்துத் தனியாக அரசாட்சி செய்து வந்தார். தன் சகோதரருக்குப்பின் இவர் 1728இல் தஞ்சை மன்னராகப் பொறுப்பேற்றார். இம்மகாதேவப் பட்டணத்தில் சுவேதவராகப் பெருமாளுக்கென ஒரு கோயிலைக் கட்டிப் பல விழாக்களை நடத்தியுள்ளார். 'தன்வந்திரி சாரநிதி' என்ற மருத்துவ நூலின் முகவுரையில் இந்நகரை மன்னர் உருவாக்கியது தொடர்பான குறிப்புப் பின்வருமாறு காணப்படுகிறது.

> *"ஸ்ரீ துளஜேந்திர மகாராஜாவால் நிர்மாணிக்கப்பட்டும், காக்கப்பட்டு வருவதும், உலகு அணிகலன் போன்று திகழுவதும், ஒழுக்கம் நிறைந்த நன்மக்களைப் பெற்றதும், செல்வம் செழித்து விளங்கிக் கற்பகத்தரு போன்று நிழலும், கனிகளும் குளிர்ச்சியான பூக்களும் தளிர்களும் நிறைந்து மேரு மலையின் சோலை போன்று திகழ்வது 'மகாதேவம்' என்ற பெயருடன் விளங்கும் பட்டணம் உள்ளது. இந்நகர் சூர்யவம்சத்து அரசர்களால் ஆளப் படுவதும் இந்திரப்புரியின் அழகையும் மிஞ்சும்படியான சிறப்புப் பெற்றது. பல்வகை மரங்களும் ஆறு ருதுக் களும், பிரகாசிக்க அழகுடன் திகழும் மகாதேவ பட்டணத்தில் துளஜராஜன் தர்மத்துடன் பூமியைப் பரிபாலனம் செய்துகொண்டு, தன் நாட்டில் ஒருவருக்கும் ஒருபோதும், ஒருவியாதியும் வரக்கூடாதென்று பெரும் கருணையுடன் தானே இந்த மருத்துவ நூலையும் படைத்துள்ளார்."*

இவ்வூரில் நான்கு சிவன் கோயில்கள், எல்லையம்மன் கோயில் ஆகிய பிற கோயிலும் உள்ளன. இங்கு உமாபாயி சாகேப் சத்திரம் எனப்படும் மராத்தியச் சத்திரம் உள்ளது. இப்பட்டணம் பூலோக கைலாசமாகும். தேவேந்திரப் பட்டணத்தைக் காட்டிலும் அழகானது. இவ்வூரில் உள்ள மாடங்கள் ஆகாயத்தின் கிரீடமாக விளங்குகின்றன. மாளிகைகள் இலக்குமியின் இருப்பிடங்களாகும். யானைகள் ஐராவதங்களாக விளங்கு கின்றன. குதிரைகள் இந்திரனின் வெள்ளைக் குதிரைகளாக விளங்கு கின்றன. கோட்டைகள் உன்னதமானவை. ஆறு பருவகாலங்களுடன் திகழும் நந்தவனங்கள் மனத்திற்கு மகிழ்ச்சியூட்டுகின்றன. இங்கு வாழும் பெண்களோ நல்ல இரசிகத்தன்மை உடையவர்கள். இளவரசர்களோ வீரச் சிங்கங்கள். அரசச் சுற்றத்தார்களோ ஒப்பற்றவர்கள். மேலும் அரசர் களுடைய ஒழுக்கங்களோ பாவம் அற்றவை.

கல்வெட்டுச் சான்றுகள்

சுவேதவராகப்பெருமாள் கோயிலின் மண்டபத்தில் வடமொழிக் கல்வெட்டு ஒன்றுள்ளது.[3] இக் கற்பலகையில் அனுமன், முருகன், தேவி, அக்கினி, இந்திரன், வருணன், விநாயகர், நவக்கிரகங்கள் போன்ற உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கல்வெட்டில் 15 வரிகள் காணப்படுகின்றன. இவற்றின் பெரும்பகுதி துதியாக அமைந்துள்ளது. விநாயகர், கலைமகள், மகாதேவர், இலக்குமி, அட்டதிக்குப் பாலகர்கள், நவக்கிரகங்கள். பஞ்சபூதங்கள், ஏழு முனிவர்கள் முதலான இவர்களை எல்லாம் துதித்து நாட்டு மக்களுக்குத் திங்கள் மும்மாரியும், செழிப்பும், அமைதியும் கொடுக்குமாறு வேண்டப்பட்டுள்ளன. இறுதியில் '1650 கீலக சம்வத்சர சிராவண சுத்தப்ரதிபா சுக்கிரவார சோள தேச மத்யே மகாதேவ பட்டன.............' எனச் சிதைந்து காணப்படுகிறது. இது கி.பி. 2 – 8 – 1728இல் வெட்டப்பட்டதாகும். இக்கல்வெட்டின் தமிழ் மொழிபெயர்ப்பு பின்வருமாறு :–

> *"கணேசன், சரசுவதி, குரு, சிவன், மகாதேவன், உமாமகேசுவரன், இலக்குமி, நாராயணன், கோவர்த்தனன், ஆலிலைக்கண்ணன், பரப்பிரம்மம், சீவாத்மாவாக இருக்கின்ற இறைவன், அரிகரன், அர்த்தநாரீசுவரன், பிரகிருதி, புருடன், கலைமகள், புவனேசுவரி, அட்டமூர்த்திகள், சச்சிதானந்தன், கங்காதரன், காலகாலன், அனைத்துத் தேவர்கள், அக்கினி, இந்திரன், மேகநாதன், தேவ தேவன், பூதேவி, வருணன், அங்காரகன், சண்முகன், மருத்துக்கள், சூரியன், மந்திரமலை, யாகபுருடன், கங்கை, காவேரி, வாயு, மேகங்கள், சோமன், தீ, சுக்கிரன், புதன், சனி, மிருகசீரிச நட்சத்திரத்தை உடைய தெய்வம், கடக இராசியின் தேவதை, மீனராசிக்குரிய தெய்வம், கும்பராசிக்குரிய தெய்வம், விருஷராசிக்குரிய தெய்வம், ரிஷ்யசிருங்கர், ஒளி, ஆகாயம், ஒலி, கிருட்டிணன், வாசுதேவன், உலகநாயகன், வாக்கின் தலைவி, தத்தாத்ரேயன், தட்சிணாமூர்த்தி, அன்னபூரணி, காயத்ரி, சாவித்திரி, ரித்யை, சித்தி, மகாலட்சுமி, சோனை தாயர், நவக்கிரகங்கள், அட்டதிக்குப்பாலகர், விசுவாம்பரன், விசுவநாதன், சத்திரிசிகள், கருடன், விருப்பத்தைப்பூர்த்தி செய்பவன், விருப்பம் அற்றவன் ஆகிய தெய்வங்களை வணங்குகிறேன்*
>
> *எங்களுக்கு மழை பொழியட்டும்; விளைச்சல் பெரு*

3. செ இராசு, **தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள்**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987, பக். 165–166.

கட்டும்; மேகமானது மழையைக் கொடுப்பதாக; பூமியை வணங்குகிறேன்; முடிவற்றவனாகவும், ஆயிரக்கணக்கான தலைகளையும், தோள்களையும், கண்களையும், கைகளையும், பெயர்களையும், உருவங்களையும் கொண்டு எந்தப் புருடன் இருக்கின்றானோ அவனை வணங்குகிறேன்.

மங்களத்தைக் கொடுக்கட்டும். ஆயிரக்கணக்கான கோடி யுகங்களைக் கண்டவனும் அறிவற்றவனுமாக எந்தப் புருடன் இருக்கின்றானோ அவனை வணங்குகிறேன்.

பெரிய இடையூறுகளைத் தவிர்ப்பவனும் .... வணங்குகிறேன். கீலக ஆண்டு ஆடி மாதம் பௌர்ணமி ...."

பாத்திரப் படைப்புகள்

இந்நாடகத்தில் பரமசிவன், சிவகாமசுந்தரி ஆகிய இருவர் திருமணம் செய்து கொள்வது கருவானபடியினால் இவர்கள் இருவரையும் முதன்மைப் பாத்திரங்களாகக் கொள்ளலாம். ஏனையோர் இத்திருமணத்தை நடத்துவதற்கு உறுதுணையாக இருக்கின்றனர். இப்பாத்திரங்கள் அனைவரும் தேவர்களாவர். மொத்தம் உள்ள பாத்திரங்களுள் 22 பேர் ஆண்களும், 10 பேர் பெண்களுமாவர்.

1. பரமசிவன் – நாடகத் தலைவன்
2. சிவகாமசுந்தரி – நாடகத் தலைவி, இமவான் மகள் பார்வதி எனவும் அழைக்கப்படுகின்றாள்

திருமால், நான்முகன், கணபதி, சந்திரன், இமவான், இந்திரன், குபேரன், மைனாகன் (இமவானுக்கும் மேனகைக்கும் பிறந்தவன்), மன்மதன், நாரதர், நந்திகேசுவரர், பதஞ்சலி முனிவர், சூரியன், உபேந்திரன் (இந்திரன் சகோதரன்), வியாக்கிரபாதர், சுகமுனிவர், பஞ்சபூதங்களான ஆகாயம், காற்று (வாயு), ஒளி, வருணன் போன்றோர், பிருகஸ்பதி (தேவகுரு) ஆகியோர் ஆண் பாத்திரங்களாவர்.

அவித்யை (அறிவின்மையின் கடவுள்), வித்யா (அறிவின் கடவுள்), பூமகள், கங்கை, சயை (சிவகாமசுந்தரியின் தோழி), மேனகை (இமவான் மனைவி), மாயை, இரதி, கலைமகள் ஆகியோர் பெண் பாத்திரங்களாவர்.

இந்நாடகத்தில் இடம்பெறுகின்றவர்கள் தேவர்களாக இருப்பதனால் கதை நிகழ்ச்சிகள் தேவர்கள் வாழும் உலகத்திலும் பூவுலகத்தில் மகாதேவப் பட்டினத்திலும் நடைபெறுகின்றன.

பரமசிவன்

இந்நாடகத் தலைவன். சபாபதி, சிவபெருமான், கனகசபேசர், சந்திர சேகரன், பசுபதி எனவும் அழைக்கப்பெறுகின்றார். உலகங்களுக்கெல்லாம் முதல்வனாக விளங்குபவன். மலையரசன் மகளை மணந்தவன். சிதம்பரத்தில் எழுந்தருளியிருப்பவன். மன்மதனை வென்ற சங்கரன். சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முக்கண்களை உடையவன். முத்தி அளிக்க வல்லவன். யானைத் தோல் போர்த்தியவன். அரவுகளை அணிகலனாக அணிந்தவன். தம்மை நாடி வேண்டி நிற்கின்றவர்களுக்குக் கற்பகத்தரு போன்றவன். கவலைகளைக் களைபவன். கருணை உள்ளம் கொண்டவன். பிறை சூடியவன். தேவர்களுக்கெல்லாம் தலைவன். பார்வதிக்கு ஈசன். ஆகாயத்தைச் சடாமுடியாக உடையவன். எமனுடைய கர்வத்தை அடக்கியவன். செல்வம், ஞானம், ஆனந்தம் ஆகியவற்றை ஒருங்கே பெற்றவன். நஞ்சுண்டகண்டன்.

திருவாரூரில் கோயில் கொண்டுள்ள தியாகேசர். தஞ்சை மராத்திய மன்னர்களின் குலதெய்வமாகப் போற்றி வழிபடப்பெறுகின்றார். நூலின் தொடக்கத்தில் ஆசிரியர் 'குலதெய்வ வணக்கத்'தில் இப்பெருமானைப் போற்றிப் பரவுகின்றார். இந்திரனால் வணங்கப்பட்டவர்; கருணைக்கடல் போன்றவர்; மணம் வீசும் செங்குவளை மலரை மாலையாக அணிந்தவர்; தாமரை போன்ற முகமுடையவர்; மணிகள் பதிக்கப்பெற்ற பொற் சிம்மாசனத்தில் வீற்றிருப்பவர்.

எல்லோருக்கும் பரமேசுவரர் ஒருவரே தலைவர். சிதானந்த வடிவ மானவர். கண்டத்தில் பாம்புகள் தவழ்கின்றன. கழுத்தினில் உருத்திராக்க மாலை விளங்குகிறது. சடைமுடியினில் உள்ள கங்கையின் அலைகளுடைய அருகில் இருக்கின்ற சந்திரனின் கலையானது வெள்ளைத் தாமரை போல் ஒளி வீசுகிறது. தலையினிலே கொண்டை இருக்கிறது. கருணையோடு கூடிய பார்வை உடையவர். சடையில் சிறிய சந்திரகலை ஆடுகிறது. உடலில் திருநீறு ஒளி வீசுகிறது. கையில் சூலம் ஏந்தியுள்ளார். கோடி சூரிய ஒளி உடையவர். ஞானவடிவானவர். வேறுபாடு அற்றவர். உலகத்திற்கு ஆதாரமானவர். வேதத்தின் சாரமானவர். பரமஒளி வடிவானவர். ஓங்கார வடிவினர். எலும்புகளை ஆபரணமாக அணிந்தவர். ஞானத்தின் சுடரானவர். என்றும் அறிவில்லாதவர். வேத வித்தகர். தற்சோதியானவர்.

மகாதேவப்பட்டணத்தில் பரமசிவனும், பார்வதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர். இதைக் கண்ட கலைமகளும், பார்வதியின் தோழி சயையும் பேசிக் கொள்கின்றனர். இவ்வுரையாடலில் இவர்கள் சிவபெரு மானைப் புகழ்ந்து பேசியதாவது : "சந்திரசேகரனுடைய கடைக்கண் பார்வை

என்கிற அமிர்தநதியானது வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது; பசுபதியினுடைய பார்வை முத்துச்சரத்தின் ஒளியைப் போல் வீசுகிறது; பரமசிவனுடைய பார்வைகளின் கூட்டம் வெள்ளைத் தாமரைபோல் ஒளி வீசுகின்றன."

பார்வதி தன் தோழிகளிடம், "வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவரும், நல்ல ஒளி வடிவமானவருமான சந்திரசேகரருடைய விலாசம், சாமர்த்தியம், ஒளி, மகிமை ஆகிய இவற்றை எல்லாம் வேறு எந்தத் தேவர்களிடமும் காணவில்லை; இப்படிப்பட்டவரையே கணவராக நான் அடைய விரும்புகிறேன். இதற்குத் தெய்வம் கருணை காட்டவேண்டும்" என்று கூறுகிறாள்.

நான்முகன் பரமசிவனைப் போற்றிப் பரவும்பொழுது, "பரமேசுவரனே! மேருபர்வதத்தை வில்லாகப் பிடித்தவனே! ஞான வடிவானவனே! வேதாந்தத்தை உணர்ந்தவனே!" என்று கூறுகின்றார்.

வேதாந்தத்தில் தேடினாலும்கூடக் கிடைக்காத இவருடைய திருமலர்ப் பாதங்களைத் தேவர்களும், முனிவர்களும் கண்டு வணங்கிப் புனித மடைகின்றார்கள். இவ்வுலக மக்களுக்குத் தாயாகவும், தந்தையாகவும், கருவாகவும், கொடுப்பவனாகவும், பாதுகாப்பவனாகவும் விளங்குகின்றார்.

சிவகாமசுந்தரி

பார்வதி, பராசக்தி, பர்வதராசகுமாரி, சிவசக்தி, கௌரி, மலைமகள் எனவும் அழைக்கப்பெறுகின்றாள். குயிலை ஒத்த இனிய குரலை உடையவள். யானையை ஒத்த நடையினள். முழுநிலவைப் போன்ற முகத்தினள். கடலை ஒத்த அடக்கலாகா அருளினள். கார்மேகத்தை ஒத்த கூந்தலை உடையவள். நித்திய கல்யாணியாய், கோடி இளம் சூரியர்களை ஒத்து விளங்கும் ஒளியை உடைய உடலினள். சிறந்த அழகை உடையவள். மன்மதனது காம பானத்தைப் போன்றவள். செந்தளிரை ஒத்த கரங்களுடையவள். உலகங்கட் கெல்லாம் அன்னை போன்றவள். சிறந்த குணங்களுக்கு இருப்பிடமானவள். பார்வதி என்ற பெயருடன் இமவானுக்கும், மேனகைக்கும் பிறந்து வளர்ந்தவள். தாமரை மலர் போன்ற சிவந்த கர்ங்களைக் கொண்டவள். இவள் பேசும் மொழி குயிலை ஒத்திருக்கிறது. தன்னுடலில் பல வகையான ஒளிவீசும் அணிகலன்களை அணிந்திருக்கிறாள். வண்டுகள் போன்ற கரிய கூந்தலுடையவள். அன்ன நடை நடந்து வருகிறாள். நகையாகிய வெண் ணிலவு ஒளி வீசுகிறது. கால்களில் சதங்கை ஒலிக்கிறது.

நாரதர் இவளுடைய அழகைக் கனகசபையில் சிவபெருமானிடமும். மற்றுமுள்ள தேவர்களிடமும் பின்வருமாறு வருணிக்கின்றார் :

> *"கன்னியின் அந்தப் பேரழகை வருணிக்க இயலாது. அழகுக்கெல்லாம் அழகானவள் அணிகளுக்கு அணியானவள் முழுநிலவை ஒத்த முகம் இருளைக் காட்டிலும் கரிய கூந்தல் உடையவள் பிறைச்சந்திரனை ஒத்த நெற்றியுடையவள். மன்மதனுடைய வில்லை ஒத்த புருவங்களை உடையவள் மன்மத பாணங்களை ஒத்த பார்வையினள் எள்ளின் மலரை ஒத்த நாசியினள். ஸ்ரீ காரத்தை ஒத்த காதுகள். பொற்கொடியின் ஒளியை ஒத்த கன்னங்களை உடையவள் பற்களின் வரிசை மல்லிகை மொட்டுகளைப் போன்றிருக்கின்றன உதடுகள் சர்க்கரைத் தீவினை ஒத்திருக்கின்றன. கண்டம் வெண் சங்கை ஒத்துள்ளது. தோள்கள் கொடியை ஒத்துள்ளன. கைகள் மிருதுவாகவும் தளிரை ஒத்தும் உள்ளன அவளுடைய தனங்களோ தங்கக் கிண்ணங்கள். இடை அழகாகவும் சிம்மத்தின் இடையைப் போன்றும் திகழ்கின்றது. கொப்பூழ் குளம் போன்றுள்ளது. கறுப்பெறும்பின் வரியை ஒத்த நாபியிலிருந்து மார்பு வரை மயிர் வரிசை அழகாகப் படிந்து விளங்குகிறது தொடையின் மேல்பாகம் மணல் குன்றுபோல் பெருத்து உயர்ந்துள்ளது தொடை வாழைத்தண்டு போன்றுள்ளது சிறு தொடைகள் மன்மத பாணங்களையுடைய அழகிய அம்பறாத்தூணியை ஒத்துள்ளன முழங் கால்கள் ஆமையை ஒத்தும், அழகிய பாதங்கள் தாமரையை வென்றும் விளங்குகின்றன."*

பரமசிவனும், பார்வதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர். ஒளியுடன் கூடிய கன்னியின் பார்வைகள் மீன்கள் போல் தோன்றுகின்றன; நீலமணிச் சரத்தின் ஒளியைப் போலவும், கருங்குவளை மலர்க்கூட்டம் போலவும் ஒளிவீசுகின்றன என்று கலைமகளும், சயையும் பேசிக் கொள்கின்றனர்.

பார்வதி தன் தோழிகளிடம், "என்ன செய்வேன்? திருமணம் எப்பொழுது நடக்குமோ? கனகசபாபதி எப்பொழுது எனக்கு மங்கலநாண் கட்டுவாரோ?" என்று புலம்புகிறாள்.

ஞானவடிவானவள், சிவசக்தியானவள், சிவபெருமானுடைய வடிவை அறிந்து வழிபட்டுத் தவம் செய்த காரணத்தினால் அவரையே மணம் செய்து கொள்கிறாள்.

திருமண ஏற்பாடுகளைப்பற்றி இவளிடம் சயை, பூதேவி, மாயா முதலானோர் மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர். அப்பொழுது இவளைப்பற்றிப்

பின்வருமாறு கூறுகின்றனர். தளிர் போன்ற உடலை உடையவள். வேதாந்தத்தை உணர்ந்தவரான கனகசபேசர் உனக்குக் கணவராவார். அதன் பின்னர் மணமேடைக்கு இவளைப் பலவித அலங்காரங்கள் செய்து கலைமகள், இரதி, வித்யை, மாயை, சயை, மேனகை முதலான பெண்கள் தங்கள் கைகளில் நவரத்தினங்கள் பதித்த தங்கத் தட்டுகளில் ஆரத்திகளையும், வாசனைத் திரவியங்களையும், குங்குமம், அட்சதை முதலான ஏனைய மங்களப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு அழைத்து வருகின்றனர்.

தோழிகள் திருமணப் பாக்கள் பாடுகின்றனர். இணையில்லாத வனப்போடு விளங்கும் திருமண மண்டபத்திற்கு நாணத்தோடு, சந்திர கலையை ஒத்த புன்சிரிப்புடன், சிவகாமசுந்தரி வருகின்றாள்.

பின்னர் நல்வேளையில் மகிழ்ச்சியுடன் இமவான் தம் பெண்ணைக் கனகசபாபதிக்குத் தாரை வார்த்துக் கொடுக்கிறார். சபாபதி சிவகாம சுந்தரிக்கு மங்கலநாண் கட்டுகிறார். அந்நேரத்தில் கலைமகள், வித்யை, பூதேவி முதலான சுமங்கலிப் பெண்கள் மங்கள இசை பாடுகின்றனர்.

"மலைமகளே! பவழத்தை ஒத்த உதடும், சங்கை ஒத்த கழுத்தும் உடைய சிவகாமசுந்தரியே! தங்கத்தைப் போன்ற பளபளப்பான உடலை உடையவளே! மேலான மருக்கொழுந்தே! பரமசிவனுக்குப் பிரியமானவளே! பர தேவதையே! அழகில் நிகரற்றவளே! மன்மதன் கையில் பிடிக்கும் ஆயுதம் போன்றவளே! அழகான ஒய்யாரத்தை உடையவளே! ஆகமங்களாகிய நந்தவனத்திற்கு மயில் போன்றவளே! எங்களைக் காப்பாற்றுவாயம்மா!"

திருமால்

திருமால், கோவிந்தன், சதாநந்தன் என்று மகாவிட்டுணு அழைக்கப் பெறுகின்றார். இவர் இமவான் சபைக்கு வனமாலைகள் அசைய, பொன்னாலான மணிமுடியில் பதிக்கப்பெற்ற இரத்தினங்களின் ஒளி எங்கும் பரவத் தன் இனிய துணைவி இலக்குமியுடன் கருடன் மீதிலேறி வருகின்றார். காதுகளில் இரத்தின குண்டலங்கள் அணிந்துள்ளார். மார்பில் துளசி மாலை அணிந்துள்ளார். உலகத்தைக் காத்தல் தொழிலைச் செய்கின்றார்.

மந்திர மலையைத் தாங்கியவன். அளவிலாக் கருணை உடையவன். இரணியனைத் தண்டித்தவன். மூவுலகங்களுக்கும் இறைவன். தம்மை நாடி வருகினற பக்தர்களுக்குக் கற்பகத் தருவாக விளங்குபவன். தாமரை போன்ற மலர்ந்த கண்களை உடையவன். தேவர்களுக்கு ஈசன்.

வெண்டாமரை மலர் போன்ற கண்களை உடையவர். மக்களைப்

பாதுகாக்கும் பொருட்டுப் பத்து அவதாரங்கள் எடுத்தவர்.

நான்முகன்

பிரம்மதேவன், நான்முகன் என்று அழைக்கப் பெறுகின்றார். சாமர்த்தியத்தோடும், மகிமையோடும் உலகங்களை எல்லாம் தோற்றுவிக்கின்ற தொழிலைச் செய்கிறார். பொதுவாகத் திருமணங்கள் நடைபெறுவதற்கு இவருடைய உதவியே தேவைப்படுகிறது. இதனைச் சிவகாமசுந்தரியின் தோழி சயை கூறுவதிலிருந்து அறியமுடிகிறது. இவர் சயையை அழைத்துக் கொண்டு பரமேசுரனிடம் சென்று, திருமணத்திற்கு இசைவு தெரிவிக்க வேண்டுகிறார்.

சிவன் – பார்வதி திருமணத்தின் பொருட்டுக் கூடியிருக்கும் சுற்றத்தினருக்கு ஏற்ற மரியாதைகளைச் செய்கின்றார்.

கணபதி

விநாயகர் எனவும் அழைக்கப் பெறுகின்றார். பொன்னிறமான ஆடை அணிந்தவர். நாவல் பழத்தை விரும்பி உண்ணுபவர். கடல் போன்றவர். மதநீர் சொரியும் மத்தகத்தை உடையவர். சகல இடையூறுகளையும் போக்கடிப்பவர். பார்வதியின் குமாரர். அரவுகளை அணிகலனாக அணிந்தவர். வெள்ளாடை உடுத்தி மூஞ்சூறு வாகனத்திலேறி வருகின்றார்.

இந்திரன்

தேவர் உலகத்தின் தலைவன். கற்பகத்தருவின் புத்தம் புதிய மலர்களினால் கட்டப்பட்ட மாலைகளை அணிந்துள்ளான். பலவகையான ஆபரணங்களை அணிந்து தேவர்கள் சூழ்ந்துவர வச்சிராயுதத்தைத் தாங்கி ஐராவதத்திலேறி வருகின்றான். தேவமாதர்கள் நாட்டியம் ஆடி உடன் வருகின்றனர்.

இமவான்

பர்வதராசன், இமவான், மலைக்கரசன் எனும் பெயர்களை உடையவன். இவன் அணிந்துள்ள பொன் மணிமுடியில் இழைக்கப்பெற்ற மணிகளின் ஒளி மின்னல் போன்று வீசுகிறது. இவனைப் பருவங்கள் எல்லாம் வணங்குகின்றன. இவன் கம்பீரமாகப் புறப்பட்டுச் சபைக்கு வருகின்றான். முழு நிலவுக்கு நிகரான ஒளி பத்துத் திசைகளிலும் பரவும்வண்ணம் பல ஆபரணங்களை அணிந்துள்ளான். இவன் சபையில் மந்திரிகள், புரோகிதர்கள், சேவகர்கள், உறவினர்கள் முதலான பலரும் இருக்கின்றனர்.

இவருடைய மகளைப் பரமேசுவரனுக்கு மணம் செய்து கொடுத்த

காரணத்தினால் இவர் குலமே புனிதமடைகிறது.

குபேரன்

பொன்னாலான பல ஆபரணங்களை அணிந்துள்ளார். இரத்தினத்தினாலான மணிமுடியைத் தலையில் சூட்டியுள்ளார். சிவபெருமானின் நட்புக்குப் பாத்திரமானவர். செல்வத்திற்கெல்லாம் தலைவனான இவன் சிவன் – பார்வதி திருமணத்தின்பொழுது பிராமணர்களுக்குத் தட்சிணை கொடுக்கிறான்.

காமன்

மன்மதன், வசந்தன், காமன் என்று அழைக்கப்படுகின்றான். இவன் அறிமுகம் ஆகும்பொழுது, "கமகமவென மணம்வீச, எல்லாப் பருவங்களும் ஒன்று கூடிவர, மணங்கமழும் மலர்களாலான மணிமுடியைத் தலையில் அணிந்து கொண்டு ஒயிலாக வருகின்றான்" என்கின்றார். இவனுடைய இனப்பெருக்கமாக மலர்கள் கூறப்படுகின்றன. இப்பெருக்கத்தினால் காமவிகாரங்கள் ஏற்படும் என்றும், அதனால் இவ்வுலகத்தில் பாட்டி, தாத்தாக்களுக்கும்கூடக் காமம் அதிகமாகும் என்றும் கூறப்படுகின்றான். இவன் இமவான் சபைக்கு வரும் செய்தியை முன்னதாக எச்சரிப்பதற்கு வருகின்றான்.

ஒயிலாக நடந்து கிளியின் வாகனத்திலேறிக் குயில்களும் வண்டுகளும் உடன்வர இமவான் சபைக்கு வருகின்றான். எப்பொழுதும் புன்சிரிப்புடன் பேசும் இயல்பினன். முல்லை மலரை ஆடையாக அணிந்து, மல்லிகை மலர்ப் பந்தைக் கையில் கொண்டு, இளம் தளிர்களை அரைச்சல்லடமாகக் கட்டி, அழகிய மலர் வில்லை ஏந்தி வருகின்றான்.

பரமசிவன் மீது காதல் கொண்ட பார்வதி மீது மலர்க்கணைகளை விடுத்து அவளை மிகவும் துன்புறுத்துகின்றான். பெண்களைப்பற்றி உயர்வாக நான்முகன் முதலான முனிவர்களிடம் பேசுகின்றான். "இவ்வுலகில் பெண் இன்பமே இனிய இன்பம்; அவ்வின்பமே மக்களுக்கு முத்தியின் எல்லை. பெண்களின் அழகான பேச்சுக்களே வேதங்களாகும்; அவர்களைப் புகழும் கதைகளே புண்ணிய கதைகள். பெண்கள் படிக்கும் கொக்கோகமே சாத்திரங்கள்; அவர்களின் கடைக்கண் பார்வைகளே சிறந்த கடாட்சம். மலர் போன்ற உடலையுடைய பெண்களின் சேலை முடியை அவிழ்ப்பதே மோட்சம்; இளநங்கையர்களின் நட்பே சாதுக்களின் நட்பு."

சிவன் – பார்வதி திருமணத்தின்பொழுது மகாதேவப்பட்டணத்தில் இருக்கின்ற இராசவீதிகளை எல்லாம் நன்றாக அலங்காரம் செய்கின்றார்.

சூரியன்

எல்லோராலும் வணங்கப்படுபவர். நான்முகன், திருமால், சிவன் ஆகிய மும்மூர்த்திகளுக்கு இருப்பிடமானவர். பொன் அணிகள், இரத்தின ஆபரணங்கள் இவற்றின் ஒளியோடு கூடிய தன்னுடைய பேரழகு பத்துத் திக்குகளிலும் பரவுகிறது. ஆயிரம் கைகளை உடையவரான இவரைக் கண்ட பக்தர்களுடைய முகங்களாகிய கமலங்கள் நாள்தோறும் மகிழ்ச்சியினால் மலர்கின்றன.

சந்திரன்

அம்புலி, திங்கள் என அழைக்கப் பெறுகின்றார். இவர் மன்மதனுக்கு மாமாவாகவும், சிறந்த கலைகளுக்கு இருப்பிடமாகவும் விளங்குகிறார். சிவபெருமான் தலையில் இருக்கின்றார்.

வாயு

காற்றின் கடவுளாகப் போற்றப்பெறும் வாயு பகவான் நல்ல மலர்களிலிருக்கும் நறுமணத்தை அள்ளி எடுத்துக்கொண்டு, நீர்த்துளி களினால் குளிர்ச்சி பெற்று விளங்குகிறார்.

ஆகாயம்

உடலோடு கூடிய வடிவு பெற்றவன்.

வருணன்

மழைக்குரிய கடவுள். மின்னலாகிய தீவட்டி ஒளிவீச, மேகத்தின் முழக்கமாகிய முரசு முழங்க, மணிமுடியைத் தலையில் சூடி, முதலை வாகனத்தி லேறி இமவான் சபைக்கு வருகின்றார். இவர் சிவன் – பார்வதி திருமணத்திற்கு மணம் நிறைந்த மங்கலநீரை நிரப்பி வைக்கிறார்.

பேரொளி

உடலோடு கூடிய வடிவு பெற்று உலகமெல்லாம் தன்னுடைய ஒளியை நிரப்புகின்றார்.

மைனாகன்

இமவானுக்கும் மேனகைக்கும் பிறந்தவன். சிரிகுமாரர்களுடன் பேசிக்கொண்டு, குடையின் நிழலில் அடிமேலடி வைத்து இமவானுடைய சபைக்கு வருகின்றான்.

கலைமகள்

சரசுவதி, கலைமகள், சாரதாதேவி என்றழைக்கப்பெறுகின்றாள். வண்டுகளைக் காட்டிலும் கருமையானதும் அழகியதுமான கூந்தலை உடையவள். நல்ல மகிமையுள்ளவள். புன்சிரிப்புடன் கூடிய முகத்தினை உடையவள். வீணையை மார்பினில் பொருத்தியிருப்பவள்.

தற்காலத்து மேகத்தைப் போன்று இருக்கிறாள். சந்திரனையும் இமயமலையையும், பாற்கடலைப் போன்றும் வெண்மை ஒளியைப் பரப்பு கின்றாள். வண்டை ஒத்த கரிய கூந்தலை உடையவள். வீணையைக் கையினில் ஏந்தியிருப்பவள். வேதங்கள், புராணங்கள், ஆகமங்கள், சாத்திரங்கள், மந்திரங்கள், வேதாந்தங்கள் ஆபரணங்களாக ஒளி வீசுகின்றன. பரதசாத்திரம் கால்களில் சிலம்புகளாக ஒலிக்கின்றன. சங்கீத சாகித்தியங்கள் மார்பகங்களாக விளங்குகின்றன.

கங்கை

சிவபெருமானின் சடைமுடியில் குடியிருக்கின்ற இவள் குவளை மலர்களைக் கொண்டையில் சூட்டியிருக்கிறாள். தாமரை மலர்களைக் கையினில் பிடித்துள்ளாள். தான் அணிந்துள்ள ஆபரணங்கள் பளபளவென்று ஒளி வீசுகின்றன. குளிர்ந்த தன்மை உடையவள்.

பூமகள்

நிலமகளாகிய இவள் கொண்டையில் மலர்ச்சரங்களைச் சூடியுள்ளாள். மலைகளை மார்பகங்களாக உடையவள். பளபள என்கிற ஒளியோடு கூடின முகத்தில் அழகான புன்னகை மிளிர இவள் இமவான் சபைக்கு வருகின்றாள்.

சயை

பார்வதியின் தோழியாக வருகின்றாள். நற்குணங்களுடையவள். மிகத் திறமை வாய்ந்தவள். மலைகள் போன்ற மார்பகங்களை உடையவள். கரிய மேகங்கள் போன்ற கூந்தலை உடையவள். சிவகாமசுந்தரியின் எண்ணத்தை அறிந்து செயல்படுபவளாக வருகின்றாள். பார்வதி காதல் மயக்கம் அதிகரித்துப் பலவாறு துன்புற்றுப் புலம்புவதைக் கண்ட இவள் நான்முகனிடம் சென்று சிவகாமசுந்தரிக்கு விரைவில் மணம் செய்து வைக்க வேண்டுகிறாள். பின்னர் அவருடன் தானும் சென்று பரமேசுவரனிடம் சிவகாமசுந்தரியை மணம் செய்து கொள்ள விண்ணப்பிக்கிறாள்.

இரதி

மன்மதனின் மனைவியான இவள் நகையாகிய வெண்ணிலா ஒளிவீச

நடந்து வருகிறாள். தன் உடலில் அணிந்துள்ள ஆபரணங்கள் தகதகவென்று ஒளி வீசுகின்றன. மிகுந்த அழகு வாய்ந்த இவள் காலில் சலங்கை ஒலிக்க இமவான் சபைக்கு வருகின்றாள்.

மாயாதேவி

இவள் மை என்னும் மாயப்பொடியைத் துவி, எல்லா உலகங்களையும் அஞ்ஞானம் என்னும் இருட்டில் மூழ்க வைக்கிறாள். மன்மதனுக்குப் பலத்தை ஊட்டுகிறாள். உலகத்தின்கண் அழிவைப் போக்கடிக்கிறாள். காமத்தில் வசப்பட்ட மக்களாகிய மான்களைத் தன்னுடைய விசாலமான கண்களினாலே மோகம் என்னும் வலையை வீசுகிறாள். காமாதிகளை அதிகமாக விருத்தி செய்கிறாள். ஆண்களை எல்லாம் பெண்களுக்கு வசமாக்கித் துன்புறுத்து கிறாள்.

இவ்வுலக மக்கள் எல்லாரையும் சோம்பேறிகளாகச் செய்வாள். காமம், குரோதம் முதலியவற்றை அதிகமாக்கிக் கலகத்தை உண்டுபண்ணுவாள். அறிவாளிகளுக்குக்கூட மனைவி என்றும், மக்கள் என்றும், வீடு என்றும், பொருள் என்றும் எண்ணக்கூடிய மமதையைத் தோற்றுவிக்கும் தன்மை உடையவள். கனவு போன்ற இல்லறத்தை நிலையானதாய்த் தோற்றுவித்துத் தீய ஆசைகளால் மக்களை நரகம் என்கிற கிணற்றில் தள்ளி விடுவாள்.

சூரியன் உதயமாகும்பொழுது இவளால் இருட்டின் தொகுதி எதிரில் இருக்க முடியாது. இவள் முகத்தைப் பார்க்கின்றவர்கள் பாவத்தையே அடை கிறார்கள். அதனால்தான் ஞானிகள் இவள் நட்பையே விட்டு விடுகிறார்கள்.

தாமசகுணம் படைத்தவள். வாழ்வு மாயம், இவளோடு கூடியிருப்பவர் களுக்குச் சுகம் என்பதே கிடையாது. பாப சாதியைச் சேர்ந்தவள்.

இவளைப்பற்றிப் பெருமையாகக் கலைமகள் பின்வருமாறு கூறுகிறாள்: தாமரை போன்ற முகமுடையவள். இந்த மாயா உலகமானது ஈசுவரனால் உண்டாக்கப்பட்டது என்று சாத்திரங்கள் கூறுகின்றன. பரம்பொருள் இவளுடன் கூடிக் குணமுடைய கடவுளாய் (சகுணராய்)ச் சிறிது காலம் இருக்கின்றார்.

சிவன்– பார்வதி திருமணத்தின்பொழுது ஆச்சரியமான பொருள் களையும், அழகான பொருள்களையும் தயார் செய்து வைக்கிறாள்.

வித்யா

அறிவின் கடவுளான இக்கன்னி, வேதாந்தத்தின் சாரவடிவத்தையும்,. வேதத்தின் ஞானவடிவத்தையும் உடைய பரஞ்சோதியாவாள். சந்திரகலையைத்

தலையில் தரித்திருக்கிறாள். உலகப்பற்று அற்று மணமாக விளங்குகிறாள். முக்தி என்ற பெண்ணின் முதன்மையான உயிர்த்தோழியாவாள். பக்தர்களைப் பாதுகாப்பவள். உலகப் பாவங்களாகிய முட்செடிகளை வெட்டுவதில் பயங்கரமான கத்தி போன்றவள். நல்ல குடும்பங்களைக் கெடுக்க வந்த மாயக்காரி. இவளை மணந்த கணவன் ஊரும், பேரும், குணமும், குலமும், அழிந்து அக்கம்பக்கம் ஒன்றுமில்லாமல் தனிமையாகத் திரிகிறான். தான தர்மங்கள், மந்திர மர்மங்கள், இயந்திர மகிமைகள், யாகாதிகர்மங்கள், தெய்விக தத்துவங்கள் ஆகியவற்றில் பலன் ஒன்றும் இல்லாமல் செய்துவிடும் திறனுடையவள். இவள் வாழ்க்கை நிலையில்லாதது. நல்ல குலத்தில் ஒரு சிறிதும் அழகில்லாமல் பிறந்தவள். இதனால் உயர்ந்த குலத்தில் பிறந்தவர் களை மிகவும் துன்புறுத்துகிறாள். இவளை நம்பினவர்கள் எல்லாம் இழந்து ஓட்டாண்டி ஆகிவிடுவர். கணவன் மனைவிகளைப் பிரித்து அழகான குடும்பங்களை அழிக்கின்றவள்.

இவளைப்பற்றிக் கலைமகள் கூறுவதாவது : சந்திரனை ஒத்த முகம் உடையவள். பரம்பொருள் இவளுடன் கூடிச் சிறிது காலம் குணமற்ற கடவுளாய் (நிர்க்குணராய்) இருக்கின்றார்.

அவித்யை

பாப குணங்களை ஆபரணங்களாக உடையவள். மாயமான் போன்றவள்.

நாரதர்

குட்டையான சடையுடையவர். கைகளில் மந்திர மாலையையும், வீணையையும் ஏந்திக் கொண்டிருப்பவர். திருமால் துதியினை எப்பொழுதும் பாடிக் கொண்டிருப்பவர். இவரே நாடகத் தொடக்கத்தில் வருகின்றார். ஆதிவராக சுவாமியின் திருவிழாவைக் கண்டு உளம் மகிழ்கிறார். மகாதேவப் பட்டணத்தில் திருமாலைத் தேடுகிறார். திருமால் தன் சகோதரி பார்வதியைக் காண்பதற்காக இமயமலைக்குச் சென்றிருப்பதை அறிந்து தானும் அவ் விடத்திற்குச் செல்கின்றார்.

திருமாலைத் துதித்துப் போற்றிய நாரதர் அவரிடம் மகாதேவப் பட்டணத்தில் நடைபெறும் திருவிழாவைப்பற்றிக் கூறுகின்றார். அதன் பின்னர்ச் சிவபெருமான் எழுந்தருளியுள்ள சிதம்பரத்திற்குச் செல்கின்றார். சிவபெருமான் புகழை வீணை மீட்டி இசைபாடிக்கொண்டு செல்கின்றார். கலகத்தையே உணவாக அருந்தும் நாரதர் எனக் கூறப்பெறுகின்றார். சிதம்பரத்திலுள்ள தேவர்கள், நாரதரிடம் 'இம் மூவுலகங்களில் ஆச்சரியமான நிகழ்ச்சி ஏதாவது இருந்தால் கூறுவீராக' என்கின்றனர். அதற்கு நாரதர்,

சோழ நாட்டு மன்னன் துளசா மகாதேவப்பட்டணத்தில் ஆதிவராககுவாமிக்குப் புதிதாகக் கோயில் எடுப்பித்து விழா எடுப்பதைப்பற்றியும் இவ்விழாவைக் காணும் பொருட்டுத் திருமால் முதலிய தேவர்களும், இமவானுடைய மகள் பார்வதியும் சென்றிருப்பதைக் கூறுகின்றார். மேலும் பார்வதியின் அழகையும் தமக்குத் தெரிந்த வகையில் வருணிக்கின்றார்.

நந்திகேசுவரர்

சிவனுடைய வாகனமாவார். சிவபெருமானின் அடியாராகவும் விளங்குகிறார். சிதம்பரத்தில் சிதம்பரேசர் பொற்சபைக்கு எழுந்தருளிக் கொண்டிருக்கும் செய்தியைச் சபையோர்க்கு எச்சரிப்பதற்காக நந்திகேசுவரர் வருகின்றார். தங்கப்பிரம்பைக் கையில் கொண்டுள்ளார். நெற்றியில் அழகாகத் திருநீறு அணிந்திருக்கிறார். பிறர் குறிப்பறியும் திறன் வாய்ந்தவர்.

மிகப்பெரிய முனிவரான இவர் தம் கையில் பிரம்பைத் தாங்கியுள்ளார்.

சிவபெருமானுடன் தேவர்களும், முனிவர்களும் ஆதிவராககுவாமி விழாவினைக் காணும்பொருட்டு மகாதேவப்பட்டணத்திற்குச் செல்கின்றனர். அனைவரும் மகாதேவபுரத்தின் இராசவீதி வழியே செல்லும்பொழுது சபாபதியைப் பார்த்து நந்திகேசுவரர் தோத்திரம் செய்கிறார். பெருமானின் பெருமைககளைப் பாடிப் பரவிப் போற்றுகின்றார்.

பிரகசுபதி

தேவர்களுக்குக் குருவானவர். திருமண் காப்பைத் தரித்துள்ளார். இடுப்பில் கட்டிய ஆடை நழுவ, தம் மாணவர்களைக் கடிந்து கொண்டும், சகுனங்களைப் பார்த்துக் கொண்டும், உரக்கச் சிரித்துக் கொண்டும், எல்லா மாணவர்களுக்கும் பாடல்களைக் கற்பித்துக் கொண்டும் இருக்கின்றார்.

வியாக்கிரபாதர்

புலித்தோலை அணிந்துள்ளார். சிறந்த சிவபக்தர்.

பதஞ்சலி

மாணவர்களுக்குச் சூத்திரங்களையும், விரிவான உரையையும் (பாஷ்யத்தையும்) பாடம் சொல்லிக் கொடுக்கின்றார். எப்பொழுதும் சிவபெருமானைத் தியானம் செய்து கொண்டிருப்பார். பரமசிவனுக்கும் சிவகாமசுந்தரிக்கும் திருமணம் செய்து வைப்பது தொடர்பாக நான்முகனிடம் பெண்ணைப் பழித்துப் பேசி எப்படிப் பரமேசுவரன் திருமணம் செய்து கொள்வார் என்று எள்ளி நகையாடுகிறார்.

ஆதிவராககுவாமி

"பாராளவும் முது முந்நீர்
பரந்தகாலம் வளையமருப்பில்

ஏராருருவத் தேனமாய் எடுத்த ஆற்றலம்மானை
கூரார்ஆரலிரை கருதிக்குருகுபாய கயிலிரியும்
காரார் புறவிற் கண்ணபுரத்து அடியேன் கண்டுகொண்டேனே"

எனத் திருமங்கைமன்னன் போற்றும் ஏனமாய் உருவெடுத்த பூவராக மூர்த்தியைப் பற்றிக் கூர்மபுராணம் 'சுவேதவராக கற்பம்' எனும் வழிபாட்டில் கூறப்படும் பாடலில் (சுலோகத்தில்) பின்வருமாறு காணப்படுகிறது.

> *"பிரளய காலத்தில் சகல சீவராசிகளையும் தன்னுள் ஒடுக்கிக் கொண்டு யோக நித்திரையில் அமர்ந்த திருமால் கண் விழித்து மீண்டும் மூவுலகினையும் படைக்கத் திருவுளம் கொண்டு நான்முகனைப் பணித்தார். இரவுக் காலம் நீங்கிப் பகல்பொழுது தொடங்கியதும் நான்முகன் படைத்தல் தொழிலைத் தொடங்க முயலும்போது இப்பூவுலகம் நீரினுள் பாதாளம் வரை சென்று அமிழ்ந்து கிடப்பதைக் கண்டு தவித்தார் நான்முகனுக்கு இரங்கிய திருமால் பூமியை நிலைக்குக் கொண்டு வர விருப்பம் கொண்டு உடனே வெள்ளைநிறப் பன்றியாக உருவமெடுத்தார். நீரிலே மூழ்கி அங்கே அமிழ்ந்து கிடந்த பூவுலகத்தைத் தம்முடைய இரு கோரைப் பற்களால் தூக்கி எடுத்துத் தாங்கியவண்ணம் நீரிலிருந்து வெளிப் பட்டார்."*

இச்சுவாமிக்குத் துளசா மன்னர் மகாதேவப்பட்டணத்தில் கோயில் எடுப்பித்துள்ளார். இப்பெருமானுக்கு விழா எடுக்கும்பொழுது வானிலிருந்து எல்லாத் தேவர்களும் இப்பட்டணத்திற்கு வருகின்றார்கள். கோரைப் பற்களினால் பூமியைப் பெயர்த்தெடுத்த சுவாமியை வணங்குகிறார்கள். இப் பெருமான் வேதங்களில் பரந்து விளங்குகின்றார். அரக்கர்களது கர்வத்தை அழித்தவராவார். அடைக்கலமானவர்களைப் பாதுகாக்கின்றார்.

இன்னிசைப் பனுவல்

இந்நாடகத்திலுள்ள 64 பாக்களும் 41 இராகங்களிலும் 5 தாளங் களிலும் இசையுடன் பாடப்பட்டுள்ளன. இதில் இடம்பெற்றுள்ள இராகங்கள் வருமாறு : அசாவேரி, அடாணா, ஆகிரி, ஆனந்தபைரவி, இந்தோளம், உசேனி, எதுகுலகாம்போதி, கண்டாரவம், கமாச, கல்யாணி, கன்னட, காபி, குண்டக்ரிய, கும்மகாம்போதி, குறிஞ்சி, கேதாரகௌள, கௌரி, கௌளிபந்து, சங்கராபரணம், சாரங்க, சாவேரி, சுத்த சாவேரி, சுருட்டி, சௌராட்டிரம், தன்யாசி, தோடி, நாட, நாடகுறிஞ்சி, நாதநாமக்கிரியை, பந்துவராளி, பாடி, பிருந்தாவளி, பிலகரி, புன்னாகவராளி, பேகட, பைரவி, மத்தியமாவதி, மல்லாரு, மோகனம், வசந்த, வசந்த பைரவி.

சிவபெருமான் கனகசபைக்கு எழுந்தருளும்பொழுது வந்திகளும் மாகதர்களும் புகழ் பாடித் துதி செய்து வருகின்றனர். கலைமகளின் மார்பகங்களாகச் சங்கீத சாகித்தியங்கள் விளங்குகின்றன. சிவகாம சுந்தரிக்கும் பரமசிவனுக்கும் திருமணம் நடக்கும்பொழுது சிவகாமசுந்தரியின் தோழிகள் திருமணப் பாடல்களைப் பாடிக்கொண்டு வருகின்றனர். சபாபதி, சிவகாமசுந்தரிக்கு மங்கலநாண் கட்டும்பொழுது கலைமகள், வித்யை, பூமகள் முதலான சுமங்கலிப் பெண்கள் மங்கள கீதம் இசைத்தனர். கலைமகள், நாரதர் ஆகிய இருவரும் வீணை வைத்துள்ளனர். விழாவின்போது முரசும் பிற மங்கல இசைக் கருவிகளும் முழங்குகின்றன.

நாடக நூல்

ஆதிவராககசுவாமி கோயிலில் இந்நாடகம் மேடையில் இசையுடன் பாடி நாட்டிய நாடகமாக நடிக்கப்பட்டுள்ளது. நாடகத்திற்குத் தேவையான பாத்திரங்கள் இதில் அதிகமாக உள்ளன. பாடல்களின் இடையிடையே உரைநடையில் வசனமாகப் பேசியும் நடிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காட்சி முடிந்ததும் நாடகக்கதை நிகழ்ச்சித் தொடர்பு விடுபட்டுப் போகாமல் இருக்கும் பொருட்டு மேடையில் சூத்திரதாரன் தோன்றுகிறான். இவன் காட்சியை விளக்கியும், இன்ன காட்சியை இப்பொழுது நீங்கள் காண இருக்கிறீர்கள் என்பது போன்று பேசுகின்றான்.

நாடகப் பார்வையாளர்கள் : – இந்நாடகம் மகாதேவப் பட்டணத்திலுள்ள ஆதிவராககசுவாமி கோயில் திருவிழாவின்போது மேடையில் நடிக்கப் பட்டது. இந்நாடகத்தைக் காண்பதற்காக எல்லா நாடுகளிலிருந்தும் கலையில் ஈடுபாடு கொண்டவர்களும், வித்துவான்களும், பெரியோர்களும் வந்துள்ளனர். மேலும் சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களும், கருணை உள்ளவர்களும், நன்றியுள்ளவர்களும், உத்தமர்களும் வந்து குழுமியுள்ளனர்.

வசனம்

நாடகத்தின் இடையிடையே உரைநடையில் வசனம் அமைந்துள்ளது. நடைமுறையில் வழங்கப்படும் பேச்சுவழக்குச் சொற்களை இதில் தாராளமாகக் கையாண்டிருப்பதைக் காணமுடிகின்றன. பாத்திரங்களை மேடையில் விசாரணை செய்கின்றபொழுதும், காட்சி நிகழ்ச்சியையும், பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் பொழுதும் வசனநடை கையாளப் பட்டுள்ளது. பெரும்பாலும் எல்லாப் பாத்திரங்களுமே ஏதாவதொரு இடத்தில் வசனத்தில் பேசியுள்ளதைக் காணமுடிகின்றன.

நாட்டிய நூல்

இசையுடன் பாடி நாட்டியமாக மேடையில் நடிக்கப்பட்டுள்ளது.

தேவேந்திரனுடன் வருகின்ற தேவமாதர்கள் நாட்டியம் செய்து வருகின்றனர். மகாதேவப்பட்டணத்திற்குத் தேவர்கள் பலரும் வருகின்றனர். அவ்வாறு அவர்கள் வரும்பொழுது வெற்றி முரசங்களும், மங்கல இசைக்கருவிகளும் முழங்குகின்றன. அரம்பை முதலான தேவமாதர்கள் நடனமாடி வருகின்றனர்.

தில்லைப்பதியில் நடராசப் பெருமான் பொற்சபைக்கு எழுந்தருளுகின்றார். அவர் வரும் அழகை ஆசிரியர் வருணிக்கின்றபொழுது 'தகிடதகிட தோங்கிணாங்கி என்று போகும் ஜதிகளுக்கு நடனமாடிக் கொண்டு' வருவதாகக் குறிப்பிடுகின்றார். பரதசாத்திரம் சிலம்புகளாகக் கலைமகளின் கால்களிலே ஒலிக்கிறது.

புராணமரபுக் கதைகள்

மன்மதனை எரித்தது, யானைத் தோல் போர்த்தியது, அரவுகளை அணிகலனாக அணிந்தது, பிறை சூடியது, அந்தகனை அழித்தது, நஞ்சுண்டது, முப்புரம் எரித்தது ஆகியவை சிவபெருமான் தொடர்பான புராணமரபுக் கதைகளாக இடம் பெற்றுள்ளன.

மந்திரமலையைத் தாங்கியது, இரணியனைத் தண்டித்தது ஆகியவை திருமால் தொடர்பான புராணமரபுகளாக இடம்பெற்றுள்ளன.

உவமைநலம்

ஒத்த, போன்ற, ஆகிய, போல ஆகிய உவம உருபுகள் கையாளப் பட்டுள்ளன. பார்வதி, கலைமகள், மாயா, வித்யா ஆகிய மகளிரின் உருவத்தை வருணிக்கின்ற பொழுதும், சிவபெருமானைப் பற்றிக் கூறுகின்ற பொழுதும் இத்தகைய உவமைகள் இடம்பெற்றுள்ளன.

இந்நாடகத்தின் தலைவி சிவகாமசுந்தரியைப் பற்றிய வருணனைகள் மிகுதி. எனவே இதில் இடம்பெற்றுள்ள உவமைகளில் பெரும்பாலானவை தலைவியைப் பற்றியனவாகவே உள்ளன. தலைவியின் உருவத்தையும், உடலுறுப்புக்களையும் வருணிப்பதற்கு ஆசிரியர் பல பொருள்களை ஒப்புமைப் படுத்திக் கூறியுள்ளார். இவ்வாறு அவர் கூறிய பொருள்களும், உடலுறுப்புக் களும் பின்வருமாறு :

1.	கூந்தல்	–	மேகம், வண்டுகள்
2.	குரல்	–	குயில்
3.	நடை	–	யானை, மான்
4.	முகம்	–	சந்திரன், தாமரை
5.	அருள்	–	கடல்
6.	கைகள்	–	செந்தளிர், தாமரை மலர்

8.	புருவம்	–	மன்மதனுடைய வில்
9.	பார்வை	–	மன்மதனுடைய பாணங்கள்
10.	நாசி	–	எள்ளின் மலர்
11.	காது	–	ஸ்ரீ காரம்
12.	கன்னம்	–	பொற்கொடியின் ஒளி
13.	பற்கள்	–	மல்லிகை மொட்டுகள்
14.	உதடுகள்	–	சர்க்கரைத் தீவு, பவழம்
15.	கழுத்து	–	வெண்சங்கு
16.	தோள்	–	கொடி
17.	முலைகள்	–	தங்கக்கிண்ணங்கள்
18.	இடை	–	சிம்மத்தின் இடை
19.	கொப்பூழ்	–	குளம்
20.	தொடை	–	வாழைத்தண்டு
21.	முழங்கால்	–	ஆமை
22.	உடல்	–	தளிர், தங்கம்

தவிரப் பார்வதியின் பார்வைகள் மீன்கள் போல் தோன்றுகின்றன; கருங்குவளை மலர்க்கூட்டம் போல் ஒளி வீசுகின்றது; ஆகமங்களாகிய நந்தவனத்திற்கு மயில் போன்று விளங்குகிறாள்.

பசுபதியினுடைய பார்வைகளின் கூட்டம் வெள்ளைத் தாமரை போல் ஒளி வீசுகின்றன; முத்துச்சரத்தின் ஒளியைப் போல் ஒளி வீசுகிறது.

உருவகம்

மிகச் சாதாரண அறிவு படைத்தோரும் உணர்ந்து தெரிந்து கொள்வதற் கேற்பக் கடினமான வேதாந்தக் கருத்துக்களை மிக எளிய நடையில் உருவகமாக ஆசிரியர் பல பாக்களில் மக்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார். இவ்வாறு இவர் கூறியனவற்றைப் பின்வருமாறு கூறலாம்.

1. நான்கு வேதங்களை முலைக்காம்புகளாக உடையதும், அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கினையும் கறந்து அளிக்க வல்லதும், சகலகலை வல்லுநர்களை அங்கங்களாக உடையது மான சபை என்ற பசு (ப.9).
2. உயர்ந்த மலைகளை மார்பகங்களாக உடையவளும் நான்கு கடல் களை ஒட்டியாணமாகப் பெற்றிருப்பவளும் விரும்பியவற்றைக் கொடுப்பவளுமான பூமாதேவி (ப.9).
3. மனது என்கிற பாத்தியில் ஆசை என்கிற முளை தோன்றுகிறது. அதற்குப் பக்தி என்கிற நீரை வார்த்து வளர்த்த பொழுது சந்தேகம்

என்கிற புல் வளர்கிறது. பரமேசுவரனுடைய கடைக்கண் பார்வை என்கிற மான் அப் புல்லை வந்து மேயச் சொல்லுங்கள் (பக். 63.64).

4. மோகம் என்கிற பேய் பிடித்த பார்வதியின் கழுத்தில் மந்திரவாதி யான பரமசிவன் வந்து மங்கலநாண் என்கிற ரட்சையைக் கட்டவேண்டும் (ப.64).

வசந்தகால வருத்தங்கள்

வசந்தகால மாலைப்பொழுது பருவம் அடைந்த மகளிருக்கு மிகவும் துன்பத்தைக் கொடுக்கிறது. இவ்வேளையில்தான் மன்மதன் இப்பெண்கள் மீது மலர்க்கணைகளை விடுக்கின்றான். இவ்வுலகில் பிறந்த பருவ வயது மங்கையருக்கு மட்டும் இவன் துன்பத்தைக் கொடுக்கவில்லை. சிவகாம சுந்தரியான பார்வதிக்கும் துயரத்தைக் கொடுப்பதை இந்நூலாசிரியர் கூறியுள்ளார்.

மகாதேவப் பட்டணத்திற்கு விழாக் காணவந்த பரமசிவனைக் கண்ட பார்வதி தன் மனத்தை அவரிடம் பறிகொடுத்து விடுகின்றாள். தன் தோழி களுடன் மாலை வேளையில் அங்கிருக்கும் அழகிய மலர்ச்சோலைக்குச் செல்கிறாள். இங்கு இவளடையும் துன்பங்களை – காதல் மயக்கத்தை ஆசிரியர் நன்கு சித்திரித்துக் காட்டியுள்ளதை அறியமுடிகிறது.

வண்டுகள் எல்லாம் விரட்டுகின்றன. மன்மதனுடைய பாணங்களாகிய மலர்கள் மிகவும் துன்புறுத்துகின்றன. சோலையிலுள்ள தளிர்கள் கூர்மையான கத்திகளாக இருக்கின்றன. கிளிகளின் பேச்சு காதில் பாணமாக ஒலிக்கிறது. நல்ல பழங்களுடன் கூடிய இந்த வசந்தகால நாட்களை எப்படிக் கழிக்கப் போகின்றேனோ என்று புலம்புகிறாள்.

மேலும் தோழிகளே! இந்த வசந்தகாலம் என்னை மிகவும் வருத்து கிறது. மன்மதனிடம் சிக்கி நான் மிகவும் துன்புறுகிறேன். முன்பெல்லாம் காமத்தால் வருந்தும் பெண்களைப் பார்த்துச் சிரித்திருக்கிறேன். ஆனால் இப்பொழுது அது என் அனுபவத்திற்கே வந்து விட்டதே!

என் அன்பார்ந்த தோழியே! இதோ பாராய்! மன்மதன் தன்னுடைய கரும்பு வில்லினால் தாமரை மலர் அம்புகளை என் மார்பிலே ஏவுகிறான். அதைத் தொடர்ந்து தென்றல் காற்று என்னைத் துன்புறுத்துகிறது.

இவ்வாறு வசந்தகால வருத்தங்களைப் பார்வதி அனுபவித்துப் புலம்புகிறாள். இதற்குத் தீர்வாகப் பரமேசுவரன் விரைவில் வந்து மணம் செய்ய வேண்டுமென்றும் கூறுகிறாள்.

தத்துவக் கருத்துகள்

பல தத்துவக் கருத்துகளை நூலில் ஆசிரியர் கூறியுள்ளார். அவை வருமாறு :

1. உலக வாழ்க்கை கானல்நீர் போன்றது.
2. ஒருவருக்கும் பணத்தைக் கொடுக்காமல் ஒளித்து வைக்கக் கூடாது; கடைசிக் காலத்தில் ஒரு சல்லிக்காசுகூட நம் பின்னே வருவதில்லை.
3. இவ்வுடல் நீர்க்குமிழி போன்றது. நன்றாக ஆராய்ந்து பார்த்தால் உலகமெல்லாம் ஒன்றுமில்லை.
4. நமது வீடு, நமது வாசல் என்னும் இச்சொற்களை ஆராய்ந்து பார்த்தால் இவைகளெல்லாம் பைத்தியக்காரர் கூடும் சந்தைக் கூட்டமாகத் தெரியும்.
5. இந்தச் சரீரம் என்கிற ஓட்டை வீட்டில் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாத்சரியம் எனும் ஆறு திருடர்கள் குடியிருக் கிறார்கள்.
6. இவ்வுலக மக்கள் கிழிந்து போன தோலைப் பார்த்து மோகம் கொள் கிறார்கள். செல்வம் யாவும் அழியும் என்பதை ஒருசிறிதேனும் நினைக்கவில்லை.
7. இந்த உடலோ உலகமோ நான் அல்ல. அந்தப் பிரமமே நான். இவ் வுலகம் அழியக்கூடியது. இதனை நிலையானதென்று நம்பி அறிவீனர்கள் காமத்திற்கு வசப்பட்டுச் சகலவிதமான துன்பங் களையும் அனுபவிக்கிறார்கள்.
8. கடலிலே உண்டாகும் நீர்க்குமிழிகள் அந்தக் கடலிலே மறைந்து விடுவது போல, எல்லாப் பொருள்களும் பரம்பொருளிலே தோன்றி அந்தப் பரம்பொருளிலேயே அடங்கிவிடும். அந்தப் பரம்பொருளே சுதந்திரமானவன். எல்லாவிடத்திலேயும் நீக்கமறப் பரவியுள்ளான். எல்லாம் அறிந்தவன்.

இயற்கைப் பொருள்கள்

தாமரை, குவளை, துளசி, மல்லிகை, முல்லை ஆகிய மலர்கள் கூறப் பட்டுள்ளன. தாமரை தியாகேசரின் முகத்திற்கும், திருமாலின் மலர்ந்த கண் களுக்கும் கூறப்பட்டுள்ளன. செங்குவளை மலர் மாலையைத் தியாகேசர் அணிந்துள்ளார். கங்கை தன் கொண்டையில் குவளை மலர்களைச்

சூடியுள்ளாள். திருமால், துளசி மாலை, வனமாலை, குண்டு மல்லிகை மாலைகளை அணிந்துள்ளார். மன்மதன் முல்லை மலர்களை ஆடையாக அணிந்து, மல்லிகை மலர்ப் பந்தைக் கையில் கொண்டும் திகழ்கிறான். பூதேவி மலர்ச்சரங்களைக் கொண்டையில் சூடியிருக்கிறாள்.

மன்மதன் வாகனமாகக் கிளியும், வருணன் வாகனமாக முதலையும் கூறப்பட்டுள்ளன பார்வதி, கலைமகள் ஆகிய இருவர் கூந்தலுக்கு வண்டு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. பார்வதியின் குரலுக்குக் குயிலும், நடைக்கு அன்னமும், யானையும் ஒப்புமையாக்கப்பட்டுள்ளன. மேலும் ஆடு, புலி, சிங்கம் ஆகிய உயிரினங்களும் கூறப்பட்டுள்ளன.

ஆடை ஆபரணங்கள்

மகளிர் சேலை அணிந்துள்ளனர். வியாக்கிரபாதர், புலித் தோலாடையைக் கட்டியுள்ளார். விநாயகர் பொன்னிறமான ஆடை உடுத்தியுள்ளார்.

பரமசிவன் சடைமுடி ஆபரணமாகப் பிறைச் சந்திரனையும், எலும்புகளையே ஆபரணங்களாகவும் அணிந்துள்ளார். இமவான், இரதி, கங்கை, பார்வதி ஆகியோர் பல ஆபரணங்களை அணிந்துள்ளனர். திருமால் இரத்தினங்களாலான ஆபரணங்களையும், மணிமுடியையும், காதுகளில் இரத்தின குண்டலங்களையும் அணிந்துள்ளார். இமவான் பொன்னாலான மணிமுடியையும், வருணன் மணிமுடியையும் அணிந்துள்ளனர். குபேரன் பொன் ஆபரணங்களையும் இரத்தினத்தினாலான மணிமுடியையும் அணிந்துள்ளார். இரதியும், பார்வதியும் கால்களில் சதங்கை கட்டியுள்ளனர்.

மேலும் பொற்சபை தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அரசிருக்கை இரத்தினங்கள் பதிக்கப்பெற்றுப் பொன்னாகத் திகழ்கிறது.

சொற்கள்

இந்நூல் தெலுங்கிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் ஆசிரியர் மூல நூலை ஒட்டியே மொழி பெயர்த்துள்ளார். அக்கால மொழிநடைக்கேற்ப நூல் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

அடா, போடி, கேளும், ஏனடி போன்ற 20 சொற்கள் பேச்சு வழக்குச் சொற்களாகும். அடிமேலடி, நன்றுநன்று, கமகம, தகதக, பளபள, மெள்ள மெள்ள, சிவசிவா, போதும்போதும், ஏதேதோ, தேவதேவனே ஆகிய 10 சொற்கள் அடுக்கி வந்துள்ளன.

அபிப்ராயம், அலக்ஷியம், கமாக்ஷம், சாஸ்திரங்கள், ச்லோகம், தக்ஷிண,

தேஜஸ், நமஸ்காரம், பாஷ்யம், பிரஹஸ்பதி, புத்ரி, ப்ரபஞ்சம், மஹான், ராக்ஷஸி, லக்ஷ்மி, விவாஹம், ஜாதி, ஸரஸ்வதி, ஹரி, ஹே, ஸ்ரீ மஹாவிஷ்ணு முதலான 101 வடசொற்களும் பராகு என்ற பிறமொழிச் சொல்லும் இடம் பெற்றுள்ளன.[4]

4. பேச்சுவழக்குச் சொற்களும், வடசொற்களும் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

பத இலக்கியம்

1. வாசுதேவ கவியின் சிங்காரப் பதங்கள்
2. இராமபாரதியின் சிங்காரப் பதங்கள்

பத இலக்கியம்

பழங்காலத்திலிருந்து இன்றுவரை பல எண்ணற்ற பதங்கள் தமிழ், தெலுங்கு, வடமொழி போன்ற மொழிகளில் பலரால் பாடப்பெற்று வந்துள்ளன. கடவுள் அல்லது அரசன் அல்லது வள்ளல் ஆகிய இவர்களுள் யாராவது ஒருவர்மீது பல்லவி, அநுபல்லவி, சரணங்களுடன் பக்தி அல்லது காதற்சுவை ததும்ப நாயக நாயகி பாவமாகப் பாடப்பெறுவது 'பதம்' ஆகும். 'பதம்' என்பது இசைப் பாட்டு வகையாகும் என்று தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது.[1] அகப்பொருள் இலக்கணத்தைத் தழுவி இயற்றப்பெற்ற பதங்களே மிகுதி யாகும். இறைவன் மீது பாடப்பெற்ற பத்திப் பதங்கள் குறைவாகவே கிடைக்கின்றன. பொதுவாகப் பதங்கள் பெரும்பாலும் திசிர திரிபுடை முதலிய பல தாளங்களில் அமைந்திருக்கின்றன. இவற்றை விளம்ப காலத்தில் பாடுவதையே முறையாகக் கொண்டுள்ளனர்.

தஞ்சையை ஆண்ட விசயரகுநாத நாயக்கர் காலத்தில் (1633 – 1673) அரசவையிலிருந்த பெண்பாற் புலவர்களில் ஒருவரான அரங்க இராசம்மாள் என்பவர் இப்பதங்கள் பாடுவதில் மிகவும் சிறந்து விளங்கியிருக்கிறார். இவர் எட்டு மொழிகளில் பயிற்சியுடையவராகத் திகழ்ந்து மன்னரிடமிருந்து 'கனகாபிடேகம்' பெற்றுள்ளார். இவர் பாடிய பல நூல்களுள் தெலுங்கு மொழியிலமைந்த உஷா பரிணயம், மன்னாருதாச விலாசம் ஆகிய இரு நூல்களும் சிறப்பாகக் குறிக்கத்தக்கன.

தஞ்சை மராத்திய மன்னர் இரண்டாம் சகசியின் ஆட்சிக்காலத்தில் (1684 – 1712) அரசவையில் வாசுதேவகவி, இராமபாரதி, சோமகவி, கவிகிரி, முத்துக்கவி முதலான பல்வேறு கவிஞர்கள் இருந்துள்ளனர். இவர்கள் ஏராளமான காதற்சுவைப் பதங்களைத் தமிழ், தெலுங்கு, வடமொழி, மராத்தி ஆகிய மொழிகளில் பாடியுள்ளனர்

சகசி மன்னர் ஒரு சிறந்த பன்மொழிப் புலவராக விளங்கி யிருக்கின்றார். இவர் திருவாரூர்த் தியாகேசர்மீது அளவுகடந்த பத்தி கொண்டவர். இத்தியாகேசர்மீதும், ஏனைய கடவுளர்மீதும் பல எண்ணற்ற பத்திப் பதங்களைத் தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் பாடியுள்ளார்.

---

1 **Tamil Lexicon**, Vol. IV, University of Madras, Reprinted, 1982, p. 2469

இவர் பாடிய பதங்கள் 'தியாகேச பதங்கள்' எனும் பெயரில் தொகுக்கப் பட்டுள்ளன. இதிலமைந்துள்ள பதங்கள் வருமாறு[2] :

1.	பத்திப் பதங்கள்	–	50
2.	பாவ பதங்கள்	–	5
3.	வைராக்கியப் பதங்கள்	–	9
4.	சிருங்காரப் பதங்கள்	–	103
5.	நகைச்சுவைப் பதங்கள்	–	14
6.	நீதிப் பதங்கள்	–	24
7.	மங்களப் பதங்கள்	–	3
	ஆக மொத்தப் பதங்கள்	–	208

இப் பதங்கள் வடமொழி, மராத்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் உள்ளன.

வாசுதேவகவி, இராமபாரதி ஆகிய இருவரும் பாடிய தமிழ்ப் பதங்கள் இரண்டாம் சகசி மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்றுள்ளன. இப்பதங்கள் இப்பகுதியில் ஆய்வு செய்யப்பெறுகின்றன.

2. S.Seetha. Tanjore as a Seat of Music. University of Madras. 1981. p. 71.

5
வாசுதேவகவியின் சிங்காரப் பதங்கள்

வாசுதேவகவி

வாசுதேவகவியைப் பற்றிய வரலாறு எதுவும் கிடைக்கவில்லை. இவர் சகசி மன்னர் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்தவராவார். காதற்சுவை ததும்பப் பாடுவதில் சிறந்து விளங்கியிருக்கிறார். தாம் பாடிய பாக்களில் தம் பெயரைச் சேர்த்து முத்திரையாகப் பாயிருக்கின்றார்.

"அருள் வாசுதேவன்" (5,37)[1]

"செந்தமிழ் வாசுதேவன் கவி" (3)

"மானிலம் எல்லாம் புகழ் வாசுதேவன்" (24)

"வாசுதேவன் சொன்ன பதகவி" (20)

என்றிவ்வாறு தம்மை உயர்த்திப் பாக்களில் பாடியுள்ளார். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழில் பாக்கள் பாடுவதில் சிறந்து விளங்கிய இவர் புகழ் மாநிலம் முழுவதும் பரவியிருந்ததை 'மானிலம் எல்லாம் புகழ் வாசுதேவன்' (24) எனக் கூறியதிலிருந்து அறியமுடிகிறது. இவர் பாடிய பாக்கள் அனைத்தும் இசை நாட்டியத்திற்கேற்ற அமைப்புடையன. தம்மை ஆதரித்துப் போற்றிய சகசி மன்னரின் பெயரையும், பாடல்தோறும் போற்றிப் பாடியுள்ளார். மன்னரைத் தலைவனாகப் பாவித்துப் பாடிய பதங்களில் மன்னன் குலம், வரலாறு, குணநலன்கள் போன்ற பல்வேறு சிறப்புக்களை எடுத்துப் புகழ்ந்து பாடியுள்ளார்.

தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் சிறந்து விளங்கிய வாசுதேவகவி மும்மொழிகளிலும் பல பாக்களைப் பாடியுள்ளார். வடமொழியில் ஐந்து தருக்களைக் கொண்ட 'தௌத்ய பஞ்சகம்' மற்றும் 'நவரத்தின மாலிகா' ஆகிய நூல்களையும் இயற்றியதாகத் தெரிய வருகின்றது. சேத்ரய்யரின் பதங்களை முன்னோடியாகக் கொண்டு வாசுதேவகவி பதங்களைப் பாடியுள்ளார்.

1. பிறை வளைவிற்குள் உள்ள எண்கள் பாடல் எண்களாகும்.

சுவடி

தஞ்சை, சரசுவதி மகால் நூல்நிலையத்தில் இவர் பாடிய பாக்கள் 'வாசுதேவகவியின் பாடல்கள்' என்ற பெயரில் சுவடியாக உள்ளது.[2] இன்னும் அச்சில் வந்ததாகத் தெரியவில்லை. இச்சுவடியில் இவர் பாடியனவாகப் பதங்களும், கீர்த்தனங்களும் காணப்பெறுகின்றன. அக்கீம் ஏ. அப்துல்கரீம், என்.வி. வேங்கடசுப்பிரமணிய சாத்திரி ஆகிய இருவராலும் 05-12-1948இல் படியெடுக்கப்பட்டிருக்கிறது.

நூலமைப்பு

வாசுதேவகவி பாடிய பாக்கள் / பதங்கள் பின்வருமாறு அமைந்திருக்கின்றன.

1.	தமிழ்	–	63	(1–42, 46–56, 58, 87, 87பி, 88–90,90பி, 91, 92, 92பி)
2.	மணிப்பிரவாளம்	–	3	(43–45)
3.	தெலுங்கு	–	14	(57, 57பி, 60–69ஏ, 69பி பாதி)
4.	வடமொழி	–	33	(69பி, 70, 71, 72, 72பி, 73, 73பி, 74, 74பி, 75ஏ, 75பி, 76, 76பி, 77, 77பி 78, 78பி, 79, 79பி, 80, 80பி, 81, 81பி, 82, 82பி, 83, 83பி, 84, 84பி, 85, 85பி)
	ஆக மொத்தம்	–	113	

தெலுங்கு, வடமொழி ஆகிய இரு மொழிப் பாக்களைத் தவிர ஏனைய பாக்களின் சிறப்பு மட்டும் இப்பகுதில் ஆய்வு செய்யப்பெறுகிறது.

'இப்பதங்கள் எந்த இராகத்தில், எந்தத் தாளத்தில் அமைந்துள்ளன என்பதைக் கண்டுபிடிக்க இயலவில்லை' என்று சீதா குறிப்பிடுகிறார்.[3] இதற்குக் காரணம் சுவடியில் பாக்கள் மட்டுமே காணப்பெறுகின்றன. பாடல் எண்கள் 'சிவா1, சிவா2', 'சிவாயனம', 'சிவாயம கணேசாயம' என்றும் வெறும் எண்கள் இடப்பட்டும் உள்ளன.[4] சில பாடல்கள் உட்பிரிவு போல 'A, B' எனக்

2. சுவடி எண் 813 / 11649.
3. S Seetha. op. cit., p 148.
4. 1. சிவா : 1–19, 21.
 2. சிவாயனம : 20.
 3. சிவாய கணேசாயம : 24.
 4. எண்கள் : 25–56, 58–59 . . . . .

குறிக்கப்பெற்றுள்ளன. இதற்குரிய காரணம் புலப்படவில்லை. சில பாடல்கள் கண்ணி அமைப்பில் இரண்டிரண்டு அடிகளாகவும், சில மூன்றடிகளாகவும். சில நான்கடிகளாகவும், சில நான்கிற்கு மேற்பட்டும், சில எல்லாம் கலந்தும் பாடப்பெற்றிருக்கின்றன. மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எட்டு ஆகிய சீர்களில் பாக்கள் அமைந்துள்ளன. பொதுவாகப் பார்க்கும்பொழுது எல்லாம் கலந்து பாடப்பெற்றுள்ளமையினால் இசையறிஞர்களால் இராகம், தாளம் கண்டுபிடிக்க இயலாமல் போயிருக்கலாம். இது ஆய்வுக்குரியது.

எளிய நடையில் அமைந்துள்ள இப்பாக்களில் காதற்சுவை அதிகம் கலந்திருக்கிறது. அக்காலப் பேச்சுத்தமிழும் பிற மொழிச் சொற்களும் தாராளமாக ஆசிரியரால் பயன்படுத்தப்பெற்றிருக்கின்றன. ஒரு தலைவி எப்படித் தலைவனைக் கண்டு விரும்பி அவனோடு கூடவேண்டும் என்று துடிக்கின்ற நிலையையும், அவனை நினைத்து ஏங்கிப் புலம்புவதையும், அவனோடு சேர்ந்து இன்பம் துய்த்ததையும் இப்பாக்களில் காணமுடிகின்றன. தலைவனாகச் சகசி மன்னனை ஆசிரியர் பாடல்தோறும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் தலைவியைமட்டும் ஒரு பெண்ணாக நினைத்துப் பாடவில்லை. மாறாகப் பல பெண்கள் பாடப்பட்டுள்ளனர். முத்து மோகினி, வாறுசாட்சி, அபரஞ்சி என்று மூன்று பாடல்களில் மட்டும் தலைவியின் பெயர் காணப் பெறுகிறது. சிலவற்றில் 'வேசி' என்றே காணப்பெறுகிறது. தமிழும், தெலுங்கும் கலந்து மூன்று பாடல்கள்(47,48,49) பாடப்பட்டுள்ளன. தமிழ், மணிப்பிரவாளம், தெலுங்கு, வடமொழி, தமிழ் என்ற மொழிகளின் அமைப்பில் பாக்கள் அமைந்திருக்கின்றன. இப்பாக்களைத் தலைவன், தோழி, தலைவி, செவிலி ஆகியோர் கூற்றுக்களில் அடக்கலாம்.

1. தலைவன் கூற்று	–	6	பாடல்கள்
2. தலைவி கூற்று	–	31	பாடல்கள்
3. தோழி கூற்று	–	25	பாடல்கள்
4. செவிலி கூற்று	–	1	பாடல்
5. பிற	–	2	பாடல்கள்
ஆக மொத்தம்	–	65	பாடல்கள்

சகசி மன்னன்

தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த மராத்திய மன்னர்களுள் இச்சகசி மன்னன் ஒருவர். இவரைத் தலைவனாகப் பாவித்து வாசுதேவகவி பல பாடல்களைப் பாடியிருக்கின்றார். இப்பாடல்கள் அனைத்திலும் இம்மன்னன் புகழைப் பலவாறு விதந்து பாராட்டியுள்ளார் இப்பாக்களில் காணப்பெறும் மன்னன் தொடர்பான செய்திகள் இப்பகுதியில் ஆய்வு செய்யப்பெறுகின்றன.

சூரிய குலத்தில் போசலவம்சத்தில் பிறந்தவன் சகசி மன்னன். இதனைச் 'சூரியவம்ச தீபகன்' (46) என்றும் 'போசலவம்ச தீபன்' (14) என்றும் குறிப்பிடுகின்றார் ஆசிரியர். ஏகோசியின் புதல்வனாகப் பிறந்த சகசியை 'ஏகராஜேந்திரன் பால' (33,43) என்கின்றார்.

இம்மன்னன் பெயர் சகராஜன், சாகபூபாலன், சாக ராஜேந்திரன், சாகேந்திரன், ஸ்ரீ ஸாஹராஜ மஹாராஜன் என்று பலவாறு அழைக்கப் பெறுகின்றார். பல நற்குணங்களைப் பெற்ற இம்மன்னன் சிறந்த அழகு படைத்தவன்; மன்மதனுக்கு ஒப்பானவன்; நிலவைப் போன்ற முகத்தை உடையவன்; அழகுடைய பல பெண்கள் இவனழகைக் கண்டு மயங்கிக் காதல் கொள்ளும் அளவிற்குச் சிறந்த அழகுடையவன். தேவர்கள் வாழும் உலகத்தி லிருக்கும் இந்திரனுக்கும், திருமாலுக்கும் இணையானவன். பல மகளிரைக் கவர்வதிலும் அவர்களிடத்து இன்பம் அனுபவிப்பதிலும் இவன் பூலோக தேவேந்திரனாக விளங்குகிறான்.

தம்மை நாடி வருகின்ற கவிஞர்களுக்கும் ஏனையோருக்கும் பொருள் களை வாரி வழங்குவதில் கர்ணனுக்கு இணையானவன். பகைவர்களுக்குக் காலன்; வீராதி வீரன்; தம்மைப் பிறநாட்டு மன்னர்கள் வந்து பணியும் பெருமையும் வீரமும் உடையவன். போர் புரிவதில் அர்ச்சுனன் போன்றவன்.

சோழ நாட்டை நீதி வழுவாது செங்கோல் நடத்தும் தலைவன்; அளகை மன்னன்; தஞ்சையில் வாழ்பவன்; இசையிற் சிறந்த புலமை உடையவன்; சாகித்தியத்திலும் இசையிலும் மிகுந்த விருப்பமுடையவன்.

பொதுவாகப் பல கவிஞர்களுக்குப் பொருள்களை வாரி வழங்கி யிருந்தாலும் வாசுதேவகவிக்கு எப்பொழுதும் கருணை செய்பவனாகத் திகழ்ந்துள்ளான். மேலும் வாசுதேவகவியின் செந்தமிழ்ப் பாடல்களை விரும்பிக் கேட்பவனாகவும் திகழ்கின்றான்.

இப்பாக்களின் தலைவனாகப் போற்றப்பெறும் சகசியின் கூற்றாக ஆறு பாக்கள் காணப்பெறுகின்றன. ஐந்து பாக்கள் தலைவியிடம் நேரடியாகவும் ஒரு பாடல் தோழியிடம் நேரடியாகக் கூறுவதாகவும் பாக்கள் அமைந்திருக் கின்றன.

"வாசுதேவன் சொல்லும்
ஆசுவினால் மகிழ்போசலவர
சாகராஜன் நானடி மின்னே" (11)

"பெண்ணே! உனக்கு ஒப்பானவன் என்னைத்தவிர வேறு யாரடி! மன்மதன் என்னைத் துன்புறுத்துகிறான், அவனிடமிருந்து என்னைக் காப்பாற்றடி! அடியே! என் மேல் நீ ஏன் பாராமுகமாய் இருக்கிறாய்? சாகேந்திரன்

நானடி! பெண்ணே! என் மொழிதானடி. வாசுதேவன் கவிதைபோல் ருசிக்குதடி! நீ தெருவில் முன்பொருமுறை பல பெண்களுடன் சேர்ந்து வரும்பொழுது உன்னைக் கண்டு காதல் கொண்டேனடி! வாசுதேவன் புகழ்ந்த சகசி மன்னனும் கு ந்தைப் பதியில் வாழும் ஆதி கும்பேசனின் அடியவனுமாகிய நான் உன்னைக் கண்டு காதல் கொண்டேனடி!"

என்றிவ்வாறு மன்னனே நேரடியாகப் பேசுவது போலப் பாக்கள் அமைந்திருக்கின்றன.[5]

ஒரேயொரு பாடலில் (12) தோழியிடம் மன்னன்,

"மின் போன்றவளே! என் மயக்கத்தை அவளிடம் சொல்லி இங்கு அழைத்தோடி வாடி! திரைச் சொல் வாசகனான துரைச்சிங்கம் சாகேந்திரன் வரச் சொன்னான் என்று நீ அவளிடம் சொல்லி அழைத்தோடி வாடி! இளவயதுடையவள் அவள்; பொற்றாமரை முகத்தினள்; அக் கன்னியின் முலையினில் என் நகக்குறிக்ளின் அடையாளம் பட்டிருக்கும்! இனிமை மிக்க தஞ்சை மன்னன் என்று என் பெயர் சொன்னவுடனே அவள் ஓடி வருவாள்! பைந்தொடியான அவள் இதழ், வாசுதேவன் பாடிய செந்தமிழ் போலச் சிறந்திருக்கும்"

என்று கூறுகின்றான்.

தமிழின் பெருமை

வாசுதேவகவி பாடிய இப்பதங்களில் பல்வேறிடங்களில் தமிழின் பெருமையை அறியமுடிகிறது. தம்மைத் தமிழோடு இணைத்துப் பாடுவதை இப்பதங்களில் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.[6] ஆற்றலுடைய செந்தமிழில் பாடுவது தமக்குத் தேனைவிட இனிமையாக இருக்கிறது என்கிறார். மேலும் தம்மைத் 'தமிழாகரன் வாசுதேவன்' (90பி) என்றும் 'தமிழ்மழை பொழியும் வாசுதேவன்' (92பி) என்றும் போற்றியுள்ளார். ஒரு தலைவி, 'குளிர்தமிழ் வாசுதேவன் பதப் பாக்களைப் படித்ததனால் குரல் நெரிந்தது' (89) என்கிறாள். மற்றொரு தலைவி, 'செந்தமிழ் படித்தால் என் செவ்வாய் இதழில் தேனருவி ஊறுகிறது' (28) என்று கூறுகிறாள்.

சகசி வேந்தன் செந்தமிழ்வாணர்க்கு உதவுவதில் பெரிதும்

5. வாசுதேவகவியின் பாடல்கள், 11, 45, 50, 51.
6. மேலது, 3, 4, 12, 15, 16.

விருப்புடையவன் (36). அருந்தமிழ்ப் புலவர்களுக்குக் கற்பக விருட்சம் போன்று திகழ்கிறான் (54). இவன் அரண்மனையில் நாள்தோறும் பல அறிஞர்களும், வேதியர்களும் குழுமியிருக்கின்றனர். இவர்களுள் தமிழ்ப் புலவர்களும் இருக்கின்றனர்(59).

வரலாற்றுக் குறிப்புகள்

இரண்டாம் சகசி மன்னன் காலத்தில் முகாலாயர் படையெடுப்பு இருந்துள்ளதை வரலாற்றுச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன.[7] வாசுதேவகவி பாடியுள்ள பதங்களில் சுலுபுகாரன், தாவுக்கானன், யாசம நாயக்கன், மருதாகான், காமபர்சி, லத்திப்சா, அசத்கான், காசிம்கான் போன்ற படைத் தலைவர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன (பா. 54).

உவமை நலம்

பதங்களில் 59 உவமைகள் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றில் போல், போலே, போலவே, என, நிகர், நேர், ஒத்த ஆகிய உவம உருவுகள் கையாளப் பெற்றிருக்கின்றன. பெரும்பாலான உவமைகள் 'போல' எனும் உவம உருபிலேயே இடம்பெற்றிருக்கின்றன.

காதற்சுவை ததும்பும் பாக்களாக இருப்பதனால் உவமைகளும் இச்சுவையை வெளிப்படுத்தும் விதத்திலேயெ அமைந்திருக்கின்றன. மன்மதனும் இரதியும் போல இருவரும் சேர்ந்திருப்போம் என்று தலைவி பலவிடங்களில் குறிப்பிடுகிறாள்.[8] 'முன்போல அணைந்தால் அதுவே போதும்' என்று தன் காமத்தை வெளிப்படுத்தும் வகையில் தலைவி பேசுகிறாள்.[9] ஒரு தலைவிக்கு மாலைமதி தனல் போல் வீசுகிறது (49).

> "*ஆடப்போன தீர்த்தம் அருகில் வந்தது போலவும், தேடிய பொருள் கையில் கிடைத்தது போலவும், இந்திரன் போல வருகின்ற ஏகோசி மகாராசன் மைந்தன் சகசி உன்னை நாடி வந்து சேர்ந்தால் அதுவே நீ செய்த பாக்கியமாகும்*"

---

7. 1. கே. எம். வேங்கடராமையா, **தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு 1987, பக். 91–92.
   2. வீ. சீனிவாசச்சாரி (மொ. ஆ.), **போன்ஸ்லே வம்ச சரித்திரம்**, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், இரண்டாம் பதிப்பு 1980, ப. 80.
   3. Venkasami Rao. **A Manual of the District of Tanjore**. Madras. 1915. Vol. VII. pp. 770-771
   4. N.S. Ramaswami. **Political History of Carnatic Under the Nawabs**. Abhinav Publications. New Delhi. 1984. p. 9.
8. **வாசுதேவகவியின் பாடல்கள்**, 3, 8, 16, 31.
9. **மேலது**, 1, 3, 35, 36, 38, 44, 49, 92 பி.

என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள் (1).

தலைவி ஒருத்தி தலைவனிடம் தன் தோழியைத் தூது அனுப்புகிறாள். ஆனால் தூது சென்ற தோழியோ வளர்த்த காளை தன்மீது பாய்வது போல வஞ்சனை செய்து தலைவன்மீதே காதல் கொண்டு விடுகிறாள். மான் போன்ற சாயலை உடைய உயிர்த்தோழியாக விளங்கிய அவள் தோளில் இருந்து மெல்லக் காதைக் கடித்தது போல இப்படித் துரோகம் செய்து விட்டாள் (19). இவ்வாறு தலைவி புலம்புகிறாள்.

மற்றொரு தலைவி தலைவன் வந்து தன்னைக் கண்டு தன்னுடன் சேர்ந்திருந்து இன்பம் அனுபவித்ததைத் தன் தோழியிடம் மறைத்து விடுகிறாள். ஆனால் தோழியோ, "தேனே! உன் முகத்தில் வியர்வை அரும்புகிறது. உன் முலைகளில் நகரேகை எப்படி வந்தது? இதழ்களில் பற்குறி எப்படி வந்தது? உன் மனத்தினில் படபடப்பு ஏன் வந்தது? இப்போதாவது மறைக்காமல் சொல்லிவிடு. கலைகளில் சிறந்த சகசி மன்னன் உன்னைச் சேர்ந்ததை இன்னும் ஏன் மறைக்கிறாய்? நீயோ ஆடு திருடிய கள்ளன் போல் பார்க்கிறாய்" என்று கூறுகிறாள் (55).

இறைவன் பெருமை

சிவபெருமான், திருமால், மன்மதன் – இரதி போன்றோர் பாக்களில் ஏற்றவிடங்களில் பெருமைபடக் கூறப்பெறுகின்றனர்.

சகசி மன்னனின் பெருமைகளில் சிறந்ததாகக் கருதப்பெறுவது அவன் சிவபெருமான்மீது அளவுகடந்த பத்தி கொண்டிருந்ததுவேயாகும். அதனை நினைந்த ஆசிரியர் 'தஞ்சைபுரீச்சுவர' (33) என்று மன்னனை அழைத்ததோடு அவன் குடந்தைப் பதியில் வாழும் ஆதி கும்பேசனின் அடியவன் (51) என்றும் போற்றுகின்றார். மேலும் 'குளிர்ச்சி பொருந்திய திங்களைச் சூடிய சிவபெருமானின் பாத கமலங்களைப் பணிந்து போற்றுகின்ற சகஜி மன்னன்' (19) என்று பாராட்டுகின்றார்.

சகசி மன்னன் திருமாலுக்கு இணையானவனாகவும் (52), தயிரளந்து உண்ட கண்ணனுக்கு ஒப்பானவனாகவும் (26) போற்றப்பெறுகின்றான். தலைவி ஒருத்தி மன்மதன் விடும் மலர்க்கணைகளைத் தாங்க முடியாமல் 'இராம ராம! பெண்பிறவி பொல்லாதது' (5) என்று புலம்புகிறாள். திருமாலைப் பற்றியும் அவரெடுத்த அவதாரங்களுள் கண்ணன், இராமன் அவதாரங் களைப் பற்றியும் இவ்வளவே பாக்களில் காணப்பெறுகின்றன.

காமன், பஞ்சசரன், மாரன், மன்மதன், மதனன், வில்லி, ரதி என்று 24 பாக்களில் மன்மதனும் இரதியும் கூறப்பெறுகின்றனர். மலரம்புகளை உடைய இவன் கரும்பை வில்லாக வளைத்து மலர்க்கணைகளைப் பெண்கள் மீது

எய்கிறான்.[10] பருவமடைந்த கன்னிப் பெண்களின் மலர்மேனி வாடுவதற் காகவே இவன் இவ்வாறு மலர்க்கணைகளைச் சொரிகிறான் (31). இவன் மாலைப் பொழுதில் இக்கன்னியர்களைப் படாதபாடு படுத்துவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறான் (10). இவன் விடுக்கின்ற கணைகளுக்கும் சந்திரனுக்கும் எப்பொழுதும் தீராப்பகை இருந்து வருகிறது (5). பெண் களுக்கு மன்மதன் போன்றவனாகத் திகழும் சகஜி மன்னனுடன்[11] பூக்கள் நிரம்பிய கட்டிலில் மன்மதனும் இரதியும் போல இருப்போம் (3,16) என்று சில பெண்கள் விரும்புகின்றனர்.

ஒரு தலைவி தலைவனிடம் கூறும்பொழுது 'மன்மதனைக்கூட எனக்கு அடிமையாக்கிக் கொள்வேன்; ஆனால் உன்னைஅவ்வாறு என்னால் செய்யமுடியவில்லையே' (35) என்கிறாள்.

"விருப்பத்துடன் நீ செய்யும் விளையாட்டுக்களை அறிந்தால் மதன ராசன் பேரில்கூட ஆசை வரவே வராது" (7) என்றுதோழி ஒருத்தி கூறுகிறாள். வாசுதேவகவியைப் பற்றிக் கூறுகின்ற தோழி ஒருத்தி 'மன்மதக் கவிதைகளைப் பாடியவன்' (7) என்கிறாள்.

"பூங்கணைகளை வீசுகின்ற மன்மதன் தோற்றுவிடும்படி என்னைக் கையாலணைத்து என்னுயிரைக் காக்கவும், என் முகம் வியர்க்கவும், என் மயக்கத்தைத் தீர்க்கவும், அழகிய முலைகளைச் சேர்த்துப் புணர்ச்சி விளையாடவும் இப்போது இங்கே அவனை வரச் சொல்லடி" என்று தலைவி ஒருத்தி மன்மதன் வீசிய மலர்க்கணைகளைத் தாங்க முடியாமல் தன் தோழியிடம் பலவாறு புலம்புவதைக் காணமுடிகிறது.

மன்மதனைக் கூறிய ஆசிரியர் அவன் மனைவி இரதியையும் கூறத் தவறவில்லை. மன்மதனோ பருவமடைந்த கன்னிப் பெண்கள்மீது மலர்களை எய்து அவர்களைத் துன்பமடையச் செய்கிறான். ஆனால் இரதியோ அழகு வாய்ந்த பிற பெண்களையே பார்த்த அளவில் மயக்கமடையச் செய்யும் மோகம் உடையவளாக இருக்கிறாள் (6).

இவர்களைத் தவிர இந்திரன், சத்தியபாமா–உருக்குமணி ஆகியோர் பற்றிய குறிப்புகளையும் பாக்களில் காணமுடிகின்றன. தேவர்கள் வாழும் உலகத்தில் இந்திரன் எப்படி எல்லா வளங்களும் இன்பமும் பெற்று வாழ்கிறானோ அதேபோன்று இப்பூவுலகில் சகஜி மன்னன் வாழ்கிறான்.[12]

---

10. வாசுதேவகவியின் பாடல்கள், 8, 21, 22, 40, 43, 92பி.
11. மேலது, 39, 44, 54, 56, 88.
12. மேலது, 1, 2, 7, 14.

சகசி மன்னனைக் காணாத தலைவி ஒருத்திக்கு ஒரு இரவும் பொழுதும் நூறு யுகமாகியது; அவள் இருவிழிகள் உறங்க மறுக்கின்றன. யானைத் தலைவனாகிய தேவேந்திரன் அருந்திய கபித்தம் (விளா) போல அப்பெண் காம வேதனையால் மெலிந்து வாடுகிறாள் (21).

தலைவி ஒருத்தி தன் தோழியை அழைத்துச் சத்தியபாமா, உருக்குமணி போல இருவரும் கூடி ஆடி மகிழுவோம் என்கிறாள் (48).

கலைகள்

சகசி வேந்தன் பல்வேறு கலைகளை வளர்த்ததோடு அக்கலைஞர் களுக்கும் பல்வேறு வகைகளில் உதவிகள் செய்து அவர்களை ஊக்கப்படுத்தி வந்துள்ளார். இசையோடு பாடி நாட்டியமாடத்தக்க வகையில் வாசுதேவ கவியால் பாடப்பெற்ற இப்பதங்களில் இசை, நடனம், ஓவியம் ஆகிய கலை களைப்பற்றிக் கூறியிருப்பதையும் காணமுடிகின்றன.

இசை, சங்கீதம் (32, 2) என்று இப்பாக்களில் இடம்பெறுகின்ற இசைக் கலையில் தோடி, பூபாளம், முகாரி ஆகிய இராகங்கள் குறிக்கப்பெறுகின்றன. சகசி மன்னன் இசைக்கலையில் விருப்பமுடையவனாகத் திகழ்ந்ததோடு (32) இசையிலும் சிறந்து விளங்குகிறான் (2). தஞ்சை அரண்மனையில் பாடகர்கள் பண்ணுடனே பூபாளம், தேவகாந்தாரி பாடுகின்றனர். அதனோடு வாசுதேவ கவியின் பதங்களையும் சேர்த்துப் பாடுகின்றனர்(59).

தலைவனாகிய சகசி வேந்தன், "பெண்ணே! தோடி, முகாரி இராகங்களில் பாடி வினோதமாய் முன்போல் என்னுடன் விளையாடி முத்தமிடுவாய்" (11) என்று தலைவியிடம் கேட்கிறான்.

தோழியொருத்தி தலைவனிடம் தாசிப் பெண்கள் பலரைப்பற்றிக் குறிப்பிடுகிறாள். அவ்வாறு கூறும்பொழுது, 'பல பெண்கள் பல்வேறு இராகங்களில் பாக்களைப் பாடி உன்னை மயக்குவர்; அவர்களும் மயங்கி உன்மேல் விழுவர்' (27) என்கிறாள்.

தோழியைத் தலைவி சகசி மன்னனிடம் தனக்காகத் தூது செல்லுமாறு கூறுகிறாள். "அவனிடம் தூது சென்று உன் நிலையை உரைப்பது அவ்வளவு எளிதான செயலன்று. கட்டியம் முழங்க, கவிஞர்கள் கொண்டாட, மடந்தையர்கள் தாளத்துடன் நடனம் ஆட, இசைக் கருவிகள் முழங்கும் சபையில் சென்று நான் அவனிடம் தூது உரைப்பது எப்படி?" என்று தோழி பதில் உரைக்கிறாள் (88).

தலைவி தனக்காகத் தலைவனிடம் தூது செல்லும்படித் தோழியை

வேண்டுகிறாள். அப்பொழுது தோழியை அவள் 'ஓவியமே!' என அழைக்கிறாள். அப்பொழுது, 'சாமி! சித்திர பொம்மையுடன் காமலீலை எப்படிச் செய்தாலும் அங்கே இன்பம் விளையுமோ?' (24) என்றுரைக்கிறாள்.

தூதுரைத்தல்

சங்க காலந்தொட்டுத் தூது செல்லும் வழக்கம் அகவாழ்விலும், புற வாழ்விலும் காணப்பெறுகிறது. தலைவனுக்கும் தலைவிக்குமிடையே இத் தூது நிகழ்வதுமுண்டு. இருவருக்கும் மிக நெருங்கியவர்களாக இருக்கின்ற நண்பர்கள் இதனைச் செய்வதுண்டு. வாசுதேவகவி தாம் பாடிய இப்பதப் பாக்களில் தலைவிக்காகத் தோழி தலைவனிடம் தூது செல்வதாகவே பாடி யிருக்கின்றார். பத்துப் பாக்களில்[13] தோழி தலைவிக்காகத் தலைவனிடம் தூது சென்றதைக் காணமுடிகிறது. ஒரு பாடலில் தலைவனிடம் யாரையாவது தூதனுப்பு என்று தலைவிக்குத் தோழி கூறுகிறாள். மற்றொரு பாடலில் தூது சென்ற தோழியே தலைவிக்குத் துரோகம் செய்து தலைவனுடன் சேர்ந்திருப்ப தாகக் காட்டப்பட்டிருக்கிறது.

இயற்கை நலம்

பல்வேறு இயற்கைக் காட்சிகளையும், பொருள்களையும் பாக்களில் காணமுடிகின்றன.

பறவைகள் :– கிளி, வண்டு, அன்னம், குருவி, கழுகு, பருந்து, மயில் ஆகிய பறவைகள் கூறப்பெறுகின்றன. அஞ்சுகம், கொஞ்சுகிளி என்று கிளி அழைக்கப்படுகிறது. பெண்ணை, 'கிளியே!' என்றும் (3), 'அன்னமே!' என்றும்[14] விளித்து அழைக்கின்றனர். பெண்ணின் பேச்சினிமைக்குக் கிளியையும் (51), பெண்ணின் வயிறு வண்ணமயில் போல இருந்தது (33) என்று கூறுவதற்கு மயிலையும் பயன்படுத்தியிருக்கிறார். 'ஊர்க்குருவி எவ்வளவுதான் உயரே பறந்தாலும் பருந்தாகி விடாது' 35) என்று தலைவனிடம் தலைவி கூறுகிறாள். அதே போலத் தலைவனைக் கண்ட தலைவி, 'மேகத்தைக் கண்ட மயில் போல' (46) மகிழ்ச்சியுடன் இருக்கிறாள். தனக்குப் பிடிக்காத பகைவர்களைக் கண்டால் சகசி மன்னன் அவர்களை வெட்டிக் கழுகிற்கு விருந்து போட்டு விடுவான் (52) என்று தலைவி கூறுகிறாள்.

விலங்குகள் :– ஆடு, காளை, பூனை ஆகிய வீட்டு விலங்குகளும், ஆனை, குதிரை, நரி, மான் ஆகிய விலங்குகளும் கூறப்பெறுகின்றன. ஆடு திருடிய கள்ளன் எப்படித் திருதிருவென விழிப்பானோ அதுபோலத் தலைவி

13. வாசுதேவகவியின் பாடல்கள், 13, 19, 25, 37, 40, 42, 48, 55, 58, 88.
14. மேலது, 4, 13, 49.

விழிக்கிறாள் (55). வளர்த்த காளை எப்படித் தன்மீதே பாய்கிறதோ அதுபோலத் தன் உயிர்த் தோழியாய் இருந்தவள் தனக்குத் துரோகம் செய்து விடுகிறாள் (19) என்கிறாள் தலைவி. ஆனைப் போரைக் கண்டவர்கள் யாராவது பூனைப் போரைக் காண்பார்களோ? (28) எனக் கேட்கிறாள் தலைவி. பல புலவர்களுக்கும் கனகாபரணம், யானை, சிவிகை போன்றவற்றைச் சகசி வழங்குவதில் கர்ணன் போல் திகழ்கிறான் (29). நரி போலப் பதுங்குவீர் (52) என்று பகைவர்களுக்குக் கூறுவதையும் காணமுடிகிறது. 'மானே!' என்று ஒன்பது பாக்களில் பெண்ணை விளித்து அழைப்பதற்கு மான் பயன்படுத்தப் படுகிறது.[15]

மலர்கள் :- அல்லி, குமுதம், தாமரை, தாழை, மல்லிகை, முல்லை ஆகிய மலர்கள் கூறப்பெறுகின்றன. அழகிய முல்லை மலர்களைக் கண்ட பின்னர் யாராவது அல்லிப் பூவை அணிவார்களோ? (28) என்று தலைவி கேட்கிறாள். பூவுலகில் இரவில் வானத்தைக் கண்டு கமலம் மலர்கிறது (28). அதேபோலத் திங்களைக் கண்டு அல்லியும் கதிரவனைக் கண்டு தாமரையும் மின்னலைக் கண்டு தாழையும் மலர்கின்றன (46). காலைப்பொழுதில் கதிரவன் தோன்றியதும் தஞ்சை அரண்மனை நந்தவனத்திலுள்ள அரவிந்த மலர்களின் நறுமணம் நன்றாக வீசுகிறது (59). தலைவியின் முகம் பொற்றாமரை (12) போன்றும், கண்கள் தாமரை மலர் (41) போன்றும் விளங்கு கின்றன. தலையில் நறுமணம் கமழும் மல்லிகையைத் தலைவி சூடி யிருக்கிறாள் (32).

குறிப்பிட்ட மலர்களைத் தவிரப் பொதுப்படையாக மலர், மாலை, பூச் செண்டு போன்ற மலரோடு தொடர்புடைய பொருள்களும் கூறப்பெறுகின்றன. 'மணமும் மலரும் போல அவன் வலியவந்து உன்னைக் கூடினால் அதுவே சிறப்பு' (1) என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள். பூக்கள் நிரம்பிய கட்டிலில் இருவரும் சேர்ந்திருப்போம் (16,50) என்று தலைவி கூறுகிறாள். ஒரு பெண் பூமாலை அணியவும் மறந்து விடுகிறாள் (8). பெண்ணின் முலைகளுக்குப் பூச்செண்டை ஒப்பிட்டுக் கூறுவதையும் காணமுடிகின்றது (33,51).

பழங்கள் :- பெண்ணின் இதழ் கனிக்கு ஒப்பிடப்பெறுகிறது (3). 'பழம் போன்ற வாய் உதடு' (33) என்றும் கூறப்பெறுகிறது. தேவேந்திரன் அருந்திய/கபித்தம் போலக் காமவேதனையால் தலைவி ஒருத்தி மெலிகிறாள் (21). இங்குக் கபித்தம் என்பது 'விளா'வாகும். தேவேந்திரன் அருந்திய கபித்தம் என்று பாடலில் காணப்படுகிறது. இது என்ன என்பது ஆய்வுக்குரியது.

---

15. **வாசுதேவகவியின் பாடல்கள்**, 15, 18, 19, 22, 25, 58, 88, 89, 92.

நிலவு :- திங்கள், சந்திரன், சோமன், மதி, இந்து என்றழைக்கப் பெறுகிறது. சகசி மன்னன் முகம் சந்திரனைப் போல இருப்பதாகத் தலைவி குறிப்பிடுகிறாள் (33,46). அதேபோன்று தலைவி ஒருத்தியின் முகமும் சந்திரனைப் போன்றிருக்கிறது (1). எப்பொழுதும் பெண்களைத் துன்புறுத்து வதில் காமனுக்கும் சந்திரனுக்கும் தீராப் பகை இருந்து வருகிறது(5). கன்னிப் பெண்ணுக்கு உற்ற தோழியாக விளங்கும் நிலவு இரவுப்பொழுதில் அவளுக்குக் குளிர்ச்சியைத் தராமல் வெப்பத்தையே கொடுக்கிறது.[16] மாலை வேளையில் சந்திரன் தோன்றும்பொழுது இனிய மொழிகள் பேசிக் காதல் விளையாட்டுக் களைக் களிப்புடன் விளையாடுவோம் (87பி) என்று தலைவி கூறுகிறாள். பெண்ணை இந்துமுகி! (30) என்றழைப்பதுமுண்டு. சந்திரனைக் கண்ட காந்தக்கல் தானே உருகும், ஆனால் சந்திரச் சோதியைக் கண்டு உருகுமோ? (28) என்று தலைவி வினவுகிறாள்.

பொழுது :- அந்தி நேரம், அல், அள்ளிருள், இரவு, நடுப்பகல், நாழிகை என்று பொழுது கூறப்பெறுகிறது.[17] மாலை நேரமும், இரவு நேரமும் பருவமடைந்த கன்னிப் பெண்களுக்குப் பெரிதும் துன்பத்தைத் தருகின்றன. மாலை நேரத்திலேயே தலைவனை அழைத்துத் தன்னைத் தழுவச் சொல்கிறாள் ஒரு தலைவி.

பிற பொருள்கள் :- அருவி, சுனை, தென்றல் காற்று, மந்த மாருதம், சூரியன், சோலை, நெருப்பு, பூமி, மாலை, மழை, மின்னல் ஆகிய இயற்கைப் பொருள்கள் கூறப்பெறுகின்றன.[18] அழகிய சோலைகளில் பறவை இனங்களின் சப்தம் காலை நேரத்தில் ஒலிக்கின்றது (59). வாசுதேவன் செந்தமிழ் படிக்கின்ற தலைவிக்கு அவள் செவ்வாய் இதழிலிருந்து தேனருவி ஊறுகிறதாம் (28). தென்றல் காற்றுக்கூடத் தலைவிக்குத் துன்பத்தைத் தருகிறது (15). நறுமணம் வீசுகின்ற மலர்களும், உடம்பில் பூசியுள்ள பிற நறுமணப் பொருள்களும் வடவைத் தீ போல் சுடுகிறது (25). கரும்பு, சந்தனம், தேன், நெல், பயிர், வேம்பு ஆகிய விளைபொருள்களும் கூறப்படுகின்றன.[19]

ஏனையன

மகளிர் நிலை :- கன்னி, கோதை, சகி, தத்தை, தையல், பாங்கி, பாவை, பெண், மடந்தை, மாது, வஞ்சி, வனிதை எனப் பெண்கள் அழைக்கப் பெறுகின்றனர். வேசி, பரத்தை, பொது மாதர் என்று பொது மகளிர் கூறப் பெறுகின்றனர்.

---

16. *வாசுதேவகவியின் பாடல்கள்*, 22, 37, 49.
17. மேலது, 10, 21, 28, 59, 90.
18. மேலது, 28, 89, 15, 40, 15, 59, 37, 3, 39, 42, 46.
19. மேலது, 43, 15, 16, 24, 28, 38, 87 பி, 46, 24.

தலைவியின் கூற்றில் பாக்கள் பாடப்பட்டிருந்தாலும் இத்தலைவி ஒருத்தி மட்டும் அல்ல. மேலும் இப்பாக்கள் அக்காலச் சமுதாயத்திலிருந்த பொது மகளிர் எனப்படும் தாசிப் பெண்களைப்பற்றிய நிலையைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளன.

சகசி மன்னனைப் பல பெண்கள் விரும்பியதையும் அக்காலத் தாசிப் பெண்கள் தங்களை எப்படி அழகுபடுத்தி மன்னனை மயக்கினர் என்பதையும் இப்பாக்களில் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

பல பெண்கள் ஆசை கொண்ட சகசி (9) மன்னனுடன் சேரத் துடிக்கின்ற பெண்களுக்குத் தன்மானம் கூடாது. காசு பணம் என்று எண்ணிப் பாராமல் அவ்னுடன் கலந்தவர்கள் அனேகம் பேர். காதல் கொண்டு அவனைத் தேடுகின்றவர்களும் அனேகம் பேர். இவ்வுலகில் பெண்ணாகப் பிறந்தவர்கள் அவனுடன் கூடுவதே அவர்களுக்கு யோகம் (13). அவனுடன் சேர்ந்திருப்பது முன்னர்ச் செய்த தவப்பலன்தான் (15). காம மயக்கம் அதிக மானாலும் அவற்றை அடக்கிக் கொள், அவனாகவே உன்னைத் தேடி வந்து முன்போலத் தழுவி முத்தாடுவான் (23). அப்பொழுது அவனைத் தழுவி அவனிடம் பதக்கம் கேள் (20). இரண்டு பட்டு இரவிக்கைகள், கட்டுவதற்கு இரண்டு சேலைகள் (34), மாணிக்க மோதிரம் (36), ஒருநூறு பொன், முத்துமாலை (2) போன்ற பலவற்றை அவனிடம் இப்பெண்கள் கேட்கின்றனர்.

பெண்கள் தங்களை அழகுபடுத்தியதையும் ஆசிரியர் குறிப்பிட்டிருக் கின்றார். தங்கள் விழிகளுக்கு மை பூசுவர் (24). கூந்தலில் நறுமணம் கமழும் மலர்களைச் சூடுவர் (25). உடம்பிலும் பாரத்தைத் தாங்கும் முலைகள் மீதும் வாசனைப் பொருள்களான குங்குமம், சந்தனம் போன்ற பொருள்களைப் பூசுவர்.[20]

பரத்தையர் பிற ஆடவருடன் சேர்ந்திருக்கும்போது செய்கின்ற காதல் விளையாட்டுக்களில் முலையினில் நகக்குறிகள் பதிப்பதும், இரேகை வைப்பதும், முகத்தோடு முகம் இணைத்து ஆடையை நெகிழ்த்து அணைப்பதும், பூக்கள் நிரம்பிய கட்டிலில் மன்மதனும் இரதியும் போல இருவரும் கலந்துறவாடி உயிரிரண்டும் ஒருயிராகி விளையாடுவதும், முத்தம் தருவதும், இதழ்களில் பற்குறி பதிப்பதும் போன்றவற்றை இப்பாக்களின் தலைவன்மீது ஏற்றிப் பாடியிருக்கின்றார் ஆசிரியர்.[21]

பொது மகளிர் எவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்பதை,

20. **வாசுதேவகவியின் பாடல்கள்**, 8, 11, 15, 25.

21. மேலது, 17, 18, 16, 7, 55.

" மஞ்சள் வாடையினால் அங்கம் மினுக்குவள்
மாரில் தனம் காண்பித்து உடனே மறைப்பள்
தஞ்சம் நீ என்மீதில்தயவு பாரென்பள்
சாமி நான் ஏழை என்பள்
கொஞ்சமல்ல உன்மேல் எனக்கு மாலென்பள்
கோபால சக்கரம் பொன் கையில் காணவிட்டால்
வஞ்சித்தே னென்று பொன்னா வாருமென்று
வழிவிட்டு அகத்திருப்பள்

ராகம் படிப்பள் மயங்கிமேல் விழுவள்
ராமராம இனியார் பிரிவர் என்பள்
யோகசாலி நானே உனக்கு
என் இளமை ஒப்பித்தேன் என்பள்
மோக மாயையைச் செய்வள்
கையில் உண்டானது முச்கூட்டு ஆச்சு துயில்லை
ஏன் அறிந்தால் ஆகாது உன்நேசம்
உன்னால் பலனேது என்பள்
அப்பாலே ஆள் விடுவள்" (26, 27)

என்றுரைத்திருக்கிறாள்.

பெண்ணினுடைய குலம், கோத்திரம், ஊர், பருவம் போன்றவற்றைக் கூறி இப்பெண் காதல் செய்வதற்கும், காம விளையாட்டுக்களுக்கும் ஏற்றவளாகி விட்டாள் என்று தலைவனிடம் தோழி கூறுவதாகச் சில பாக்கள் அமைந்திருக்கின்றன.

"மங்கைப் பருவ வயதுடையவள். வயதோ பன்னிரண்டு, அரிவையாள், வயதிற்கு வந்து ஐந்தாறு மாதமுண்டு. குளிர்ந்த மலர் போல உடம்பு; இசையில் நல்லறிவு உண்டு; சாத்திரத்தில் பயிற்சியுண்டு; வண்ண மயில் போல வயிறு; வசதி படைத்தவள்; எப்பொழுதும் உன்னையே ஆசைப்பட்டு நினைத்துக் கொண்டிருக்கிறாள்" (33).

"இவள் உடம்பு பத்துமாத்துத் தங்கம், இவள் உதித்த பூமி ஸ்ரீரங்கம், இப்பெண் மயில் முலை நாகரங்கம், உனக்கேற்றவள்; இவள் கண்கள் தாமரை மலர் போன்றன. இப் பெண்ணின் இடை நூல் போன்றது. இசையில் விருது பெற்றவள், இளமங்கைப் பருவமுடைய இவள், மேனகை கோத்திரம்; புன்சிரிப்பில் முத்துப் போன்ற அழகி. முன்பே உனக்கேற்றபடி நடந்தவள், கத்தூரி குங்குமதாரியவள், கர்னாடக நாட்டில் சுற்றித் திரிந்தவள்" (41).

"அபரஞ்சி என்றொரு பெண்மிது உனக்கு விருப்பமாம். திருவாரூர்க் கீழத் தெருவில் அவள் வீடு உள்ளது. இளமங்கைப் பருவமுடைய அவள்

முலைகள் இரண்டும் மேரு மலை போல் உள்ளன. ஆயிரம் பொன்னுக்குக் குறையாமல் அவள் கேட்டாளாம். அதில் அரைக்காசு பணம்கூட அதிகமாக்க மாட்டாளாம். சாயப்புடவை தவிர வேறு புடவை கட்டமாட்டாளாம். அவளாகவே உனக்குத் தூது விட்டாளாம்" (42).

"இவள் பிறந்த நாடு தென்காஞ்சி, இவள் குந்த கோசம். இப்பொழுது கொங்கணேசுவரன் தெருவில் வசிக்கிறாள். இவள் கும்பம் இவள் முலைக்கு ஈடு. இவள் அணிந்திருக்கும் தோடு புடமிட்ட பொன்னாலானது. உனக்கேற்ற பெண்ணாவாள்" (47).

ஆடை ஆபரணங்கள் :– கட்டுவர்கச் சேலை, சரிகைச் சேலை, சாயப் புடவை ஆகிய சேலை வகைகளையும், பட்டு, இரவிக்கைகளையும் மகளிர் அணிந்துள்ளனர்.[22]

மகளிர் கால்களில் தண்டையும், காதுகளில் தோடும் அணிந்துள்ளனர். மேலும் தந்தத்தால் செய்யப்பட்ட நகைகளையும், மணிமாலை, கைவிரல்களில் சாதாரண மோதிரங்களையும் மாணிக்க மோதிரங்களையும், முத்தினால் செய்யப்பட்ட நகைகள், மாலைகளையும், பதக்கங்களையும் அணிந்துள்ளனர்.[23]

உடலுறுப்புக்கள் :– ஆணும் பெண்ணும் சேர்ந்து காதல் விளையாட்டுக்களில் ஈடுபடும்பொழுது இருவர் உடலுறுப்புக்களையும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அவற்றுள் பெண்ணின் உடலுறுப்புக்களையே அதிகமாகக் கூறியிருக்கின்றார். இடை, இதழ், கை, தாள், மார்பு, முலை, மேனி, வாய் ஆகிய உறுப்புக்கள் இடம்பெற்றுள்ளன. பல பாக்களில் இவ்வாறு கூறப்பெற்றிருக்கின்றன.

நாடும் ஊரும் தெருவும் :– தஞ்சையில் இப்புலவர் வாழ்ந்த காரணத்தால் சோழ நாட்டை (54)க் குறிப்பிடுகின்றார். தஞ்சை, அளகை, தென்னளகை என்று தஞ்சை அழைக்கப்பெறுகிறது.[24] மேலும் செஞ்சி, டில்லி திருவாரூர், தென் காஞ்சி, பட்டுக்கோட்டை ஆகிய ஊர்களும் கூறப் பெறுகின்றன.[25]

இப்பெண் கீழத் தெருவில் இருக்கிறாள் (42) என்று தெருப்பெயர் குறிக்கப்பெறுகிறது. கொல்லர்கள் இருக்கின்ற தெரு 'கொல்லவாடி' (35) என அழைக்கப்பெறுகிறது.

---

22. **வாசுதேவகவியின் பாடல்கள்**, 17, 34, 42, 58, 87 பி, 90.
23. மேலது, 2, 3, 6, 7, 11, 15, 20, 23, 36, 40, 41, 46, 47, 87 பி.
24. மேலது, 5, 6, 10, 12, 13, 14, 18, 26, 27, 54, 88.
25. மேலது, 37, 53, 42, 47, 34. தென் காஞ்சி என்பது திருநெல்வேலியாகும்.

எண்கள் :- நாளோடும், பணத்தோடும் வேறு பலவற்றோடும் இணைத்து எண்கள் கூறப்பெறுகின்றன. அஞ்சாறு மாதம், அரைக்காசு, ஆயிரம்பொன், எட்டு நாளையில், கோடி புண்ணியம், நூறு தரம், பஞ்சணை, பத்து, பதினொன்று, பனிரெண்டு, ரெண்டு போன்ற எண்கள் இடம் பெற்றிருக்கின்றன.[26]

கோயிலும் திசையும் :- மன்னன் வாழும் அரண்மனை கோயிலாகக் கூறப்பெறுகிறது (8). உழக்கில் கிழக்கு மேற்குத் திசை பார்ப்பதுண்டா? என்று தலைவி கேட்கிறாள் (44).

பொருள்கள் :- உழக்கு, ஊசி, எள்ளு, கத்தி, கல்கண்டு, குங்குமம், கொட்டைப்பாக்கு, கோபால சக்கரம், சட்டி, சொம்பு, மஞ்சள், வாளி, வாள், வில், வேல் போன்ற பல பொருள்கள் இப்பாக்களில் பல்வேறிடங்களில் பலரால் கூறப்பட்டிருக்கின்றன.

பழமொழிகள் :- அக்காலத்தில் மக்கள் வாழ்க்கையில் பயன்படுத்தப் பட்ட பழமொழிகள் பலவற்றில் ஆறு பழமொழிகளை ஆசிரியர் ஏற்ற இடங்களில் எடுத்தியம்பியிருக்கின்றார்.

பழிச்சொல் சொல்கின்றவர்கள் தயங்காமல் ஏதாவது சொல்லிக் கொண்டேதான் இருப்பார்கள். 'அடிக்கும் காத்துக்கெல்லாம்தான் படல் கட்டக் கூடுமோ?' (92) எனக் கேட்கிறார்.

தன்னைத் தேடி வந்த சகசி மன்னனிடம் ஒருபெண் பின்வருமாறு கேட்கிறாள். "இத்தேசத்திற்கு அரசனான நீரே காசும் தராமல் என்னை அழைத்தால் வேசியான நான் எப்படிப் பிழைக்க முடியும்? நாள்தோறும் கூசாமல் இங்கு வருகிறீர். அரசனாகிய நீர் ஏதாவது கவசமாவது தாரும். தந்த பிறகு அன்புடன் என்னை முன்போலவே சேரும். ஊர்க்குருவி எவ்வளவுதான் உயரே பறந்தாலும் பருந்தாகி விடாது. கொல்லன் இருக்கின்ற தெருவில் ஊசி விற்கப் போகலாமா? நன்னாச்சுப் பழங்காடிக்குப் பொய்த்தயிர் கொள்கின்ற காலமல்ல. சீனிக் கப்பல் கொடியோடி முடியாவிட்டால் கொட்டை நூற்று விடியுமோ?" (35) என்ற இப்பெண்ணின் கூற்றில் நான்கு பழமொழி களைக் கூறியிருக்கின்றார்.

மற்றொரு பெண் "பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப் பாக்குக்கு விலை சொல்லித் திட்டுகிறீர்" என்று மன்னனிடம் கூறுகிறாள் (34).

26. **வாசுதேவகவியின் பாடல்கள்**, 33, 42, 34, 90, 4, 3, 8, 46, 34.

பள்ளியெழுச்சி :- மன்னனைத் துயிலெழுப்பிப் பாடும் பள்ளியெழுச்சிப் பாடலொன்றும் (59) இடம்பெற்றிருக்கிறது.

"சுப்ரபாதம்! சுப்ரபாதம்! சகசி மன்னனே! சுப்ரபாதம் கவிபோசனே! சுப்ரபாதம் போசலேசனே! சுப்ரபாதம் சாமி!

கிழக்குத் திக்கில் சூரிய ஒளிக்கதிர்கள் பரவிவிட்டன. விந்தை மிக்க அரவிந்த மலர்களின் நறுமணம் இப்பொழுது வீசத் தொடங்கி விட்டன.

அழகிய சோலைகளிலெல்லாம் பறவை இனங்களின் சப்தம் முழங்கு கின்றன. சாமி! அழகிய கண்களை உடையவனே!

அடர்த்தியான இருள் மெதுவாக நீங்குகிறது. அந்தணர் ஓதுகின்ற வேதவொலி கேட்கிறது. சோலையிலுள்ள குமுதமலர்களிலுள்ள தேனை நாடிச் செல்கின்ற வண்டுகளின் ஒலி கேட்கிறது. தெள்ளுதமிழ்க் கவிவாணர், வேதியர், பிறநாட்டு வேந்தர், மந்திரி போன்றோர் கூட்டம் எள் விழ இடமில்லாத அளவில் உன் அரண்மனையில் உனக்காகக் காத்திருக்கின்றனர். இவர்கட்கெல்லாம் அருள் செய்ய எழுந்திரிப்பீர்!

பாடகர்கள் பண்ணுடனே பூபாளம், தேவகாந்தாரி பாடுகின்றனர், அதனோடு வாசுதேவகவியின் பதங்களையும் பாடுகின்றனர். பகைவர் போற்றும் சகசி மன்னனே! நாளும் மங்களம் தேவரீருக்கு உண்டாகட்டும். நல்வேளை இது! நல்ல நாளும் இது!"

தமிழ் வள்ளுவர் :- தோழி தலைவனிடம் கூறுகின்ற கூற்றில், மை பூசிய விழிகளை உடைய மகளிர் மனத்தை அறியாமல் அவர்களுடன் செய்கின்ற உறவு புணர்ச்சி ஆகாது என்று கூறும்பொழுது.

"மையாரும் விழியார்தன்
மனதரியாத யோகம்
சையோகமல்ல வென்று
தமிழ் வள்ளுவர் சொல்லினர்" (24)

என்கிறார்.

ஏனையோர் :- சகசி மன்னன் கொடைத் தன்மைக்குக் கர்ணனையும்,[27] போர்த் திறமைக்கு அர்ச்சுனனையும்,[28] வாள் வீசுவதற்கும் பகைவர்களுக்கும் பீமனையும் (54,58) ஒப்புமைப்படுத்திக் கூறியிருக்கின்றார்.

27. வாசுதேவகவியின் பாடல்கள், 2, 12, 22, 29.
28. மேலது, 54.

தவிரப் பாடகர், மேளக்காரன், மாவுத்தன் முதலான பலரைப் பற்றியும் பாக்களில் போற்றியிருக்கின்றார்.[29]

சொற்கள் :

இப்பாக்களில் பலவகைச் சொற்களை ஆசிரியர் கையாண்டிருக்கின்றார்.[30] அவை பின்வருமாறு :-

பேச்சுவழக்குச் சொற்கள் :- அக்கால மக்களின் பேச்சுவழக்குச் சொற்களைத் தாம் பாடிய பாக்களில் அப்படியே எடுத்தாண்டிருக்கிறார். அடி, அய்யோ, ஆகுது, ஆச்சு, இல்லையோடி, இன்னைக்கு, ஏச்சு, கிட்ட, தேடுது, நில்லடி, பயல், முந்தி, யாரடி, வாடி, வீசுது, வேணும் முதலான 130 சொற்கள் இப்பாக்களில் இடம்பெற்றுள்ளன.

வடமொழிச் சொற்கள் :- அங்குலி, இஷ்டதேவதை, விருக்ஷம், லக்ஷம், சாஸ்த்ரம், ஸங்கீதம், சிஷ்டன், சேஷன், தேசாக்ஷி, பக்ஷம், புருஷன், மோஹனம், ராஜஸம், ஜன்மம், ஜீனி, ஸரஸம், ஹ்ருதயம் முதலான 150 வடமொழிச் சொற்களை எடுத்தாண்டுள்ளார். இச்சொற்களை ஆசிரியர் இரு விதமாகக் கையாண்டிருக்கிறார். வடசொற்களை அப்படியே எழுத்து மாறாமல் கையாண்டிருப்பது ஒருமுறையாகும். மற்றொன்று அச்சொற்களைத் தமிழ் எழுத்தில் பயன்படுத்தியிருப்பதாகும். ஜெகம் என்பதைச் செகம் என்றும், விஸ்வாசம் என்பதை விசுவாசம் என்றும் வருவதைச் சான்றாகக் கூறலாம்.

அடுக்குமொழிச் சொற்கள் :- அடிக்கடி, ஆம்ஆம், சுற்றிச்சுற்றி, தினம்தினம், படபடப்பு, ராமராம போன்ற 20 அடுக்குமொழிச் சொற்களையும் கையாண்டிருக்கிறார்.

எதிர்ச் சொற்கள் :- அறிந்தறியாமல், இன்னைக்குன் னாளைக்கு, உண்டிலை, பகலிது இரவிது, முன்பின் ஆகிய ஐந்து எதிர்ச்சொற்கள் இடம் பெற்றிருக்கின்றன.

சிதைவுச் சொற்கள் :- அறியாத என்பதை அரியாத என்றும், ஆவலாதி என்பதை அவலாதி என்றும், கற்ற என்பதைக் கத்த என்றும் சில சொற்கள் சிதைந்து காணப்பெறுகின்றன. 67 சொற்கள் இம்மாதிரிச் சிதைந்து பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. ஒருவேளை அக்காலப் பேச்சுவழக்கில் இம்மாதிரிப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். அல்லது ஏடு பெயர்த்தெழுதுவார் செய்த பிழையாகவும் இருக்கலாம். இது ஆய்வுக்குரியது.

---

29. **வாசுதேவகவியின் பாடல்கள்**, 1, 8, 9, 12, 13, 14, 29, 30, 41, 46, 54, 59, 87, 88.
30. இச்சொற்கள் அனைத்தும் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

வாசுதேவகவியின் கீர்த்தனங்கள்

இதே சுவடியிலேயே இவர் பாடியனவாக 11 பாடல்கள் 'கீர்த்தனங்கள்' என்று தலைப்பிடப்பட்டுக் காணப்பெறுகின்றன. இவற்றிலும் 2,3,4 ஆகிய மூன்று கீர்த்தனங்கள் காணப்பெறவில்லை. எஞ்சிய பாக்கள் ஏற்கெனவே உள்ள பதப்பாக்கள் அப்படியே 'கீர்த்தனங்கள்' எனத் தலைப்பிடப்பட்டு இருக்கின்றன. இதற்குரிய காரணம் தெரியவில்லை.

வாசுதேவ கவியின் பாடல்கள்

ஆசிரியர்	:	வாசுதேவகவி
காலம்	:	கி.பி. 1684–1712
சுவடி இருக்குமிடம்	:	சரசுவதி மகால் நூலகம் தஞ்சாவூர்
சுவடி எண்	:	813 / 11649

மூலம்

சிவா 1

மோடி உனக்கென்னடி வாடாமதி
முகமானே கேள்

மோடி உனக்கென்னடி முத்து
மோகினி உன்னை நாடிவந்த சாகராஜனுடன்

பணமென்னடி பெண்ணே
பாஷாணம் அவனுட குணமே நமக்கொரு கோடியன்றோ

மணமும் மலரும் போலே வலிய வந்துனை அவன்
இணங்கினால் அதுமெத்த எண்ணிக்கை காண்

ஆடப்போன தீர்தம் அரியில் வந்தாப் போலே
தேடிய பொருள் கையில் சிக்கினாப் போலே

கொடித் துயிலரண்டு கொண்டேன் வளவில் வந்தால்
ஓடி அழைத்துவர வாடாமல்

இந்திரன்னென வரும் ஏகோஜி மகாராஜன்
மைந்தனான சாஹமகி பாலன்

அத்தமாக முன்போல் அணைந்தால் அதுவே போதும்
பயந்தோடி நீ செய்த பாக்கியம் காண்

சிவா 2

இங்கே வருவானேன் என்னை
அங்கே வரச்சொன்னால் வாரேனோ மெத்த
வங்கணமாயி வந்து மருவேனோ

இங்கே வருவானேன் ஏகோஜி இந்திரன் அருள்
சங்கீத லோல ஸ்ரீசாகேன்திரனே

மாரன் கேலிசெய்ய வருவீர் வருவீரென்று
வாறுஜாட்சி அங்கே வழிப்பார்க்க யாறுமறியாமல்
அர்த்தராத்திரி அந்தகாரமும் பாறாமல் காதலுடன்
இங்கே வருவானேன்

முடிப்பன்னூரு பொன்னும் முத்துமாலையும் கையில்
எடுத்துக்கொண்டு இங்கே என்னருகில்
அடிக்கடி நீர்வந்தால் அபசாரம் கில்லாக்கே
குடுத்தால் நானே வந்து கூடேனே

ஏகசத்திராதிப ஏகவீர நித்தியம் தியாககர்ண
போக தேவேந்திரனே
ஏகபோகமாக என்னைச் சேரும் வாரும்
வாகனே ஸ்ரீ சாக மகராஜனே

சிவா 3

மோக மறியாது போலே என்மேல் மோடியென் மானே
மோக மறியாது போல மோடியென் மானே

முன்பின் பிஞ்சுதய்யோ மய்யில் என்சேருவேன் பஞ்சணை
மீதினில் இணையாயி பஞ்சசரன் ரதிபோல் இதமாகவே
அஞ்சுகமே மனம் நினயாயி

உத்தர மொன்றை ஊரத்திடில் அதனால்
முத்துதிராதடி மொழிவாயி
சித்தமிரங்கி இதழ் கனியார
முதத்தினில் ஒருதுளி தருவாயி

செந்தமிழ் வாசுதேவன் கவியே சொலும்
உந்தனை நாடுதேன் மனமே
முந்தி அணைந்ததுபோல் அணை
சஹஜி வசுந்தரை அதிபதி னானே

சிவா 4

கூம்பிட்டே னென்று நீசொல்
லேன் சாமியை நான்

சொம்புடனி என்னைச் சேர்ந்த
சுவாமி சாகேந்திரனை நான்

அன்னமே பெண்ணாம் புத்தியால் அறிந்தறியாமலே நான்
என்னகுறை செய்தாலும் யேழை நான்இருகையாலும்
கும்பிட்டே னென்று நீ சொல்

மெடியாயி அவருக்கென்மேல் விசுவாச மிருந்தால் போதும்
சாஷ்டாங்கமாய் வணங்கி தையலேனான் நூறுதரமாயி

செந்தமிழ் நிபுணனான ஸ்ரீ வாசுதேவ கவிமேல்
சந்ததம் கருணை செய்யும் சாகபூபாலனை நான்

சிவா 5

மிஞ்சுதென் மோகம் உன்மேல் மிஞ்சுதென் மோகம்
தஞ்சைவாழ் சாகதீர சரசகுண கம்பீர

என்தன் மனதுபோலே உன்தன் மனதுமானால்
சிந்தை மனோரதங்கள் வந்து கைகூடும் ஸ்வாமி

சந்தோஷமாய் உன்இதழ் தந்துமேவுமென்று நான்
எந்தவிதம் சொன்னாலும் இந்த தாமமேது

காமன் கணைக்கும் இறைசோமன் தனக்கும்பகை
ராமராம பெண்ஜன்ம மாமோ எவர்க்கானாலும் சாமி

உன்தன் மீதினிலே மோகமாகியே ஊரோமலான
என்னுடன் நீமோடி செய்ய லாமோ

அருமை அறிந்தநீ என்து ஒருமையுடன் இளமை
பருவந்தன்னில் ஒருநாள் மருவி பிரியப் போமோ

அருள் வாசுதேவன் மீதில்கருணை புரக்கும்போஜ
திருமேவும் அளகையில் வருசாக மகாராஜ

சிவா 6

யாரடி மோகரதி இவள் அடியடி பிடிஇடை
நொடியினில் லொடியு மென்றடியினில் மடவார்

படியவே வருமிவள் கொங்கைகள் குலுங்க மங்கையர்கள்
கைலாகேந்த சிங்காரமதா கவருமிவள் (யாரடி)

தண்டை தாளிலிங்க கண்டிலா ஜோர் மெத்த
மய்யல் கொண்டு பின்சொல்ல வரும் இவள்

செஞ்சொல் வாசுதேவன் தஞ்சைவாழ் சாகேந்திரன் மீதில
கொஞ்சிய கவிபாடி வரும் இவள்

சிவா 7

பேராசை ஒருமின்னாள் பேசிவரச் சொன்னாள்
தாராளும் சாகேந்திரசாமி உன்னுடனே

உன்தனருகினில் காத்து உபசாரமிக உறைத்து
சந்தோஷ வேளை பார்த்து தனதேரில கொடுத்து

தயவுள்ள நியெண்டு சாரி வரவேதீர் நிண்டு
மயல்மிகவும் மிஞ்சிஎண்டு மயங்குராள் லெண்டு

காமினி ஜனமன்மத கவிவாசுதேவ முனுதசாமி
மனுநிகர் நீத சகஜி பூ நாதா

ஆசைகொண்டாள் உன்மேல்
ஆசை கொள்ளவே வேணும்
காசினி புகழும் சகராஜனே சோழேசனே

நேசமாய் உன்கேளி விலாசம் அறிந்தால்
மதனராசன் மீதிலும் ஆசை லேசம் வாராது காண்

மெத்தைமேல் எந்தனை அனைத்து முத்தாடியே நீ
முத்தம் தந்தசுகம் நித்தியம் தேடுது காண்

ஸ்ரீவாசுதேவன் மீதிலே வாஞ்சை செய்யும் போக
தேவேந்திர சாகராஜ பாவாணர் தாருவே

சிவா 8

காதல் மிகவானாள் இந்த காரிகை ஸ்வாமி
வேதியர் பறவும் சோழநாத சாகேந்திரா உன்மீதில்

முன்னொருநாள் நின்பவன மன்னனார்க் கோவில்
கண்டு சென்னதம் கொண்டவள் போலே

தன்னையுந்தான் அறியாமல்
பாரமுலை மேல் சுகந்தம் ஆரமும்தான் அணியாமல்
மாரவெறி கொண்டேன் நேரம் ஆரையும் கண்ணால் பாராமல்

கொஞ்சி ஒருவருக்கொருவர் மிஞ்சியே லீலை தொடுத்து
பஞ்சபாணன் ரதிபோலே பஞ்சணைமேல் உன்னைக்கூட

ஆசை கொண்டேன் யெந்த மின்ன நேசமாயிமருவ வேணும்
வாசுதேவன் புகழும் ராஜராஜ வைபவ சாகேந்திர

சிவா 9

மையல் கொண்டாலும் இப்படி மனதை மிஞ்சலா மோடி
தைய்யலார் போகனம் தஞ்சை சகஜி ராஜனை நாடி

மத்தகஜமும் மாவுத்தன் வார்த்தைக் கடங்குதல் போல்
தத்தயே மோகம் மெத்தவானாலும் சித்தந்தன்னில்
நிறுத்தவேணும்

தோகையே கேளடி சொல்ல சுகவிரோதி நானல்ல
ஏகபோகானுராக மாகிலும் லோகமறிய லாகுமோடி
வாசுதேவன் கவியிலே மகிழ் சாகேந்திரன்மீதிலே
ஆசைகொண்டாலும்
பூசல் மதர்கள் ஏசுவரென்று ரோசம் வேணும்

சிவா **10**

இப்படி சொன்னால் கூடாதென்
றெப்படி சொல்வேன்
அற்புத மன்மத ரூபன்
அளகைவாழ் சாகபூபன்
அனுதினம் என்னருகில்
அந்திநேரம் வந்துவந்து
உனதுசித்தம் என்பாக்கியம்
உன்மேல் ஆசைமிஞ்சுதென்று இப்படி
வஞ்சியே கேள் இக்கணமே
மனதிரங்கா திருந்தால்
பஞ்சபாணன் என்னை செய்யும்
பழிஉன்மேல் சுமக்கு மென்றிப்படி
கருணையால் வாசுதேவன்
கவியுகந்த சாகேந்திரன்
இருகையாலும் சலாம் செய்து
என்னை முன்போல் மருவுமென்றிப்படி

சிவா **11**

வாடி வாய் முத்தம் தாடி
என்மீதில் மோடி இத்தனை ஏனடி
தோடி முகாரி யள்பாடி வினோதமாய்
கூடி முன்போல் விளையாடி முத்தாடவே
பந்து நிகர்த்த தனன்தனில்அந்த
சுகந்தமணிந்து மகிழ்ந்து கலந்தணை
இந்த வசந்த தினந்தனில் அந்தமதந்
தனுசிந்தலர் வத்திட நொந்தனன்

கைக்குள் நெருக்கி வருக்கை செருக்கரை
    மிக்க முருக்கிதழி இக்கணமேதர
உத்தது விரத்தலர் மெத்தயில் வைத்தொரு
    முத்துநகைத் தெனை நித்தம் அணைத்திட
வாசுதேவன் சொல்லும்
    ஆசுவினால் மகிழ்போசலவர
சாகராஜன் நானடி மின்னே.

சிவா **12**

இன்நேரமே அழைத்தோடி வாடி
    மின்னரசே நீ அழைத்தோடி வாடி
என்மயல்சொல்லி அழைத்தோடி வாடி
திரைச்சொல் வாசகனான
    துரைச்சிங்கம் சாகேந்திரன்
வரச்சொன்னான் என்று நீ சொல்லி
இளவயதவள் திருவளர்இடம் அமுதூறில்
    வளவு பொத்தாமரை ஒரம் கன்னியே
அவள் கொங்கை தன்னில்ஓர் அடையாளம்
    என்னக் குறிகள் பட்டிருக்கும்
கன்னனா மளகையில்
    மன்னனென்று எந்தன்பேர்
சொன்னவுடனே ஓடி வருவள்
பைந்தொடி அவள் இதழ் அந்தம்
வாசுதேவன் செந்தமிழ்போல் சிறந்திருக்கும்

சிவா **13**

தருணி அவன்மீதில் மோடி
    சந்ததம் ஆமோடி
தெறிய சொன்னால் எந்தன் வார்த்தை
    தேனே கேளா யோடி
மருவலர் பணியும் சகஜமகிபன்
    உன்னை தேடி வந்ததேதோ
உன்தன் பாக்கியம் வன்மம் வேண்டாம் போடி
சொன்ன வார்த்தை உட்சாகந்தான்
    சொல்வாயி மவுனமேது
சுரதவிதங்களுக்கு ஏத்த
    பருவங்காண் இப்போது

அன்னமே இனியானாலும்
    அனுப்படி நீ தூது
ஆசைகொண்ட பெண்களுக்கெல்லாம்
    ரோசமே ஆகாது

காசுபணம் எண்ணாமலே
    கலந்தபேர் அனேகம்
காதல் கொண்டவனைத்
    தேடும் அன்னியர் அனேகம்

போஜனிவன் என்றவனை
    புகழும் இந்த லோகம்
பு(வி)யில் பெண் பிறந்தால்
    அவன் பொருந்துவதே யோகம்

அளகைஏக மகிபாலன்
    அருளன் குணசீலன்
அனுதினம் வாசுதேவன் மேல்
    அன்பாம் அனுகூலன்

வழமையாய் முன்என்னை சேந்த
    வரிசை மதனலீலன்
வந்ததே போதும் சகஜி
    மகிபாலன் வில்வேலன்

சிவா 14

அளகன் கோதி முடியும்மென்
    னணங்கே சொல்வதென்னடி
நளினமாது வளர் அளகை
    நாதன் சகஜிராஜனைநீ

துரை என்று அறியாயோடி
    துணிந்து சொன்னதெப்படி
முறை செய்த பணிவிடை புரிந்திட
    ஊழியப் பெண்கள் யில்லையோடி

வரிசையோ இதுவேது
    மரியாதை தப்பொண்ணாது
அரசர் மிகவும் ஒருமையாகிலும்
    அசட்டை செய்யலாகாது

போசல வம்ச தீபனை
    பூலோக தேவேந்திரனை

வாசுதேவன் கவிதையில் கிருபை
வைத்த சகஜிமன்னனை நீ

சிவா 15

சந்திரமுகி உன்தன் மனதிப்போ
சந்தோஷ மானதே போதும்
செந்தமிழ்க் கருள்மணி
சாகேந்திரன் உன்மேல் வைத்த
சினேகம் மறவான் காண் எப்போதும்

குங்குமமும் திவ்ய சந்தனமும் தறித்தால்
கொங்கை இனி கொப்பளியாதே
திங்களுடன் வீசுதென்றல் வாடையுமினி
செந்தழலை மொண்டிரை யாதே

உந்தரத்தில் பெண்கள் ஏசும்
வார்த்தைகளுக் கெல்லாம்
உத்தாரமினி சொல்லலாச்சே

அந்தமாம் உன்கைக்கு
வளையாகிய மோதிரம்
அங்குலியில் தரிக்கலாச்சே

எந்தன்முன் அனுதினம் நீ சொன்ன
பிரிய வாக்கியம் சபலமாய்க் கண்டாயே
இந்துரவிகள் பேதம் தோத்துகையால்
பகலிது இரவென்று நீ யறிவாயே

நல்தமிழ் வாசுதேவன் புகழ் சாகேந்திரன்
நாடி வந்துனை யணைத்தானே

தத்தையே கேள் ஆனாலும் அவனை சேருவது
முன்னாள் தவபரன் காணடி மானே

சிவா 16

வரச்சொன்னேன் என்று
சொல் போடி மின்னே
துரைசிங்கம் சாகேந்திர ஸ்வாமியை நான்

பூவணை மீதினில் காமனு மிரதியும்
போல் இருவரும் உரவாடி
ஆவிஇரண்டும் ஒரகமுமாயி விளையாட
இன்னேரமே ஓடி ஓவியமே

ரதிசுக பரவசத்தில் யான் உரைத்தது
மனத்தில் எண்ணாமல் காவிமலர்
கணைமார் நெய்யா முன்னம்
கால விளம்பம் பண்ணாமல்

தேனிலும் வாசுதேவன் மதுரம் பெரு
செந்தமிழிலே இனிக்குதென் தானை
வானவர்கோன் நிகர் சாகேந்திரனை
வணங்காம் குடறை வென்னானை

சிவா 17

தயவாய் என்தனைக் கையால் தழுவிய
தறிவான் ஜெயசீலன் சாகேந்திரன்
பின் செய்ததேதோ அறியேன்

குலவியே அவன் வந்தென்
கொங்கை தொட்டதறிவேன்
பலவித நகரேகை பதித்த மார்க மறியேன்

அந்தமா யிதழ் தாருமென்றனு சரித்ததறிவேன்
தந்தரேகை வைத்தது சத்தானாலும் அறியேன்

தெடரிய தமிழ் வாசுதேவன்
போத்தும் சாகேந்திரன்
ஆடை நெகிழ்த்தது அறிவேன்
அப்பால் என்னையான் அறியேன்

சிவா 18

ரதி சமயத்தில் இந்த ராஜசம் ஆமோடி
மதிவதனன் சாகஜி மகிபாலன் உன்னை சேர்ந்தால்

வரிசை தானங்கள் பாடி
வணங்கி பாதம் வருடி
வொருவருக் கொருவர் கொண்டாடி
ஒருமித்து விளையாடி

இன்றுகதினம் இருவருக்கும் மென்றுகூடி
நிமறுவாமல் துரைமகள்போல் இப்படி ஒ மானே

வலியக் கையால் அணைத்து
வண்மாயாயி மஞ்சமடுத்து
முலையில் சேர்த்து நெறித்து
முகத்தோடு முகமிணைத்து சருவி

மெள்ளவகை கொண்ட தரமளித்து
    நியாயித்துயில் நேகிழ்த்து
ரதிகள் தொடுத்து மேவாமல்
    ஏகராஜேந்திரன் தனுஜன்
இன்பமடவார் மனோஜன் பாகசாசன்
    சமாஜன் பாவலர் மகிழும் போஜன்
தினமும் வாசுதேவன் புகழும்
    சோழேசன் அளகைநகர் மேவும்
சாக மகராஜன் வந்தணைத்தால்

சிவா 19

தூதாய் யான் அனுப்பினமாது தானே அவன்மீதில்
    மோகமாயி மேவினாள்
சீதமதி வேணியர் பாதம்பணி சகஜிநாதன் மின்னே
    என்னுட காதல் சொல்லி வா வென்று
உள்ளத்தினில் இவள்தானே பிராணசகி என்றுநான்
    உண்மையாகவே நம்பினேன்
வளத்த கடாய் கையில் பாய்ந்தது போலவே
    வஞ்சனை செய்யும் அவள்நெஞ்சம் நான் அறியேன்
வேளை இதுவென்னவள் தாளில் பணிந்து மெத்த
    வேண்டியே அனுசரித்தேன் தொளில் இருந்து
மெள்ள செவியைக் கடித்தது போல் தோகை
    அவள்இப்படி துரோகம் செய்தவள் மானே
வாசுதேவன் கவிமேல் நேசன் புரக்கும் தஞ்சை
    வாசன் சகராஜன் முன்னே ஆசைக்கொண்ட
யென்சேதி பேசிவரச் சொல்லி நான்
    ஆதரித் தனுப்பினால் ஏதோதான் நினைந்தாள்

சிவாயனம 20

என்ன மாயமோகங் கொண்டாய்
    இளந்தையே நீ வீணே
மன்னர் வணங்கும் சகஜ
    மகராஜன் மீதிலே
வேலை நேத்திவகை கேள் என்றால்
    வேண்டி தந்தநகை கேட்கிறாய்
மாலைக்கு முத்துவேல் என்றால்
    வாய்முத்தம் நீ கேட்கிறாய் (1)

சொன்ன மணிமாலை கேள் என்றால்
தோளில் மாலை ஏன் கேட்கிறாய்
வன்ன வெளுத்துகளை கேள் என்றால்
மன்மதன் கலை கேட்கிறாய் (2)

தரையாளும் சகஜிராஜனைத்
தழுவி பதக்கம் கேளென்றால்
பரிவாய் வாசுதேவன் சொன்ன
பதகவியே கேள்கிறாய் (3)

சிவா 21

உனக்கு இப்போயான் சொல்லும் உபசாரமேது
அனகன் சாகராசனை அழைத்துவந்து கூட்டின

இரவும் நூரயுகமாகி
இருவிழி உரங்காமல்
கரிராஜன் அருந்திய
பித்தம் போலேயான்
விரக வேதனையாலே மெலியும்
வேளையில் எந்தன்
பருவம் அவம் போகாமல்
பக்ஷம் வைத்து ரக்ஷித்த

யேணாட்க்ஷி யள்ளவும்
இரக்க மில்லாமல்
பஞ்சபாணன் யெய்யும் கணைக்கு
பரிகாரம் எங்கும் காணாமல்
யான் மேலியும் காலையினில்
நீ செய்த
பிராண உபகாரத்துக்கு
பிரதி உபகாரம் உண்டோ

அந்த மாதுடன்கூடி அணைந்த சாகராஜனை
சந்ததம் வாசுதேவன் தமிழினால் துதித்து
எந்தவிதமோ பேசியிணக்கி இங்கே அழைத்து
வந்து என்தனுடனே மருவவே கிருபைசெய்த

சிவா 22

அடிக்கடி மோடி இதேனோ
ஆசையான என்தன் யோகமோ
மின்னாள் அவள் செய்கை தானோ

குடைக்குக் கர்ணன் சாகேந்திரன்
வாரானோ மால் தீரானோ

மருவி மரக்கப் போமோ மானே நீ அழைத்து
வாராமலே நாமதம் செய்யலாமோ
பருவ வயதென்ன ஆர்குத்திரமோ போனால் வருமோ

பாங்கிமதி தழல் பெய்ய
பிராணநாதன் இணைபிரியாத மடவார் பரிகசம் செய்ய
வாங்கிமதன் வில்லை வளைத்தானெ

மெய்ய யான் என் செய்ய

வரசாகேந்திரன் என் மேலே
வாசுதேவ கவிமீதினில் பக்ஷம் வைத்தது போலே
கருணை செய்து மருவானோ முன்போலே என்மீதிலே

சிவா 23

பதர வேண்டாம் சொன்னேன் பாங்கி நி கேளாய்
பதர வேண்டாம் சொன்னேன்

விதுமுகன் சாகேந்திரன் வேண்டித் தானே வருவன்

வாசமலரை நாடிவரும் அளிபோலே
வலிய உந்தனைத்தேடி வரத்து முன்னாலே

தரியா மோகமானாலும் தன்னை மிஞ்சாதே
தெரிய வேணும் வெலபூ ....ரத்துக் கஞ்சாதே

தமிழ் வாசுதேவன் புகழ் சாகேந்திரன்
தானே தழுவி முன்போல் முத்தாட வருவான்காண் தேனே

***சிவாயம. கணேசாயம* 24**

நேச மில்லாத பெண்மேல்
ஆசை கொள்வதே மோசம்

வீசுபுகழ் சகஜிராஜ போசல சந்திரசித்த
மிரண்டும் ஒருமித்தால் அல்லாமல் வகைமெத்தச்
செய்தாலும் அங்கே விரசம் தானே விளையும்

சித்திர பொம்மையுடனே சுருங்கார லீலை வீதம்
எத்தனை செய்தாலும்தான் ரக்தி காணுமோ சாமி

மையாரும் விழியார்தன்
மனதரியாத யோகம்

ஸையோகமல்ல வென்று
    தமிழ் வள்ளுவர் சொல்லினர்
ஒய்யாரமாகிய நல்லுருவ மிருந்தால் என்ன
    ஐயா பொன்னின் மலர் அணிந்த நியாயமாகும்

தேனும் வேம்பும் கலந்தால்
    தித்திப் பாகுமோ

முன்னாள் ஆனைக்கண்ட கதைபோல்
ஆனால் லன்னோ புணர்சி
மானிலம் எல்லாம் புகழ் வாசுதேவன் துதிக்கும்
நானா கல் பிரவீணா நாதசாக பூபால

24 என்செய்வேன் சாக ராஜேந்திரன்
இன்னமும் வரக் காணேன் யான்

ஏராளமான மின்னார்
    எனக்காகத் தூதுபோன்பேர்
யாரானாலும் அவர்க்கு என் ஆசை
    தெரியச் சொன்னால் வாராரோ
வந்துஎன் மோகம் தீராரோ
    என்மேல் தயவு பாராரோ கோடி மானே

வாசமுலாவும் புஷ்பவகை பொருந்தாது வாடை பூசினாலும்
வடவை போல் எண்ணி எந்தன் மேனி கூசுதே

என்னை என்மனம் ஏசுதே
    எவர்கும் நாவெளிமை பேசுதே
கௌடி மானே

வாடாமதி வதன வாசுதேவன் துதிக்கும் சேஷனான
சாகேந்திரன் சேரதே என்மனது வாடுமோ

அவனுடைய லீலை தேடுமோ
    தழுவி பிரியக் கூடுமோ
கேளடி மானே

26 பொது மாதர் ஆசை நிஜமென்று நம்பப்
    போகாது போகாது காண்

ததி அளந்துண்ட கண்ணன் நிகர்
    தஞ்சையில் சகுஜி மகராஜேந்திர

மஞ்சள் வாடையினால் அங்கம் மினுக்குவள்
மாரில் நனம் காண்பித்து உடனே மறைப்பள்

தஞ்சம் நீஎன்மீதில் தயவு பாரென்பள்
சாமி நான் ஏழை என்பள்
கொஞ்சமல்ல உன்மேல் எனக்கு மாலேன்பள்
கோபால சக்கரம் பொன் கையில் காண்விட்டால்
வஞ்சித்தே னென்று பொன்னா வாருமென்று
வழிவிட்டு அகத்திருப்பள்

27 ராகம் படிப்பள் மயங்கிமேல் விழுவள்
ராமராம இனியார் பிரிவர் என்பள்
யோகசாலி நானே உனக்கு
என் இளமை ஒப்பித்தேன் என்பள்
மோக மாயையை செய்வள்
மையில் உண்டானது முச்சூட்டு ஆச்சுதுயில்லை
ஏன் அறிந்தால் ஆகாது உன் நேசம்
உன்னால் பலனேது என்பள்
அப்பாலே ஆள் விடுவள்
தென்னளகை வரும் ஏகமகிபதி செய
துரை ராய சங்கராம விஜய சொன்ன மொழி
தவறாத ஹரிச்சந்திர சுருவமின்னார் மதனா
மின்னு புகழ் சேரும் வாசுதேவகவி
மீதில் கருணை புரக்கும் குணாகர!
தன் நிகரில்லாத கல்வியிற் ப்ரசண்ட
ஸஹஜ மஹா ராஜேந்திர

28 அகத்தில் புருஷ நெந்னால்
மனதுக் காகாது என் செய்வேன்
செகத்தி லுள்ளோர் புகழ் ஸாஹஜி மஹாராஜன்
சிங்கார லீலை ஒருநாள் கண்ட பின்பு
ஆனைப் போற் கண்டவர்
பூனைப் போர் பட்டார் யாரோ
அணிமுல்லைக் கண்டவர்
அல்லிப்பூ அணிவாரோ
தேனை அருந்திய நாவென்ன கசப்பைத் தேடுமோ
பூவுலகில் வானில் லிரவில் கண்டலருங் கமலம்
வஞ்சியே யிம்மினி கண்டா லலருமோ
தானே சந்திரனைக் கண்டுருகும் காந்தக்கல்
சந்திரச் சோதி கண்டுருகுமோ அப்படி

சிந்தை கனவிலும் அவனை நாடுது
செங்கை அவனைத் தழுவவே தேடுது
கந்துகக் கொங்கை அவனை நினைந்தாலும் கச்சிலடங்காது
செந்தமிழ் அவன்மேல் படித்தால் எனது
செவ்வாய் யிதழில் தேனறுவி யூறுது

எந்தனு திசைந்த நாதன வனல்லால் இந்துமுகி!
என்ன சொன்னாலுந் தானிந்த ......அக

29 அனுதினம் வாஸுதேவன் கவிதை யெந்தால்
ஆதரிக்கும் போசலான் வயசேகர!
கனக விபூஷணம் வாரணம் சிவிகை
கவிஞர்க்கருள் கர்ணன் தளபதி யெனவே
ஸாமந்த ராஜர்கள் சந்ததம் போற்றிய
ஸஹஜி மஹாராஜன் மனதொருமித்துக்
கலந்தென்னை யணைந்த மன்மத
லீலையை நினைந்து நினைந்து

30 சொன்ன தேதடி சொன்ன தேதடி அளகை மன்னன்
ஸஹஜி பூபாலன் என்னிடத்தில் மோடி செய்தானோ!

கூடாது போடி யென்ன வில்லங்கம் மிதென்னானோ
சித்த மிரங்கி யின்னமே வாறோ மென்றானோ பெண்ணரசே

அண்டையினில் யானளித்த செண்டு நீ
காணிக்கை வைக்கக்கண்டு சிரக்கம்பஞ் செய்தானோ

ராஜ ஸமாயிக் கொண்டு பராக்கமா யிருந்தானோ
வேறு காரிய முண்டென்று தாமதம் செய்தானோ
பெண்ணரசே!

எந்தன் விரக வேதனை
யிந்துமுகி நீ யுரைத்தால்
அந்தமாய் யங்கீகரித்தானோ

உனக்குத் தாரம் அந்தரங்கமா யுரைத்தானோ
இன்னைக்குன் னாளைக்குந்தி கொந்தப்டியள் சொன்னானோ

நித்தம் வாஸுதேவன் சொல்லும் முத்தமிழ்க் காவியால் மனம்
மெத்தவும் மகிழ் குணாகரன் முன்னம் என்னை விசித்திரமாய்
யணைந்த சதுரன்

லோக விக்யாதன் உத்தமன் ஸாஹராஜ தீரன்
பெண்ணரசே!

31 மாட்டோ மென்னாதே யடியே மின்னே!
தா படீகன் தஞ்சை வாழும் ஸஹஜிராஜன்
அழைத்தால் .... மாட்டோம்

அருமை அவன் ஸமக்ஷம் அடைவதே கோடி லக்ஷம்
தருணியே! அவள் பக்ஷம் தானே கல்ப விருக்ஷம்

அண்டையில் வந்தபோதே அசட்டையாக வெண்ணாதே
மண்டலேச்சுவரன் மீதே வலிமை செல்லுமோ மாதே

வாசுதேவ னென்றும் மகிழும் ஸாஹேந்திரனின்று ஆசையுடன்
வாவென்று அணைந்ததே மிக நன்று

ஒரு நாழிகை யிங்கே நில்லடா!
எனக்குன் மீதில் ஆசை வசமல்லடா!
திருமாதுவளர் தஞ்சை யரசாளும் ஸாஹேந்திர!

ஒருநாழி மருவி மகிழ்ந்து விளையாடவே
யென் வாஞ்சைப் பதறுது உன்னைக் கூடவே

விருது பேசியே காமன் வேளைகண்டு பூவாளி சொரிகிறான்
மலர் மேனி வாடவே

தனமுன்கை கண்டு மெத்த விருதே யுன்னைத்
தழுவி அணைக்க என்னக தேருதே

அனகன் ரதிபோல்கூடி ஆசை தணியவே
யென் மனதுமிகத் தீவரம் கூறுதே

ராஜாதி ராஜ பணிபாதனே! சோள
ராஜ்யம் செங்கோல் நடத்தும் நீதனே!

நேசம் மிகுத்த கவி வாசுதேவன் புகழும்
ஸ்ரீ ஸாஹராஜ மஹா ராஜனே!

32 இப்போ வரச்சொல்லடி ப்ராணேசனை
யிப்போ வரச்சொல்லடி

நல்ல அற்புத மகாரூபனான ஸாஹேந்திரனை (இப்போ)

அந்த மதனன் சேனை தோற்க,
கையா லணைத்து எந்தன் உயிரைக் காற்க,
எந்தன் வதனம் வேர்க்க,
இணங்கின மயல் தீர்க்க,
சுந்தர முலை சேர்க்க,
சுரத கேளிகைப் பாரிக்க
மல்லிகை சுகந்தங்கள் கூட, மதுரமாகவே யிசைபாட,

அல்லி லெந்தனைக் கூட, அமுத நிலைகள் நாட,
வில்லியும் பயந்தோட, விசித்திரமாய் விளையாட (இப்போ)

சிங்கார மன்மத லீலனை, வாசுதேவ கவீந்திரானுகூலனை,
மங்கையர் வேலனை, மருவார் பணி காலனை,
ஸங்கீத லோலனை, ஸாஹூ பூபாலனை (இப்போ)

33 மங்கைப் பருவ வஞ்சி காண்,
என் ஸாமி, யிவள் (மங்கை)

இங்கித குணசீல! ஏக ராஜேந்திரன் பால!
ஸங்கீத ரஸலோல! ஸஹஜிராஜ பூபால!

கார் நேரழகன் நிகண்டு, ஐயாயிவள் கனிவாய் யதரம்
கல்கண்டு,

மாரு முலைப் பூச்செண்டு, வயது பனிரெண்டு,
அரிவையாள் திரண்டு, அஞ்சாறு மாதமுண்டு (மங்கை)

தண்மலர் போலே சரீரம் நண்ணாக வரும்
சங்கீத சாஸ்த்ர வியாபாரம்
வண்ண மயில் போலுதரம்
வசதி விஜயாபுரம்
புணை சொன்னேன்
எந்நேரம் உன்மீதில் ஆசை பாரம் (மங்கை)

செஞ்சொல் வாணர்க் காதார
என்னாளும் சோளதேச பாலன சதுர
வஞ்சியர் மதனா கார!
வாசுதேவ வுபகார!
தஞ்சா புரீச்சுவர!
ஸஹஜி ராஜசேகர! (மங்கை)

34 அறிவேன் அறிவேன் போமையா

அறிவேன் அறிவேன் போம் போம்
ஆனாலும் ஒருநாள் விட்டுப் பிரியாதவர்
போலே வந்து பேசுறீர் சாகேந்திரனே!

பட்டு ரவிக்கைகள் ரெண்டு
கட்டுவர்கச் சேலை ரெண்டு
எட்டு நாளையில் தாரோ மென்றீர்
என்னாளுமிந்தப் பொட்டுப் பேச்சினாலே
நீர்வென்றீர் அந்தப் பெண்
யின்னைக் கட்டிச் சொன்னாளோ

நீர் யிங்கே வந்தீர்
வீண் அவலாதி கெட்டியாச்சு
எனச்சொன்ன நீர் தந்தீர்
பணமென்றால் கைவிட்டுக் கொடுக்க
மனம் பொருந்தீர்
ஒன்றைப் போட்டொன்று
பட்டுக்கோட்டை வழி கேட்டால்
கொட்டைப் பாக்கு விலைசொல்லித் திட்டுறீர்
இதெல்லா மங்கே கட்டும்
என்முன் பெயராது

தேடிவந்த என்மேலின்று மோடி வேண்டாமென்று
நையப்பாடி மெல்லக் கிட்டி வாரீர்
என்ன சொன்னாலும் நாடியவள் வீட்டில் போரீர்
போகட்டும் இப்போ கூடினால் எனக்குத் தாரதேது?

35 ஊர்க்குருவிமேல் ஒடிப் பறந்தும் பருந்தாகாது
ஆருக்கும் சொல்லவாடியில் ஊசிவிற்கப் போகாது
நன்னாச்சுப் பழங்காடிக்குப் பொய்த்தயிர் கொள்ள காலமல்ல
ஜீனிக் கப்பல் கொடியோடி முடியாவிடில் கொட்டைநூத்து
விடியுமோ!

தேசராஜவான நீரே காசும் நேராமல்
அழைத்தால் வேசியாள் பிழைப்பதெப்படி
தினம்தினம் கூசாமல் வாரீ ரிந்தப்படி
கையிலுண்டானால் ராஜ்யமாய் ஒருஜாலிகைத் தாரும்
தந்தபிறகு நேசமாய் யென்னை முன்போலே சேரும்
மதனனையும் தாசனாகப் பண்ணிக் கொள்ளுவேன் பாரும்
ஒருநாள் போலே வாசுதேவன் மீதில் பக்ஷம் வைத்து
என்னாளும் ரக்ஷிக்கும் போஜனே! தஞ்சைவாழ்
ஸஹஜ ராஜனே! சோளேசனே!

36 நயமாய்ப் பேசுறீர் அனுகூல மிங்கே
நடவாது போம் போம்
இந்த ஜாலம் ஜயவிக்ர மார்க்க
ரணசூர ராஜசேகர ஸஹஜ கம்பீர
வீணே சம்மதிப்பாரே யாரும்
இங்கே வேறே பெண்களுண்டானால் பாரும்
மாணிக்க மோதிரத்தைத் தாரும்
வளவில் மனது சம்மதமானால் வாரும்

வக்கண மெல்லாம் அங்கே யாச்சு
இங்கேவந்து பேசுவது மேல் பூச்சு
எங்கே படித்தீரிந்தப் பேச்சு
போது மிரங்கினது வரையிலேச்சு

செந்தமிழ் வாணர்க் குபகார!
வாசுதேவன் மேலன்பு வைத்த தீர!
அந்தமாய் யென்னை முன்போல் சேர
வாரும் ஐயா சாகராஜ ஒய்யார

37 இத்தனை மோடி ஏது? என் மேலிப் போது
சத்ருஸம்ஹார தீர ஸஹஜிராஜ கம்பீர
ஐயா யிப்படி ரோசமானால் என்ன உல்லாசம்
மையல் கொள்ளுவதே மோசம்
மன்னர்க் கண்டோ ரோசம்

என்இளமை வீணே போமோ!
எவர்க்கும் பெண் ஜன்ம மாமோ!
கன்னியர் ஏசலாமோ! காதல் பொருக்கப் போமோ!

அருள் வாசுதேவன் மேலே
அன்பு வைத்தொரு நாள் போலே
வரிசை செய்து மென்மேலே
வளர் சாகேந்திர என்மேலே

தூதுதான் போனமாது ஏது தாமதம் அறியேன்
ஸ்ரீதரன் சாக ராஜேந்திரன் ஆதரவுடன் வாரானோ

கன்னியர் முலைமேல் நகபின்னங் கண்டு கண்டிப்போ
வன்னிமுன் மெழுகு போலே என்னுளம் மெலிகுவேனோ!

ஆசைக்கொண்ட பேரில்லையோ காசினியில்
யென்னளவே மாசிலா மதியும் தழலை
விசுதென்ன செய்வேன் பின்னே!

வஞ்சியே சாகேந்திரன் முன்பு
ரஞ்சிதமா யென்னைக் கூடி
செஞ்சியிலு வந்த முன்னாள்
வஞ்சனைக் குளாகி னானோ!

38 என்ன செய்வேன் இந்த மோடி
எந்தன் மீதில் ஏனடி மின்னே!
கன்னியே வுன்னைப் பிரிந்தால்
கனமெனக் கொரு யுகமாகுது

நவமோகினி யான் தொடரத் தொடர
நடந்திராய் உந்தன் மனது கல்லோடி
பவழவாயிதழ் தேனே தொரு பணத்துக்கொரு
பணவிடையோ சொல்லடி

மலரைத் தேடிய வண்டு போலுன்னை
வனிதையே யான் வலிய வேண்டினால்
முலையின் மேல் என்னை சேர்த்து அணைத்தொரு
முத்தம் தாராமல் இப்படி யானால் (என்ன)

வாசுதேவன் கவிதையால் மிகமனம் மகிழும்
சோழேந்திரனே! சாமி போஸலகுல திலக!
சாஹஜிபூப! வாவென்று முன்போல் சேராமல் (என்ன)

39 சமுகம் கண்டேனே சாமி
பாக்யசாலி நான் தானே

சமுகம் காணவந்து சகல பூபாலரும்
அமரேந்திரரென்று போற்றும் ஐயா ஸஹஜேந்திரவுன்
பூமி கல்பக புண்ய புருஷசேகர என்
சாமிஉன் சமுகம் சாமான்ய மன்னே!
மாமதி நிகரமோ வதனம் கண்டபோதே நான்
ஆம்ஆம் பூர்வஜன்மத்தில் அதிக ஸிகிருதம் செய்தேன்
சந்ததம் உன்னுட சபையில் அதிசயமும்
யிந்த வைபவமும் எவர்க்கும் எளிதோ!
சிந்தை மகிழ்ந்தேன் என்ஜன்மம் ஸபலமாச்சு
எந்தன் பங்குக்கொரு இஷ்ட தேவதையாமோ
தஞ்சா புராதிப ஸகல குணோந்நத
விஞ்சு சோளேச்வர விதரணசூர
வஞ்சியர் மன்மத வாசுதேவ கவி
செஞ்சொல்லால் மகிழும் ஸ்ரீசாகபூப /உன்/ (சமு)

40 மையல் கொண்டேன் தையலே
மதிபெய்யுதிர வெல்லாம் வெய்யிலே
ஐயய்யோ காமப் பைய லேராளம்
எய்யுரான் வாளி மெய்யிலே

ஆசையென்ன பரியாசமோ! தூது
பேச வுனக்கு பிரயாசமோ!
நேசம் அவள் விட்டு வாசமோ
சஹராசன் தனக்கென்மேல் ரோசமோ

மந்த மாருதம் வந்ததே
    மலர்ப்பந்து முலை விம்மிகந்துதே
எந்தன் மோகம் மிகுந்துதே அவன்
    விந்தை யெண்ணி மனம் நொந்துதே

தாவி யணைத்துற வாடவே
    வாசுதேவன் கவி பாடவே
பாவையே நான் முத்தாடவே
    ஸஹஜிதேவன் வரக்காணேன் கூடவே

(மையல் கொண்டேன்)

41 மெத்த நாகரிகக் காரி காண்
ஸத்ய பாஷா ஹரிச்சந்திரனே
ஸஹஜி மஹா ராஜேந்திரனே!

தேகம் பத்து மாத்துத் தங்கமாம்
    ஜன்மபூமி ஸ்ரீ ரங்கமாம்
தோகை முலை நாக ரங்கமாம்
    சொன்னேன் உனக்கவள் பாங்கமாம்

பங்கயம் போலிரு நேத்ரமாம்
    பாவையிடை நூல் மாத்திரமாம்
ஸங்கீதத்தில் விருது பாத்ரமாம்
    தருணி மேனகை கோத்திரமாம் (மெத்த நாகரிக)

முத்து நகையில் சிங்காரியாம்
    முன்னும் உமக்கனு ஸாரியாம்
கஸ்தூரி குங்கும தாரியாம்
    கர்னாடக தேச சஞ்சாரியாம் (மெத்த)

மங்கையர் மன்மத லீலனே!
    வாசுதேவ கவி லோலனே!
துங்கஜனர்க் கனுகூலனே!
    சோளேந்திர சாக பூபாலனே! (மெத்த)

42 அபரஞ்சி யென்று ஒருமாதாம்
    மெத்த ஆசை யுமக்கவள் மீதாம்
விவரமாய்ச் சொல்லும் ஒளியாமல் இப்போது
    வீராதி வீரனே! ஸாஹ ராஜேந்திரனே!

ஆயிரம் பொன் குறையாமல் கேட்டாளாம்
    அரைக்காசு பட்ட பணமும் கூட்டாளாம்

சாயப் பொடவை யல்லாது கட்டாளாம்
    தானே உமக்கவள் தூது விட்டாளாம் (அபரஞ்சி)

திருவாரூர்க் கீழத் தெருவில் வளவாம்
    தேவரீர்க் கவள்மெத்த உளவாம்
தருணிமுலை யிரண்டும் மேரு வளவாம்
    ஸ்ாமி நீமருவி வந்ததும் களவாம் (அப)

ஏக மஹீபாலன் பாக்ய குமார
    இயல்வாசு தேவன் துதிக்கும் ஒய்யார!
த்யாகாதி ராஜர்பதம் தொழும் தீர!
    ஸ்ரீசாக ராஜேந்திர சுகுண கம்பீர (அப)

43 ஐயா சாமி நீ வாடா
    அணைத்து முத்து முத்தாட
வையம் புகழும் சாகேந்திர
    போக தேவேந்திர

கன்னல் வேல் சேனை வெல்லுதே
    கனக முலை விம்முதே
பன்னீரும் வென்னீர் ஆகுதே
    அகம் நோகுதே

சித்தம் உன்னை நாடுது
    தேகம் உருகு வாடுது
நித்திரை ஆகாரம் தேடாது
    ஆசை பொல்லாது

வன்மம் என்மீதில் ஆமோ
    மருவி மறக்கப் போமோ
முன்போலே என்னைநீர் சேரும்
    இதழ் இப்போ தாரும்

தோகை யராசை மன்மத
    துய்ய வாசுதேவ நுத
ஏக ராஜேந்திரன் பால
    சாக பூபால

44 அதட்டிப் பார்க்கிறீர்
    ஏது அந்தவகை யிங்கு செல்லாது

மதன ரூபக தஞ்சை வாழும்
    சாகபூப என்னை (அதட்டி)

ஒருக்காலே தானே மிண்டோ
உழக்கில் கிழக்கு மேற்குண்டோ
சேர்க்கிறீர் நான் ஏழை கண்டோ
தேவரீர் சொன் நான் பெண்டோ (அதட்டி)

ஆசையினால் நாளை வந்து புல்லும்
ஐயா இன்றைக்குக் கூடாது செல்லும்
ராஜா நீரானால் மட்டிலே நில்லும்
நான் பயப்படுவேனோ சொல்லும்

கத்த பேருக் கெல்லாம் ஸஹாய
கவி வாஸுதேவன் நேயச்
சித்தஜன் ஏகராஜன் ஜய ஸ்ரீ
சாக ராஜேந்திரனே துரைராய

45 நில்லடி சொல்லடி வல்லடிக்காரி
மெல்லடி பூவடி முலைவல்லடி
என்னாசை வசமல்லடி இருகணைத்துப்
புல்லடி நீ பெண்ணரசே

ஆரடி யுனக்கு நிகர்ப் பாரடி
என்மேல் கருணைத்
தீரடி மதனவாடித
சேரடி மனங்களிக்க்

தேனடி வுன் மொழி கண்கள்
மானடி சித்தமிரங்காத
தேனடி உன்னை நம்பினானடி
தயை நினைந்து

பூசவோ கொங்கை மேல் கந்தம்
வீசவோ கவரிசத்தும்
பேச நினையாமல் என்முன் மோசமே
செய்தால் என் செய்வேன்

வாசுதேவ கவி மீதில்
நேசமே புரக்கும் சோழ
தேச மஹாராஜ சாக
ராஜன் நாடி போகாதே.

46 எந்தன் பூசா பலமும்
என்வித்யாப் ராபல்யமும்

இப்போ சபல மாச்சையா
சந்திர வதன!
சூர்யவம்ச தீபகனான சகஜி
மஹீபால ஸங்கீத லோல!

மதிகண்ட குமுதம் போல்
ரவிகண்ட வாரிஜம் போல்
வாரிதம் கண்ட மயில்போல்
நிதிகண்ட யாசகன் போல்
ஹ்ருதயமும் சந்தோஷிக்க
நேத்ரோத் சவமாய் உன்னைப் பார்த்தேன்
இப்போ சுதினம்

மின்னை கண்ட கேதகி போல்
பொன்னைக் கண்ட ரெத்தினம் போல்
வெண்மழைக் கண்ட பயிர் போல்
உன்னைக் கண்ணாரக் கண்டேன்
முன்னாள் யான் செய்த பாக்யம்
உயிர்க்கும் யிதே ஸ்தோத்ரம்
உன் கிருபைக்கு நான் பாத்ரம்
பத்திலே பதினொன்றாய் பாராமல்
என்மீதில் நீபக்ஷம் வைத்து ரக்ஷி ஐயா!
ஸத்ய வாசக வாஸுதேவ கவி
விநுத ஸஹஜி மஹாராஜ! ஸாஹித்ய போஜ!

47 உமக்கேத்த வகைக்காரி காண்
நாளும் நமதிகலரி புதரணி நாத! சஹஜீந்திர!

தென்காஞ்சி யிவள் ஜனனதேசம்
ஜயதிதந்த ஜாலம் குந்தகோசம்
இப்போ கொங்கணேச்வரன் தெருவில் வாசம்
நைவ குவலயே லாவண்யம் க்வாபிதத் ஸத்ருசம்

இவகும்பம் இவள் தனத்துக் கீடு
தீனிகி ஈ ஜகதுலோ லேது ஜோடு
அபரஞ்சி யாலிழைத்தத் தோடு
நீரு அகுலனமனதி ஒ அய்யலு நாதோடு

....

தினகர ஸஹஸ் ரஸமா தேஜ!
வாஸுதேவ கவி தினம் துதிக்கும் போஜ! நாளும் அநக

போஸலஸிந்து ராஜகீர்தே அளகை ஏகமஹீபன்
அருள் ஸஹஜி ராஜ!

48 ஆதிநாள் முதல் என்னை
அணைந்த சாகேந்திரனை
தூதுவிட்டழைத்தது துணிவோ வடுகச்சி

வடுகச்சிஅணி செப்பதவு, அரவதாந!
படுத்ஸி நிம்மநி, நீதோ பலுக வொச்சி திந?

வச்சிதினா வென்று
வழக்கும் கணக்கும் சொல்லி
மிச்சமாய்ப் பேசுர விதமென்ன சொல்லடி

அடிஅடி யனிஆடவே மேஒ சிந்நதி!
வீதிலோ இதி நியாய மு காதே

ந்யாயமு இருகொங்கை நீ என்சாமிமுன்
உபாயமாய்க் காண்பித்தது உச்சிதமல்லவோ

உச்சிதமணி, நாதோ உதுடுகா எதிரிஞ்சி
வச்சி மாடலாட வொத்ஸீனா நீகு

நீகு நீ கெறிங்கே நீலித்தனம் செலுத்தப் போகாது
உந்தனுக்கு இது புத்தியல்லவடி

புத்திகாநே மனம் இத்தரும் ஏகனம முத்து
கானுந்தாமு முதிதரோ ராவே

வாடி ஸத்யபாமை உருக்குமணி போலே
கூடிமாடி அனுகூலமாய் மகிழுவோம்
வாஹரே வந்து டென வாஸுதேவ நுத!
சாகராஜீதி சேரி ஸததமை உந்தாமே

49 விரகம் ஸஹிக்கப் போமோ, ஓ மின்னே

விரகம் ஸஹிக்கப் போமோ, விவியா ....
விரதந்து ததிபீமோ, வீணே மோடி யாமோ

அந்திமதி தழல்போலே வீசுதே கரவாணி ....
பந்து முலையும் மேலே ....

அந்தமாய் முன்போலே

....

கன்னியுந்நதர மிப்போதே

....

இன்னம் தயவென் மீதே

....

உன்னை நம்பினேன் மாதே

....

.... போலே

மயக்குதென் சொல் நகரிகம்

....

அன்னமே உன் யோகம்

ஸ்ரீசாக ராஜோஹா சேர்ந்ததே வைபோகம்

50 வாடி வா தென்னடி அடியோ பெண்ணே
இந்த மோடி யென்னடி
யென்னை முன்பின்னறியா யோடி

மெத்த நம்பின நானடி
என்மேல் வெகு பராமுக மேனடி
சித்தஜன் எனைத் தேடி
சேஷுமலர் கணைக் கோடி
நித்ய மெய்யுரானடி
நிமிஷம் போராதடி
மலரணை தனிலிருந்து
உனது கோவை வாயிதழ் அமுதம் தந்து
கலவியில் உவந்து
கலை நிலைகளறிந்து
குலவியே எனைச் சேர்ந்து
கூட க்ருபை நினைந்து

கன்னியென் மொழி தானடி
வாசுதேவன் கவிதைபோல் ருசிக்குதடி
முன்னணைந்ததை நாடி
மோகம் வளருதடி
சென்னை சொன்னேனடி
சாகேந்திரன் நானடி (வாடி வாதென்னடி)

51 கண்டு மையல் கொண்ட நானடி
ஓ மின்னே! உன்னை
உண்டிலை யென்னு மிடையும்
அண்டர முதாரிதழும்
வண்டுநேர் விழியும்
மலர்ச் செண்டு நேரிரு தனமும் (கண்டு)

சித்தஜன் மலர் கணைகள் மெத்தவும்
வருத்து தின்னம் சித்தம் இரங்காமல்
என்மேல் எத்தனை ராஜஸம் உன்னை (கண்டு)

பஞ்ச பாணனுடன் பல வஞ்சியர் மகிழ
வென்னிடம் செய்யும் வகையும் உந்தன்
கொஞ்சுகிளி வசனமும்

ஓதி மணடையுடனே
ஆதரவாகி யஸகி மாதருடன் அன்று
தெரு வீதியில் வரும்போதுன்னை

வாசுதேவன் புகழ் ஸஹஜராஜன்
பணி குடந்தை வாஸன் ஆதிபான
கும்பேசன் நானடி யுன்னை (கண்டு)

52 தப்பியோடிப் போங்கள் முகலரே
தப்பியோடிப் போங்கள்
தரியலர் பணிபாதன்
தப்புறை உறையாத
ஸஹஜிராஜன் வாரான்
சுற்றி சுற்றி யிங்கே
சுழல வேண்டாம் சொன்னேன்
புத்தி யல்ல
ஓடிப் போனால் உயிர் பிழைக்கும்
சுத்தன் ஏகராஜன் புத்திரன்
ஸஹஜிராஜன் ஹத்தி கொண்டால்
கையில் கத்திக் கிரையிடுவன்
மட்டி புத்தியாலே
மடிய வேண்டாம் சொன்னேன்
பட்டர் நாமத் தாதப்
பயலாயி பிழைக்க லாகும்
துஷ்ட நிக்ரஹ சீலன்
சிஷ்டன் ஸஹஜிராஜன்
கிட்ட வந்தால்
தலைவெட்டி குவிக்கப் போரான்
ஒட்டுச் சலிகை சொல்லி
உயிர் தோற்க வேண்டாம்
குட்டிச் சுவர்கள் தேடிக்
குனிந்து பதுங்க லாகும்

மட்டு லாவுஞ் சாக
    மஹிபன் கண்டால் பின்னை
வெட்டிக் கழுகுக் கெல்லாம்
    விருந்து போடப் போரான்

கோலா கலங்கள் வேண்டாம்
    குதிரை யேர வேண்டாம்
நாலு வழியும் ஓடி
    நரிபோல்ப் பதுங்க லாகும்
மாலுக் கிணையாம்
    சாக மகிபன் கண்டால்

53 பின்னைக் காலில் பணிந்து
    புல்லைக் கவ்வ வேண்டும் சொன்னேன்
வெள்ளை கட்ட வேண்டாம்
    மீசை முறுக்க வேண்டாம்
கள்ளத் தனங்கள் செய்து
    துள்ளித் திரிய வேண்டாம்
வள்ளல் சஹஜராஜன்
    வாகினி வருமுன்னே
மெள்ளத் தள்ளி யொரு
    கள்ளிக் காடு தேடி

மல்லொத்த திண்புயன்
    வாசுதேவகவி சொல்லுக்குகந்தருள் சுகுணன்
சா்கேந்திரன் தன் வில்லுக்கிலக்காகி
    வீணே மடிய வேண்டாம்
டில்லிக்கு வழிதேடி
    திரும்பிப் பாராமலே (தப்பி)

54 கிட்டுவந்த மருவார்கள் போல் வெல்லுங் கெடி
    என் ஸஹஜிராஜன் நாட்டிலே
சட்டி பிச்சை வாங்கும் செட்டி காண்
    வெட்டும் தாம்பரவதனன் நானல்லவே

வாளில் வீமன் தஞ்சை யாதிபன்
    சாகமகி பதீந்திரன் சோழ நாட்டிலே
சுளிகை தூக்கிய ஆண்டி காண்
    வெட்டுஞ் சுலுபுகாரன் நான் அல்லவே

கவலை தீரக் கவிவாணரை யென்றும்
கார்க்கும் ஸஹஜிராஜன் நாட்டிலே
தவலடிக்கும் மேளக் காரன் காண்
வெட்டும் தாவுத்கானன் நானல்லவே

அருந்தமிழ் நாவலர் கல்பகம்
தஞ்சைக் கதிபன் ஸஹஜிராஜன் நாட்டிலே
இரந்து குடிக்கும் பள்ளிப்பயல் காண்
வெட்டும் யாசம நாயக்கன் நானல்லவே

நாடிவந்த கவிராஜரை வைத்து
நடத்தும் ஸஹஜிராஜன் நாட்டிலே
அடிபிழைக்கும் டோம்பப்பயல் காண்
வெட்டும் அல்லி மருதாகான் னானல்லவே

சொல்லில் ஸத்ய ஹரிச்சந்திரன் நாளும்
சுகுணன் ஸஹஜராஜன் நாட் டிலே
புல்லு விற்கும் பள்ளப்பயல் காண்
வெட்டும் பொல்லா காமபர்சி நானல்லவே

சக்கரை மொழி மடவார்கள் வெள்
தஞ்சை ஸஹஜிராஜன் நாட்டிலே
விற்கக் கொண்டு வந்த குதிரை காண்
வெட்ட வேண்டாம் லத்திப்சா நானல்லவே

வடிவில் மதனன் போரில் அர்சுனன்
தஞ்சை மன்னன் ஸஹஜிராஜன் நாட்டிலே
அடறு பிடித்துவந்த கத்தி காண்
சொன்னேன் அஸத்கான் நானல்லவே

வாசுதேவ கவி போற்றவே என்றும்
வாழும் ஸஹஜிராஜன் நாட்டிலே
காசுவாங்கிய பகிரி காண்
சொன்னேன் காசிம்கான் நானல்லவே

55 இல்லை யில்லை யென்றின்னம்ஏன் மறைக்குறாய்?
எல்லாம் எனக்கு வெளியாச்சுது போடி
கலை வல்லவன் ஸாஹஜிமகிபன் உந்தனைச் சேர்ந்தால்
(இல்லை)

தனத்தினில் நகரேகை யேது?
யிதழ்தனில் பல்குறி வந்ததேது?
மனத்தினில் படபடப் பேது?

இந்த வஞ்சனை யுனக்காகாது
வகையாய்ச் சொல்லு யிப்போது

தேனே உன்வதனத்தில் வேர்வை
ஆடு திருடின கள்ளன்போல் பார்வை
ஆனால் அவனுக்கு நீ ஏர்வை
அவனருகில் தூதாயுன்னை யனுப்பினதே தோாவை

அதிவிநயம் உனக்கு சொந்தம்
மெத்த அதிரக்தம் நயனார விந்தம்
சிதறித்தேதடி மேனி கந்தம்
வாசுதேவன் புகழ் சாகேந்திரன் சேர்ந்ததே மிகஅந்தம்

56 உன்னைத் தேடி போனாள்
மின்னாள் நேற்றொருத்தி
சன்னையாய் உன்விடுதிதன்னில் வந்துவந்து

படுகை வீட்டில் வந்தங்கே
பார்த்துன்னைக் காணாமல்
திடுக்கிட்டாள் மலரணை சேர்ந்தாள்
பொருந்தாள் அடிக்கடி அடியோசையினால்
வழிபார்த்துக் கடின விரகத்தினாலே காத்திருந்து

ப்ராணேசன் வந்தானென்று பரிகாசம் சகிசெய்ய
நாணி மனம் மகிழ்ந்தாள்
நகைத்தாள் பின்திகைத்தாள் காணாமல் உன்னை
எண்ணி கடுநெடு மூச்சுடன்
ஆணி மௌக்திக மாலை அடையாள மிதோவைத்து

மருவலர்பணி ஏகமஹாராஜன் அருள்பால!
ஸரஸ வாசுதேவன் ஸாகித்ய லோல!
தருணி மன்மதனான ஸஹஜமஹா ராஜேந்திர!
மருவிமுன் உன்னைச் சேர்ந்த வனிதையோ தெரியாது
(உன்னை)

57 & 57 பி தெலுங்குப் பாடல்கள்

58 மானே சாகேந்திரன் உன்னை
வரச்சொன்னான் இப்போது
ஆனாலும் யிந்தமோடி யனுதினம் ஆகாது

பாவையே குடுக்கச் சொன்னான்
பாரடி பொன்னோலை

தாவடத்துக்கான முதுத்தந்தான் சரிகைச் சேலை
    ஓவிய மிகழவனுக்குவமை யெங்குமில்லை
மேவினால் தெரியும் அவன்விவிதக் காமலீலை

மெத்த மையல்கொண்டு தூதுவிடுவார் பெண்கள்
    கொடி யித்தலத்தில் கண்டு மடலை யெழுதும் பெண்கள்

கொடி தத்தையே
    அவனைக்கூட தவம் செய்வார்கள்
கொடி மத்தொருவர் போலெண்ணாதே
    வரச்சொன்னால் நீ வாடி

நவரஸாலங்கார காவ்ய ரஸிகன்
    வைரிபீமன் ஜவநதீ ....நகுலன்
ஜநர. ஜநஸோமன்
    கவி வாசுதேவன் புகழும்
கனகுணாபிராமன் ரவிவம்ச சேகரன்
    ஸஹஜிராஜ ஸார்வ பளமன்

59 ஸுப்ரபாதம் ஸுப்ரபாதம் ஸஹஜிராஜனே!
    ஸுப்ரபாதம் ஸுகவி போஜனே!
ஸுப்ரபாதம் போஸலேசனே!
    ஸுப்ரபாதம் சாமி

இந்திரதிக்கினில் அருணகாந்திகள்
    இயலுடனே விஸ்தாரமாச்சுது
விந்தைசேர் அரவித்வாஸனை வீசுதிப்போது

அந்தமாவு பவனங்கள் தோறும்
    சகுந்த ஜாதிகள் ஒலிமுழங்குது
சுந்தரான நேத்திருவனந்தலோ சாமி

அள்ளிருள் மெள்ள நீங்குது
    அந்தணர் முறை மறையிலங்குது
துள்ளி வண்டுகள் குமுத
    மலரிலும் சோலை மேவுது
தெள்ளுதமிழ்க் கவிவாணர் வேதியர்
    தேசராஜர்கள் மந்திரி சேகரர்
எள்ளுவிழ யிடமில்லை
    உன்னகர் இவர்கட் கருள்செய்ய

பாடகர் தேசாக்ஷியுடன்
    பூபாள தேவகாந்தாரி முழுக்குரார்

கூடியே வாசுதேவ கவிபதம் பாடுறார்
மடவார் நெடுபுகழ்சேர் ஸஹஜிராஜனே!
நித்ய சோபனம் தேவரீருக்கு வேடிக்கை
யதேச்சையா தானத்து வேளையிது சுதினம்

60 - 69 ஏ வரை தெலுங்குப் பாடல்கள்

69 பி பாதி வரை தெலுங்குப் பாடல்கள்

69 பி - 87 வரை வடமொழிப் பாடல்கள்

87 ஏ அறிவேன் எனக்கொருத்தி சொன்னாள் சாமி!
யாரையா சொல்லு மந்த மின்னாள்
பிரியே னென்றென்னுடன் முன்னாள் சொன்ன பேச்செல்லாம்
மறந்தீர் நீரின்னாள்
இதுகுறியேன் நான் சிறியேனா
சொல்லறியேன் கவிஞனைப் போல்
மறையோர் நிறையளகைக் கிறைவ ஸஹஜிராஜ

87 பி சாலிநிறைக் கமழும் சோலை தன்னில்
சந்திர னுதித்துவரும் காலை
அந்த ஆலை மொழியால்
அனுகூலை யென்றனுபவித்து வருடி லீலை
முத்துமாலை நல்வேலையாம் ஒலை
போர்ச் சேலை ஓர்வாலை
கையினில் நேற்று மாலையில்
அனுப்பின தறிவேன்
கோதை யவள் பொதுமாது தானோ!
குடிவழியோ! சொல் லிப்போது
அவள்சாதி வசதி பெயரேது சொல்லும்
சாமி யென்னுடன் என்ன சூது
போதும் போதும் என்மீதில்
நீதியோ வாதுநீர் ஒதுனீர்
வகைகள் என்னாத உன் ஜாலங்கள்

88 என்னாலாகாது

மின்னார்கள் மதன் அளகை
மேவும் சாகேந்திரன்
முன்னுன்னாசை சொல்லிவர

கன்யா ரத்னம் ....
......ணிகையாய்க் கொண்டு
என்நேரம் வேளை யென்ன
யென்னவென்று காக்கும்
மன்னவர்க்குக் கிடைக்காத
மகாராஜேந்திரன் சமுகத்தில் தூதுரைப்பதென்றால்
என்ன விளையாட்டோ

கட்டியத் தொனி முழங்கக்
கவிவாணர் கொண்டாட
நட்டணையுடன் மடந்தையர்
நடனம் புரிய
மட்டுலவும் ஸங்கீத வாத்யம்
முழங்கும் சபையில்
சிட்டி யானுரைத்து மவன்
கேழ்ப்ப தெப்படியோ

வாகன் அளகையின் வேந்தன்
வாசுதேவன் துதிக்கும் நாகரிகனாம் ஸகஜ நரபதீந்திரன்
போகமாய் முன்னுன்னை யிணங்கி யனுபவித்தது
உன்காக தாளி நியாயம் காணடி மானே!

89 சும்மா யென்மே லென்ன வன்மமோ!
இல்லாத்தூறு சொல்வதுனக்கு தன்மமோ!

சம்மதன் சாகேந்திரன் என்னைச் சேர
சொல்லத் தையலே உனக்குஏன்? பயந்தவளோ!

குறியேனிதழில் லென்று கறியாதே மானே!
கொவ்வை யென்று கைக்கி (ளிகோ) தித்தடி
யிருகண் சிவந்ததே தென்று வெண்ணாதே மானே!
இந்நேரம் சுனையில் யான் விளையாடினேன்
சரிவானேன் குழல்என்று சங்கியாதே மானே!
தண்மலர் காய் வண்டு கலைத்ததடி

அழிவானேன் நுதல் பொட்டொன்னாதே மானே!
அதிவேக நடை பயில் வேர்த்தழிந்ததடி
குரல் நெரிந்ததுகண்டு கூனாதே மானே!
குளிர்தமிழ் வாசுதேவன் பதம் படித்தேனடி

90 இந்த வேளைக்குப் போமய்யா சாமி
அந்தி நேரம் வந்தென்னை யணையுமய்ய

ஆடல் பாடலில் மிக்க அந்தக்காரி யென்றுன்னை
நாடி வந்தனனென்று நடுப்பகலில்
ஆடை நெகிழ்க்க வேண்டாம் அபிமானங் காத்திடில்
கோடி புண்ணியம் உம்மைக் கும்பிடுரேன் (இந்த)

90 பி
விந்தையா இக்கிணத்தில் நீர்
வெள்ளங் கொண்டு போராப் போல்
இந்தத் தீவிரம்
உமக்கேதுக்குத் தான்
பந்தமோ என்னுடன் பரத்தை யாகிலும்
மத்த பந்தோடி போலல்ல பயப்படுவேன்
கடினம் செய்வதேது கனதையோ! இரவில்வந்து
அடியேன் பிரமாணிக்கம் அறியுமய்யா
வடிதமிழாகரன் வாசுதேவன் புகழ்
மடவார் மோஹனசாக மஹாராசனே (இந்த)

91
சுருசம் கண்டே உளவு தெரியாமல் மயங்குறீர்
மருவிப் பாரும் நீர் போமையா; அந்தமின்னாளை
பருவம் வந்தாலு மென்ன?
புருஷன் மனதறிந்து
சருவி மேவலே அறியாள்
கொங்கை எழுந்தா லென்ன?
இங்கிதம் தெரியாது
எங்கே பேரானாள் சொல்லையா
என்னைச் சேர்ந்த நீர் அந்த
மின்னை ஒருநாட் சேர்ந்தால்
பின்னை என்வல்லமை தோணும்
வாசுதேவன் மேல் விசு
வாசம் வைத்து ரக்ஷிக்கும் போஜ!
சஹஜி ராஜேந்திர! போக தேவேந்திர!

92
மருவாதிருக்கக் கூடாது யின்னு மவனை
தரணிவம்ச தீபகன் சஹஜி ராஜேந்திரன் தன்னை
வாதுகூறும் குலமாதர்
தூறு பேசிலும் சம்மதம்
சாதியார் எந்தனை வேறாய்த்
தள்ளிவிட்டாலும் சந்தோஷம்

துடிக்கும் சேல்விழி மானே!
தூறு சொல்வார் சொல்லட்டும்
அடிக்கும் காத்துக்கெல்லாம் தான்
படல் கட்டக் கூடுமோ சொல்

92 பி
சொரிதமிழ் வாசுதேவன்
துதிக்கும் கம்பீர!
தாரியர் மோஹனமார!
ஏகநரபதி உதவுகுமார
சேரார் வணங்கிய கம்பீர!
வாசுதேவன் துதிக்கும் ஒய்யார!
மேருதீர கம்பீர! சிங்கார விகார
என்வாரார் முலையில் முன்போல்
சேராய் ஸஹஜி ராஜ ராஜேந்திரன் பரிவாய்
என்மீதில் வைத்த பக்ஷம் காண்போடி (மருவாதிருக்க)

முற்றிற்று

6
இராமபாரதியின் சிங்காரப் பதங்கள்

இராமபாரதி

இராமபாரதியைப் பற்றிய வரலாறு எதுவும் கிடைக்கவில்லை. இவர் பாடிய பாக்களில் தம் பெயரைச் சேர்த்து முத்திரையாகப் பாடியுள்ளார். ஒரு பாடலில் (32)[1] 'பஞ்சனதம் இராமபாரதி' என்று காணப்படுகிறது. திருவையாறு பஞ்சனதம் (பஞ்சநதி) என அழைக்கப்பெறுவதனால் இவர் ஒருவேளை திருவையாற்றில் வாழ்ந்திருக்கலாம். இதைத்தவிர இவர் பாடிய பாக்களில் வேறெந்தச் சான்றும் கிடைக்கவில்லை. இவர் இரண்டாம் சகசி மன்னர் அவைக்களப் புலவர்களில் ஒருவராக இருந்த காரணத்தால் இம்மன்னர் ஆட்சிக்காலத்தைச் (1684 – 1712) சேர்ந்தவராவார் எனத் துணிய முடிகிறது.

இவர் பாடிய பாக்களில் தம்மை ஆதரித்துப் போற்றிய சகசி மன்னரைப் பலவாறு போற்றியிருக்கின்றார். இவர் மேல் மன்னர் பேரன்பு கொண்டவராக விளங்கியிருப்பதை இப்பாக்கள் காட்டுகின்றன. இவர் தமிழில் சிறந்து விளங்கி யிருக்கின்றார். தமிழ்ப் பதப் பாக்களை மட்டும் பாடியிருப்பதாக அறியமுடிகிறது.

'தமிழில் ராமகவி பாடல்'	(49.13)
'செந்தமிழ் சொல்லும் இராமபாரதி'	(72)
'பன்னு தமிழுரைக்கும் ராமபாரதி'	(67)
'பா மருவும் தமிழோதும் ராமபாரதி'	(66)

என்று தம்மைத் தமிழோடு பல பாக்களில் இணைத்துப் பாடுவதில் பெருமிதம் கொள்கின்றார். தாம் பாடிய பாக்களை 'நூல்' என்றும் 'பனுவல்' என்றும் கூறியுள்ளார். இயற்கையிலேயே காதற்சுவை நிரம்பப் பாடுவதில் இவர் சிறந்து விளங்குவதாகத் தெரிகிறது.

தமக்கு ஆதரவு நல்கிய சகசி மன்னரை இப்பதங்களில் தலைவனாக (கிருதி நாயகனாக)ப் பாவித்துப் பாடியிருக்கின்றார். தலைவி ஒருத்தி தலைவனான சகசி மன்னனைக் காதலிப்பது போலப் பாக்கள் பாடப்பட்டுள்ளன.

1. பிறை வளைவிற்குள் உள்ள எண்கள் பாடல் எண்களாகும்.

ஒருவேளை தஞ்சை அரண்மனையில் அரசவை நாட்டியப் பெண்களால் இப் பாக்கள் பாடப்பெற்று நாட்டியமாடப் பெற்றிருக்கலாம் எனக் கருதமுடிகிறது. கிரிராசகவி பாடிய பதங்களைத் தமக்கு முன்னோடியாகக் கொண்டு இப் பதங்களைப் பாடியிருக்கின்றார்.

இராமபாரதி, ராமபாரதி, பாரதி, ராமன், பாரதிராமன், ராமய்யபாரதி என்று தம் பெயரைப் பாக்களில் பாடியுள்ளார்.

சுவடி

'இராமபாரதி பதங்கள்' 'ஸாஹஜிராஜனைப் பற்றியவை' என்ற பெயரில் தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் சுவடி உள்ளது.[2] இப்பதங்கள் இதுவரை அச்சில் வந்ததாகத் தெரியவில்லை. என். வி. வேங்கடசுப்பிரமணிய சாத்திரியாரால் 05–12–1948இல் படியெடுக்கப்பட்டிருக்கிறது.

நூலமைப்பு

இந்நூலில் மொத்தம் 74 பாக்கள் பின்வருமாறு அமைந்திருக்கிறது.

1.	பதங்கள்		–	48 (1 – 48)
2.	வண்ணம்	1–17	}	
	கலித்துறை	18–27	}	
	தாழிசை	28–29	}	1 (49)
	ஆசிரியவிருத்தம்	30–31		
3.	கீர்த்தனங்கள்		–	25 (50–74)
	ஆகப் பாக்கள்		–	74

49ஆவது பாடலில் வண்ணம், கலித்துறை, தாழிசை, ஆசிரிய விருத்தம் ஆகிய யாப்பில் பல பாக்கள் அமைந்துள்ளன. இப்பாக்களில் பெரும்பாலான வற்றைப் படித்து எளிதில் புரிந்து கொள்ள இயலவில்லை. இப்பாக்களில் வண்ணப் பாக்கள் 1 முதல் 8 வரையுள்ளவற்றிற்குத் தமிழ் எண்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அடுத்த 8 பாடல்களுக்குக் கலை 1, 2, ... என்று கொடுக்கப் பட்டுள்ளன. எஞ்சிய பாடல்களுக்குத் தமிழ் எண்களே கொடுக்கப்பட்டுள்ளன.

69ஆவது பாடலுக்கு இராகம் – பந்துவராளி எனக் கொடுக்கப் பட்டுள்ளது. இப்பாடல் முழுவதும் 31ஆவது பாடலே திரும்பவும் இடம் பெற்றுள்ளது. அதேபோன்று 70ஆவது பாடலில் 35ஆவது பாடல் அப்படியே திரும்பவும் இடம் பெற்றுள்ளது. இது ஆய்வுக்குரியது.

2. சுவடி எண் 813 / 11654.

பல பாடல்களில் எழுத்துக்கள் சிதைந்து காணப்படுகின்றன. இப்பதங்களுக்குரிய இசை கிடைக்கவில்லை. சாகித்தியங்கள் எதுகை, மோனை அமைப்பில் பாடப்பட்டுள்ளன. இப்பதங்கள் நாட்டிய அமைப்பிலானபடியினால் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற முறையில் அமைந்திருப்பதைக் காண முடிகின்றன. வர்ணப்பாக்கள் சுதியுடன் கூடியவையாக விளங்குகின்றன.

அக்காலப் பேச்சுவழக்குச் சொற்களும் பிறமொழிச் சொற்களும் பாக்களில் தாராளமாக ஆசிரியரால் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண முடிகின்றன. பல சொற்களுக்கு எளிதில் பொருள் காண இயலவில்லை. கண்ணிகளாகவும் 2, 3, 4, 5, 8 ஆகிய சீர்களைக் கொண்டதாகவும் பாக்கள் அமைந்திருக்கின்றன.

பருவம் வந்த பெண்ணொருத்தி தன்னுடைய காதல் வேட்கையை வெளிப்படுத்தும் பாங்கில் தன்னைத் தலைவியாகவும், சகசி மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகவும் கொண்டு பலவாறு புலம்புவதை இப்பாக்களில் காணமுடிகின்றன. நவரசங்களை வெளிப்படுத்தும் பாங்கில் இப்பாக்கள் அமைந்துள்ளன. அரண்மனையில் நாட்டிய மகளிர் பலர் இருந்துள்ளனர். இவர்கள் மன்னனைக் காதலிப்பது போலப் பாடியுள்ளார். சில பாக்களில் மகளிர் பெயர் இடம்பெற்றிருக்கிறது. அதிலும் 'முத்துமோகினி' எனும் பெண்ணின் பெயர் பல பாக்களில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பெண் நாட்டியப் பெண்களில் தலைமை இடத்தைப் பெற்றவளாக இருந்திருக்கக்கூடும், சில பாக்களில் தாசி, வேசி, வைப்பு போன்ற சொற்களும் இடம்பெற்றுள்ளன.

எளிய சொற்களால் இனிமை தரும் கவிகளாக இவர் பாக்கள் அமைந்துள்ளன.

சகசி மன்னன்

இராமபாரதி பதங்களின் பாட்டுடைத் தலைவன். தஞ்சை மராத்திய மன்னர்களுள் ஒருவரான இவர் ஆட்சிக்காலத்திலேயே (1684–1712) பல்வேறு வகையான இலக்கியங்களும், கலைகளும் சிறந்து விளங்கியிருக்கின்றன. இப்பாக்களில் காணப்பெறும் மன்னன் தொடர்பான செய்திகள் இப்பகுதியில் ஆய்வு செய்யப்படுகின்றன.

சகசி, சாகபூபாலன், சாகேந்திரன், சாக மகிபாலன், சாக ராஜ, போஸலேந்திரன், ஸகஜி, ஸஹஜீந்திரன், அளகேசர், தஞ்சை ஏகராஜேந்திரன் எனப் பல பெயர்களால் அழைக்கப்பெறுகின்றார். போசலகுலத்தில் பிறந்ததைப் பல பாக்களில் ஆசிரியர் கூறியுள்ளார். ஏகோசி மன்னர் பலவாறு சிறந்த தவம் செய்ததன் காரணமாகச் சகசி மன்னன் பிறந்தார். தஞ்சை மாநகரைத் தலைநகரமாகக் கொண்டு தஞ்சை மராத்தியர் ஆட்சி செய்தனர். அதனால்

தஞ்சை ஊர்ப்பெயரையும் தங்கள் பெயருடன் இணைத்துப் புலவர்கள் பாக்களில் பாடத்தலைப்பட்டனர். இதனாலேயே அளகேசர், தஞ்சையில் வாழ்பவன் என்று பொதுப்பட எல்லா மன்னரையும் கூறியிருக்கின்றனர். அதேபோன்று இராமபாரதியும் பல இடங்களில் சகசி மன்னனையும் இவ்வாறு பாராட்டிக் கூறியுள்ளார்.

சிறந்த அறிவுடையவன்; அழகினில் மன்மதன் போன்றவன்; வில் வித்தையில் அர்ச்சுனன்; அமைதி தவழும் முகத்தினன்; இயல்பறிந்து இங்கிதமாகவும் இனிமையுடனும் பேசுவதில் வல்லவன்; கமல நயனத்தினன்; சோமவதனன்; காதல் விளையாட்டுக்களில் காமன்; காமத்தில் சிறந்த இவனைத் தழுவும் பெண்களுக்கு இணையானவன்; அழகே மறுபிறப்பு எடுத்து வந்ததோ எனச் சொல்லத்தக்க அழகினன்; இசையில் விருப்பமுடையவன்; இயலிசை நாடகம் அறிந்தவன்; உலகத்தைக் காக்க வந்தவன்; இராமபாரதி மேல் என்றும் அன்பு மாறாதவன்; இராமபாரதி எப்பொழுதும் போற்றிய தீரன்; தனகோடி கோடீசுவரன்; போசல குலம் தழைக்க வந்தவன்; உலக மக்கள் புகழ்ந்து போற்றும் பண்பினன்; பல நாட்டு வேந்தர்கள் பணிந்து போற்றும் இயல்பினன்.

தேவேந்திரன், இராமன், குபேரன்; கர்ணன், மன்மதன் போன்றவர்களுக்கு இணையாகப் பல பாக்களில் இராமபாரதி ஒப்பிட்டுக் கூறிப் போற்றியுள்ளார். தன்னை நாடி வந்த புலவர்களுக்கும், கற்றவர்களுக்கும் மற்றுமுள்ள ஏனையோர்க்கும் பல கொடைகளை அளித்துள்ளான். கர்ணன்தான் மறுபிறப்பு எடுத்து வந்து விட்டானோ எனக் கூறுமளவுக்குச் சிறந்து விளங்குகிறான். தமிழுக்கு எப்பொழுதும் உதவி செய்துள்ளான். அருட்கொண்டலே (49.26) என்றும், தர்மமே ஒரு தேகமாக வந்ததோ (74) என்றும், மாலெனும் கொடையாளன் (49.5) என்றும் போற்றிப் பாராட்டுகின்றார்.

மன்னன் கூற்றாக எந்தப் பாடலும் பாடப்படவில்லை. மன்னனை நினைத்துத் தன்னுடன் கூட வரவேண்டும் என்று பாவனை செய்து ஒருபெண் பாடுவது போலவே பாக்கள் அமைந்துள்ளன. இதனால் தலைவன் குலம், பிறப்பு, உருவ வருணனை, கொடைச் சிறப்பு, வீரத்தன்மை போன்ற பல அருங்குண நலன்களைத் தலைவி கூறித் தன்னை நாடி வரவேண்டும் என்றோ அல்லது தான் அவனை நாடிச் செல்லவேண்டும் என்றோ நினைத்துப் பாடுவது இயல்பு. இத்தகைய அமைப்பிலேயே பாக்கள் பாடப்பட்டிருக்கின்றன.

வரலாற்றுக் குறிப்புகள்

இரண்டாம் சகசியின் ஆட்சியின்போது,

"முல்லா என்பவருடைய கலாமும், சுலுபுகான்

(ஜல்ஃபிகர்கான்) என்பவருடைய படையெடுப்பும் நிகழ்ந்தன"[3]

இவ் வரலாற்று நிகழ்ச்சியை இராமபாரதி,

"முல்லா மரிக்குடந் பல பலாகானன்
முராரி ஜல்லியும் மத்துளார் முப்பது
சகஸ்ரம் துரங்கத் துடனே வந்து
மூர்க்கமாய்க் கோட்டை கொண்டு" (49.31)

என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு வரலாற்றில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அக்காலப் புலவர்கள் தங்கள் பதங்களிலும் பாக்களிலும் இடம் பெறச் செய்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழின் பெருமை

தமிழ்ப் பதங்கள் மட்டும் பாடிய இராமபாரதி இயற்கையிலேயே தமிழில் புலமை பெற்றிருந்திருக்கிறார். தம்மைத் 'தமிழ் ராமபாரதி' என்று தமிழோடு பல பாக்களில்[4] இணைத்துப் பெருமையுடன் பாடியுள்ளார். தமிழ், தண்டமிழ், செந்தமிழ், பைந்தமிழ், பன்னுதமிழ் என்று பலவிடங்களில் கூறியுள்ளார்.[5] தமிழ் மருவு தஞ்சைவாழ் ஏகோசிராசன் (50) எனக் கூறியவர் மற்றோரிடத்தில் தண்டமிழ்க்கு நவநிதி எனத் தருபவன் சகசி வேந்தன் (49.28) என்கின்றார். இராமபாரதி பாடிய தமிழ்ப் பதங்களை எப்பொழுதும் பாடிக் கொண்டாடு (1), தமிழ் சொலும் இராமபாரதி இசைப்பா மலரை அர்ச்சித்தனர் (72) என்ற பாடல் வரிகளைப் பார்க்கும்பொழுது அக்காலத்திலும் எத்தகைய வரவேற்பும் மதிப்பும் இருந்தன என்பது புலப்படுகிறது.

உவமை நலம்

எந்தவொரு கவிஞனும் தாம் பாடிய பாக்களில் ஏற்றவிடங்களில் உவமைகளைக் கையாள்வதில் சிறந்து விளங்கியிருக்கின்றனர். இவ்வகையில் இராமபாரதியும் தாம் பாடிய பதங்களில் பல்வேறு உவமைகளைக் கையாண்டிருப் பதைக் காணமுடிகின்றன. போல், போல, போலே, உவமை, என, எனும், ஒப்பு, ஒத்த ஆகிய உவம உருபுகளை இப்பதங்களில் காணமுடிகின்றன.

சகசி மன்னன் அழகினில் மன்மதன் போல இருக்கிறான் (72). இந்த

3. கே. எம். வேங்கடராமையா (ப. ஆ.), **தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு**, ப. 172
4. **இராமபாரதி பதங்கள்**, 16, 24, 39, 51, 49.13, 23, 52, 72, 67, 66, 74.
5. **மேலது**, 1, 16, 23, 24, 34, 50, 66, 72, 49.8, 3. 2, 7, 51, 72, 49.28, 52, 67.

ஓர் உவமை தவிர ஏனைய அனைத்து உவமைகளும் மகளிர் தொடர்பாகவே இடம்பெற்றிருக்கின்றன. பெண்ணை இரதிக்கும் (52, 74), பெண்ணின் முலைகளை இரண்டு மலர்ச்செண்டிற்கும் (53), எலுமிச்சம்பழங்களுக்கும் (25) ஒப்புமைப்படுத்திக் கூறியுள்ளார். பெண்ணின் நடனம் அன்னம் போன்றிருக் கிறது (53). அவன் என் வீட்டில் ஆசை போல வந்து மின் போன்றவளைக் கண்ணாட்டி (66) என்றான். என்னிடம் அளகேசர் போல நிதியம் உள்ளது; அதனால் என்னிடம் பாலும் நீரும் போல மனதாக அவர் கலந்தார்; அவளும் என்னைப்போல அடுத்ததாகக் கூடிக் கொள்ளட்டும் (72). அவள் பாடிய பாடல் முன்னாளில் காந்தர்வதத்தையின் இசைக்குரல் போல இருந்தது (74). ஒழுகு மலர்த் தேனை வண்டு உண்டது போல நான் அவனுடன் கூடுவேன் (64). காமனுடன் இரதி போல அவனுடன் நான் கலந்து சேருவேன் (33). என்னைப் போல இனிமேல் அவள் அவனுடன் கூடி அனுபவிப்பாளோ? (52). எப்பொழுதும் முன்போல என்னை நீ தழுவிக் கூடுவாய் (71). இச்சந்திரன் குளிர்ச்சியைத் தருவதற்கு மாறாக அனல் போல் சொரிகிறான் (32).

தலைவனும் தலைவியும் கூடியிருந்த நிலையை, 'மலைநீர் மடுவிலும், மடுவுநீர் மலையிலும் மாறினார்ப் போலே இருக்கும் இருவருக்கும்' (28) என்று கூறுகின்றார். ஒரு பெண்ணின் துயரத்தினை ஒருபாடல் முழுவதும் உவமை மூலம் ஆசிரியர் காட்டியிருக்கின்றார். அப்பாடல் வருமாறு :

"கந்தரம் கண்ட கேகய இனம்<u>போல்</u>
மின்னல் கண்ட கேதகை <u>போல்,</u>
ஸாக ரந்தனைக் கண்ட நதி<u>போல</u>;
மதியைக் கண்ட ஸாகரந் தன்னைப் <u>போலே</u>
. . . .
. . . .
மதிகண்ட இந்தீவரங்கள் <u>போல</u>வும்,
அறியநிதியங் கண்ட யாசகன்தனைப் <u>போல</u>வும்,
அன்னையைக் கண்ட சே <u>போல</u>வும்
. . . .
ஏகராஜன் குமார! ஸகஜிராஜ கம்பீரனே!
மிகவும் எனது துயர், பானுமுன் பனியாச்சு!" (48)

இறைவன் பெருமை

சிவபெருமான், திருமால், இந்திரன், அயன் ஆகியோர் பெருமைகள் பாக்களில் காணப்பெறுகின்றன.

சிவபெருமான் :– தஞ்சை மராத்தியர்கள் சைவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை பூண்டிருந்தவர்கள். திருவாரூர்த் தியாகேசர்மீது மிகுந்த பத்தி கொண்டிருந் தவர்கள். தலைவன் சகசி வேந்தனின் குலதெய்வமாகப் போற்றப்பெறும்

ஆரூர்த் தியாகேசரின் அருள் இப்பெண்ணுக்கு எப்பொழுதும் உண்டு (72) என்று கூறுகின்றார். இப்பதங்கள் இசையுடன் பாடி நடனமாடும் அமைப்பில் உள்ள காரணத்தால் நடனத்துக்குரிய தெய்வமாகக் கருதப்பெறும் நடராசர் பெருமையை இருபாக்களில் கூறியிருப்பதைக் காணமுடிகின்றது.[6] தேவர்களுக்குத் தலைவன், முப்புரங்களை எரித்தவன், உமைகேள்வன், மேருவை வில்லாக வளைத்தவன், மழுவினைத் தாங்கியவன், தலையில் திங்களைச் சூடியவன், விடையினை வாகனமாகக் கொண்டவன், கயிலை மலையில் வாழ்பவன் இந்நடராசப்பெருமான்.

திருமால் :– இவ்வுலகில் திருமால் போலச் சகசி மன்னன் சிறந்து விளங்குகிறான். மாலைப் போன்றவனே சகசி என்று இரு பாக்களிலும்[7] திருமாலோடு ஒப்புமைப்படுத்திச் சகசி மன்னன் போற்றப்பட்டுள்ளார். திருமால் எடுத்த அவதாரங்களுள் இராமர், கிருஷ்ணர் ஆகிய இரு அவதாரங்களும் அடங்கும். சகசி மன்னனை இராமரோடு ஒப்பிட்டு மூன்று பாடல்களில்[8] கூறியிருக்கின்றார். ஒருபெண் கூறுவதாக இடம்பெறும் வேறொரு பாட்டில் (72) 'அந்தப் புருஷன் (சகசி) நந்தகோபாலன், கோபியர்கள் மெத்தவர் பொருந்தும், ருக்குமணி நானடி அடியோ பெண்ணே' என்று காணப்படுகிறது.

இந்திரன் :– சகசி மன்னனை இந்திரனோடு ஒப்பிட்டுப் பாடியுள்ளார். தலைவனுடன் தலைவி கூடியிருப்பதில் உண்டாகும் மகிழ்ச்சி இந்திர போகத்துக்கு நிகரானது என்கின்றார்.[9]

அயன் :– ஒரு பெண் தலைவனை நினைத்துப் பலவாறு புலம்புகிறாள். அப்பொழுது அவள், 'என்னைப் படைத்த ஆண்டவன் (நான்முகன்) அவசியம் தனியாய்த்தான் இருப்பாய் என்று விதித்து விட்டானே' (4) என்கிறாள்.

ஏனையோர் :– இவர்களைத் தவிர வானுலகத்தில் உள்ள தேவர்கள், அமரர்கள் பற்றிய குறிப்பும் காணப்பெறுகிறது.[10] மேலும் மன்மதன், இரதி, அரம்பை ஆகியோரும் கூறப்பட்டுள்ளனர். அங்கசன், அனங்கன், கந்தர்வன், காமன், மதனன், மன்மதன், மதன், மாரன், சித்தசன் என்று மன்மதனும் ரதி, இரதி என்று இரதியும் அழைக்கப்பெறுகின்றனர்.[11] காதல் தெய்வமாகக் கருதப்பெறும் இவ்விருவரைப் பற்றியும், இவர்கள் செயல்களைப் பற்றியும்

6. **இராமபாரதி பதங்கள்**, 49.2, 49.10.
7. **மேலது**, 49.20, 49.24.
8. **மேலது**, 49.31, 57, 64.
9. **மேலது**, 30, 49.30, 40.
10. **மேலது**, 72, 49.10.
11. **மேலது**, 24, 51; 9, 49.1; 6; 17, 33, 35, 36, 39, 66, 68; 18, 24, 28, 30, 73; 1, 22, 44, 55; 24, 25, 73; 33, 72; 74; 15, 17, 21, 24, 25, 33, 41, 42, 52; 43.

பாக்களில் காணமுடிகின்றன. சகசியின் அழகுக்கு மன்மதனும், பெண்ணின் அழகுக்கு இரதியும் ஒப்புமையாகக் கூறப்பெறுகின்றனர்.[12] மதனாவதார என்று ஒரிடத்தில் (73) சகசி கூறப்படுகிறார். சகசி காதல் விளையாட்டில் சிறந்து விளங்கியதனால் மதனலீலன்[13] எனவும் அழைக்கப்பெறுகிறார். காதல் விளையாட்டுக்களை மதன கேளிகை (41) என்றும், ரதிகேளிகை (59) என்றும், ரதி லீலை (25) என்றும் அழைக்கக் காணமுடிகின்றன. மாலைநேரத்தில் மன்மதன் பருவமடைந்த பெண்கள் மீது மலரம்புகளை எய்கிறான்.[14] மன்மதனும் இரதியும் எவ்வாறு ஒருவரோடு ஒருவர் கலந்து இன்பம் துய்க்கின்றனரோ அதுபோன்று நாமும் இன்பம் துய்க்கலாம் என்று பெண்ணொருத்தி சகசியிடம் கூறுவதாகச் சில பாக்கள் காணப்படுகின்றன.[15] ஒரு பெண் காதல் விளையாட்டில் இரதியையே மீறி விடுகிறாள் (74). மன்மதன் விடுகின்ற மலரம்புகளை என் அழகிய கூந்தலில் சூட்டுகிறேன் (68) என்று மற்றொரு பெண் கூறுகிறாள். தேவேந்திரன் அவையில் நடனமாடும் பல மகளிருள் ஒருத்தி அரம்பையாவாள். ஒரு பெண்ணைப் பற்றித் தலைவனுக்கு அறிமுகம் செய்து வைக்கும்பொழுது 'இப்பெண் ஆடலில் ரம்பைக்கு ஜிவளே சமானம்' (73) என்று ஒப்பிட்டுக் கூறியதைக் காணமுடிகிறது.

கலைகள்

தஞ்சை மராத்திய மன்னர்கள் கலைகளுக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்து வளர்த்துள்ளனர். சகசி மன்னனும் பல்வேறு கலைகளை ஆதரித்துப் போற்றியமையை இலக்கியங்களும் மோடி ஆவணச் சான்றுகளும் உறுதிப் படுத்துகின்றன. இராமபாரதி பாடிய பதங்கள் அரண்மனையில் இசைக் கலைஞர்களால் பாடி நாட்டிய மகளிரால் ஆடப்பட்டிருக்கின்றன. எந்த இராகத்தில் பாடினர் என்பது போன்ற விவரங்களை அறிய முடியவில்லை. இப் பதங்களில் இன்ன இராகம், இன்ன தாளம், இன்ன தாளக்கட்டு, இன்ன சொற்கட்டு என்பது போன்ற குறிப்புகள் காணப்படாததே இதற்குரிய காரணமாகும். இப்பதங்களில் இடம்பெற்றுள்ள இசை, நாடக, நாட்டியக் குறிப்புகளை இப்பகுதி ஆராய்கிறது.

இயலிசை நாடகம் அறிந்தவன் சகசி மன்னன் (35) எனும் ஒரிடத்தில் மட்டும் 'நடனம்' இடம்பெற்றுள்ளது. பெரும்பாலான பாக்களில் இசையும் நடனமும் சேர்ந்தே காணப்படுகின்றன. சரளி இராகம், இராக மஞ்சரி ஆகிய இரு இராகங்களையும்,[16] ஆண் பாணர்களைப் பற்றியும் (28) சில பாக்களில்

12. இராமபாரதி பதங்கள், 7, 22; 49.22; 43, 52.
13. மேலது, 24, 28, 44.
14. மேலது, 6, 9, 18, 24, 33, 36, 49.1, 51, 54, 55.
15. மேலது, 17, 33, 42.
16. மேலது, 49.14, 49.6.

காணமுடிகின்றன. இசை, கானம், கவி, கீதம், சங்கீதம், பதம்,பாட்டு ஆகிய சொற்கள் இசையையும், அபினயம், ஆடல். நடங்கம், நடம், நடனம், நாட்டியம், பரதம் ஆகிய சொற்கள் நாட்டியத்தையும் குறிப்பனவாக இடம்பெற்றுள்ளன.

படகம், தம்புரு, துந்துபி, நாகசுரம், பறை, பேரி, மத்தளம், வீணை, பூரி, கட்டியம், சங்கு ஆகிய இசைக் கருவிகளின் பெயர்களும் காணப் பெறுகின்றன.[17]

இராக மஞ்சரி பாடினால் அது வீணையின் தொனியாகுமாம் (49.6); கந்தர்வகானம் பாடினால் அது தேகமெங்கும் அமிர்தரசம் பொங்குமாம் (28); சில பெண்கள் மாலை வேளையில் வீணை மீட்டுகின்றனர் (3). சில மகளிர் குரல் இசை போல இருக்கிறது (74); கலைமகள் போன்று ஒருபெண் பாக்களை இனிமையாகப் பாடுகிறாள் (25); இசை இலக்கணத்தில் ஒருபெண் சிறந்து விளங்குகிறாள் (73); ஒரு பெண்ணைத் துயிலச் செய்வதற்காக அவள் தோழி வீணை எடுத்து இசை பாடுகிறாள் (56).

படகம், பேரி, துந்துபி ஆகிய இசைக் கருவிகள் இசைக்கப்படுகின்றன. இவ்விசைச்கேற்ப மகளிர் நடனமாடுகின்றனர். நாகசுரம். வீணை, தம்புரை, மத்தளம் ஆகிய இசைக் கருவிகள் ஒருபக்கம் இசைக்கப்படுகின்றன. இதற்கேற்ப அரிவைப் பெண்கள் நடிக்கின்றனர். மற்றொரு பககம் கட்டியம் முழங்குகிறது. அருகினில் புலவர்கள் புடை சூழ்ந்து வருகின்றனர். மணிகள் பதித்த சிவிகைக்குள் இரகுராமன் போன்ற சகசி மன்னன் உலா வருகின்றான் (49.12).

தஞ்சை நகரில் எப்பொழுதும் துந்துபி,பேரி, பூரி, சங்கு ஆகிய இசைக் கருவிகளின் ஓசை கடல் போலவே முழங்கும் (49.13).

அம்பிகையுடனிருக்கின்ற சங்கரர் பாதத்தை மனத்தில் இருத்திச் சிவ பூசையை மறவாமல் செய்து நடனமாட வேண்டும் (49.2) என்று தன் மகளுக்குத் தாய் அறிவுறுத்துகிறாள்.

இசையிலும், நடனத்திலும் சிறந்து விளங்கிய இளம்பெண்கள் சகசி மன்னனைத் தலைவனாகப் பாவித்துப் பாடுவதாக அமைந்த இப்பதங்களில் அவனை எப்படித் தன்வயப்படுத்த முனைந்தனர் என்பதைச் சில பாக்களில் காணமுடிகின்றன. அன்போடு சரளிராக இசை பாடி அதற்கேற்ப நடனம் ஆடிடுவாய் (49.13). அன்னப்பறவை போலே நடனமாடி உன் மீதில் கொஞ்சிக் கொஞ்சியே பதம் பாடிடுவாய் (53). அந்தமாகவே பதம் பாடிக்கோ, அபினயம்

17. இராமபாரதி பதங்கள், படகம் (தம்பட்டம், முரசு), தம்புரு (கிடார்), துந்துபி (பறை), 49.2, 49.12, 66; பேரி (பேரிகை, முரசு), பூரி (ஊதுங்கருவி வகை) 3, 49.6, 56.

பிடித்துக் கொண்டாடிக்கோ (44). பெண்ணே! நீ அன்புடன் அபினயம் பிடித்தாடு! (41). சங்கீதவிதம் பாடவேண்டும், அபினயம் பிடித்து இங்கிதமாக ஆடவேண்டும், என் சாமிக்கு அந்தரங்கமாகக் கூட வேண்டும், ஒருமனதாக மகிழ்ச்சியாக விளையாடவேண்டும், உளவு சொன்னேன் (40).

நாட்டியத்திற்கேற்ற சொற்கட்டுகளுடன் ஒரேயொரு பாடல் காணப் பெறுகிறது. அப்பாடல் வருமாறு :

"திகணதோ ஜகணதோ தணந்தண
திகணதோ ஜகணதோ தணந்தண //
திக்ரு தத்தரிகி தித்தி த்திகிருதத் தரிகி
தித்தி த்திக் ருதத்தரிகி தித்தி //
தரிகிட தொதி யெனவுமே நடமாடு புங்கவர்
அமரர் னாதர் பணி ராஜ கங்கணர்" (49.10)

இப்பாடலில் நடராசரின் பெருமை கூறப்பட்டிருக்கிறது.

இயற்கை நலம்

பல்வேறு இயற்கைக் காட்சிகள், பொருள்கள் பாக்களில் ஏற்ற விடங்களில் இடம்பெற்றிருக்கின்றன.

மலர்கள் :- மல்லிகை, தாமரை, செண்பகம் ஆகிய மலர்கள் கூறப்பட்டிருக்கின்றன. பெண்கள் தங்கள் கூந்தலில் மலர்களையும் மல்லிகைப் பூவையும் சூடிக் கொள்கின்றனர் (17, 37). சகசி மன்னன் தன் கழுத்தில் மலர் மாலை சூடியிருக்கின்றான் (62). பெண்களின் முலைகளுக்கு மலர்ச் செண்டுகள் உவமையாகக் கூறப்பட்டிருக்கின்றன.[18]

மரங்கள் :- கரும்பு, தென்னை, கமுகு, வாழை, இலந்தை ஆகிய மரங்கள் கூறப்பட்டிருக்கின்றன.[19]

பழங்கள் :- பெண்ணின் உதட்டிற்குப் பலாச்சுளை உவமையாகக் கூறப் பட்டுள்ளது (28). மான் போன்ற இப்பெண் எட்டாத கனி எட்டினாப் போல உள்ளாகினாளோ (31) என்கிறார்.

பறவைகள் :- பெண்ணை அழைப்பதற்கு அஞ்சுகமும் (11), அன்னமும் (7) கூறப்படுகின்றன. அதேபோன்று பெண்ணின் நடைக்கு அன்னமும் (72,74), மொழிக்குக் குயிலும் (49.16), உதட்டிற்கு இந்திரகோபப்பூச்சியும் (30)

18. இராமபாரதி பதங்கள், 26, 34, 53.
19 மேலது, 11, 49.5, 74.

ஒப்புமையாக்கப்பட்டுள்ளன. மலரிலுள்ள தேனைக் குடிக்கும் ஆறு கால்களை உடைய வண்டே தலைவனை என்னிடம் அழைத்து வருவாய் எனத் தலைவி கூறுகிறாள் (11,64).

விலங்குகள் :- பெண்ணை மானே! என்று பல பாக்களில் அழைக்கக் காணமுடிகின்றது.[20] தவிரக் குதிரை, புலி, யானை ஆகிய விலங்குகள் கூறப் பட்டிருக்கின்றன.

பிற பொருள்கள் : – சூரியன், சந்திரன், குளம், நதி, கடல், மேகம், திசைகள், இராசிகள், காற்று, சோலை, மலை, மழை, மின்னல், வான் போன்ற பொருள்கள் கூறப்பட்டிருக்கின்றன.[21] மாலைப் பொழுதில் தோன்றும் சந்திரன் பருவப் பெண்களுக்குக் குளிர்ச்சியைத் தருவதற்குப் பதிலாக அனலைத் தருகின்றான்.

ஏனையன

மகளிர் :- பல பெண்கள் கூறப்பட்டிருக்கின்றனர். தையலே, பெண்ணே, மங்கையே, மாதே, மின்னே, முத்தே எனப் பொதுவாக இவர்கள் அழைக்கப் பெறுகின்றனர். பெண்களின் இடை கொடிக்கும், மின்னலுக்கும் ஒப்புமையாகக் கூறப்பெறுகின்றது. தோழியர் 'சகி' என அழைக்கப்பெற்றனர். சில பெண் களின் பெயர்கள் மட்டும் குறித்திருப்பதைக் காணமுடிகின்றன. அபரஞ்சி, முத்து மோகினி, ரோகிணி, நவநீதம் போன்ற இவர்கள் சகசி மன்னன் அரண்மனையில் அக்காலத்தில் நாட்டியம் ஆடுவதில் சிறந்து விளங்கி யிருக்கலாம். அக்காலத்தில் நாட்டிய மகளிராகத் திகழ்ந்த இவர்கள் பொது மகளிராக விளங்கியுள்ளனர். பாக்களில் தாசி, வேசி, வைப்பு ஆகிய சொற்கள் இவர்களைக் குறிப்பனவாக இடம்பெற்றுள்ளன. இப்பெண்கள் பருவ வயது அடைந்ததும் ஆண்களைக் குறிப்பாகச் சகசி மன்னனை எப்படித் தன்வயப்படுத்த முனைந்தனர் என்பதை இப்பாக்களில் இராமபாரதி கூறியிருக்கிறார். இப்பெண்கள் தங்களைத் தவிர வேறு யாரிடமும் தலைவன் சென்றுவிடக் கூடாது என நினைக்கின்றனர். கல்லும் இளகும்படிப் பேசுவதில் சிறந்த இவர்கள் பத்மினி குலத்தைச் சேர்ந்தவர்கள்; பதினைந்து வயதும் அதற்கும் மேற்பட்ட இளவயதுடையவர்கள். பஞ்சணையையும், கட்டிலையும் நன்றாக அலங்கரிப்பதிலும், தலைவனிடமிருந்து பொன், பணம், வராகன் போன்ற பொருள்களை ஏராளமாக வாங்கிவிடுவதிலும் திறமையுடையவர்கள். நாட்டுக்கு வேந்தனாக இருந்தாலும் இலவசமாய் எதுவும் கிடையாது, பலவந்தம்

20. **இராமபாரதி பதங்கள்**, 7, 8, 35, 46, 66, 68, 70.
21. **மேலது**, 24, 48, 49.2; 5, 6, 20, 30, 54, 67, 9, 36, 65, 7, 8; 49.6; 48; 49.2; 49.3; 28, 19; 4; 55, 68; 49.5; 28, 49.4, 49.21; 66; 48; 51.

எதுவும் நடவாது, பொன்னோ பணமோ தந்தால்தான் சேருவேன் என்று தெளிவாகக் கூறிவிடுகின்றனர். உதடு, கொங்கை போன்ற உடலுறுப்புக்களில் நகக்குறி பதிய வைத்த செயல்கள் பாக்களில் காணப்பெறுகின்றன. இப் பெண்கள் தலைவனைக் கவர்வதற்காகப் பல்வேறு ஒப்பனைகளைச் செய்து கொள்கின்றனர். கொங்கை மேல் சந்தனம், சவ்வாது கத்தூரி போன்ற நறுமணம் கமழும் பொருள்களைப் பூசிக் கொள்கின்றனர். கண்ணுக்கு மையெழுதி, நெற்றியில் கத்தூரி பூசுவதுமுண்டு. மாலை நேரம் வந்துவிட்டால் இவர்களை மன்மதன் படாதபாடு படுத்துவதாகப் புலம்புகின்றனர். பொதுவாக அக்காலத்தில் இருந்த பொது மகளிர் செயல்களை இப்பாக்களில் ஆசிரியர் கூறியிருக்கின்றார்.

ஏனையோர் :- கர்ணன், பீமன், அரிச்சந்திரன், காந்தருவதத்தை ஆகியோரும் கூறப்பட்டுள்ளனர்.[22] சகசி மன்னன் கொடைத் தன்மைக்குக் கர்ணனும், வீரத்திற்குப் பீமனும், உண்மை பேசுவதற்கு அரிச்சந்திரனும் ஒப்புமையாகக் கூறப்பெற்றுள்ளனர். ஒரு பெண் பாடுவதிலும் ஆடுவதிலும் காந்தர்வதத்தை போன்றும், மற்றொரு பெண் பாடல் பாடுவதில் காந்தர்வ தத்தை போன்றும் இருக்கின்றனர்.

நாடும் ஊரும் :- சோழ நாடும் தஞ்சை, ஆரூர் (72), மயூரம் (49.16) ஆகிய ஊர்களும் இடம்பெற்றிருக்கின்றன. சோழ நாட்டைத் தஞ்சை மராத்தியர்கள் ஆண்ட காரணத்தால் இம்மன்னர்களைச் சோழ நாட்டோடு இணைத்துப் புலவர் பாடியிருக்கின்றார் (44). தஞ்சை மாநகரைத் தலைநகரமாகக் கொண்டு மராத்திய மன்னர்கள் ஆட்சி செலுத்தினர். இதனால் இவ்வூர்ப் பெயரோடு இணைத்து இம்மன்னர்கள் பேசப்பட்டுள்ளனர். அளகை, அமராபுரம், தஞ்சாபுரி, தஞ்சை என்ற பெயர்கள் தஞ்சையைக் குறிப்பனவாகப் பாக்களில் இடம்பெற்றுள்ளன.[23]

பழமொழிகள் : - 'மதயானையைக் குணம் கட்டப் போமோ' (39), 'வெள்ளம் வருமுன்னே அணை கோல வேணும்' (35,39), 'உந்தன் பகட்டுக்கும் பாம்பாடாது' (16) ஆகிய பழமொழிகள் நாட்டியப் பெண்கள் கூறுவதாக இடம் பெற்றுள்ளன.

ஆடை ஆபரணங்கள் :- ஆடை, உடை என்ற சொற்கள் பொதுச் சொற்களாகக் கையாளப்பட்டுள்ளன.[24] சட்டை, சேலை (சீலை), பாவாடை, முந்தானை, இரவிக்கை ஆகிய ஆடைகள் மகளிர் அணிந்ததாகக் கூறப்

22. **இராமபாரதி பதங்கள்**, 30, 14, 16, 25, 47, 42, 74.
23. **மேலது**, 30. 40, 49.13/ 49.25; 50; 27; 9/ 12/ 25/ 26/ 38/ 44/ 49 5/ 50/ 52.
24. **மேலது**, 49.4, 49.15, 60.

பட்டுள்ளன.[25] சகசி மன்னன் கைகளில் ஆளி (49.22)யும், மார்பில் நீலப்பதக்கமும் (49.22) அணிந்துள்ளார். மகளிர் வளை (யல்கள்), சதங்கை, நவமணி, பொன்குழை, தோடு, முத்துமாலை போன்ற ஆபரணங்களை அணிந்துள்ளனர்.[26]

குறிகள் :- பெண்கள் கண்களில் மை தீட்டுவது வழக்கம். இதனை 'அஞ்சனக்குறி' என்று இராமபாரதி கூறியுள்ளார் (5,31). மேலும் பெண்கள் கைகளில் தந்தக்குறி, தந்த ரேகை, நகக்குறி ஆகியவை இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.[27]

திங்கள் :- "சாகேந்திரனே! நீ என்னைத் தேடி வருவதற்கு ஆடி, கார்த்திகை என்றெல்லாம் பார்க்கவேண்டாம். உனக்காகவே நான் மலர் சூட்டிக்கொண்டு விணை மீட்டிக்கொண்டு வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறேன்" (3) என்று ஒருபெண் கூறுகிறாள். இதில் ஆடி, கார்த்திகை ஆகிய இரு மாதங்களும் கூறப்பட்டுள்ளன.

எண்கள் :- 1, 2, 4, 6, 10, 15, 30, 50, 100, 10000, கோடி, சதகோடி ஆகிய எண்கள் இடம்பெற்றுள்ளன. ஒருமனது, ஒருத்தி, இருகை, இருமுலை, இருபக்கம், இருவிழி, ஆறுகால், அம்பது வயது, கோடி பொன் போன்றவை இவற்றுள் சிலவாகும்.[28]

உடலுறுப்புக்கள் :- இதயம், இதழ், உடல், உள்ளம், கண், கன்னம், காது, கால், குடல், குரல், கை, தலை, தொடை, தோள், நகம், நெஞ்சு, நெற்றி, பல், மார்பு, முகம், முடி, முலை, மூளை, வாய், விரல், விழி ஆகிய உடலுறுப்புக்கள் ஏற்றவிடங்களில் காணப்பெறுகின்றன.[29] இதயம் 'ஹ்ருதயம்' என்றும், இதழ் 'அதரம்' என்றும், உடல் 'அங்கம், ஆகம், சரீரம், தேகம், மெய், மேனி' என்றும், உள்ளம் 'மனது' என்றும், கண் 'நயனம்' என்றும், கன்னம் 'கபோலம்' என்றும், கால் 'பாதம்' என்றும், கை 'கரம்' என்றும், தொடை 'துடை, தாடனம்' என்றும், தோள் 'புஜம்' என்றும், நெற்றி 'நுதல்' என்றும், முலை 'கொங்கை, தனம்' என்றும், விரல் 'அங்குளி' என்றும் இடம்பெற்றுள்ளன.

பொருள்கள் :- சக்கரை, சந்தனம், சவ்வாது, சின்ன ஊசி, தேன், சொம்பு, கத்தூரி, பால், மெத்தை, மெழுகு, வெல்லம் முதலான பல்வேறு

25. **இராமபாரதி பதங்கள்**, 46, 10, 14, 59, 8, 22, 47, 61, 59, 61.
26. **மேலது**, 49.18, 73, 49.2, 25, 14, 74.
27. **மேலது**, 49.26, 27, 31, 31.
28. **மேலது**, 2, 9, 17, 10, 11, 16, 53, 49.31, 14, 72, 3, 49.12.
29. **மேலது**, 41, 17, 33, 35, 65, 13, 1, 14, 74, 73, 20, 37, 39, 27, 15, 22, 31, 67, 32, 43, 59, 6, 49.4, 42, 49.16, 49.6.

பொருள்கள் வீட்டில் பயன்படுத்தப் பெறுவனவாகவும் மகளிர் ஆண்களைத் தன்வயப்படுத்துவனவாகவும் இடம்பெற்றுள்ளன.[30]

சொற்கள்

அக்காலத்தில் மக்கள் வழக்கிலிருந்து பல்வேறு சொற்களை இராமபாரதி இப்பதங்களில் பயன்படுத்தியுள்ளார்.[31] இச்சொற்கள் பின்வருமாறு பிரித்து ஆராயப்பெறுகின்றன.

பேச்சுவழக்குச் சொற்கள் : – அடி, அந்தமாச்சுது, அவுது, அன்னேரம், ஆச்சுது, ஆவலாதி, இங்கிதம், இளப்பம், எலவிசம், என்னடி, ஏதடி, காமித்து, கூறடி, கைவசம், சமுகம், சிலவு, சும்மா, செத்தே, சேதி, சொல்லடி, தருணம், தோணும், நன்னாச்சு, பசப்பு, பாரடி/ பேசடி, போடி, மிஞ்சுது, மூட்டி, மேடி, ரா, வருவானடி, வெய்யில், ஜொலகம் முதலான 329 சொற்கள் பாக்களில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் சில பிற மொழிச் சொற்களோடு கலந்து தமிழ்ச் சொற்கள் போலப் பேச்சுவழக்கில் கையாளப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றன.

வடமொழிச் சொற்கள் : – அங்கீகாரம், அதிர்ஷ்டம், அவதாரம், இஷ்டம், கஸ்தூரி, கிரீடம், க்ருபால, சரஸம், சிலாக்யம், நிஜம், பந்தம், பக்ஷம், பிரகாசம், புருஷன், பெண் ஜன்மம், ப்ரசித்தம், மந்தகஜகமனம், ரஸம், ராஜ்யம், ரூபம், லீலை, லோல, வஜ்ரம், விசம், விஜயன், ஜயம், ஜலம், ஜோடி, ஸந்ததி, ஸாமி, ஸாது, ஸ்னேகம், ஹம்ஸம் முதலான 211 சொற்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் இரண்டு முறைகளை ஆசிரியர் கையாண்டுள்ளார். வடசொற்களை அப்படியே எடுத்துக் கொண்டுள்ளது ஒருமுறையாகும். சில சொற்களைத் தமிழ் எழுத்தில் கையாண்டிருப்பது மற்றொரு முறையாகும்.

பிறமொழிச் சொற்கள் :– இங்கிலீசு, சலாம், துரை, துரைத்தனம், பாச்சா ஆகிய பிறமொழிச் சொற்களையும் கையாண்டுள்ளார்.

அடுக்குச் சொற்கள் :– அடிக்கடி, அம்மஅம்ம, ஆகட்டும் ஆகட்டும், குடிக்குக் குடி, சிவசிவ, பளபளப்பு, மதமத, முறை முறை, ராம ராம, வேணும் வேணும் முதலான 39 அடுக்குச் சொற்களை இராமபாரதி கையாண்டுள்ளார்.

எதிர்ச் சொற்கள் :– அல்லும் பகலும், நரை திரை, முன்னே பின்னே போன்ற 10 சொற்கள் எதிர்மறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சிதைந்த சொற்கள் :– கொச்சைச் சொற்களாகச் சில சொற்கள் சிதைந்து காணப்பெறுகின்றன. இப்பிழை ஏடு பார்த்து எழுதுவார் செய்த

30. இராமபாரதி பதங்கள், 50, 24, 27, 26, 17, 20, 31, 52, 17, 24, 38.
31. இச்சொற்களின் பட்டியல் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

தவறாகவும் இருக்கலாம். அல்லது அக்காலத்திலேயே சில சொற்கள் சிதைந்தும் பயன்படுத்தப் பெற்றிருக்கலாம். இது ஆய்வுக்குரியது. அரிவையர் என்பது அருவையர் என்றும், செய்ய என்பது செய என்றும், தேங்காய் என்பது தெங்காய் என்றும், பைந்தமிழ் என்பது பந்தமிழ் என்றும், பாடும் என்பது பாறும் என்றும், பெயர் என்பது பேர் என்றும், போற்றிய என்பது போத்திய என்றும், நேரம் என்பது நாரம் என்றும், வியர்வை என்பது வெர்வை என்றும் சிதைந்து காணப்பெறுகின்றன. 49 சொற்கள் இவ்வாறு இடம் பெற்றுள்ளன.

இராமபாரதி பதங்கள்
ஸாஹஜிராஜனைப் பற்றியவை

ஆசிரியர்	:	இராமபாரதி
காலம்	:	கி.பி. 1684–1712
சுவடி இருக்குமிடம்	:	சரசுவதி மகால் நூலகம் தஞ்சாவூர்
சுவடி எண்	:	813 / 11654

மூலம்

1. மாதே என்னாசை தீராதோ
சாகேந்திரற் கென்மேல் மனதிலிரக்கம் வாராதோ
கோதையே யென்னாவல் தீராதோ
அவரருள் கண்குளிர என்மீதில் பாராதோ

இந்த ராவும் விடியாதே
மன்மதன் கையிலிக்ஷு வில்முடியாதோ
என்தன் மேல் மனம் பிடியாதோ
பெண்ணே நானெண்ணினபடி முடியாதோ /க/

இருவிழி தானும் தூங்கா(தே)
. . . .
துரை லீலைமன . . . .
தனியிருந்து சோகப்படவுந் தாங்காதே /உ/

ராம பாரதி தமிழ் பாடிக் கொண்டாடு
மகாராஜ ஸஹஜீந்திரன் தேடி

2. ஆகட்டும் ஆகட்டும் ஸ்வாமி!
என்திராணி அப்போது தெரியுமய்ய!

ஸாஹராஜ க்ஷிதி சந்திர
. . . .
பொருளென்று செக்கந்தம்பே . . . . .
தேவரீர்க்கவள் முத்தவளுக்கு
நீர் தேடக் கிடையாத வஸ்து
எனக்கென்ன ஆவலாதி யெல்லாம்
ஒன்று ரெண்டு பேருமய்யா
என் கண்ணெதிராக வேணும் காணும் /க/

நானே பெண்ணானால்
நீரிப்படி செய்வீரோ
நல்லததுக் கென்னம் பாச்சு
விருதா வார்த்தை தானே சொல்லி
யென்ன தெங்காயும் கல்லும் போல்
சந்தித்த பிறகவள் சமத்தறியப் போறீர் /உ/

செந்தமிழ் ராமபாரதி புகழ்ந்தருள்
ஸ்ரீ சாகேந்திர! வலியத்தேடி
முன்னென்னைச் சேர சந்தோஷம் வந்துதோ!
சொந்த மாய் எந்தோ . . . . . .
தருணி கிடைத் தாளோ
மருவிப் பாரும் போம் போம் /ங/

3. . . . . ணைச் சொன்னா லும்மை
நான் கூடுவேன் சாமி!
துடுக்கு நடப்பிக்க வேண்டாம்
துரையாம் சாகேந்திர!

ஆடி கார்த்திகை பாராட்ட
வேடிக்கையாய் மலர் சூட்டிக்கொண்டு
வீணை மீட்ட
கோடி பொன்னுடமை பூட்ட

சொன்ன படியே தொடுக்க
பொன்னைக் கையில் கொடுக்க
மன்னனையாக நடக்க
என்னுடன் கூடி அடுக்க

. . . .தி வினோத மாமெனுஞ் சொல் தமிழ்நீத சாமி!
ஸாஹேந்திர! என்னாத!
மாமுலையில் சேரப் போத

4. ஆருங் கொள்ளா மோகங் கொண்டேன் நானலய்ய
இப்படியே வஞ்சக மாமோ

தாரணி புகழும் ஏகராஜனை . . . . . .
ராஜதீர ஒய்யார!

நானொருத்தியுமோ பெண் பிறந்தவள்
நாட்டில் அபூர்வமோ நான் கொண்ட காதல்
ஆனாலு மிப்படி நிஷ்டுரம் செய்யவுமாமோ? பொருக்குமோ?
தானே தனியாக இருந்து வருந்தி
தயவாயினி மேவிய சந்தோஷம் நினைந்து
மீனமேஷ மெண்ணி வருவீர் வருவீரென்று
மற்றுமொரு நொடியும் துயிலாமல்

சிவசிவ முன்னை நான் யாரைப் பிரித்தேனோ!
தெய்வ மிப்படியே சோதனைக் கண்டுதோ!
அவசியம் தனியா யிருப்பா யெனவே
அயன் விதித்த விதியோ

கவன மனதுக்கு மனது சாட்சி யென்ற
காரண வார்த்தையும் கதையாய் முடிந்ததோ!
அவரவர் பூஜா பலத்தின் வழியே
ஆசை லபிக்கும் என்னளவில் கண்டேன்

ஸரஸகவி ராமபாரதி புகழும் சாமி
சாகரா . . . . . . தேய, சுர . . . .

5. எந்த வஞ்சி ஐயா இந்த சகை தந்தாள்
என்னுடன் சொல்லுமய்ய! ஸந்தத
வஸந்த! ஏக ராஜேந்திரன் தந்த குலசந்திர!
சோள ராஜ்யாதீச! . . . . . ரியாமல் துரைத்
தனம் பெருமை தன்னையும் எண்ணாமல்
வாளார் விழியினி ரஞ்சனக் குறியும்
மஞ்சள் வாடைகளும் மிஞ்சவே
தந்தவள் அம்ம அம்ம
மெத்தத்து . . . . வள் தேவரீர்
அதரத்திதே குறிபதறியே வைத்தாள்
சம்மதியோ அவள் எந்தவூர் எந்தபெண்
சரிபோன தோகையோ?
ஸ்வாமி குலாகையோ?
இங்கிதனே ராமபாரதி போத்திய
ஏக ராஜேந்திரன் இன்ன குமார!

சங்கீத லோல! ஸ்ரீ சாகேந்திர!
உந்தனைத் தக்கி வைத்துக் கொண்ட
சொக்கிப் பொடிக்காரி

6. ஆசை யானேனே சாமியுன்மேல்
ஆசை யானேனே

உன்னேசமு மறவேனே
போஸலகுல சந்திரதேச
சாக ராஜேந்திர

கந்தர்பனெய்ய
சந்திரனுமே: செந்தழல் பெய்ய
இந்த மாதர் வய்ய
நொந்துடலமும் தொய்ய
சிந்தை வளரு தய்ய
எந்த நேரமு மய்ய

நித்தமும் நாடி
யென்மீதிலொரு மித்து முத்தாடி
ரத்தியாய் விளையாடி
குத்து முலைமேல் கூடி
வைத்த தயவு தேடி
மெத்தவும் மனம் வாடி

காமியர் லீல!
கலியிலபி ராம!
கிருபால!

ராமபாரதி நூலாலோ மனம் புகழ்சீல!
மாமால் வந்தது போலாம் சாமி சாக பூபால!

7. . . . . தாலல்லோ தெரியும் அன்னமே!
நீ சும்மா சொல் லாகாது

நவமாரன் சாகேந்திர னென்னெப்
பிரிந்தாப் போலுன்னாதன் பிரியு. . . . .
. . . . னனாதனோ என்சாமி!
போகமும் ஸாமான்யமாகுமோ! பெண்ணே!
ஸ்நேகம் கிடைக்குமுன் செய்த
புண்ணியம் பரிபாக . . . . /உ/

மானே என் ஸாமியும் நானுங்கூட
நன்றாய் வந்தமதி யின்று செந்தழலாகும்

தானே கோவிம் . . . . . .ணை அறியலாம் /ரு /

சொல்லாரும் செந்தமிழ் ராமபாரதி
என்றும் துதிக்கும்
சாகராஜன் ஸ. . . . . . .
. . . . .வருக்கென்றே குழைத்தெடுத்த
கந்தம் பூசி படுத்தால் அறியலாம்

8. . . . . னோ மானே!
என் பிராணேசன் வாரானோ! மானே!

தாராளன் சாகேந்திரன்
தனுவேள் திருனாளுக்கு (வாரானோ)

து. . . . . டிகையினால்
முலையான கலச பூரணம் செய்ய
அலங்கிருதமெனும் பாவாடை முன்னே
விசத்து அம் . . . . ய்யவளமாய்
சப்ரக்குள மஞ்சலமங்களித்து கலரவமெனும்
பலகாகலம் பணிமார

தி . . . . .ம் சொல்லும்
சாகேந்திரன் ஹவாய் நிதம்
பரத உத்ஸவம் பணிமார

9. . . . . .யாகினேனே நானே
ராஜேந்திரனான சாகராஜ
நின்னையே நாடி
அனங்கன் கணையே தாடியாட
திங்கள் அங்கியாக இரக்க
னா. . . . . . ஆகினார் ஏசல் தேட
விடாய் இளங்கால் இருதனத்தில்
இடையே யேறினிட
என்ன இத்தனை ஜாலந்தானே
செந்தென் இத. . . . . திதேனே
அன்ன தாகம் தணியேனே
என்னை யணையா திருந்தால்
இனி யடக்கறியேனே
தஞ்சை ஏகராஜன் சயகீர்த்தி
தழைத்த ஸகஜிராஜ
அஞ்சனை யனத்தார் நேய!

ஆனைக்கானை யணைந்த தென்னவணைந்தால்
தானரா தேய

10. விந்தை யாச்சையா என்ஸாமி! மெத்த
விந்தை யாச்சையா

விந்தை யாச்சையா! சும்மாநீர்
வீடே வந்தீர் சேர
பொன் தந்ததுண்டானாலதற்கு சாட்சியுண்டோ!
திரனானெந்தனுடம் பையுமக்காய் எதற்காகநேர
பின் சந்தோஷமோ இலவிசம் சாகேந்திர!
ஒய்யார சாகர கம்பீர!
சகல குணாதார /க/

ஜாலம் கஸ்தூரி பேசுறீர்
கந்த கஸ்தூரி மேலில் பூசுறீர்
கோலம் செய்தால் உடமை சேலை
கொடுத்ததுக் கொப்போ!
என்போல் நாலு பெண்கள் முன்னே
இது நயமாகிய மெப்போ!
தெட்டிக்காலம் பொட்டுத் திரியவும்
கைகண்டேன் நான் வைப்போ!
இனிமேல் இதுபோதும் சும்மா
நான் மேவினால் தித்திப்போ!
மெத்தவும் உகப்போ!
வேசிமுன் பசப்போ! /உ/

காம ரூபனே! போஸலகுல தாமதீபனே!
சாமி யென்றால் மாதமாய்த் தானே
அழைத்தேனே; ஊர்ஓம
லடக்கி வீட்டுக்கும் உத்தாரம் சொன்னேனே!

கவிராம பாரதி வினுதரம்ய குணவானே!
சோழபூமி பாலசாக ராஜ பூபா . . . . . னே!

பொன் தந்தால் சேரு வேனே!
பொய் யெல்லாம் மெய் தானே

11. நீரிநில் தாராவே கண்கள்
நித்திரை தாராவே

சீற்பெறும் சாகஜியே வந்து
சேறிலா சாகஜியே

காவினி லஞ்சகமே ....
விரா வஞ்சுகமே

ஆவியாரம் புயமே
ஏனை மேவிலாரம் புயமே

தொயச் சலஞ்சலமே
யவர் தொயாத சலஞ்சலமே

ஆறு காலான வண்டே
இன்னை யழைத்து வாராய்து வண்டே

தேறும் களினீரே
கண்கள் சேரும் களிநீரே

கோலக் கரும் பனையே
கும் . . . . .ம் பனையே

சாலவி . . . . னாகமே
தென்னல்தான் போரா தென்னாகமே

பாரதி ராமன் மகிழ்சாக பதிமேவ
உத்யானமே
பி . . . . . . .மோ அருள் பாத்திலான் உத்யானமே

12. வந்தீரே! என்ன தந்தீர்?
பணங்கேட்டால் தந்துசேரப் பொருந்தீர்
சந்ததம் இப்படி சாலமே பேசுறீர்
சாகேந்திர! நன்னாச்சு!
லோகோப காரமாய் /க/

ஆசை . . . . . . .ன்ன என்னேரம்
சிணுங்கிறீர் ஆருக்குபகாரம்
பேசுமுப சாரம்
உடமையும் தூசுமானாலும்
உத்தாரம் தேசபாலனம் செய்
ராசர்க் கொருபணம் காசினி
லிப்படி நேசமுண்டோ சும்மா /உ/

இலவசமாய் சம்போகம் கிடைத்தால் நீர்மலிவீர்
அதல்லோ யோகம்
செலவுக்குக் கெட்டாலாகும் பொருந்தாது
ஸ்நேகமு . . . . . . வலிய துடைந்தாலும்
வாரா தொருக்காலும்
சலுகையாய் மென்மேலுந் தானே ஆசை போலும்

ராமபாரதி நுத! தஞ்சைஏக
ராஜனருள் வினோத! பூமி பாலனநீத! சாக
ராஜ பூபால! லோகனாத!
காமி என்வினோதம் கண்டீரே!
ஏதம் சாமி! நீ சங்கேதம்
தானாக வொரு மாதம்

13. .... தம் சேதிர்முன்னே புத்தியா யுமக்கு
சொன்ன பேருண்டோ சாமி

அருவை யவரும் மைவருந்தச் சேந்தீரோ
அப்படி யெனக்கு அதிர்ஷ்ட முண்டானால்
வருவா ரென்றெண்ணியே யென்னுட
மனதை மறக்கச் சொன்னாலும்
பின் மறக்கவு மில்லை
ஆறும்

14. .... அவளும் ஒரு பெண்ணென்று
நீராசை கொண்டீர் போம் போம்

அனுபவித்துப் பாரும் சாகேந்திரனே!
பளம்பஞ்சாரம் மெய்யாய் கொங்கையிணை
கூர்சத்தால் கூட்டிக் கட்டகிட்டி

அவள் தங்கை வயது பதினைந்து
தனக்கொட்டி ரெட்டி
பின்னங்கம் திரங்கின விந்தை
ஐயா பாரும் கிட்டி
இனி எங்களுக் கேது
முதியானுக்கிட்ட பொருள் நட்டி

பருவத்தில் தேடின தந்தப்பாவை முத்துமாலை
அதுக்கருவாகப் பாத்தால் தெரியும்
காதினில் பொன்னோலை மெத்தப்
பெரியசாமி சவுக்கார பிலுக்கரையில் சேலை
அந்தத் திருவை அம்பதுவயது சென்றார்க்கவள்பாலை

சுமுக ராமபாரதி சொல்சூட்டும் அபிராம!
சொல்ல மிதமான போஸல குலாப்தி எழும் சோம!
நல்ல கமல நயன! சாகேந்திர!
கார்ய பலபீம! இந்தர மணியை விட்டு
அவளுக்கு சரி போமா

15. அவளார் உந்தனைச் சேர்ந்தாளாரையா ?
சாகஜி பாச்சா

நரராஜ னென்றெண்ணாமல் நயமாய்
முத்தாடி திருநுதலில் கஸ்தூரி தீட்டினாள்
நகம் நாட்டினாள்
மதன சன்னதமாகி மலரணை மீதே
யதிக ரதி கேளிகை
யாடினா ளுன்னைப் பாடினாள்

இராமபாரதி புகழ் ராஜ சாகேந்திர
ஆமெனவே அணைந்தா லாசையோ
கொலுத் தாசியோ

16. வந்து பாரையா சிலுகையினால்
ஹரிச் சந்திர வசன தீர
சாகராஜ தீர

ஆறு நூறு தந்த துண்டோ!
உனக்கடக் கடக்கமான குடிகண்டோ!
வெல்லச்சாறு விகுராயிதம் டுவிண்டோ!
ரொக்கந் தந்தா லழைப்பேன்
கையில் தாராட்டாலும் பெண்டோ

பலவந்தமோ நடவாது
உந்தன் பகட்டுக்குப் பாம்பாடாது
மெத்தச் சலுகையானால் துக்கேது
மெள்ளத் தடவத் தந்தவர் குட்டத்
தாராரோ வெண்டிப் போது

மாமரு புவய சிங்கார!
ஏகமகிபதி யுதவு குமார!
தமிழ் ராமபாரதிக் குபகார!
சாக ராஜ கம்பீர!
தாரா மலமட்டிச் சேர

17. ஆசை யாகவே கூடி அணைந்தாற் போராதோ
வீசுபுகழ் குலவு போஸலகுல சுப்ரகாசனெனும்
சகஜிராஜ நரேசன்

முத்து முத்தாடி யிருமுலையில் நகம்னாட்டி
மெத்தை மீதேறி வேணவிந்தை பாராட்டி
சித்த மிளக்கி யிதழ் செந்தேனை யூட்டி

கைத்தலத் தாலணைத்து கரணவிதங் காட்டி
ஒத்தவயதில் ஒருமித்து வெகுசுரதரத்தி விளைத்து
முகத்தி லணைத்து /க/

விந்தை விந்தையாகவே மேவி விளையாடி
அந்தரங்கமொரு மையாக வுறவாடி
கொந்தலர் மலர்சூடி கூடிக் கொண்டாடி
சந்ததம் மெய்யில் கலாஸ்தானமது தேடி
அந்த வகையில் மனமுந்த . . . . . .ம் து
சுகந்த மணிந்து கலந்திட வந்து

சோமவதனன் அதிசுந்தர தீரன்
ராமபாரதி நுதராஜ கம்பீரன்
ஆமெனுங் கவிக்கருளு முபகாரன்
பூமிபால சாகேந்திரன் போஸல வீரன்
காமனோடு ரதியுமாமென உளவோடு
மாமயல் பெறுக என்னாமிகை தணிய

18. மோக மிகவானேனே
மோடி யென்மேல் செய்வானேன்
சாகராஜ பூபால! ஸரஸ ஸங்கீதலோல!

மதனன் கணையா லெய்ய
மதியம் செந்தழல் பெய்ய

ஆதனா லென்னுளம் தொய்ய
அடக்கக் கூடாதென் செய்ய

உன்னை நம்பின னானே
ஒருநாளும் பிரியேனே
என்னகுறை செய்தேனே
இன்னம்உன் பாரந்தானே

ஏகபூபதி பால! ராமகவிக் கனுகூல!
சாகராஜ பூபால! தழுவும் வஞ்சியர் லீல!

19. . . . . . . ளே பெய் விகுமோசம் காண்
மாதருக் கெல்லாம் தேசம் புகழ்
போஜல ராஜசாக நரேந்திர
இரவில்கண் . . . .
. . . . ஏதோ பிதத்தி
நகைக்கும் சரியாகிய மாதருடனே
பகைக்கும் திசையை நோக்கி காதலாகியே

திசைக்கும் . . . .

. . . .

. . . . தம்த . . . . திம்
யந்திரமாய் தானே எழுதினாலாடும் ஓங்காரம்
சோளபூ நாத வுன்னையே . . . . .ர்க்கும்
வாடும் மெத்தப் பொல்லாது

பைந்தமிழ் உரை ராமபாரதி
புகழ்ந்தருள் சம். . . . . . . .ஹேந்திர
எந்தன் மொழி கேளும் நீதி
யந்தபேய்க்கு நீ தந்திரமான
மந்திரவாதி நி. . . . .

20. மாதே என்னுட மீதே வாது செய்யாதே
காதல் பொல்லாதே

ஸாது ஜனாதர சாகமகிபதி தானெனை
நினை நானுனை நாடினன் / க /

அந்தி யெழுந்தருள் சந்திரனும் தழல் சிந்தினன்
சிந்தை குளிர்ந்து மகிழ்ந்தணை / உ /

சேர்ந்து வரந்த நிகர்ந்திதழ் தந்து
முகந்து சுகந்த மலர்ந்தணை / ௩ /

முத்த மளித்து முகத்தோ டணைத்திரு
குத்து முலைத்தடம் வைத்தொரு மித்தணை / ௪ /

மிக்க துடைக்குளிருக்கி நெருக்கி மயக்கியும்
மெய்க்கலையுள் கலையப் புணர் / ரு /

யிக்குட லொக்க முழக்க
யிதழ்குறி தைக்க நகக்குறி வைத்தணை / ௬ /

சொம்பு நிரம்ப நிதம்ப தடம்
பெருகும் படியின்ப நலம் பெறவும் புணர். / எ /

ஏகம .... கமு மாகவும் நீகதி
சாகமகீபதி நானிதம் / அ /

21. உந்தனைச் சேர்ந்தாள் ஆரையா ?
சாக ராஜேந்திர

நர ராஜ னென்றெண்ணாமல்
நயமாய் முத்தாடி

திருநுதலில் கஸ்தூரி தீட்டினாள்
நகம் னாட்டினாள்
மதன சன்னத மாகி மலரணை
மீதேயதிக ரதிகேளிகை யாடினாள்
உன்னை பாடினாள்

ராமபாரதி புகழ் ராஜ சாகேந்திரர்
ஆமெனவே அணைந்தா லாசையோ!
கொலுத் தாஸியோ

22. என்மேல் தப்பிதமோ உன்னுட மதமோ

மன்மதரூப சாகமகிப உன்வகைக் கென்ன
துரையானா லென்ன ? உன்மட்டு
நேத்துத் தோகைதன் முந்தானை தொட்டு
.... கரலாகுதர முத்தமிட்டு
வந்தீர் கண்டு சொன்னேன்
னெஞ்சில் கவடெல்லாம் வெளிவிட்டு

முத்து மோகினியோ அவள் சொல்லும்
கள்ள முக்காடு வாங்கியே நில்லும்
.... குத்தகைப் பெண்டோ வாரும் புல்லும்
அவள்குறி கண்டும் குறிக்காரர் கூடுவாரோ செல்லும்

புவிசேர் போஸலகுல வீர!
ஏகமகிபதி உதவு குமார!
ராமக விதாலங்கார! ஒய்யார!
முன்னே கலந்தீர் அது போதாதோ!
காணும் ஸஹஜிதிர (என்மேல்)

23. ஒண்டி ஒருத்தி யல்லவே
ஒண்டி ஒருத்தி யல்ல
பெண்டா யிருக்கவே உத்தண்ட மண்டலாதீச!
சாகேந்திர

கெட்டிக் காலம் பொட்டுத் திருநீரிட்டு
ரொக்கம் தருவார் போலே கண்காட்டி
செட்டுப் பாராட்டினால் சிலவுக் காமோ?
காஸாப்பட்டி தந்தால் எங்கள்பசி போமோ

அல்லும் பகலும் வந்தவெல்லச் சாறுவிட்டேன்
இல்லம் பிரியாமலே யிருந்துக் கொண்டு

கல்லு மிளகப்பேசி வெல்லும் படியாகவே
சொல்லும் வார்த்தை யுன்னைச் சோராமோ?

ஆமெனும் தமிழ்பாரதி புகழ் சோம!
சாகேந்திர! என் ஸாமி வாரும்
காமமதிக மானால் கலந்து சேரும்
பொன்னைத் தாமதம் செய்யாமல் தந்தால் வாரும்

24. மாதரசே! நீ தேடி
சாகேந்திரனுக் கோதி
யழைத்தோடி வாடி

ஏதடி என்மீதில் மோடி
தூது சொல்லிப் போ அவன் சமுகம் நாடி
காதல் வசமல்ல வெகு
வேதனை பொருக் கொண்ணாதென்
மீது தயவாகியுன் னாதரவுடனே (அடி)

இந்து கிரணங்கள் தாவ
அந்திதனில் வந்து மதன்கணை யேவ
நொந்து நொந்து குயில் கூவ
சந்தனமு மிந்தனங்கள் பால்நீவ
எந்தனது சிந்தை வெகு
செந்தழல் கலந்த மெழு
கந்தமென வந்த தொரு
சந்துசொலு சொந்த மென (உ)

மங்கையர் ஜனனம் கொரந்
தென்னலென தங்குமுள வரவிகாரம்
பொங்க முடனே யின்னேரம்
அவன் பாலென்னிங்கிதம் சொல்லவுன் பாரம்
கொங்கை யிணை, யங்கவர் புயங்களில்
நெருங் கரதி சங்கையுடனங்
கஜனிணங்க லெனவுங் குலவ (ரு)

ஏகராஜன்தரு பாலன்
தமிழ் ராமபாரதி சொல்சீலன்
தோகையர் மதனலீலன்
நீதிபர சாகராஜமகி பாலன்
ஏக சுகமாக யிரு
தேகமொரு தேனமென

வாக அனுராக ஸய்
யோக விதமாக வினி (சு)

25. அந்தா வந்தாளையா மெத்த
விந்தைக் காரி பாரும்

ஸந்தத வஸந்த தஞ்சை சாகராஜதீர!

பணை முலைகள் எலிமிச்சம்பழம் போலிருக்கு, மதன்
கணைப் பார்க்க வஞ்சியுட கண்ணினை நெறுக்கு
மெத்த மணம் வீசும் ஐயா!
அவள்தன் வார்குழல் சொருக்கு நல்ல குணமய்ய!
தேவரீ ராசை கொண்டுளம் செருக்கும்
ரதிலீலையில் அவனிராஜர் மெப்பு
நல்ல புதுமையான அபரஞ்சி பொன்குழையில் கொப்பு
அவளதர பானம் சற்கரையி லதிகமாம் தித்திப்பு
கீதமதுரவாணி தேவரீர்க்கு வரையாகிய வைப்பு

போஸல வம்சாதிகார! புதஜனோபகார!
சோள தேசாதிகார! ஒய்யார!
சிங்காரவதார! ஸத்யபாஷா ஹரிச்சந்திர!
தஞ்சை பதியினில் குபேர! ஏகராஜனருள்
சாகராஜ! ரம்யகுணஹார!

26. அந்த வஞ்சிதன் மீதில் நீராசை கொள்ளலாமோ?
ஸந்தத வஸந்த! தஞ்சை சாகராஜ தீர!

தருணி நல்ல பருவமோ? தனமென்ன
பூச் செண்டோ?உன் வரிசை யறிவாளோ?
நல்ல மரியாதை தானுண்டோ? நல்ல சுருவமோ?
அதரம் பலாச்சுளை தானோ? கற்கண்டோ?
இங்கே வருவது கண்டல்லோ சாமி
மையல் கொண்டீர் பெண்டோ

ராஜரீகமா முனக்கு ரம்யமவள் ஆமோ?
அவள் பேசுவதெல்லாம் கொச்சை
பிழை திருத்தப் போமோ? கொலு
தாஸிகளுக் கிவளையும் சரியாய்ச் சொல்லலாமோ?
சின்ன ஊசி தங்கமானா லென்ன
வொரு கோடி தங்க மாமோ?
ஏக ராஜனருள் மகாராஜனாம் கிருபால!
மிக்க னாகரிக ராமகவின வித்து மனுகூல!

தஞ்சை சாகராஜ மகிபால! ஸத்குண விசால!
மெய்விவேக! இல்லாள் அவளல்லாமல்
வேறு யில்லாது போல

27. வரவும் மனது கூடுமோ! தேவரீர்க்கிங்கே

வரவும் மனது கூடுமோ!
வஞ்சி உத்தாரமோ!
தரணி உதய சந்திர!
சகஜி ராஜ தேவேந்திர!

அந்த வஞ்சி தந்த தந்தரேகை
யுனக்கந்த மாச்சு தென்மனம் சந்தோஷமாச்சுது
விந்தைக் காரி யந்தச் சொந்தக் காரியை விட்டு
சிந்தை திரும்பி மெள்ள யெந்தன்வீதி வழியாய்

மாதவன் யிருமுலை மீதினி லணிந்திடு
சவ்வாது தேவரீர் புஜமீது வாடைவீச
சோதனை யறியனான் தூதியு மனுப்பாமல்
பாதாவ தானமாய்ச் சங்கீதம் பாடிக்கொண்டு

இன்சொல் ராமபாரதி இசைக்கும் தனகுபேர!
தஞ்சாபுரி வாழ்தீர! சகஜிராஜ ஒய்யார!

28. பஞ்சு சயனமீதில் கொஞ்சி யணைந்திரந்த
வஞ்சி யறிந்தால் மெத்த
மிஞ்சு மெச்சரிக்கையாய்

இன்னம் இவள் இளந்தை
தன்னை யறியா னாளில்
உன்னை யறிந்து மால் கொண்டாள்
ஒருசன்னை பாரும்நான் சொன்னேன்

ஏகராஜனுதவு சகஜிராஜ ராஜேந்திரனே!
என்ஸாமி! கொங்கை நவனீதத்தைப் பார்க்க, மிருது
இவள்தன் குலமும் பத்மினிகுலம் காண்
மேனி தங்கப்ரபை யல்லாமல் சிலேஷை ஸங்கீதம்

கந்தர்வ கானம் தேகமெங்கும் அமிர்தரஸம் பொங்கும்
ஆக்கிராணம் செய்தார்தங்கள் மோகசோகம் நீங்கும்
மெல்ல இங்கிதம் கண்டு னிஸுமனஸம்
முடித்தாப் போல் ரம்யமாகச் சேரையா வகைபாரையா

மலருக்கும் தருவுக்கும் வண்டினம்
ஒன்றானாலும் வகையறிந்து ருசிகாணும்

அந்த நிலமை போலல்லாமல்
ப்ரௌடனாயகன் உந்தன்னீதி அவளறிவளோ!
நல்லசு லலிதமாகவே, பஞ்சிட்டுப் பாரமேத்தி,
சுரதருசி காட்டியே, கூடும்
மலைநீர் மடுவிலும், மடுவுநீர்
மலையிலும் மாறினார்ப் போலே
யிருக்கும் யிருவருக்கும்

ஏகராசன் குமார! ராமபாரதி புகழ்
எங்கள் சஹஜி ராஜேந்திர!

// ஆசிரிய விருத்தம் //

அரியது ரகத்தில் இங்கார சத்தத்தினால்
ஆதிகேரள னடங்கம் அம்போனின் சினிவைத்தால்
தக்ஷிணாதிக்க அரசர் வலசைகள் வாங்குவார்
பரவி அதன்மேல்கொண்ட காலை யான் பாணர்கள்
பரங்கி இங்கிரீசு உலாந்தா பன்னுதின
மார்க்கரும் கப்பலேறி
காடுபா யிவர், அவதூ வாளமாய்
விரவி வடதிசையினில் நடத்திடில்
டில்லீசர்மேவு ஆகரையில் வேந்தர் மிக்க
கோட்டைகள் பவாடம் செய்வர் என்னினின்
விசய மொருவர்க்கு வருமோ

ஸரஸ வஞ்சியர் மதன! ஏகோஜி ராஜன்
தபோ பலப்ரபா சந்திர! சகராஜன் பணிபாத!
ஸகஜி மகராஜனே! தரியலார் கஜசிங்கமே

29. இந்தத் தோகையை வா .... தி சோதனை
அறிந்து பார் சுகமும்
அவளறியும் சசி போகாதிசயத்தினும்
அதிசய மாயிருக்கும்

புளகமும் சரியே யாகும்
உங்கள் யோக நிகராகவே
ஒருவிடத்திலும் காணேன்
ஒருவருக்கொருவர் சமானம் இதுநிதானம்

30. வந்து பாரும் அவளைநீர்
உகந்து கேரும் சந்திரமுக!
ப்ரஸன்ன, ஸஹஜி ராஜஸம்பன்ன

அதரமோ இந்திர போகம்,
அதிசயம் அவள் ரூபம்,
மதன லீலை யிலாபம்,
வரும் சாமிக்கு ப்ரதாபம்

உலகிலிவள் ப்ரசித்தம்
உன்மீதில் ஆசை சித்தம்
தலைவி அவளோர் முத்தம்
தந்தால் சுகம் கரஸ்தம்

இந்திர! அளகை ஊர!
ராமகவிக் குபகார!
சந்திர! கர்ணாவதார!
ஸகஜி ராஜ! ஒய்யார!

31. இத்தனை சந்தோஷம் கேட்க லாச்சுதே!
யான் செய்த புண்ணியம் அய்ய!

வித்வத் ஜனாதார! சாகராஜ தீர!
முன்னவள் குமக்குமன் யோன்ய
ஸ்னேக மென்று

முன்னே அறியுமோ யென் வீட்டி
லிருந்தந்த முத்து மோகினி மனதாய்,
என்னோடும் சொல்லாமல்,
அர்த்தராத்திரி யென்றும் எண்ணாமலே,
தேவரீர் கன்னியவள் சொன்ன சொல்லெல்லாம்,
புத்தியாய்க் கைக்கொண்டு, பின்செல்லவும்,
மின்னவள் ராஜரீக மாயிருந்ததும்
மெத்தவும் கேட்டேன்;
நின்னொத்திகை யாச்சுதென்று

மஞ்சள் வாடையான துப்பட்டியும்.
அவள் வைத்த தந்த ரேகையும்,
கண்ணி லஞ்சனக் குறியும்
அர்த சந்திரிகை போல் அங்கை நகரேகையும்
வஞ்சியின் நுதலில் தித்து கத்தூரியும்
மனங் குளிர கண்டேனே
உந்தன் னெஞ்சு குளுந்ததென்
சந்தோஷ மல்லவோ,
நேய மில்லாதவள் நேயமானாளின்று

மதுரகவி இராம பாரதிமேல்
அன்பு மாராத ஸகஜி தீர!
இன்று சுதின மய்ய!
அந்தத் தோகையா லுமக்குச்
சுகலாப முண்டாச்சுதோ!
வகையாக எட்டாதகனி எட்டினாப் போல்,
மானா ளுள்ளாகி னாளோ!
சாமி சுகமாயிருக்க யெனக்கது வேணது
துரைப் பெண்ணவளுன் மேல்
இரக்க மானா ளென்று

32. இந்த மோகம் அந்த சாமிக் கிரக்கம்
வல்லை யென்ன செய்வேன்
சந்ததம் புகழ்சேர் சாகராஜனுக்
கெந்தனிமை சொல்ல,
ஒரு சகியையும் காணேன்
என்னைப் போலே சிலமின்னாரும் புருஷரும்
இரவும் பகலும் பிரியாமல் கூடி;
வன்ன முலையு மார்பும் அழுந்தவே மருவியிருக்க,
நான் பெருமூச்செறிய
சோம கிரணந் தழல்போல் சொரிய,
காம சரமுமென் காயம் துளைக்க,
ராமராமவெகு காமினி யின்றென்னை
ஓமல் செய்வா ரல்லால்
உரைப் பாரைக் காணேன்
பஞ்சனதம் ராமகவி க்ருபாலன்
பாக சாஸனனாம் சாக பூபாலன்
வஞ்சியே! ஆதியில் சேர்ந்த
சுரதம் போல் மருவாமல்
யென்மனம் சருகாக வாட

33. மோக மிக வானேனே
மோடி யென்மேல் செய்வானேன்
சாக ராஜேந்திரனானே சாமி
உன்னை நம்பி னேனே
மலரெல்லாம் மாரன் புங்கம்
மாதர்கிதே யிலையோ யென் மெலந்தரங்கம்,
இணங்காய் யென்ன வில்லங்கம்

இரவும் விடியாதாமோ;
யென்னுடல் வாடி, ணோமோ;
பருவமும் வீணேபோமோ;
பராமுகம் செய்ய லாமோ

இராமபாரதி சொல் சீல!
ராஜசாக பூபால!
காமனுடன் ரதிபோலக்
கலந்துசேர கானலோல!

34. எந்த மாது? அவளை விட்டு வந்ததேது?
எந்தனைத் தொடாதே நில்லும்;
ராஜ சாகேந்திர! சொல்லும்

உன் மேலாசை யானாளோ!
உச்சித லீலை செய்வாளோ!
என்மேல் விந்தை செய்வாளோ!
போட்டி செய்தாளோ!
ஏது சொல்லி கலைத்தாளோ!

விரக முன்மீதி லுண்டோ!
மின்னா ளிதழ் கற்கண்டோ!
இருமுலையும் பூச்செண்டோ!
இளந்தை அவள்தான் பெண்டோ!

ராமகவி தமிழ் கொண்ட;
ராஜ சாகேந்திர உத்தண்ட;
சாமி சொல்லுமென்று சொன்ன,
தயவவள் மீதிலுண்டோ!

35. மானே! யவன்மீதில் யித்தனை
கோபம் வரவொண்ணாதடி

தானக்ஷாத் ராதீசன் சாகராஜன்
மனந்தனை நீ யறியாமலே,
காமனுக்குக் கண்கண்ட விடத்திலே
சகன வீதியில் பறக்கும் குதிரைக்கு
பூமியில் பள்ள மெடுண்டோடி,
நீயினி புத்தி யறியாயடி
சாமி ஹ்ருதயம் மதகஜ கமனம்,

ஸரச மறிந்தால் விரகரஸங் காணும்,
நீமன பேதமை யாலே,

நினைக்குறாய் நிஷ்டூரம்
மாத்திரம் லாபம்

துரைகள் ஹ்ருதயம் ப்ரமரஹ்ருதயம்போல் துலங்கும்,
வலிதத்தில் ரஸமே க்ரஹிப் பார்கள்,
கருமத்தில் வைரந்தனைத் துளைப்பார்கள்,
கைகண்ட தல்லவோடி, அறுவையே!
வெள்ளம் வருமுன்னே மட்டில்
அணை கோலவே வேணும்
அதில் காரியம் காணும்,
பருவ மோகந்தனை மிஞ்சுமோ,
இப்படி பதறினா லாவதுண்டோ!

இயல் இசை நாடகம் அறியும் சுமுகன்
ராமபாரதி புகழ் சாகேந்திரன்
தயவிருந்தால் போதும்
ஆரைச் சேர்ந்தா லென்ன
சந்தோஷம் உந்தன் மேலே,
நயமாய்ச் செய்தே அவன்
மனதுக்கேற்ற நடந்து போல,
அப்போது உடன் படிக்கை யாவன்,
ஐயமாக வேணால் னான் சொன்ன
வார்த்தைக் கொண்டு சித்தம் வரப் பேசுடி

36. மோகம் அடங்குதில்லை சாகேந்திரா,
என்மேல் மோடி செய்ய லாமோ சொல்லாய் சாகேந்திரா

ஆகமுலை மெழுகாமோ, சாகேந்திரா
என்னை யணையாத கோபமேது சாகேந்திரா

பேராசை கொண்டிருப் பாரோ சாகேந்திரா;
சும்மா பெண்ஜன்ம மாகுமோ சாகேந்திரா

ஊரோமலால் மெலிவேனோ! சாகேந்திரா;
வேரேஒருவர் துணையும் காணேனே சாகேந்திரா

திங்கள் செந்தழல் வீசுமோ சாகேந்திரா;
இளந்தென்னல் கொங்கையில் தாளமோ சாகேந்திரா

மங்கையர்க் கூடி பேசுமோ சாகேந்திரா;
உந்தன் மனதினில் தயவில்லையோ சாகேந்திரா

இரவும் நூறுக மாகுமோ சாகேந்திரா;
என்மேல் எள்ளளவும் இரங்காதோ சாகேந்திரா

ஹரிராம காதல் பொல்லாது சாகேந்திரா; .
நெஞ்சில் அடிக்கக் கூடாது யென்னை சாகேந்திரா

ராமபாரதி வினுத! சாகேந்திரா!
மலர்காமன் கணையால் வாடவோ சாகேந்திரா

மாமுலை மேலென்னைச் சேராய் சாகேந்திரா ;
நெஞ்சி . . . . வேணும் சாகேந்திரா

37. எத்தனைபேர் சகிமார்கள் சகியாமல் சொன்னால் என்ன ;
இருவர்க்கு மனமொன்று காண்

வித்வஜ்ஜன பரிபால சாகேந்திரன்
என்னை யல்லால் வேறோ ஒருத்தரை சேரான்

முத்து மோகனமே கண்ணே முத்தே
யென்றழைத்தொரு முத்தம் கொடுத்தே;
யிருமுலையைக் கையால் பிடித்து சித்தமிளகப் பாடியே,
கொந்தளகத்தில் கொத்து மல்லிகை சூடியே;
கரமெறுக்கி வைத்த தயவுனாடியே; அசிகையாக

ஒருனாள் கண்ட கண்போலே, ஒருமனதாய்,
இன்று எனது அருகில் வாவென்று மெள்ள,
அங்கீ காரமாய்ச் செய்யும்;
ஸரஸம் ஸம்மான மல்லவோ!
தவம் செய்தாலும் பரிவிக்கு சரிசொல்லவோ!
பேதகம் . . இது சுரத வகையால் வெல்லவோ!
கூடி புல்லவோ!

போஸலவம்சாதி காரன் ராமபாரதி புகழ்ராஜன்
சாகசிமகிபாலன் நேசமாய் அனுராகமாய்,
சரிபோகமான லீலை பூசல்முட்டு
உத்தியோகமாய் அனுகூலம் போல்

38. இந்த ஜாலமெல்லாம் எங்கே படித்து வந்தீர்,
இங்கே நடவாது போம் போம்

சந்ததம் புகழ் சேரும் தஞ்சை ஏகராஜேந்திரன்,
தம் . . . . என் சாமி

அந்திவேளை யென்வீட்டில் சந்தில்;
வந்து தேவரீர் ஹஸ்த கடயம் காட்டுறீர்;
வந்த பேதல்லோ னான் எந்தன் வீட்டில் அழைத்து,
. . . . .டுவேன் உன்னைக் கூடுவேன்

வெல்ல மென்று சொன்ன வாயெல்லாம் தித்திப்பாமோ!
விளையாட்டு உடைமை யாமோ!
எல்லை யில்லாத ராஜ . . . . . . லும்,
எனக்கதில் ஜோடியுண்டோ!
நானென்ன பெண்டோ!
தஞ்சை யாளும் குபேர!
ராமபாரதி புகழ் சகஜிராஜ! ஒய்யாரனே!
கோ. . . . . டில்,
ஒருஜாலிகை வராகன் கொடுத்திங்கே வந்துசேரும்,
வேடிக்கை பாறும்

39. இத்தனை யெல்லாம் வேணும் வேணும் காண்
வித்தகனாகிய சாக ராஜன் தன்னை;
மெத்த நம்பின என்சதுர புத்திக்கு
காமனுக்கு கண்கண்ட விடத்திலே,
கண்ட பூவெடுத்து முடித்தால் என்னை,
என் ஸாமி யென்றெண்ணினேன்,
தடவத் தந்தார் குட்டத் தாராரோ!
யென்றெண்ணி தானே நினைந்தான்
மதயானையை குணம் கட்டப் போமோ!
என்று வஞ்சனை யெண்ணாமல்,
நெஞ்சம் களித்தேன்;
பின் அதமா மென்றெண்ணினால்,
வெள்ளம் வருமுன்னே,
அணைக் கோல . . . . . யெஅறி . . . . . திக்கு
செந்தமிழ் ராமபாரதி போற்றிய தீரன்;
சகஜிமகிபதி கலந்து தந்த சுகத்தை,
நிஜமென்றே இரும் . . . . . .தலையில் . . . . . . ன்
தாழக் குனிந் தென்ன

40. மருவக் கிடைத்தால் அதுபாக்யம் என்சாமிகூட,
அருவையர்க் கதுவே யோக்யம்
ஆடப்போன தீர்த்தம் தெரியவந்தாப்போலே, சிலாக்யம்;
சாக ராஜனே! சுரதம்செய் நான் சொன்னேன்
குரு வாக்யம் புத்தி யிதுவே
ஸங்கீத விதம் பாடவேணும்,
அபினயம் பிடித்து இங்கிதமாக ஆடவேணும்,

என் ஸாமிக் கந்தரங்கமாகக் கூடவேணும்,
ஒருமனதாகப் பொங்கமாக விளையாட வேணும்,
உளவு சொன்னேன்
. . . . ஸிநேகம் தபோபலத்தால்,
வருவதவரவர் யோகம், என்சாமி ஒன்றாய்
சுரதம் செய்தா லிந்திர போகம்,
பெண்ணேஉன் . . . . நாகரிகம் உன்பூஜாபலம்

போஸல வம்ச பரிபாலன்,
அளகை ஏகராஜனாம் நிருபதி சொல் பாலன்,
இராமபாரதி மேல்நேசமாம், சாகேந்திர பூபாலன்,
உன்மீதில் அன்பாய் ஆசையானானே, அனுகூலன்,
அவனுடனே (மருவ)

41. ஆசை யாகவே யுள்ளாக்கிக் கொள்ளாயோ!
நேச மாகவும் என்னேரமும் அடியோ!

ராஜ சேகர னேகராஜ குமாரன்
தாச ரதிஸமான சாக பூபாலனை (ஆசை)

கொங்கையிணை திறந்து செத்தே மூடிக்கொண்டு,
கொஞ்சி கொஞ்சிப் பாடியே, அடியோ! பெண்ணே!
இங்கிதமுடன் வெள்ளிலை சுருள் கொடுத்தாலவன்
இதயமிளக நடந்தே அடியோ! பெண்ணே

பஞ்சை சயனமீதில் ஏறியிருந்தே அவன்
பாத கமலம் பிடித்தே யடியோ! பெண்ணே!
ரஞ்சித மாகவே அபினயம் பிடித்து நீ
ரதியில் மெப்பாகவே மதனகேளிகை யாடி

ஏகராஜ னருள் சாகமகி பாலன்
இன்பமாகச் சேர்வே யடியோ! பெண்ணே!
பாகிதழ் முறைக்கோதி யேக ஸம்போக
வைபோகமு மாகவே, நாகரிகமாக

42. மருவப் பருவமான வஞ்சி பாரும் சாமி!
விரக மானா ளவனை மேவிச் சேரும்

ஸரஸ விதரணகுண! கான லோல!
விருதஞ்சை நகர் மருவிய சாக பூபால!

கொங்கை யினை பூர்ணகும்பம் தனக்கொப்பு;
அவள் கோவை வாயதரம் மெத்த தித்திப்பு;

அங்கமோ குங்கமப் பூவிலும் சிவப்பு;
பாட லாடலிலே காந்தர்வ தத்தையில் மெய்ப்பு

மந்த கஜக மனம்போல் வாராள் பாரும்;
இங்கே வரவே சாமி!ஒரு கில்லாக்குத் தாரும்;
அந்த வஞ்சிக் கிப்போது தன்மையல் தீரும்;
கூடி யணைந்து மன்மதலீலை யாகச் சேரும்

ஏகச் சத்திர பதியான ராஜன் பால!
புகழ் ராமபாரதி போற்றும் கான லோல!
லோகஜன பரிபால! மிக்க சீல!
தஞ்சை சாக பூபால! கிருபால! ரதிலீல! (மருவப்பருவ)

43. ஒரு னாளோ பொருப்பேன் மின்னே!
என் சாமி விந்தை

இரதியே! சாக மகராஜனக் குள்ளாகி னானடிக்கடி,
யென் வளவினில் வந்து,
அவள்மேல் பதம் படிக்கச் சொல்லியே கேட்கிறார்,
குடிக்குச் குடி இளப்பம் கூறுறார்,
எந்தன் மடிக்குள்ளிருந்தே அவள் மகத்வம் உரைக்கிறார்

கிலுகு ஸப்ரமஞ்ச மீதிலேறுறார்,
மெத்தக் கிட்டி யவளுக்கா மெங்குறார்,
முலைக்குள் குறி வைக்கிறார்,
பரவசமாக னான் முத்தமிடப் போனால்
தன்முகம் திருப்பிக் கொள்ளுறார் (ஒருனாளோ பொருப்பேன்)

மண்டலீ கரகண் டோத்தண்ட
ஏக ராஜேந்திரன் மைந்தன்,
ஸஹஜி ராஜமகி பாலகன்,
கண்ட தரமுண்டு கைகலந்து கலவி செய்தால்
ரெண்டு பேர்க்கு சமரதியல்ல வென்று சொல் (ஒருனாளோ)

44. சேர வருவானடி, நான் சொன்னபடி,
தேனே! விளையாடடி

தரணிபுகழ் தஞ்சை சாக ராஜேந்திரனுன்னைச்

கொந்தளகத்தில் மலர் சூடிக்கோ,
இரு கொங்கை காட்டி சற்று மூடிக்கோ
அந்த மாகவே பதம் பாடிக்கோ
அபினயம் பிடித்துக் கொண்டாடிக்கோ (சேர)

பவனி முன்னெதிராகச் சித்தடி
அவன் பக்ஷம் வர இச்சகம் சொல்லடி
கவனம் அவன் மேலாக நில்லடி
உன்மேல் கருணை கூர்ந்தால் மெல்லக் கலந்தணைந்து புல்லடி
(சேர வருவானடி)

தேவ சோள ராஜ்ய பரிபாலன்
கீர்தி சேஷித்த ஏகராஜன் தருபாலன்
மேவலர் பரவிய பதசீலன்
ஜய விசய சாகேந்திர பூபாலன்
மன்மத லீலன் (சேர வருவானடி)

45. சகஜி ராஜேந்திர! என் சுகிருத பலமோ!
உன்மேல் பகுமோகங் கொண்டு,
நான் லகுபோகங் கண்டேன்

லகு மொசியானவள் பகுபோகம் அடைந்தாள்
உன் மகிமையோ! அவள் யோக வகையோ! என்சாமி!

யோக பலத்தினால் சம்போகங் கண்டாள் அவள்
நான் மோக பலத்தினாலே ஆகம் நொந்தேனே;
லோக தர்ம மிதுவோ, காகதாளி நியாயம் போல்
தோகையவள் கண்டாளே சாக ராஜேந்திர

உலகத் தாசைக் காசை சுலபமா மென்பார்கள்,
நிலவரம் கரதலா மலகம் போலாச்சே,
ஜலஜ நயனி பூஜாபலமோ! சாக ராஜேந்திர!
வலியச் சருவி அன்பாய்க் கலவி செய்தீரே!

ராமபாரதியின் சொல்தாம! நான
ராஜேந்திர! காமினி யென்பாலில்,
ஆமிகை தணிய சோமபான சமானமாமிதழ்,
அருந்தி நான் மாமயல் தீர,
அவள் நாமமே நினைத்தீர் (சகஜி ராஜேந்திரா)

46. ஆருக்காரு சொல்லடி அடியோ! பெண்ணே!
ஆசைக் காசை யேதடி!

தாருக்கு இசைந்த புயன் சாகராஜ பூபாலன்
தானே வஞ்சனை செய்தானே ஓ! மானே!

ஆதி நாளையில் சொன்ன உடன்படிக்கைகள் யெல்லாம்,
அன்னேரத்துக் கன்னேரமாய் மாதே போடி,

சுட்டடி மறைந்தாப் போல் மறந்தாசை யேது வறிந்து
எறவிட்டினி வாங்கல் போல் செய்தார்

காரியம் கொள்ள மட்டும் கனிந்து பேசியே,
பின்னை கைவசம் கண்ட சட்டையாய் வாரிஜமுகி!
அந்தவ . . . யுடனே யென்னை வம்பு சொல்லவே துணிந்தான்

போஸல வம்சாதிப போஜன் ஏகராஜேந்திரன் புதல்வன்,
சாகமகிபதி நேசமாய் செய்த லீலை,
நிலவர மென்றெண்ணின நீதி வெய்யில் மஞ்சளாச்சே

47. விந்தை யாச்சய்யா என்சாமி இது

சந்த தகனக வஸந்தக ஏக ராஜேந்திரன்
தந்த ஸஹஜி ராஜேந்திர ஹரிச்சந்திர

அந்த வஞ்சி முலை சந்தனப் பூச்சும்,
அவள் பேர் சொன்ன வுடனே நெடுமூச்சும்,
எந்த நேரமும் அவள் தன்னுட பேச்சும்,
எந்தன் முன் தேவரீர் வந்த கைவீச்சும்

விரகம் அவள் மீதிலே என்னுடன் செல்லும்,
வெல்லும், என் முந்தானைப் பிடியாதே நில்லும்;
பரவ மோகினி யானால் அவளுட னல்லும்
பகலும் பிரியாமலே பக்ஷமாப் புல்லும்

ஏசச் சத்ரபதி ராஜேந்திர ஜயரம்யகுண!
ஸகஜி ராய! உபாயா வாகா! வஜ்ரகாய!
வரிசை ராதேய! மனதவள் மீதிலே
மருவ வந்தாய்த் தூய! (விந்தையாச்)

48. . . . . தே எனது
பூஜாபலம் ஸபலமாச்சுதென் சாமி!

சுமுக! ஏகராஜன் சொல்லமுத குண வஸந்த!
துலங்கு ஸஹஜி ராஜேந்திர!

கந்தரம் கண்ட கேகய இனம் போல்,
மின்னல் கண்ட கேதகை போல்;
ஸாக ரந்தனைக் கண்ட நதி போல;
மதியைக் கண்ட ஸாகரந் தன்னைப் போலே
மேன் மேலே

. . . . என்னவே;
மதிகண்ட இந்தீவரங்கள் போலவும்,

அறியநிதியங் கண்ட யாசகன்தனைப் போலவும்,
அன்னையைக் கண்ட சே போலவும்;
. . . .
. . . . தார! ஏகராஜன் குமார!
ஸகஜிராஜ கம்பீரனே!
மிகவும் எனது துயர், பானுமுன் பனியாச்சு!
வேறு விசாரமு . . . .

49. 1 மோகமான யெந்தன் மீதிலே சாமி! நீ இந்த
மோடி செய்வது நீதியாகுமோ?

ஏகராஜனுதவு குமார! ராஜ!
ஸகஜி நரேந்திர! குண சந்திர!

ஆதிமுத லுன்னை நம்பினேனே;
அனங்கன் புஷ்ப சரத்தாலே யெய்வானே;
காதல் மனதி லடக்கறியேனே;
கருணை செய தேவரீர் பாரந்தானே .

சந்திர கிரணம் அதிக கடூரம்;
ஸகிக்கப் போகுதில்லை ஐயா! என்னேரம்,
மந்த மாருதம் வந்தே விசாரம்;
வருத்தும் மாலை நேரம்; சொல்லு முத்தாரம்

ஏகராஜன் தருகுமார! ராம பாரதி
புகழும் ஒய்யார! சாகராஜ தீர!
கம்பீர! ஸந்ததம் எந்தனை வந்து நீசேர

// வண்ணம் //

49 . 2 வேவ துந்துபிபேரி பூரி சங்கம்,
அனேக நாரமும் கடல்போலவே முழங்கவும்;
வாரி மகளாடன்னற் துளப மலராட,
வெற்றி நவமணி யாட,
உத்தபுய மாலொடு விதாதை,
பானு வம்பு ஆயாள் புரந்தர ராஜ
நிடுவண்டர்கள் யோகமே பெருந்தவ னாதர் ஒருபாலிருக்க;
நிசி சரதானவப் பிரளய முடனே,
அடித் துணைகள் சூடி,
மகிழ்வொடு தேடவும் சடையாட,
ஆதியம்பிகை யூடு யெ (ம) ம் மின்சபைனாடி
யாடு சங்கரர் பாதம் மனதார வைத்து

வெகு சிவபூசை நிஷ்டைதனை மறவாமல்,
வெத்தி புனை நீதி மனுவாகி,
உலகாள வந்து புகழ் தேடு மால் / க /

49 . 3 தேரு கங்கை ராமசேது கொண்டல் குலாவு, சேர்
மண்டலமோடு, பூமியும் பரிபாலமென,
வாகனஞ் சுருதி பரர் வாழ;
வெத்தி யரசர்கள் வாழ;
உத்தகுடி நீதியோடு வாழ;
ஏகமண்டல மாகியே புரந்த தயாளு,
வாசி, தந்திகள், சேனை தேர்களும்
திரளாகி யெதிராடி,
யுத்த மருவலர் தானைமைக்குறுதி நதியாக,
நற்சிரம தெவளை களுருதே,
யெனும் படியாக,
மினினம் கரமாக,
யானையின் தலை யாமையாமெனும் படியாக,
யிடையே பரிக்குலமும் முறையாக,
மத்தகஜ வுடல்கோடி தெப்பமெனவே,
கணபமெற,
ஹவார்க்க பந்தம் விளையாடவே / உ /

49. 4 ஆவலின் கோடியாடை கோடிசெங்கோடை யாடை,
தானு மங்கிலையாக,
மூளையும் குடலோடு மககாளி,
அப்படி யிலமுதா யளிக்க,
வெகுதிரள் பெகளிக்க,
ரணதாடி விளையாடும் ராகவன் சயக்கொடி
சூடு மிந்திர சமான மாமெனும்படி,
காணிலாத மண்டலராஜர் திசைநாடி,
ஒப்பனை களுடனிடு கப்பமுதவவும்,
விருஸத் புருஷ வாகன தியோகள்
ஆலையின் பொழி சாறு தேனுடன் கனி
பால் கலந்தது போல,
வாசகம் சொலி னாளும்,
அருகாகி,
உத்தரவி இரகள் தானினைத்தபடி,
வெகுவாம் பழித்த அறிவாளன் நரபோஜன்
மலைநேர் திரண்ட விரு தோளினான் / ந /

49. 5 ஆடினின்றிடு நாளி கேரமும் கமுகூடு
வாழை பைங்களை னிடிவானிலம் புலியோடு
திசையே மறித்த தனிலமுதே யெடுத்த குணமலவொரு
சித்தவகை தானெனவு மோது சோலையும் புடைசூழ,
மேடை மண்டப கோபுராதியும் புடைசூழ,
மாதரின் திரள்கூடி நடனாக மத்தினோடு, விளையாட;
யிப்புவியில் மராபுரத்தை நிகராகுமென விரி
ஆடகம் திராகி நீடு தஞ்சையி லேகராஜன் புருபாலன்,
மாலெனும் கொடையாளன், அறிவாளன்,
வெற்றி நெறி நிறையாளன்,
மிக்க புகழ் அளகேச னொத்துவளர் சாகஜி நரேசன்
மணியே! விளங்கு வரை மீதிலே / ச /

49. 6 பூவி லிந்திரையோ! மனோஜன் மங்கையரோ!
வினோத ரம்பையோ! அனேகர்தன் குருவோ!
என் விழியோ! விழிக்குளணி மணியோ!
ரஸத்திரளை யிதுவோ! தடித்தினுருவோ!
இதுவலாது, மோக சங்கிரமான ரூபரஞ்சிதமோ!
எனாவியுங் கனிகூறவே விளைந்ததுவோ!
என்னரசோ! யெனப் பரிபுறமோலிடப் புணையுமணியாம,
னற்களப மாமுலைக ளேறு பூணசைந்திட
நீடு ராக மஞ்சரி பாட,
வீணையின் தொனியாகுமாகுமென்றவ ரோத,
நிறை தாமரக்குளன்ன மெனவே,
வரதர் சமமுமான யிப்படி யென்னாவல் துணிவாக,
நலமாக, நின்று தனியாகியே / ரு /

49. 7 பூரியந் தனிலேது நீர் நடந்தினி வாரும்,
வாரும் உன் பணியேது சொலும்,
கிருபை யாகி மலர் சூடி,
உத்த திலகமுமே தரித்திடவும், வரவோ;
முலை துணையிலே களப வாடை தானணிந் திடவோ,
மனோகரந் தருதாள்களே பிசைந்திடவோ,
யெனாணை மிஞ்சுது மோகம்,
மதராசதுஷ்ட னெதிர் வருவானதற்கு முனம்,
எனதாவி ரக்ஷை செயவேணு வுளவூடுபூறை யென்னிடவே,
விசால மஞ்சமு ளேறி னாடி,
இங்கித மாகவே மகிழ்ந்துறவாடி,
யிலையே மடித்த சுருள் முறைக்கோதி,

முத்த முதவியும் னானும் உள் குழைய,
வாரு மிருனாளும் நயமாய் வருந்தடுமையாகவோ / சா /

49. 8 ஏவலஞ் சொலுவீர் பராமுகங் கொடிதே யானாலும்,
நம்பின பாவி பாவம் வஞ்சனை யாகில்,
யெனனே ரொருத்தர் பணிவிடையே செயத் துணிவர்,
அடியே னிடத்தி லென மோடி செய வொணாது,
பார்வையு கோடி தாலெனாவி நொந்து தயோ,
விவேக மென்கிலயோ,
ரஸாதரந்தனி லூரல் துளிகொடி கெட்டி பேரில்
உடனே அளிப்ப இதுசொலுவீரு சித்தபடினீர் கபடெணாமல்,
ஏழை யென்றெண்ண லாகுமோ;
நினைந்த தெலாம் எனாணை யின்றருள் வேனுன்
மீதிலுந் தமிழ் கோடி அவதானி ஒத்தபடி,
சகராக வித்தை வகை,
சரியாய் நடக்க வரும் லீலைவகை பாரும்,
நிலையாமல் நெஞ்சு தடுமாறுதே / எ /

49. 9 ஏது வஞ்சக மாசை கோரமும் பயன்னானிதானம்
அங்கையினாலே னாகமும் பிசைகாமல்,
உறவா யணைத்து மிருத்துடையே நெறுக்கி
மதமத தானியத் வஜமும் னாட,
உளவாகி வாலுவஞ் சரியாக,
ரூபமுஞ் சரியாக, ஆசையுஞ் சரியாக,
யேடையின் கணிலேறி, விருதா விரிக்கி,
லொருவரு மென்மதிப்பர் னமை விளையாடுதெற்கு நினையாதபடி,
யேது யென்மனங் கொடிதாகி,
வாய்த் திறந்துரையிற் எனாமல் . . . . து
னாணமிங்கினியெது வுரைவாயில் முத்தமினி வுகுமோ,
இனிக் கடினம் நடவாது கிட்டவரவே னெனையும் வாரும்,
நிலவா . . . . .ந்தே சுக வேளையே / அ /

49. 10 திகணதோ ஜகணதோ தணந்தண,
திகணதோ ஜகணதோ தணந்தண
திக்ருதத்தரிகி தித்தி த்திகிருதத் தரிகி,
தித்தி த்திக்ருதத் தரிகி தித்தி
தரிகிட தொதி யெனவுமே நடமாடு புங்கவர்
அடாரர் னாதர் பணி ராஜ கங்கணர்,
சைலத்தி பரசத்தி யுமை,

தற்பறை யிடத்தற்பவளத் தனுவில் மிக்க தவளவிபூதி,
தினமுமே யணிபுராரி திங்களோடருகு
தாதகிது ரோணமும் புனை சடிலத்தர்,
விடையத்தர்,
கனகக்கிரி வளைத்தனுவத்தர், மழுவத்தர்,
கயிலை னிவாஸர்
இருபாதம் மனதில் மறவாத கார் / ஒரு கலை /

49. 11 திசையில் மாகதர், மராடர், சிங்களர்,
திரவிடர், கேரளர், கல்யாண கோங்கணர்,
மகுதக்கு தகுச்சரிக பப்பர துலக்கர்,
திரளொட்டியர்கள் மிக்க வரசர்கள் கோடி;
கனக மாடை, பரி, யாடைத் தந்திகள்,
சிவிகை, பூஷணம், அபூர்வ மங்கையர்,
மகுடத் திரள்கள், ரத்ன கடயத் திரள்கள்,
முத்த வகையைத் திரைக் கொடுத்து, மடிமுடியூடு
தினமுமே யவர் சலாமெனும்படி,
பணிவர் வேணு மெனவே,
வணங்குவர் மனதிஷ்ட முமத்தி வரிசைப்படி
கொடுத்து மனுவில்ப்படி யளித்த விஜயஸமானன்
எதிராளார்ப் பரவுயிரு தாளினான் / கலை 2 /

49. 12 அமலமார்ப் படக பேரி துந்துபிட மடமாய மெனவே,
நடம் பயிலிவுளித் திறளும்,
மத்த கயனர் தொகையும் மிக்க கொடியிற் பளபளப்பும்,
அதிரத ராஜர் சிவிகைக் கொடிகள் குலார வண்டிலும்
முரளினாககுரம் வீணைத் தம்புரையொலி மத்தள முழக்க,
அருவைக் குளுனடிக்க,
யிருபக்கமு மிகுத்த,
கவரிகள் வீச,
அரசவீரர், சதகோடி பண்டிதர்,
வடுகராரியர், படாணி பொந்திலர்,
பவனிக்கு ளொருமிக்க,
வெகு கட்டிய முழக்க,
மணிமெத்த சிவிகைக்குள் வரு ரெகுராமன்,
அருகூடு கவிஜனர்கள் குழுமால் / கலை 3 /

49.13 அணிகளான மணிமேடை மண்டபம்,
அதனிலேறி மடவார் நடம்செய,

யிருத்தலம் விரித்த பின்னயத்தொடு பிடிக்கு
மலருத்தளி களிப்பின், அவைதனி லேற;
எகினமெயின மிதாமெனும்படி, புடையிலாட,
புளகாதி கண்டிளமையில் சுத்த வுரையிற் குயிலர்கள்
சுத்தமதியுத்தனி லவிகலிளகவுப் பெருமைகள் குலாவுஅளகை,
ஏகமகராஜ ஸந்ததி தமிழில் ராககவி பாடல் புனையதிக,
பிரபலன், மிக்க குடையின குணம் வணக்கம்,
அருமைப் பெருமைப் பெற்ற சகஜி னரேசன்,
அருள் போல வளர், வரையின் மாதரார் / கலை 4 /

49. 14 சுகபிகாதி விளையாட அந்தியில் நிலவுலாவ
விளவாடையும் குளிர்தர நற்பரிமளச் சுமன
சத்துணர்கள் கட்டி நிறை தெத்தி யதனுத்த
புளுகள் பூசி மலரின் மேடைதனை னாடி,
அன்போடு சரளிராக விசைபாடி,
நின்றதி மலரைச் சொரிகி மிக்கக் களபத்திரள்தரித்து
நடனத் தொடருகுத்து, விரக வினோத சுரதமோ
கனசமான ஏஞ்சித வனித யாரென் மடி மீதிருந்
தொருவிளை வெத்திலைகள் மொக்கி நிறைகர்பூர
அருத்தி யெதிரில்ச் சுருள் புதட்டி,
மொழி தடுமாறி மருளாகி;
மதலகரி யேறியே / கலை 5 /

49. 15 சுதையிலே தெளியவே கடைந்த திலரிய
தேனினை விளாவி ரஞ்சித முறுமுக்கனி னிறைத்து,
வெகு சற்கரை நிறப்பி மதுரித்த அதரத்தை
முறை முறைனிவி அவுதுமெலு பளிரேயி தெண்ட
திவித வினோதமொடு தாடனஞ் செய்து
மொருவர்க் கொருவர் மெச்சி,
யிரு கைத்தல மணைத்து மருமத்தினில் நெறுக்கி
யிரு தனமொடு துளையவே நகமதால்
வரைந்ததி புளக ரோம வரவே
யணிந்திடு முடையை தளரவிட்டு,
யிரு போர்த் துடை நெறுக்கி,
மதனத்வஜ நிறுத்தி,
வெகு விசையாகி,
மன்தாசை பெருக விளையாடியே / கலை 6 /

49. 16 வகைய தான குயில்,

வாடை செண்பகம்,
அளிமயூரமுட னொதிமம் பிரவொடு
குக்குட மனைத்து மிடரத்தொலி யெழுப்பி,
முகமுள் குளிர்முத்த முதவிய னேக கரிக
ராதி வுடனான அங்களி சுரதம் னாடி,
இடபாரி சந்தனில முதத்துளி தெரிப்ப,
னயனக் கடை சிவப்ப,
அதரத் துணை வெளுப்ப,
மணி யணியாட, மனதுகூற,
மததாணி யின்த்ரவ ஜலமு மூற,
யிருபாணியுந் தொடி யொலி யசற,
சரக்தி விளையத் தமி மிருப்ப,
மனதிச்சைகள் பெருக்கி,
யமளியின் மீது
உரிதான் உபரி நினைவாகியே / கலை 7 /

49. 17 வளரும் மாமுலைகள் னிடுபந்தென்,
மருமமிதா விளையாடவும்,
பணிசிதறிச் சில தெரிப்ப,
யிருபத்ம சரணத்தில் அணியில்சில தெரிப்ப,
வுடல் வெயர் வாட,
முகமதார்த்திலத வெர்வை சிந்திட,
யிருகையால் நகமதா லெரிந்தபின்,
முகுரக் கவுள் தூக்கி,
நிறையப் பரிமளத்தை யிதழொத்தி யுளமெச்சி,
வெகு களையாகி,
மதன வாரிகள் குபீரெனும்படி,
பெருகி யாறி றனவு மோடி,
மஞ்சமும் னனைத்துடை அணைக்குள்
மதிபட்டில் வதற்கு தெனபுத்தி யெனவுத் தவவச சலாபம்
ஒரு னாளும் மனதில் மறவாததே / கலை 8 /

// கலித்துரை //

49 .18 குலையார் விழிபொழி னன்னீர் கரவளைக் கூபமதில்
நிலையாகத் தன்முக மதிகாண நிலாமதி யென்
றுலையாம் மெழுகொத்த பேதையையா! புகழோங்கிவளர்
சிலையார் சகஜி நரேந்திர துரைகள் சிகாமணியே! (க)

49. 19 மானார் விழிவஞ்சி மன்மதராஜன் மலர்க் கணைக்கும்
வானார் மதிக்கும் வருந்துவளோ உந்தன்மாலை நல்காய்
நானா கலைக்கு ணாவளகை நரபதியே
தேனார் சகஜி நரேந்திரா துரைகள் சிகாமணியே! (உ)

49. 20 நிறக்கும்ப மாமுலை மீதேமதிய நிலாப் புலிங்கம்
பறக்கப் பதைக்கு மிப்பேதை கண்டாய் முன்பதங்களையே
மறைக்கத் திகிரியையே வியமாலென மண்டலத்தில்
சிறக்கும் சகஜி நரேந்திரா! துரைகள் சிகாமணியே! (ந)

49. 21 வாராருங் கொங்கை மலைமேல் விழியில் வழிந்தொழுகு
நீராரவாடி வருந்துமென் பேதை நிசி சரந்தன்
போரார் களத்தில் திரியம்பகன் போன்று புகழ்படைக்கும்
தீரா! ஸகஜி நரேந்திரா! துரைகள் சிகாமணியே! (ச)

49. 22 கடய மெங்கே செய்ய நீலப்பதக்க மெங்கே ? வஜ்ரம்
பதித்த கையாளி யெங்கே? மிக்க மையலினால் கச்சுப்
பதிந்த முலைக் கோதைகை பத்திக் கண்டனற்பச்சகொடி
மதனே! சகஜீந்திர வரோ தயனே! (ரு)

49. 23 பிணைக்குந் துணைமுலையாள் மிகவே யணிந்திடும் பாளிதமோ
டணைக்கும் குறியுன் புயத்தில் கண்டேன் அவளாற் சிலது
கண. . . . . தெரிம்வற் போலே உறைத்தனே காண்புகழால்
முணக்கும் சகஜி நரேந்திரா! அளகை வரோதயனே! (சா)

49. 24 வேலார் விழிக்கொடி யுன்பால் திலகமும் தீத்தயவள்
மேலாய் கஸ்தூரிகள் நீபூச கண்டொருமெல்லி சொன்னாள்
நாலா கலையும் தெரிவாருக்கே இது நியாயமல்ல
மாலாம் சகஜி நரேந்திர! அளகை வரோதயனே! (எ)

49. 25 பொன்னாளி யொன்று சரப்பளிக் கொத்தொன்று பூணவந்த
மின்னாளுக் கிந்த வகைகளெல்லாம் சிலமெல்லியர்கள்
சொன்னர்
அதற்கடையாளம் கண்டேன் புகழ்சூழ் அளகை
மன்னா சகஜி நரேந்திர! புவிக்குள் வரோதயனே! (அ)

49. 26 செண்டார்முலை வஞ்சிதன்பாற் வரிசைகள் செய்த தெல்லாம்
கண்டாருறைத்த தப்பரை யாக்கி கருத்தில் வைத்தேன்
உண்டாக்கி தந்தக்குறி காட்சி வந்தனை உத்தமமே
அண்டார்ப் பரவும் சகஜி நரேந்திர! அருட்கொண்டலே! (கூ)

49. 27 முத்தார் நகைச்சியை யென்மீதில் போட்டிக்கு மூட்டியெதிர்
வைத்தாய் யிதுவென்ன மானுஷமோ! இந்த மண்டலத்தில்
சுத்தாற் கடற்குள் ளடங்காமல் திக்கைத் துளைத்தென்றும்
வத்தாத கீர்த்தி பெறும் சகஜீந்திர! வரோதயனே! (ய)

// தாழிசை //

49. 28 மண்டலிகர் பணி ஏகசத்திரபதி ஏகபூபதி குமாரவேள்;
மான்ய போஸல குலேந்திரன் மிக்கனறை
வகையுந் தெரியல் மார்பினான்
தண்டமிழ்க்கு நவநிதியெனத் தருக்ருபால சீலனனுகூலவேள்
சகஜி ராஜமகி பாலனன்பினொடு
தைய்யல் மையல் தணியாத னாள்
விண்டலத்தில் மதியங்கி கொட்ட,
இளவாடை யூத மதராஜனோ;
மிக்கவாளி யெனு மிந்தனங் கொளுக,
மென்முலைத் துணைகள் குவையுமாய்;
அண்டிநிண்ட சகிமார்கள் சொல்வசைகள்;
மந்திரமாக மதராஜனாம் ;
அக்னிச் சோத்ரி வெகுவேள்வி செய்தவகை ;
யகில மீதினி லபூர்வமே (க)

49. 29 காருலா வுகர, பாரி வாரிஜ,
மடந்தை தங்கிய புயாசலன்;
கனதை யெத்துவள் போஸலேந்திரன்,
உயர்க் கவியருக்கு நவநிதி யென்னான் ;
பாரினில் புகழ் நிறுத்தி வைத்து நிலை
யிட்ட சாகிஜி மகிபனென்;
பாவை மய்யல் தணியாதிருப்பதென
பாவமோ வுரையு மன்னமே ;
ஆறு மத்தவர்கள் போலவே தனி,
வெதும்புமோ நெடிதுயிர்க்குமோ;
ஆரமெண்ட தையகோரமெண்டு
பின்னரத்துமோ வுடல் வெயர்க்குமோ;
மார ராஜ கரம் மண்டி ராஜகர
மில்லையோ வென வினைக்குமோ;
மையல் கொண்டவரி லிங்கிவர்க்கு நிகர்;
வையகத்தி னிலபூர்வமே

// ஆசிரிய விருத்தம் //

49. 30 உனது மதயானை ஐராவதம்
உன் குதிரை யுச்சைச்ரவச மானம்
உனது கையிலே பிடித்திடு சுவர்ணகட்கமோ
உம்பர்கோன் வச்சிராயுதம்;
அவரதநீ தொட்ட சிங்காணி காண்டிவம்
அம்புமோ இந்திர விசிகம்
அறிந்துனைக் கண்டபேர் கண்களாயிரம் மிக்க
அகிலத்தி லிந்திரன் னீகாண்;
மனுவம்ச ரகுராம! பரதியிர மார்த்தாண்ட!
மன்யுகுல காலாந்தக!
மண்டலீ கரகண்ட! ஔதார்ய! ராதேய!
மஹாதாதி பத்ய யோக! தனகோடி கோடீச்வர!
ஏகராஜன் தபோபலப் பிரபல சந்திர!
சகராஜர் பணிபாத! சகஜி மகாராஜனே!
தரியலர் கஜ சிங்கமே! (க)

49. 31 முல்லா மலிக்குடன் பல பலாகானன்
முராரி ஜல்லியும் மத்துளார் முப்பது
சகஸ்ரம் துரங்கத்துடனே வந்து
மூர்க்கமாய்க் கோட்டை கொண்டு
செல்லா துடுக்குடன் பிரமதாயங்களோடு
தேவ தாயந் தகர்த்து
சின்ன பின்னங்களாய்ப் போன தேசத்தில்
சிலார்க ளெல்லாம் அடக்கி யெல்லாருமே
சுதர்மங்கள் செய்ய நத்தெவர் யுன்பாய்ப் பூசைகாண
யெதிதியதிசனம் வாழ ராஜ்யம் கழிக்க
நீ ரகுராமனென்ன வந்தாய்;
ஸல்லா முஜிவ்ரே! ஏகஜிராஜன் தபோபலப்ரபல சந்திர!
சகராஜர் பணிபாத! சகஜி மகாராஜனே!
தரியலார் கஜசிங்கமே! (உ)

// கீர்த்தனம் //

50 அம்ம! அம்ம! நான் மாட்டேன் போடி
அவனைச் சேரவே
தன்ம பாலன சீலன் சாகராஜ பூபாலன்;
சம்மதம் செய்யான்,

சின்ன தனத்தில் கைபோட வாரான் (அம்மா)

சரஸ விந்தை பாராட்டி,
சக்கரை யிதழூட்டி;
சரி மாதர்க் குளவு காட்டி,
தானே கொள்ளுறான் கொட்டி (அம்மா)

களறி கண்டவள் நானோ,
காயகம் அறிவேனோ;
உளவாயச் சொன்னால்க் கேளேனோ,
உதுட்டானால் பயப்படேனோ

ராமபாரதி சிங்கார,
ரஸகவி தாலங்கார;
ஸ்வாமி சாகேந்திர தீரந்தன்னை,
வலியச் சேர (அம்மா அம்மா)

// ஆசிரிய விருத்தம் //

அமராபுரம் தஞ்சை,
நினது பண்டித சேனை யனைவரும் தேவசேனை,
ஐயநின் கார்ய மந்திரிகளோ பிருஹஸ்பதிதயவர்க்கே
சமானமானார்,
நிம்முகனின் னொலகம் இந்திர னொலகம்,
நின்சுகபோக மிந்திர போகம்,
தொல்லுலகின் பெருமை வேறுபமையாகவே,
சொல்லுதற் கெளிதாகுமோ,
கமலாஸனத் திருமடந்தையார்த் தன்னுடகடாக்ஷ
வீக்ஷணபூஷண!
கவிஜன மனோஹ ராலங்கார!
ஔதார்ய கர்ணாவதார! சூர! தமிழ்மருவு
தஞ்சைவாழ் ஏகோஜிராஜன் தபோபல பிரபல சந்திர!
சகராஜர் பணிபாத! சகஜி மகாராஜ!
தரியலார் கஜசிங்கமே!

// கீர்த்தனம் //

51. ஏனோ வாரான்யென் பிராண னாதன்

ஏனோ வந்திலன் என்ன செய்வேனே,
வானிலம்புயால் மெலிந்தேனே;
தான சூரனென வரகுண வானே;
ஆன சாக ராஜேந்திரந் தானே

அங்கஜன் வாளி நெருங்கவுமே;
யிருகொங்கையின் மீதினிலங்கி களாகவும்;
மங்கைய ரேசவும், அங்கமு வாடி;
மனங் களையாகின, தங்கவர் கூறுவர் (ஏனோ வாரான்என்)

முத்த மளித்திரு கைத்தல மொத்து,
முகத்தி லணைத்து, மிகுத்த தனத்தினில் உத்த
நகத்தை யழுத்து, நகைத்து,
ருசித்த தரத்தில் ரசத்தை யளித்திட (ஏனோ)

செந்தமிழ் ராமனி ரந்தரமும் புகழ்,
சுந்தர சகஜி புரந்தரன், விந்தையில்
வந்து கலந்து, தினந்தயவின் சுகசிந்தை
பிரிந்து, மகிழ்ந்து வணைந்தவன் (ஏனோ வாரான்என்)

52. கண்டேன் கண்டேன் உன்பேச்சு,
செய்காரியத்தில் இது வெளியாச்சு

மண்டலீகர் பணிபாத! கானலோல!
சாகமகிபால! மங்கையர்கள் மாரலீல!

அந்த வஞ்சி வளவினில் என்னேரம்,
உமக்காசையாக விருக்கு ஆரவாரம்;
எந்தன் வீட்டில் வருவதும் சிங்காரம்
சும்மா ஏடாகோடமாகச் சொல்லுவீருத்தாரம்
(கண்டேன் கண்டேன்)

பாலும் பதக்கு மோரும் பதக்காச்சு,
மனம்பழகிப் பேசினதெல்லாம் ஜாவமாச்சு;
அம்பாலை மோகந்தன்னில் னினைப்பாச்சு,
இங்கே வந்தபோதெல்லாம் பெருமூச்சு (கண்டேன் கண்டேன்)

பந்தமிழ் ராமபாரதி புகழ்சீல!
தஞ்சை பதியில் மருவும் சாகமகிபால!
அந்த வஞ்சி தேவரீர்க்கு ரதிபோல!
கூடி யனுபவிப்பாளோ யினியென்னைப்போல
(கண்டேன் கண்டேன்)

53. வந்த தாரையா உந்தனைத் தேடி (வந்)

அந்த வஞ்சி யார்நீர் சொல்லுமய்ய!
சாக ராஜ தீர! (வந்த)

ஹம்ஸம் போலே நடனமாடி,
உன்மீதில் கொஞ்சிக் கொஞ்சியே பதம்பாடி ;

பத்துமாத் தபரஞ்சிபோல் மின்ன விளையாடி,
கொண்டாடி நாடி, வஞ்சியர் மன்னே ஓடி,
மனதாக வுன்னைத் தேடி (வந்த தாரையா)
மங்கைப் பருவ வயதுண்டு,
செங்கமல மானம் கைக்கிவள் சரிநீ கண்டு;
யிவளுடைய கொங்கைக் குவமை மலர்ச்செண்டு ரண்டு;
உனக்கந்தரங்க மாகவே காணவவள் காணிகைக்கொண்டு
(வந்த தாரையா)

ராமபாரதி போற்றும் நாம;
ஸர்வஞ்னிவன்னாம மெனவாழ் சார்வபௌம!
ப்ரம்ஹ பூயிஷ்ட பூமி பாலனா பிராம!
சாக ராஜேந்திர சாமி!
உந்தனை மேவதருணிசரி போமா (வந்த தாரையா)

54. மோக மானேனே உந்தன்மேல்
மோக மானேனே

மோக மானேனே மோடி செய்வானே
வாக சாகேந்திரனே என்சாமி
மோக மானேனே
மார ராஜன் வாளியேவ மனதுவாடி நோகுமோ,
மதி னிலாவு வீசவே, மங்கையர்க ளேசவே ;
வாது நீ செய்யவும் நீதியோ சாமி!
. . . . தவேள் போதனையோ;
வாதுஎன்மீதே ஏது செயாதே,
காதல் பொல்லாது காணும்

கத்தவர்க்கே வுபகார! கலியுக கர்ண!
ஆதிநாளே முதலாக நம்பினேன்,
சூதுநீ செயலாமோ (மோக)

கொங்கைமேல் சந்தனம் அங்கிபோலாமோ;
எங்கள் மேல் மோடி . . . .
இங்கித மாகவே திங்கள் நிலாவிலே,
பொங்கமாய் யென்னைச் சேராய்!
சங்கீத காணப்ரவீண! நல்ல
இங்கித ஸத்குண ஜாண!
துங்கமா மேடை. . . கஜராஜனே!
வங்கணமாக மேவ (மோக)
ஸந்ததம் ராமய்ய பாரதி போற்றிய சாக ராஜேந்திரனே!

அந்தரங்கத்துடன் சந்திரன் ரோகிணி யாமெனக் கூடுமையா,
புந்தியனலதிரூப! நல்ல போசல வம்சப்ரதீப!
உந்தனை நம்பினேன் நிந்தை செய்யாமலே
யெந்தனை யாளுமய்ய! (மோக மானேனே)

55. . . . . .துதோ,
சந்தோஷ மவளுட சகிமார்கள் சொல்ல அறிந்தேன்

ஆசை வசமல்லடி, ராஜேந்திரனான
சாகஜி ராஜனுடனே சொல்லடி

பொருக்க முடியாதடி
என்ன செய்வேண்டி

புத்தியினி யேதடி, அதிகடினம்
மன்மதன் கையம்பினால் மெலிந்தேனடி

. . . . .லான தூவுதே,
தென்ற லென்னுட கொங்கையின்மிதி தெண்டலானா தூவுதே

கங்குல் விடியாதே, யிம
கங்குல் தானு முறங்காதே

தாமத மில்லாமலே யென்சாமி சேர
தயவு நினை தையலே

இராமபாரதி புகழும்
ராஜ சாகேந்திரன் மேலே

56. மின்னே! உன்னிதழூரல் தன்னில பேசைஷ யென்று
சொன்ன தசவளட்டி சொல்ல பொருத்திருந்தீர்

மங்கை யவள்துயிலமட்டும் வீணை யெடுத்து;
சங்கீதம் அவள்மீதில் தான் படித்து;
இங்கிதமொழி பேசி யென்னை யணையுமென்று;
அங்கே அல்லேதா ளெண்டியவளை வேண்டிக் கொண்டீர்

இந்திர ராமபாரதி இசைக்கும் சாகபூபால!
அந்த வஞ்சி மனங்கோணாமல் கூடிவந்தீரோ!
தேவரீர் மயக்கு முந்தெளோ;
அந்த காமினி யவளுட கண்ணோடவும் மீதில் கண்டேனே
போதும்

உளவாக நான் விண்டேனிதுவே தப்பாது ;
அந்த வஞ்சி தாம் பெண்டாலறு. . . .தும் என்சாமி

57. மனது தானிப்படி யாச்சோ!

தேவரிக்கவள்மேல் மையல் மடுமிஞ்சிப் போச்சோ

மனுகுல ரகுராம னென்னும் சாகமகிபால!
மன்னநீர் அவளின் வளவில் வலியசென்று
கன்னிதம் வேளை பார்த்து, கரம்பு பார்த்து, கரங் குவித்து

. . . . . . .னுளகெலாம் படிபத மெடுத்து மெள்ளபாடி,
லெம்பாத சுருளே கொடுத்து பாரும் பாரும்
எளிதாக வரும் மளி . . . . ராயபாரம்,
எதுக்கு வேண்டா மய்ய;
குடி களவுனாய்கிக் கெல்லாந் தானே
பேசினால் காரியமது தானைய
மெள்ள . . . . யாதெரிமையா
ஏகந்தமா ஆரும் மராள்மய்ய என்சாமி
ராமபாரதிபுகழ் ஏகசத்திராதிப! ராஜேந்திரதீர!
இராமபாரதிக்கருள் சகஜிராஜ! தௌரெய!
கியான்னே பார்க்க;
சொந்தமோ உனக்கென்று

மானாலவள் குனியி அனே சொன்னாள்
. . . . மானம் அமுதானே சாமி

அபிமான பூஷண போஸல லேந்திரனான,
சகஜி மகராஜ வுளவு சொன்னேன்;
தெரிந்து கொள்ளும்

இருவரறிந்த . . . . மாச்யே மல்லே
வண்டு வெண்ணி கூச்ச படுவாள் (மெள்ள)
சரஸமாகப் பேசி முன்னே பின்னே பார்த்து,
தாம்பூல மது கொடுத்து . . . . டி
அனந்திலே அணந்திரே அதிவொணாலு பிற்கும்,
சொல்லுவோம் வாரு மய்ய

58. மனதுக்கென் சேதி சொல்லி வாடிநீ போடி
. . . . .ஜ சகஜேந்திரன் வசமாய் யென்னே மறந்து,
விரகிவள்மேல் மாரன்பொரும் பாளிதக்கேளன் பரதவிப்பதே,
இருந்தெரிய இல்லையே. . . . .

இந்தவுட உன்னே மறந்திருந் திருந்தால்,
இனியெப்படி வந்திடுமோ என்றுநீ மானுஷம்
குறியாமல் . . . . . .ப்பியிருந்தேன்,
கைவிட்டால் இனியே சிதாகமும் போமோ

இந்தனாள் உனக்கேத்த சுகங்கொடுத்த பொங்களே
யென்னாணை,
அந்துகா. . . . . .ன்னுட சொந்தை தந்தாலும் அதுக்கென்ன,
என்னே சுகித்த சுகசந்தோஷத்துக்குச் சரியாகுமோ சாமி!

. . . . .னான ராமபாரதி புகழிந்தருள் போஸல
சாகேந்திர யென்சாமியான் ஆதினால் போல
ஆகையாய் . . . . .வல மன்னவ

59. ஊரே மலாகி யென்னை யிப்படி செய்தாலும் நீ,
உம்மை சும்மா விடுவேனோ சாமி!

பாராளும் சகஜேந்திர துரையானா லெனக்கென்ன,
பளிரே! நல்லது பாரும் பாரும் பாரும்,

பளிரே, நல்லது பாரும் பாரும்
எந்திராணை சொலும்

தருணத்திலே மாயப்பொடி போட்டு மயக்கி,
என்தாயறியாமல் வந்தீர்;
என்சாமி என்னுட உம்மனம் சாட்சி,
கரிசனமென்றே, அவை மெத்த நம்பி யிருந்தேன்,
ரச்சை செய்யாமல் பைய்ய

மேலே மேலான ரவிக்கை முடியே யவிழ்த்து,
மெள்ள சலிகை பேசி யுறுகித் தழுவ வாரீர் ;
பலவந்தமாக மடி பிடிக்கிறீர் அடிபோணி,
எலவிச விசமல்ல ஜாலி யிந்தவங்குறீர், வேண்டாம்

எனது சீலை யவிழ்த்து ரதிகேளிகை செய்ய வாரீர்,
கனமோ தேவரீர்க் காசை கைக்கதந்துதோ

பனுவலான ராமபாரதி புகழ்ந்தருள்
மனுபதியே சகஜிமகிப ஆகட்டும் சைய

60.- தஞ்ஜக்கி ராஜாவானால் வஞ்சிக்க வாரீரென்ன காணும்
மெத்தவு மிந்த சஞ்சிதமாருக்கைய்ய வேணும்;
ஒருகலை நீர் பஞ்சரிக்கிறீர்
என்ன காணும் என் சாமி
காம மதிக மானால் பூமியிலுமக்கான
பாமினி தானு மொருக் காலே ;
எங்கள் ராமபாரதி புகழ்,
சாமி சாக ராஜேந்திரனே!
ஆமோ யிப்படி விளையாட ;

உடைநிகழ்த்து நீமடுமீறி யென்னைக்கூட ;
ஆகாது போம் போம் ஒமலாகுமய்ய
போராட யென் சாமி

61. விடுமய்யா நடுவீதியில் வந்துநீர் வில்லங்க மிடுறீர்கையா;
இந்தடவோ சகஜீந்திர ஆரானாலும் காணப் போரார்

அம்மா நான் தனியாக அறியாமல் வந்தேனிங்கே ;
சும்மா ஊவயையோ போக சாலிக் குள்ளானேன் ;
சம்மதித் தாலல்லவோ, சரப்பாணி தரவேணும்,
இம்மட்டும் போதுமினி,
மெத்த கலக்காரியென் சாமி கண்டால் சண்டையிடுவாள்,
நில்லு மய்யோ இதுநடவாது, ரவிக்கை வாங்கி,
முலைமேல் கிள்ளுறீரே யுண்ணாது;
முந்தாணை விடும், பலவந்தம் செய்யுறீரேது யென்சாமி!

கொஞ்சி முத்தாடி மெள்ள பஞ்சணை மீதிலேறி
வஞ்சியே கிட்ட வாடி யென்று
மெத்த மிஞ்சலா யிப்படி

62. என்னைத் தொடாதே நில்லும்
என்னைத் தொடாதே நில்லு மன்னா
சகஜி ராஜ யென்னாதன் கண்டாலிது மோசம்;
குடிவழிக்கு என்னாணை யிப்படி பிரகாசம்,
ஆகாது வேண்டாம் சன்னைக் கிங்குண்டோ அவகாசம்
என்சாமி!

வலிய யென் வீடே வந்து,
சலுகை பேசியே மலர்மாலை சூடுறீரிது

63. அவனைவிட்டுப் பிரிந்த கவலையுடன் தேவரீர்
அடியேன் வீட்டில் வருவானேன்

நவமார! தஞ்சையில் சகஜீந்திர! இது
லோக நியாயமோ சொல்லுமையா யென்சாமி!

ஆசையோ மரத்திண்ணை பதம் போலே
யிருவருக்குமாக மொருமித்த லாகம்;
காசினியில் வழக்கமும் கழுக்கரமனைக்
கட்டாய மெங்களுக் குண்டோ;
பொழுது போக்கோ

எட்டு விதமாம் காமமெமக்கோ உமக்குமுண்டோ!
இது லாபம் காண வந்தீரோ!

மட்டார் குழலாள் கண்டால் பொருப்பாளோ!
பொருத்தாலும் மனதுக்குத் தரிக்குமோ!
தேடவே போராள்

குலவும் ராமபாரதி புகழ்ந் தருளும்,
போஸல குலத்தில் சாக ராஜேந்திரனே!
நிலவரம் தெரியாதோ! என் லீலை யறியீரோ!
நிலை கண்டிரங்க வேண்டாமோ! என்ன போம் போம்

64. எனது மனதுதானே என்னை யிப்படி
செய்தால் யாரை சொல்லலாயது

மனுகுல ரகுராமனெனும் சாகஜிமகீசன்,
மகாராஜனவன்மீது மிகை சொல்லலாகுமோ!

மானாளவள் வளவிலிருந்தது கண்டு ரோசம் வந்தாலும்,
வன்முக சந்திரனைக் காணாமல்,
தானே தரிக்கவில்லை சீனாம்பரமிரவில்தான் கொடுத்தவர்
பின் நெழுத்தினாளோ! மிக நொந்துதோ

எழில்சே ராமபாரதி யியம்பும் சாக ராஜந்திர!
உன்னழகு மேனி வாடா மலமளி மீதேறி,
ஒழுகு மலர்த்தேனை வண்டுண்டாப்போல் கூடுவேனே நான்,
பழகி யறியாள் மெய்யைப் பதற கூடி வருத்தினாள்

65. மோடியேன் மோ டியென் மீதிலேனே
முத்து நம்பின நானே

வாடி யென்று கண்காட்டி வரச்சொல்லிச்
சொன்னால் ஆசை மாறுமே,
அதனா லுள்ளம் தீருமே! ஆனந்த மென்மேல்
மீறுமே! சாக ராஜேந்திர! (மோடி)

பின்னை யொருத்தர் போலே,
பேச்சுமட்டு மிஞ்சேனே;
என்னிடத்தி லுமக்கு மெள்ளவு மிரக்க மில்லையோ ;
கோபத்துக்கு நானெல்லையோ ;
இன்னம் தயவு வல்லையோ! சாக ராஜேந்திர! (மோடி)

கொங்கைமீது இருக்கண்ணீர் குதிக்கக்
கொதித்தெழுந்து திங்கள் செந்தழ லூட்ட,
சித்தஜ ராஜர்க்கணை சீறுதே ;
மடவார் வசை கூறுதே,
அதனால் மோக முறுதே,

சாக ராஜேந்திர! (மோடியேன்)

துய்ய ராமபாரதி துதிக்கு மேகேந்திரன் பால!
வையம் புரக்கும் சாகமகி பால!
நீ கூடாமல் வஞ்சமோ!
உன்னெஞ்சமும் வன்னெஞ்சமோ!
இந்த புண்ணியம் கொஞ்சமோ!
சாக ராஜேந்திர! (மோடியேன்)

66. என்ன மோகம் என்ன சினேகமடி மின்னே
யென்னுடன் சொல்லடி

மன்னவள் தஞ்சையில்வாழ் சாக
ராஜபூ பாலன் மன்னனை மறந்தபோதே

என்ன சொல்வே னதிசயத்தை அவன்
என்வீட்டி லாசைபோல் வந்துமின்
னவளைக் கண்ணாட்டி யென்சாமி
என்ன சண்டை வேடிக்கைப் பார்த்திருந்தானே யவனுடனே
மழைக் கொதுங்க வந்தவர்களந்த
மழைக்கு வழக்காடினாப் போல்,
வழக்காயவள் பரை பிராணனாயக னென்று
வாதாடப் பார்த்திருந்தானே அடியோ மானே!

பாமருவும் தமிழோதும் ராமபாரதிபுகழ் சாகேந்திரன்;
காமனென வியந்தக் காரியத்திற் காரம்பங் காட்டி,
யவளைச் சாட்டினான்; போட்டி மூட்டினான் (என்ன)

67. கண்டேன் கண்டேனெனது கண்குளிரவே
அண்டர் தருவே! தஞ்சை யாளும் சாகேந்திர! உன்னைக்
(கண்டேன்)

அடியேன் முடிபூவெடுத்துத் தென்கையால் கோதினபோது,
அடியடி மெல்ல நகம் அழுந்து தென்றீரே;
கொடி யிடை யாளுமது கோமளமா மேனியெல்லாம்
வடிவாக நகம் நாட்டி வைத்தாளோ! ·
மெத்த நொந்துதோ!

வெள்ளிலைச் சுருள்தந்து, வேடிக்கையாய்க் கோதவந்தால்;
புள்ளியாய்த் தந்தம் படாமல் பொருந்திக் கொள்வீரே ;
கள்ளியவளுமது கனியிதழைக் கையால்க் கிள்ளிக்
கொண்டாளோ!
பல்லாலு தடுகெட்டது போலாக

சிந்தைக் கசப்பெண்ணாமல் கெந்தம் குறித்தாப் போல சாமி!
எங்கிருந்தாலும் காமித்து நாடி, சிந்தையாகுவ தல்லால்,
மலையளவு சந்தோஷம்,
தினையளவு ரோசமும் செய்யக் காணேன் செய்ய

பன்னுதமி ழுறைக்கும் ராமபாரதிக் கன்பு பாலிக்கும்,
சகஜீந்திரன் லீலை யுருக்கங் கண்டு,
அன்ய காந்தை சேந்தாலும், சந்திரன் ரோகிணி
மீதிலாசைபோ லெண்ணி நேசந்தானே நினைத்து

68. *இன்னமும் வரக் காணேனே அடியோ மானே,*
மன்னர்பணி சகஜி மகாராஜன் மனதாகி

இத்தனை போது பொருத்திருந்தே னினியென்மீதில்
குத்தமேதடி கூறடி யிளனே தாவின்
முத்தத்தி லெனைச் சேரடி,
யெனது சாகசத்தை யப்போது பாரடி என்னடி போடி

மந்த மாருத மெனு மந்த வடவைதனில்
எந்தன்மேனியை வாட்டுறேன்;
மதன் கணையைக் கொந்தார்க் குழலில் சூட்டுறேன்;
ஆகமும் நோக சந்தனக் குழம்பூட்டுறேன்;
ஊரைக் கூட்டுறேன்

ராமபாரதி புகழ் ராஜசகஜி கூடும் பூமேடை தனிலேறுறேன்;
அவன்தன் முத்து நாம மந்திரமே கூறுறேன்;
விருது போட்டுக் காமன் மீதிலே தூருறேன்;
வரவேடி யிவன் (இன்னமும்)

69. – ராகம் – பந்துவராளி –

இத்தனை சந்தோஷம் . . . . லாச்சுதே
யான் செய்த புண்ணிய மய்ய!

இப் பாட்டு முழுவதும் 31 ஆவது
பாட்டாக எழுதப்பட்டிருக்கின்றது.

70. மானே யிவன் மீதிலத்தனை கோபம்
வரவொண்ணாதடி

இப் பாட்டு 35 ஆவது பாட்டாக
ஒருமுறை யெழுதப்பட்டிருக்கிறது.

71. எந்தன்மீதி லடிக்கடி ஏதுக்கையா மோடி ?
சந்திர முகனே தஞ்சையில் சாகேந்திர கிரீடி

என்னேரம் வந்தா லன்னேரம் எதிராக நில்லேனோ!
எப்படி யேற்கு மப்படி யிச்சகம் சொல்லேனோ!
மன்னாவும் மனதிற்கேற்க வகைக்காரி யல்லேனோ!
வாடியென்று கண்காட்டினால் வந்துநான் புல்லேனோ!

பண்டை னாளிலே புரைத்த பாட்டே மறந்தீரோ!
பாவை கலைப்புக் குள்ளா யப்படியே துறந்தீரோ!
அண்டி வந்தாலு மசட்டையாகத் துணிந்தீரோ!
யாரானாலென்ன நம்பினா லவரை வெறுப்பாரோ!

எவளிடத்திற்ச் சேந்தாலும் நீரெந்தன் மாலுந்தீரும் ;

. . . .

ராசகரமும் சென்னும் ஈயம் பாரும்,
அவசியமாய் வாரேனென்றே அப. . . . . . .ம் தாரும்;
அட்டி பண்ணாமலே சாமி அய்யா கிட்ட வாரும்

ஏகச் சத்ரப .... கேந்திரற் குமார!
ராமபாரதி புகழும் இங்கித ஒய்யார!
சாகமகிபால சாகர கம்பீர!
சந்ததமு முன்போலென்னைத் தழுவிக்கூடி. . . . . . .

72. எங்கே திரிந்தாலென்ன ஒருநாள்
கண்ட கண்போ லிருந்தாலது. . . . . .
அடி மங்கையே சாகேந்திரன் மனதில் தயவு
உண்டானால் வருவான் பதறலாமோடி அதனால்ஏது;
ஆதினாளில் நான்செய்த பூஜாபலன் நன்றானாலாரேது
சொன்னாலென்ன? மாதே! கனியாகக் கனி கனியுமோ ?
கனியுனாள் மாறென்றால் மாறிப் போமோ? (இனி)

தூது நானனுப்பினேன் சவுக்கையாக
அவர்க்குத் தோணுமல்லால் வருவாரோ?
நானேது காட்டிக் கொண்டேனோ?
அவளு மெந்தனைப் போல அடுத்துக்
கட்டிக் கொள்ளட்டும் காண் ஓ மானே!

காகத்திரு கண்ணுக்கு மொரு மணிபோல
வென்கருத்து வெண்ணியே யிருந்தேன்;
மனதாகக் கலந்தா ரவர்பாலும் நீரும் போலே;
அன்னம் போலவள் தோணினாள்;
யோகபலம் போலவே வருமதற் கொருத்தனரை
யொருக்கக் காரிய முண்டோடி;
அந்தத் தோகையென் பட்டத்திற் கிருக்கட்டு;

மென்சாமிக்கு சுகலாபம் கிடைத்தால்
போது மெந்தனக் கேது

பரிவாய்ச் செந்தமிழ் சொல்லுமிராம
பாரதிபுகழ் பாராளன், சகஜிராஜன் முன்னே,
கரிசனமாக ஒன்றாய்க் கலந்திருக்க அவருக்குக்
காரிய மாருரைத்தார்; அடி! அருவையே!
நானணிந்த கிரீடம் எங்கிருந்தாலும் அழகு
எனக்கே யல்லவோ? அந்த புருஷன் நந்தகோபாலன்
கோபியர்கள் மெத்தவர் பொருந்தும்,
ருக்குமணி நானடி யடியோ பெண்ணே!

ஆரூரில் வருவி கண்டயத் யாகேசரரு ளுனக்குண்டு கண்டாய்;
ரத்ன வாரூரு முலையார்கள் மடலெழுது மாரனே!
மகராஜ சாகேந்திரனே என்சாமி

அஷ்டதிக் விஜயமும் மிக்க ஸத்புத்ரரும்
அளகேசர் போல் நிதியமும்,
மனதில்ஷ்டமு முரவரத் கல்யாணமும்,
மின்ன மின்னமும் பகுராஜ்யமும்,
அதிக சிஷ்டவேதியர் தேவர்த் தம்மை
ரக்ஷிக்குமோர் செய்கையும் கனயோகமும்,
அதிக நிஷ்டையும், கல்வியும் நரைதிரை
யிலாததொரு நிலையும் நிலமைகளாகவும் வரவே (க)

........தில் மீதினிலரோக திருடகாத்ரமும்,
ஆயிரம் பிறை தொழுகையும்,
.... மகரத்வஜன் போல ரூபமும்,
விஜயனென வரிசை யாகிய சௌர்யமும்,
மோப்பதாக நிறை தைர்யமும்,
சோதியும் நற்கடல் கம்பீரமும்,
.... கைபோல் பிரதாபமும்
.....னமன் மேலும் வரமாராமல் நீவா .... (உ)

பாரெனத் தமிழ் சொலு ராம பாரதி
யிசைப்பா மலரை யர்ச்சிக்கவும்,
...... நரபதிதந்த சரபோஜி துக்கோஜி
யிவர்கள் துணையாயவள ....
நல்ல நாகரிகமாகி வளர் போஸல
குலத்தில் வளர்நாத சாகேந்திர தீர!
.... லவாகு பேரு சதுரங்கபல

சேனையுடனியும் மாறாமல் வாழ் . . . . .ம்
கேதரவே (ந)

73. அதிரூப மோகன மாது காணையா

அதிரூப மோகன மாது ஆசையாகி னாளுன்மீது ;
மதனாவதார சல்லாப! மகாராஜ ராஜபூத (அதிரூபமோகன)

கொங்கை மதனன் கூடாரம்,
தங்க . . . . சரீரம்,
பங்கய மின்னவதாரம்,
மங்கையவள் தன் சிங்காரம்

எங்குமில்லை யிவள் சமானம்,
அதிசயங்காண் சங்கீத சாஸ்திர நிதானம்,
ஆடலில் தம்பைக் கிவளே சமானம்,
அந்த வகையி லிங்கித மாமவதானம்
காலணிந்த சதங்கை யோசை யுலகை யுருக்கும்;
திங்கள் நுதலில் குங்குமத்தினால் பொட்டிட்டிருக்கும்;
இடைநூல் மாத்ரம் சங்கைக் கின்னமுமே தானருக்கும்;
சாமி மேலந்தரங்கமாக ஆசையே பெருக்கும்

பத்திமினி சாதி சிங்கள ராஜ்ய மவளுக்கு,
வங்கணத்துக் காமுமக்கு,
பொங்கமாமந்த வகைக்கு,
இங்கவரி லவள் மிக்கு

74. அங்கனா மணி கோராளை,
அனுப்பு மிதுவே வேளை

குத்து முலைமீதில் கச்சு;
மெத்தவும் ராஜர்கள் மெச்சு;
முத்தையா சொருக்கில் குச்சு;
சித்தஜரதி போலச்சு

புத்தமித மிதழூரல்,
ஆதி காந்தர்வ தத்தை போலே கானம் குரல்,
கபோலம் முகுரத்திலுமோ மிக்க தேரல்,
சரஸவித ரதியிலே யிவள் மீறல்

ஆடினபரதத் தொழிலிவளுக்கீடு ஜோடு,
பூமியி லில்லை சுத்தனடை யன்னத்திளம் பேடு,
மகமேருவுக் கொத்த மாத்துக் காதிலிட்டத் தோடு,
உம்பலிக்கயாய்ப் பெத்த தாக்கும் பெண்ணரசுநாடு

காலினிலந்தை சத்தகேக்க மோக மிஞ்சும்,
தத்தையவள் மொழிக் கஞ்சும்
எத்தனை யென்றாலும் கொம் . . . . .
த்தக்கிளரும் கல்நெஞ்சும்

சித்த சந்தோஷமாய்ப் பாரும்,
மற்றவர் போலல்ல வாரும்

காசினி புகழ் பிரதாப,
பூசுரர்கள் கலி கோப,
வாஸதுல்ய ஸல்லாப ,
போசல குலத்தில் தீப

தாசரதி போல வீரனே ,
ஏகபூபதி நேசமாய் தரு குமாரனே,
ராமபாரதி பேசுதமிழ்க் குபகாரனே,
வித்தையில் போஜராஜனை மிக்க ஒய்யாரனே

தேவதா சோளதேச பாலனம் செய்யும் கிருபால,
தர்மமே யொரு தேகமாக வந்ததெனும் . . . . . .
. . . .
. . . .

– முற்றிற்று –

வண்ண இலக்கியம்

தஞ்சை நாயகம்பிள்ளை வண்ணம்

வண்ண இலக்கியம்

'வண்ணம்' என்பது பாடலில் நிகழும் ஓசை விகற்பமாகிய சந்த வேறுபாடாகும். தொல்காப்பியர், "தலைவன் ஒருவனை வாழ்த்திப் புகழுமிடத்தும், சான்றோர் குறிப்புகளை விளக்கிச் சொல்லுமிடத்தும் இசைத்துறைக்கு உரிய வண்ணங்கள் அமையப் பாடுதல் ஏற்றது" என்று புறத்திணையியலில் கூறுகின்றார்.[1] செய்யுளியலில் செய்யுளுக்குரிய உறுப்புகளைக் கூறுகின்றவிடத்தில் 'வண்ணங்கள் இருபது வகைப்படும் என்று சொல்லுவர் புலவர்'[2] எனப் பொதுவாகக் கூறினாரேயன்றி, இதுதான் வண்ணத்தின் இலக்கணம் என்று கூறவில்லை. இதற்கு உரைகூறிய பேராசிரியர், இவ்வண்ண வகைகள் பாட்டு முழுவதிலுமே அமையும் எனல் இயலாது என்றும், ஒருபாட்டில் சில அடிகளில் மட்டுமே ஒரு வண்ணம் அமையலாம் என்கிறார். ஆனால் இளம்பூரணர், பாடல் முழுவதுமே இவ் வண்ணம் பெரும்பான்மையாக வரவேண்டுமென்று கருதியதாகத் தோன்று கிறது.

தொல்காப்பியர் காலத்திலும் அவருக்குப் பின்னரும் 'வண்ணங்கள் நூறு' என்று பகுத்தவர்களும் உண்டு. அதனால்தான் தொல்காப்பியர் 'வண்ணந்தாமே நாலைந் தென்ப' என்றார். "அவை நூறும் பலவுமாக வேறுபடக் கொள்ளினும் இவ்விருபதின்கண்ணே யடங்கும் வேறு சந்த வேற்றுமை செய்யா என்றற்கு. அது நுண்ணுணர்வுடையோர்க்குப் புலனாம் என்று உணர்க" என நச்சினார்க்கினியர் கூறும் கருத்து ஈண்டு எண்ணத் தக்கது.

பாஅ வண்ணம், தாஅ வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம், அளபெடை வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், சித்திர வண்ணம், நலிபு வண்ணம், அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம், ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம், எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம், தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் என்று தொல்காப்பியர் இருபது வண்ணங்களாகக் கூறி யிருக்கின்றார்.

---

1 தொல்காப்பியர், தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல் 27.

2. மேலது, செய்யுளியல் 210.

தொல்காப்பியர் கூறும் இவ்விருபது வண்ணங்களை, 'எழுத்து, சொல், தொடை, ஓசை, நடை' என்ற ஐவகை அடிப்படையிற் பாகுபடுத்தலாம் என்கின்றார் தமிழண்ணல்.[3] அவையாவன :

1.	எழுத்து அடிப்படை வண்ணம்	7 :	வல்லிசை, மெல்லிசை, இயைபு, நெடுஞ்சீர், குறுஞ்சீர், சித்திரம், நலிபு
2.	சொல் அல்லது சீர் அடிப்படை வண்ணம்	3 :	பாஅ, எண், ஏந்தல்
3.	தொடைஅடிப்படை வண்ணம்	2 :	தாஅ, அளபெடை
4.	ஓசை அடிப்படை வண்ணம்	6 :	ஒழுகு, ஒரூஉ, அகைப்பு, தூங்கல், உருட்டு, முடுகு
5.	நடை அல்லது வடிவ அடிப்படை வண்ணம்	2 :	அகப்பாடல், புறப்பாடல்

நால்வகைக் கலிப்பாவில் ஒத்தாழிசைக்கலி என்பது மொன்று. அதன் கூறுகளில் வண்ணக ஒத்தாழிசையும் ஒன்று. வண்ணித்துப் பாடும் ஒத்தாழிசைக் கலியே வண்ணக ஒத்தாழிசையாகும் என்று பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் உரை கூறியுள்ளனர். இவ்வாறு செய்திகளை வர்ணித்துப் பாடுவதோடு சந்த வேறுபாடுகளாகிய வண்ணங்களும் இடை விரவி வருதலான் ஓசை நயம் மிகுகின்றது. இதனாலேயே பிற்காலப் புலவர்கள் பலரும் இத்தகைய பாக்களை இயற்றுவதில் பெருவிருப்பம் கொள்வாராயினர். இத்தகு வண்ணங்கள்தாம், பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த வில்லிபுத்தூரார், அருணகிரிநாதர் போன்றவர்கள் 'சந்தப் பாக்கள்' பாடுவதற்கு அடிப்படையாயின எனக் கருதுவதற்கு இடனாக அமைகின்றன.

பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சில புலவர்கள் தாங்கள் வழிபட்ட தெய்வங்கள் பெயரிலும், தம்மை ஆதரித்துப் போற்றிய வள்ளல்கள் பெயரிலும் வண்ணக்கவிகள் பாடினர். இக்காலத்தில் எழுந்த சிற்றிலக்கிய நூல்கள் பலவாகும். இவற்றுள் அகப்பொருள் செய்திகளையும், சிற்றின்ப வேட்கைச் செய்திகளையும் மையக் கருவாகக் கொண்டு எழுந்த குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம், விறலிவிடு தூது போன்ற நூல்களும் அடங்கும். சில புலவர்கள் சந்தம் விரவிய வண்ண யாப்பில் பல பாக்களை இயற்றியுள்ளனர். இவற்றில் தங்களை ஆதரித்த வள்ளல்களையும், அவர்தம் கொடைச் சிறப்பையும் போற்றிப் புகழ்நதுள்ளனர். இப்பாக்கள் பல சந்தங்க

3. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு முதல் தொகுதி, (வி.உ.) மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1975, ப. 168.

ளோடு செய்திகளை வர்ணித்துப் பாடுகின்ற காரணத்தால் 'வண்ணங்கள்' எனப் பெயர் பெற்றன. இப்பாக்களுக்கு யாப்பு வரையறை இல்லாத காரணத்தால், இவற்றை வஞ்சியடி கலியடி விரவிய ஆசிரிய யாப்பிலேயே பாடத்தலைப்பட்டனர்.

'வண்ணத்திரட்டு' என்ற பெயரில் சரசுவதி மகால் நூல் நிலையத்தினர் தி. வே. கோபாலய்யரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1969இல் 22 வண்ணங்களை நூலாக வெளியிட்டுள்ளனர்.[4] இவற்றுள் 'தஞ்சை நாயகன் பிள்ளை வண்ணம்' என்பதுமொன்று. இந்நூலைப்பற்றி இப்பகுதி ஆய்வு செய்கிறது.

4 தி. வே. கோபாலய்யர் (ப ஆ.), **வண்ணத்திரட்டு**, தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையம், 1969

7
தஞ்சை நாயகன்பிள்ளை வண்ணம்

இவ்வண்ணத்தைப் பாடியவர் பெயர் தெரியவில்லை. திருவாரூரில் வேளாள மரபில் கல்வியிலும் செல்வத்திலும் சிறந்திருந்த தஞ்சை நாயகன் பிள்ளை என்பவர் தஞ்சையை ஆட்சி செய்த இரண்டாம் சகசி மன்னன் காலத்தைச் சேர்ந்தவராவார். 'தேரூரும் சகராசர் செங்கோல்'[5] எனும் தொடரில் இம்மன்னன் கூறப்படுவதைக் காணமுடிகின்றது.

சரசுவதி மகால் நூலகத்தில் 96 சுவடிகள் கொண்ட இவ்வண்ணப் பாக்கள் பக்கத்திற்கு 5 வரிகள் கொண்டவையாகும்.[6] இச்சுவடியில் காணப்பட்ட பிழைகளைத் திருத்தியும், விடுபட்ட எழுத்துகளை ஊகத்தான் ஓர்ந்து வரைந்தும் ஓராற்றான் உருவாக்கி ஆசிரியர் பதிப்பித்துள்ளார்.[7]

நூலமைப்பு

இந்நூல் மூன்று, நான்கு சீர்கள் கலந்து அமைந்துள்ளது. அஃதாவது, வஞ்சியடி கலியடி விரவிய ஆசிரிய யாப்பில் பாடப்பட்டுள்ளது. 227 அடிகளாலான இந்நூலின் இறுதியில் 77 அடிகளாலான தாழிசையும் உள்ளது.

தஞ்சை நாயகன்பிள்ளை

இந்நூலின் பாட்டுடைத்தலைவன். இவன் பெருமைகள் நூலின் பல்வேறிடங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. 'தஞ்சை நாயகம்', 'தஞ்சை நாயகன்', 'தஞ்சை நாயகராசன்', 'தஞ்சை நாயகபூபன்' என்று பாக்களில்[8]. அழைக்கப் பெறுகின்றார். ஓரிடத்தில்கூடப் 'பிள்ளை' என்ற சொல் இவர் பெயருடன் சேர்த்துக் கூறப்பெறவில்லை என்பது இவண் குறிக்கத்தக்கது.

கங்கைக் குலத்தில் பிறந்தவன். மேரு வம்சத்தில் பிறந்தவன். கமலைப் பதி எனும் ஆரூரில் புழுகாச்சிவேளின் மகனாகப் பிறந்து தஞ்சையில் வளர்ந்த நாயகன். தஞ்சையில் சிலகாலம் வாழ்ந்து பின்னர்த் திரும்பவும் ஆரூருக்கே

5. தி. வே. கோபாலய்யர் (ப.ஆ.), வண்ணத்திரட்டு, ப. 63.
6. L. Olaganatha Pillay. **A Descriptive Catalogue of the Tamil Manuscripts**, Volume I. T.M.S.S.M. Library. Tanjore. 1964. 345 No 692 (a), p. 291.
7. தி. வே. கோபாலய்யர் (ப.ஆ.), வண்ணத்திரட்டு, முகவுரை, ப. 10.
8. மேலது, பக் 65, 61, 62, 63, 66, 59.

இவன் சென்றிருக்கவேண்டும். ஏனெனில் பிறிதோரிடத்தில் 'ஆரூர்வாழ் புழுகாச்சி அளித்த தஞ்சை நாயகமே' (ப. 63) எனக் கூறுவதனால் அறியமுடிகிறது.

இனிமையாகப் பேசுவதில் சிறந்தவன்; பூங்கொத்துக்களை உடைய குவளை மலர்களை மாலையாக அணிந்தவன்; மலை போன்ற திண்ணிய தோள்களை உடையவன்; கல்வி கேள்விகளில் சிறந்தவன்; சிறந்த மதியூகி; பெண்களுக்கு மன்மதன் போன்றவன்.

சிறந்த கவி புனையும் பாவலர்களின் கொடும் பசியைத் தணிப்பதற்காகப் பொருள் கொடுக்கும் புரவலன்; நட்புடன் பழகி அவர்களுக்குக் கருணையாகக் கொடுக்கும் தயாநிதி; சிவராமலிங்கரின் அழகிய பொன்மலர்ப் பாதங்களை வழிபடுகின்றவன்; பொன்மணவைக் கடவுள் அடி போற்றுபவன்; இந்திரன் உலகில் இருக்கின்ற தேவதாரு மரம் போலாகி நாள்தோறும் தன்னை நாடி வருகின்ற வறியவர்களுக்கும், இரவலர்களுக்கும் அவர்களின் வறுமையை மாற்றுகின்ற கார்முகில் போன்றவன்; எல்லோரும் எல்லா நாளும் வந்து வணங்கும் பொருட்டு இவ்வுலகில் இருந்து காரியங்கள் செய்யும் தலைவன்; கனகமால் வரை போலப் பொழிந்து சிறந்த அறிஞர் ஆருயிர் காப்பதற்கு வந்தவன்; இனிமையாகத் தேனொழுகப் பேசுவதில் சிறந்தவன்.

இத்தகைய சிறப்புப் பெற்ற இவனை மக்கள் மகிழ்ந்து போற்றுகின்றனர். இவன் நூறு வயது வரை இவ்வுலகில் வாழ்ந்து எல்லோருக்கும் உதவி செய்வதற்காகச் செல்வம் தழைக்கவும் மனம் மகிழ்ந்து மணவைப்பதி ஈசனை இந்நூலாசிரியர் வேண்டுகின்றார் (ப. 64).

இரண்டாம் சகசி

தஞ்சாவூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த மராத்திய மன்னர்களுள் இவனும் ஒருவன். கி.பி. 1684 முதல் 1712 வரை இம்மன்னன் ஆட்சி செய்துள்ளான். இவன் ஆதரவிலும் ஆட்சிப் பகுதியிலும் சிறந்து விளங்கிய பெரும் செல்வந்தர்களுள் ஒருவரே தஞ்சை நாயகம்பிள்ளையாவர். குறுநில மன்னர் போல இவர் திகழ்ந்திருப்பதைப் பாக்கள் புலப்படுத்துகின்றன. ஒரேயொரு இடத்தில் 'சகராசர்' என்று இம்மன்னன் (சகசி) அழைக்கப் பெறுவதைக் காணமுடிகிறது. தஞ்சை நாயகத்தைப் போற்றிக் கூறவந்த ஆசிரியர், 'தேர் ஊர்ந்து செல்லும் பெருவீதியினை உடைய சகராசர் செங்கோலை உழுக்கோலின் செயலால் காக்கின்ற ஆரூரில் வாழ்கின்ற புழுகாச்சி அளித்த தஞ்சை நாயகமே' (ப. 63) என்கின்றார்.

இறைவன் பெருமை

சிவபெருமான், திருமால், முருகன், உமை போன்றவர்களின்

பெருமைகள் ஏற்றவிடங்களில் போற்றிக் கூறப்பட்டுள்ளன.

அண்ணல், அரவபூஷணன், ஈசன், சங்கரர், தியாகராசன் என்று சிவபெருமான் அழைக்கப் பெறுகின்றனன். காமனை எரித்தவர்; பாம்புகளை அணிகலனாக அணிந்தவர்; கூத்தினை விரும்பி நிகழ்த்துபவர்; தன் நீண்ட சடையினில் கங்கை, ஆத்திமரம், திங்கள், வில்வம், கொன்றை ஆகியவற்றைச் சூடியவர்; நெடிய யானையின் தோலைப் போர்த்தியவர் ; நடனமாடுவதற்காகத் திருப்பாதம் தூக்கி நின்றவர்; அழகிய திருக்கைகளில் வெற்றி பெற்ற மான், மழுவினைத் தாங்கியவர்; சூலம், தலையோடு ஆகியவற்றை ஏந்தி நிற்பவர்; திருமணவை மாநகரில் எழுதருளியிருப்பவர்; திருமங்கை நாயகியைத் தம் உடலின் ஒருபாகமாகக் கொண்டவர் (பக். 57,58). முப்புரங்களை எரித்தவன்; மணவைப்பதியில் வாழ்கின்ற ஈசன்; ஞானதேசிகன்; இதம்பெறு இராமநாத நாயகன் (ப.64). இவ்வாறு சிவபெருமான் பெருமை கூறப்பட்டிருக்கிறது.

அபிராம, மால் என்று திருமால் கூறப்படுகின்றனன். மால் போன்றவன் தஞ்சை நாயகம்பிள்ளை என்று பலவிடங்களில் கூறப்படுவதைக் காண முடிகின்றது. ஆறுமுகன், தண்டாயுதன் என்று முருகப்பெருமான் அழைக்கப் பெறுகின்றனன். தஞ்சை நாயகனைப் போற்றிக் கூறவந்த ஆசிரியர் 'கஞ்சமலை சிறந்த தணடாயுதன்' என்றும், 'மக்கள் மகிழ்ந்து போற்றும் ஆறுமுக மகிபாலன்' என்றும் (ப.64) கூறியிருக்கின்றார்.

சிவபெருமான் உமையவளைத் தம் உடம்பின் ஒருபாகமாகக் கொண்டவர் என்றும் மங்கைநாயகி என்றும் உமையவள் சிறப்பிக்கப் பெறுகின்றனள். தாமரையை வாழிடமாகக் கொண்டவன் நான்முகன் (ப.59); தாமரை மலரினை உடைய நான்முகனின் சகோதரன் (ப. 62) தஞ்சை நாயகன் என்று கூறுகின்ற இடங்களில் நான்முகன் பெருமை அறியப்படுகிறது. செல்வ வளத்திற்குத் தாமரையில் வீற்றிருக்கின்ற இலக்குமி (ப. 67)யும், கல்வி வளத்திற்குக் கலைமகளும் (ப.66) சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர்.

அங்கசன், அனகன், அனங்கன், மதன், மாரன் என்று மன்மதன் அழைக்கப்படுகின்றான். அழகிற்கு மன்மதன் உவமையாகக் கூறப்படுகின்றான் (ப. 58). பெண்களுக்கு மன்மதன் போன்றவனாகத் தஞ்சை நாயகம் விளங்கு கிறான் (ப. 62). மாலைப்பொழுதில் இளம் பெண்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கின்றான் (ப. 65). தஞ்சை நாயகன் காதல் செய்வதில் மன்மதன் போலத் திகழ்கிறான் (ப.66). விண்ணில் நடனமாடுகின்ற அரம்பையரும் (ப. 59) கூறப்பட்டுள்ளனர்.

தமிழின் பெருமை

செந்தமிழ், தண்டமிழ், தென்தமிழ், முத்தமிழ் என்று தமிழ் கூறப்

பட்டுள்ளது. திருவாரூரில் நாள்தோறும் தமிழறிஞர் கூட்டம் கூடுவது இயற்கை (ப.59). தஞ்சை நாயகனைப் பாராட்ட நினைத்த ஆசிரியர், 'கமலை நராதிபன் வடித்த செந்தமிழ் சேர்ந்த தஞ்சை நாயகன்' (ப. 61) என்றும், 'தீட்டும் தமிழுக்கு ஒரு தெய்வப் பசுவாகி நல்ல செந்தமிழ் பாராட்டும் பெருமை பெற்ற புழுகாச்சி மைந்தன்' (ப. 64) என்றும், 'தண்டமிழ் சிறந்த நற்கமலை நாயகம்' (ப.66) என்றும், 'இனிமை தவழும் முத்தமிழ் அறிந்து கற்ற கலைவாணர்களுக்கு உதவுகின்ற மணவையான்' (ப. 66) என்றும் தமிழோடு இணைத்துப் போற்றுகின்றார்.

கமலைச் சிறப்பு

ஆரூர், கமலாபுரி என்று கமலை அழைக்கப்படுகிறது. இவ்வூரின் வளம் சிறப்பாகப் போற்றிக் கூறப்பட்டுள்ளது. கமுகு, வாழைகள் செழித்து வளர்ந்துள்ளன. புதிய மலர்கள் சூழ்ந்த தோட்டங்கள் பல உண்டு. திசைக்கொரு வீதியும், அண்டகோளமும், எல்லையில்லாத சன்னல்களை உடைய கோபுரங்களும், மகளிர் விளையாடுவதற்குரிய புனலாட்டமும், கூட்டம் கூடுவதற்கேற்ற சாலையும், மண்டலாதிபர் வாசமும் பயில்கின்ற பெருமையை உடையது திருவாரூர் (பக்.59). இத்தகைய சிறப்புப் பெற்ற ஊரில் தஞ்சை நாயகன் வாழ்கிறான். இப்பேரூரில் இவனுடைய சுற்றமும் சந்ததியும் தழைக்க வாழ்கிறான்.

மகளிர் நிலை

அணங்கு, தத்தை, தையலார், மடந்தையார், வஞ்சியாள் என்று மகளிர் அழைக்கப்பெறுகின்றனர். அக்காலத்தில் இருந்த மகளிருள் பொது மகளிராகக் கருதப்பெறும் பரத்தையர் நிலை இந்நூலில் கூறப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இப்பெண்கள் அழகுக்கு இரதி ஒப்புமையாகக் கூறப் படுகிறாள். மின் போன்ற இடையினை உடையவர்கள். இவர்கள் காதல் செய்வதிலும், ஆண்களைக் கவர்ந்து தன்வசப்படுத்துவதிலும், புனலாடுவதிலும் சிறந்து விளங்குகின்றனர்.

இரு தனங்களை உடைய இப்பெண்கள் யானை அசைந்து அசைந்து நடந்து வருவது போலத் தனங்கள் குலுங்க ஒயிலாக நடந்து வருகின்றனர். இவ் அழகிய வஞ்சி 'கமகம' என்ற வாசனையுடன் பஞ்சணை மஞ்சத்தில் கொலுப் போல அமர்ந்திருக்கிறாள். மயக்கத்தை வலிய வரவழைத்து நெஞ்சம் நெக்குருக வீணை இசை மீட்டுகிறாள். சில சிந்து இராகச் சுரங்கள் பாடுகிறாள். புன்சிரிப்புச் சிரிக்கிறாள். காமம் மிகுதியாகும் பொருட்டும் அவளைத் தழுவும் பொருட்டும் அப்பசுங்கிளி இனிமையாகப் பேசிக் கொஞ்சுகிறாள். தன் உடம்பில் குளிர்ச்சிக்காகச் சிவந்த சவ்வாது, கதம்பம், கற்கண்டு, சந்தனம்

போன்றவற்றுடன் பன்னீரைக் கலந்து இதமாகத் தடவிக் கொள்கிறாள். ஆடவர்களுடன் இனிமையாகப் பேசி, சீவிய பாக்குடன் வெற்றிலைச் சுருள் மடித்துக் கொடுக்கிறாள். மயக்கத்தை உண்டுபண்ணுவதற்காக இனிமை தவழும் அவள் வாயிதழைக் கொண்டு உணர்ச்சியைத் தூண்டுகிறாள் (பக். 59, 60).

இனிய பெரிய மலரில் அமர்ந்து வண்டு தேனருந்துவது போல ஆடவர்களின் கலவி விருப்பத்திற்கு அவள் இசைகிறாள். அதற்கேற்றாற்போலத் தன்னை நாடிவந்த ஆடவரின் முடியின்மேல் கைகளைக் கொண்டு பளீரெனத் தட்டுகிறாள். இவள் முலைகளில் நகரேகையைப் பதித்துக் காதல் விளையாட்டைச் செய்கிறான் அந்த ஆடவன் (ப. 60).

அழகிய கொடி போன்ற இடை பதறும்படியும், இருகாற் சிலம்புகள் ஒலி எழுப்பும்படியும், அழகிய சிவந்த இரு கைகளில் அணிந்துள்ள வளையல்கள் கலீரென்று ஒலி எழுப்பும்படியும், புலம்பிட, இணைவிடாது இனி ஆச்சு என்று புணர்ச்சி விளையாட்டில் புணர்ந்து, உடலும் சிலீரென, அமுதம் இங்கு மிஞ்சிக் குபீரென, உள்ளம் குளிர, உடல் வேர்க்க, ஈருயிரும் ஒருயிராகப் போகம் செய்கின்றனர். அன்றில் பறவை எப்படித் தன் பெண் துணையை விட்டுப் பிரியாமல் கலந்திருக்கிறதோ அதேபோன்று இருவரும் எப்பொழுதும் சேர்ந்தே இருக்கின்றனர் (ப. 60).

கமலைப்பதியில் பெண்களின் காம விளையாட்டுகள் பலவாகும். இவர்கள் பலவாறு மகிழ்ச்சியுடன் உல்லாசமாகக் கூடிக் குலாவுகின்றனர். இப் பெண்கள் கொடுக்கின்ற மோகத்தையும், உல்லாசப் பார்வையையும், யானை அசைந்து நடப்பது போலக் கொங்கைகள் குலுங்க நடப்பதையும், ஆடை அணிந்திருந்த நேர்த்தியையும், கைவீசி நடக்கின்ற அழகையும் காண்பதற்கு இக்கண்கள் போதாது (ப. 61).

முத்தம் கொடுத்து, காதுகளில் அணிந்துள்ள தோடுகள் ஓசை எழுப்ப, கும்பமுலைகளில் யானைக் கோடுகள் தைத்து மார்பில் அழுந்த அவர் செய்த காமவிளையாட்டுகளை மறக்கவும் முடியுமோ? ஆண்களைச் சாடையாகப் பேசிக் கண்காட்டி அழைக்கின்றனர். நிலவைப் போன்ற முகமுடைய இப் பெண்கள் வாசனை மிகுந்த மலர்களைத் தங்கள் கூந்தலில் சூடிக் கொள்கின்றனர்.

இத்தகைய பெண்களுக்கு மாலை நேரத்தில் ஆண்கள் எவரும் வராத வேளையில் தென்றல் சுடுகிறது, நிலவு கொதிக்கிறது, மன்மதனும் முரசும் மிகவும் தொல்லை தருகின்றனர். உடல் மெலிந்து பல துயரங்களை அடைகின்றனர் (ப. 65).

இவர்கள் ஆண்களைத் தன்வயப்படுத்துவதற்காகத் தங்களை மிகவும் ஒப்பனை செய்து கொள்கின்றனர். இதற்காக இவர்கள் ஆடம்பரமாகச் செலவு செய்கின்றனர். காதல் செய்வதில் சாதனை படைத்த இவர்கள் ஆடவர்களை அழைத்து மலர் மெத்தையில் இருத்தி இதழோடு இதழ் முத்தம் தந்து செய்கின்ற காமவிளையாட்டுகளுக்குக் கோடிப் பொன் கொடுத்தாலும் ஈடாகாது (ப.66). இத்தகைய பெண்களைத் 'தோதகி' (கற்பொழுக்கமற்றவள்) என்று ஆசிரியர் கூறுகின்றார் (ப.63).

புராணமரபுக் கதைகள்

சிவபெருமான் நிகழ்த்திய அற்புத நிகழ்ச்சிகளுள் ஒருசிலவற்றை இந் நூலாசிரியர் எடுத்துக் கூறியுள்ளார். உமையொரு பாகனானது, காமனை எரித்தது, முப்புரத்தை எரித்தது, பாம்புகளை அணிகலனாக அணிந்தது, மான் மழு ஆகியவற்றைக் கைகளில் தாங்கியது, கங்கையைச் சடைக்கரந்தது, திங்களைச் சூடியது, யானைத் தோலைப் போர்த்தியது, தலையோட்டை ஏந்தியது ஆகிய இவ் அருளிச் செயல்கள் சிவபெருமானின் பெருமையைப் பறைசாற்றும் விதத்தில் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

உவமை நலம்

போல, நேர், ஒத்த ஆகிய உவம உருபுகளில் பல்வேறு உவமைகள் இடம் பெற்றுள்ளன. தஞ்சை நாயகம்பிள்ளை வடிவத்தில் மன்மதன் போன்றும், பெண்கள் அழகினில் இரதி போன்றும் உள்ளனர். தஞ்சை நாயகம்பிள்ளை கொடை அளிப்பதில் கார்முகில் போன்று இருக்கின்றார். மலை போன்ற தோள்களை உடையவனாக இருக்கின்றார். பெண்களின் இடைக்கு மின்னலும், மொழிக்கு மதுரமும், நடைக்கு யானை அசைந்து நடப்பதும், ஆண் பெண் இருவரும் கூடுவதற்கு மலரில் வண்டு தேன் அருந்துவதும், காதல் விளையாட்டில் ஈடுபடும் பொழுது பெண்கள் பேசும் பேச்சைக் குழந்தைகள் பேசும் மழலை மொழிக்கும் ஒப்புமைப்படுத்தி ஆசிரியர் கூறியிருக்கின்றார்.

இயற்கை நலம்

பல்வேறு இயற்கைக் காட்சிகளும், இயற்கைப் பொருள்களும் கூறப்பட்டுள்ளன. அன்றில், காடைகள், குயிலினங்கள், சேவல், கிளி, புறா, கழுகு, மயில், வண்டு ஆகிய பறவைகள் காணப்படுகின்றன. பெண்ணின் பேச்சு கிளியின் பேச்சோடு உவமைப்படுத்தப்படுகிறது. ஆணும் பெண்ணும் செய்கின்ற காம விளையாட்டுக்கு வண்டு, காடை, சேவல், கோழி, புறா, மயில் கழுகு போன்ற பறவைகள் செய்கின்ற விளையாட்டோடு ஒப்பிடப்படுகின்றன.[9]

9 தி. வே. கோபாலையர் (ப.ஆ.), **வண்ணத்திரட்டு**, பக். 59, 60, 62, 65.

யானை, மான், குதிரை போன்ற விலங்குகள் கூறப்பட்டுள்ளன.[10] ஆலமரம், தேவதாரு, கமுகு, கூவிளை (வில்வம்), கொன்றை, தாதகி (ஆத்தி), வாழை ஆகிய மரங்கள் காணப்படுகின்றன.[11] குமுதம், குவளை, தாமரை ஆகிய மலர்களும், மாலைகளும் கூறப்பட்டுள்ளன. குவளையில் செங்குவளையும், கருங்குவளையும் காணப்படுகின்றன. மாலை, தார், தொடையல் ஆகிய சொற்கள் மாலையைக் குறிப்பனவாக இடம்பெற்றுள்ளன.[12]

கார், முகில், மஞ்சு ஆகிய சொற்கள் மேகத்தைக் குறிப்பனவாகவும், மலை, வரை ஆகிய சொற்கள் மலையைக் குறிப்பனவாகவும் இடம் பெற்றுள்ளன.[13] கடல், ஆறு, நதி, புனல் ஆகிய நீர்நிலைகளும் கூறப்பட்டுள்ளன.[14]

ஏனையன

இசை நயம் : – மகளிர் ஆண்களை மயக்குவதற்காக மாலை வேளையில் வீணை மீட்டிச் சிந்து இராகச் சுரங்கள் பாடுகின்றனர் (ப. 59). மாலைப் பொழுதில் இளம் பெண்களுக்கு முரசும், வீணை இசையும் மிகுந்த தொல்லையைத் தருகின்றன (ப. 65).

ஆடை ஆபரணங்கள் : – பெண்கள் அணிந்த ஆடைகள் ஆடை, செம் பொனாடை என அழைக்கப்படுகின்றன (பக். 60, 61). இவர்கள் சிலம்பு, முத்தாரம், முத்து, தாடங்கள் (காதணி, தோடு), பொன், இரத்தினம், வளை ஆகிய ஆபரணங்களை அணிந்துள்ளனர்.[15]

பிற : – ஒன்று, இரண்டு, ஐந்து, எட்டு, நூறு, கோடி ஆகிய எண்களும்,[16] காசி, தஞ்சை, பேரூர், மணவை ஆகிய ஊர்களும்,[17] இதழ், இடை, முலை, கால், கண், காது, கை, தொடை, நாக்கு, மார்பு, முகம், வாய், விரல் ஆகிய உடலுறுப்புக் களும்,[18] மாலை, இரவு ஆகிய பொழுதுகளும் (65, 59) கூறப்பட்டுள்ளன. ஏர், சந்தனம், சர்க்கரை, சவ்வாது, பஞ்சணை, பன்னீர், பாக்கு, பாணிதம் (கற்கண்டு), மஞ்சம், மெத்தை போன்ற பொருள்கள் இடம்பெற்றுள்ளன.[19]

10. தி. வே. கோபாலய்யர் (ப.ஆ.), **வண்ணத்திரட்டு**, பக். 57, 58, 61, 62, 65.
11. **மேலது**, பக் 57, 58, 59, 61, 63.
12. **மேலது**, பக். 58, 59, 61, 62, 63, 65, 67.
13. **மேலது**, பக் 62, 63, 65, 58, 61, 64, 65.
14. **மேலது**, பக் 58, 59, 62, 63, 66.
15. **மேலது**, பக். 58, 60, 62, 66.
16. **மேலது**, பக். 58, 60–67
17. **மேலது**, பக். 58, 59, 61, 62, 64, 65.
18. **மேலது**, பக். 58–66
19. **மேலது**, பக் 59, 60, 65–67.

சொற்கள்

ஆச்சு, உறமுறை, காண், மூட்டி, மெச்ச போன்ற பேச்சுவழக்குச் சொற்களும், அங்கம், லீலை, சரசம், ராச்சியம் முதலான வடசொற்களும்,[20] அவரவர் (63), இன்னம்இன்னம் (62), ஒருவர்க்கொருவர் (62), கமகம (67), கமகமென (59), குமுகுமு (67), பொறுபொறு (63), வந்துவந்து (62) ஆகிய அடுக்குச் சொற்களும் இடம்பெற்றுள்ளன. பன்னகம் என்ற சொல் பனகம் (57) என்றும், குருசி என்பது குரிசி (61) என்றும் சிதைந்தும் காணப்படுகின்றன.

20. இந்நூலில் இடம்பெற்றுள்ள பேச்சுவழக்கு, வடசொற்கள் ஆகியவை பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

துணைநூற்பட்டியல்

துணை நூற்பட்டியல்

இராசு,செ. — **தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள்**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987.

இளம்பூரணர் (உ.ஆ.) — **தொல்காப்பியம் பொருளதிகாரம்**, கழக வெளியீடு, சென்னை, 1974.

கோபாலய்யர், தி. வே. (ப.ஆ.) — **வண்ணத்திரட்டு**, தஞ்சை சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 1969.

சாமிநாதையர், உ. வே. (ப.ஆ.) — **கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்துதேசிகர் இயற்றிய பிரபந்தங்கள்**, கேசரி அச்சுக்கூடம், சென்னபட்டணம், 1938.

சீதா, எஸ். (ப.ஆ.) — **துளஜா மஹாராஜா இயற்றிய சிவகாம ஸுந்தரீ பரிணய நாடகம் (ஸ்வர ஸாஹித்யத்துடன்)**, தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு, தஞ்சாவூர், 1971.

சுப்பிரமணியபிள்ளை, பொன். (ப. ஆ.) — **அனந்தபாரதி இயற்றிய திருவிடைமருதூர் நொண்டி நாடகம்**, திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம், திருவிடைமருதூர், 1967.

தமிழண்ணல் — **சங்க இலக்கிய ஒப்பீடு முதல் தொகுதி**, (வி. உ.) மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1975.

பிரேமலதா, வே. (ப. ஆ.) — **தியாகேசர் குறவஞ்சி**, சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1970.

வேணுகோபாலன், வ. (ப.ஆ.) — **அதிரூபவதி கல்யாணம்**, தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1985.

வேணுகோபாலன், வ. (ப.ஆ.) — **ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள்,** தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1980.

ஜகந்நாதன், கி. வா. (ப. ஆ.) — **மூன்று தமிழ் நாடகங்கள்,** தமிழ்நாடு அரசு, சென்னை, 1950.

Olaganatha Pillay.L (Ed.) — **A Descriptive Catalogue of the Tamil Manuscripts, Volume I,** T.M.S.S.M Library, Tanjore, 1964

Seetha, S. — **Tanjore as a Seat of Music,** University of Madras, Reprinted. 1981

-------- — **Tamil Lexicon, Volume IV,** University of Madras, Reprinted, 1982.

தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையச் சுவடிகள்

அதிரூபவதி கல்யாணம், எண்கள் 634,635,636; காப்பீடு வால்யூம் 367.

இராமபாரதியின் சிங்காரப்பதங்கள், எண் 813 / 11654.

சிவகாமசுந்தரி பரிணய நாடகம், தெலுங்குச் சுவடி எண்கள் 633, 634, 635.

தஞ்சை நாயகம்பிள்ளை வண்ணம், எண் 345 / 692 (a).

பாண்டிகேளி விலாசம், எண் 640 / 170.

மதனசுந்தரப் பிரசாத சந்தான விலாசம், எண் 646 / 600 .

வாசுதேவகவியின் சிங்காரப் பதங்கள், எண் 813 / 11649.

பின்னிணைப்புகள்

பின்னிணைப்புகள்

பேச்சு வழக்குச் சொற்கள்

தஞ்சைப் பெருவுடையாருலா

(எண்கள் – கண்ணிகள்)

1. அஞ்சு (ஐந்து) 214
2. அதிசயிக்ச 12
3. அதிசயித்து 306
4. அம்மை (தாய்) 209
5. இரா (இரவு) 218
6. கணப்போது 93
7. காணும் (காணவில்லை) 99
8. சிந்த 38
9. செப்பாதே 236
10. செப்பில் 249
11. செப்புவார் 91.
12. செப்புவான் 110
13. தரிசிக்க 18
14. நாலு (நான்கு) 197
15. பாங்கா (அழகாக) 11
16. முந்தொருநாள் 38
17. வார்த்தை 157
18. வையானோ 249
19. வைவாள் 218

சகசிராசன் குறவஞ்சி

(எண்கள் பக்க எண்கள்)

1. அட 132
2. அடா 149
3. அடே 132, 135
4. அதுதாண்டா 138
5. அம்மே (பல)
6. அல்லடா 137
7. அறிந்து கொள்ளடி 112
8. அறிவாயோடா 141
9. அனுகூலம் 119

10. அனேகம் 119
11. ஆச்சுது 93
12. இங்கிதம் 115
13. இப்படிக்கொத்த 123
14. இப்படிக்கொத்த காரியம் 122
15. இருடா சிங்கா 145
16. உச்சிதமான 141
17. உண்டடி 116
18. எங்கேனாலும் 132
19. எப்படிக்கொத்த 122, 133
20. எப்படிக்கொத்த காரியம் 122
21. எப்படிடா 133, 134, 135
22. என்னடா 132, 138, 140
23. ஏண்டா 132, 140
24. ஏனடா 132
25. ஐயே 133, 134, 135, 137, 138, 141, 142
26. ஐயோ 92, 97
27. ஒண்ணு 144
28. ஒண்ணு சேத்து 134
29. கட்டறது 133, 134
30. கட்டிப்போடுவேண்டா 133, 134
31. கட்டுவாயடா 133
32. கட்டுவேண்டா 133
33. கட்டுறாயடா 141
34. கவுத்தாலே 133
35. காணேனடா 141
36. காண் (பல)
37. குறத்தியடி போ 152
38. கேளடி (பல)
39. சிக்கிச்சு 137
40. சிக்சிச்சுடா 137
41. சிலை 134
42. சுடுது 92
43. சும்மா 132, 135
44. செய்தேனடா 145
45. சொல்லடி (பல)
46. சொல்றேன் 141

47. 'தளுமிறது 141
48. தின்னுப்போட்டு 131
49. தெண்டனிட்டு 119
50. தெண்டனிட்டேன் 94, 145
51. தேசமடி 103
52. நம்மை 144·
53. நாலு 121, 142
54. நாலுதீவு 105
55. நாலுவகை 105, 116
56. பண்ணி 152, 154
57. பயல் 138
58. பார்க்கவேணும் 115
59. பிச்சி 133
60. பிடிப்பாண்டா 138
61. பிடிப்பாயடா 135
62. பிளாய் 132 – 135, 142, 142
63. பூசினேண்டா 150
64. பேரு 132
65. பேர் 118
66. பொட்டக்கண் 141, 143
67. பொண் 132
68. போடறயாடா 133, 141
69. போடா 138
70. போடுவேண்டா 134
71. போறியா 132
72 மனிசர் 138
73. மாழு 142
74. முந்தி 153
75. மூணாம் நாள் 143
76. மெத்த 121, 122, 140
77. யக்கா 145
78. யண்ணே 132
79. யாரடா 131
80. யாருடா 131
81. ரெண்டு 142
82. வந்தேனடி 109. 116, 117
83. வயத்துக்கழிச்சல் 141

84. வயறு 141
85. வரயில்லையடா 135
86. வவுத்து 132
87. வவுத்துக் கழிச்சல்காரன் 142
88. வாடி 97, 120 151
89. வாட்டி 142
90. விளக்குமாத்துக்கட்டை 144
91. வெகுமானம் 116, 117, 129

தியாகேசர் குறவஞ்சி

(எண்கள் பாடல் எண்கள்)

1. அணைய வேணும் 13.4
2. அம்மே 29
3. அய்யோ 18.4
4. அனேகம் 18.9
5. ஆரும் (யாரும்) 18.4
6. எய்யுறாய் 12.1
7. கச்சிதமாய் 47.4
8. சேதி 20:55, 30, 46
9. சோலி 10.2
10. தயவு 47.4, 49:21
11. தினம் 25.1, 25.5, 29.3, 66
12. தோணும் 27
13. நவிலக் கேளம்மே 33
14. நாலுமுகம்6
15. நிதம் 25.2
16. மயக்கமாச்சு 17.2
17. மூணு காலச் சேதி 27
18. மூணு லோகச் சேதி 27
19. மெச்சிய 9.1
20. மெச்சு 8
21. வீசுறாய் 11.3
22. வீணே 10.1, 59
23. வேணும் 10.2

சரபேந்திர பூபால குறவஞ்சி

(எண்கள் பாடல் எண்கள்)

1. அடா 71.3, 8, 11
2. அடி அம்மே 33.3
3. இங்கிதம் 56.3
4. இச்சகம் 33.3
5. இதோ ஆச்சு 57
6. இருக்கிறது 68.2
7. இருக்குது 68.2
8. இருப்பமடி 71.16
9. உருகுது 64.1
10. உரையடா 71.16
11. எப்போதடி 71.13
12. என்னடீ 54.5
13. ஒருவழியாய் 55
14. ஓடிப்போமடா 58.2
15. ஓதிடு 36.3
16. ஒய்வுற்றிருக்குது 59.6
17. கண்ணி குத்தடா 58 ப.
18. கண்ணி பாச்சு 57
19. கிடைக்குமடா 71.16
20. கிட்ட வா 64.1
21. குத்தடி 58.1, 2
22. குந்தியிரு 60
23. கொண்டாயோடீ 54.6
24. சட்டென 64 அனு.
25. சுகமே 71.17
26. சும்மா 60
27. சொந்தக் குடிசை 39
28. சொலடீ 30 அ 54
29. சொல்லுகிறேனடி 46 ப.
30. சொல்லுறேன் 64.2
31. தயை 71.16
32. நாப்புக்காட்டி 60
33. நீ யாரடி 36 ப.
34. பதறுதடி 30 அ 56
35. பதைக்குது 71.14

36. பாரடி 71.14
37. பார்ப்பமடா 58.3
38. பாலமுது கசந்து விடுமோடீ 54.8
39. பெருகுது 64.1
40. பேரென்னடி 54.14
41. மணாளன் 51.1
42. மாட்டிக் கொள்ளாதடா 58.2
43. மிஞ்சிப் பேசாது 54.14
44. முந்தி 21.2
45. மெச்சி 33.3
46. மெச்சிட 51.11
47. மெச்சிடும் 51.8
48. மெத்த விசுவாசி 66.3
49. மெள்ளப் பதுங்குது 59.1
50. யேசுவாளே 18
51. ருசியாது 64.3
52. ரோமம் 11.5
53. வந்தேனடா 71.7
54. வயிறு பசிக்குது 59.4
55. வருகுது 50.4, 59, 64.1
56. வாய்த்துடுக்கு 54.14
57. வாழ்வோமடா 71.15
58. விழிக்குது 59.2
59. வெகு பாக்கியம் 51.12
60. வெகு வேடிக்கையாகப் பேசிக்கொண்டு 56.1

பூலோக தேவேந்திர விலாசம்

(எண்கள் பக்க எண்கள்)

1. அஞ்சு 26
2. அடியோ சேடி 27
3. அதட்டி 23
4. அப்போ 18, 37
5. அருச்சனை 29
6. அவனதாச்சே 38
7. அறிவாயோடி 27
8. ஆகட்டும் 23
9. ஆச்சே 11

10. ஆண்பிள்ளை சிங்கம்12
11. ஆதரவாய் 24
12. ஆரடி 27
13. ஆரை வைவாய் 21
14. ஆலோசனை 28
15. ஆவது 37
16. இடமாச்சுதே 11
17. இதுக்கு 24
18. இந்தப்படிக்கு (பல)
19. இந்தமட்டிலே 37
20. இப்போ 12, 13, 23, 37
21. இரங்குதில்லை 21
22. இருக்கிறாரடி 15
23. இருப்பாரடி 15
24. உண்டோடி 27
25. எச்சரிக்கிற 40
26. எப்போ 24
27. எய்யாதே 22
28. எய்யுறான் 24
29. எய்யிறேண்டி 10
30. எய்யுறேனடி 23
31. எய்வானடி 27
32. எய்வேனடி 10
33. எல்லார்க்கும் 27
34. எழுந்திரடி 7
35. என்னடி 25
36. என்ன செய்வேனடி 20
37. ஏகமனது 29
38. ஏதடி 25
39. ஐயையோ 36
40. ஒலைப்பூ சமுதாடு 9
41. கணத்தினில் 34
42. கர்வம் 23
43. கல்யாணம் 24
44. கிட்டப்போகாது 16
45. கிட்ட வந்த 11
46. கிட்டி 18, 22

47. குமாரத்தி 19
48. கூட்டிக்கொண்டு 39
49. கெஞ்சடி 22
50. கெட்டியாய் 12
51. கேளடி 27
52. சகம் 9
53. சகாயம் 26
54. சஞ்சலம் 26
55. சந்தோஷ (மாக) 31, 39, 41
56. சந்தோஷமாச்சு 31
57. சமத்துண்டு 35
58. சமயத்திலே 19
59. சமுகம் 38, 39
60. சம்மதி 11
61. சயங்கொண்டேனே 11
62. சயமாகும் 28
63. சயம் கொண்டு 18
64. சயித்து 9, 27
65. சயித்தது11
66. சரிகை ரவிக்கை 6
67. சரீரம் 20
68. சல்லாபம் 23
69. சனங்கள் 39
70. சாரி 19
71. சிங்காரமாக 20
72. சிங்கி 9, 11
73. சிங்கிக்கொள்வதுமாச்சே 38
74. சித்தம் 30, 35
75. சிந்தை 36
76. சீக்கிரமாகவே 39
77. சும்மா 16
78. செய்வாயடி 11.27
79. சேதி 13, 25
80. சொல்கிறேனடி 27
81. சொல்லடி 25
82. சௌரியம் 27
83. தப்பிதம் 38

84. தயவுடன் 30
85. தாடை 37
86. திராணை 10, 17
87. திருடா 37
88. தீர்ப்பேனடி 25
89. தீவிரம் 36
90. துடுக்கு 18, 22
91. தைரியம் 26
92. நழுவுதடி 21
93. நாதனாக 29
94. நாதா 43
95. நாலுபேர் 11
96. நிசார் 9
97. நிந்தை 22, 36
98. நிமிடம் 26
99. நிமித்தமாக 21
100. நிமித்தம் 27
101. நிமிஷம் 37
102. நியமம் 28
103. நில்லடி 23
104. நில்லு 22
105. பண்ணும் 29
106. பதறி 27
107. பந்துக்கள் 38, 39
108. பாரடி 7, 10
109. பிடிக்குதில்லை 21
110. புருடர் 9, 12, 16, 29
111. புருஷன் 43
112. புல்ல 18
113. பேசவந்தாயடி 13
114. பேசுறாயடி
115. பேர் 27, 41
116. போகாதே 22
117. போங்காண் 17
118. போடி 16
119. மயல் 22, 23
120. மாதாபிதா 39

121. மானிடம் 23
122. மிஞ்சாதே 23
123. மெத்த இந்நேரம் 31
124. மெய்யடி 27
125. மொரட்டி 21
126. மையல் 7, 19, 20, 26, 43
127. மோகித்து 19
128. மோகம் 16
129. யாரடி 25
130. யோசனை 36
131. ரட்சியும் 26
132. வகையறியாமல் 26
133. வசமல்ல 24
134. வாகாகவே 26
135. வாடி 18
136. வாட்டவேண்டாம் 22
137. வாதாடி 18, 23
138. வாது ஏனடி போடி 18
139. வார்த்தை 12, 28
140. விடியுதில்லை 21
141. விடேன் 23
142. விருத்தாந்தம் 39
143. விம்முது 20
144. வீணிலே 23
145. வேடிக்கை 24
146. வேணும் 18

சந்திரிகாகாசை விலாசம்

(எண்கள் பக்க எண்கள்)

1. அடியே 58
2. அதட்டி வசைபேச 62
3. அதரம் 77
4. அபிமானம் 57
5. அமிருதம் 72
6. அருச்சனை 52
7. அருச்சிக்கும் 80
8. அவயம் 63

9. அனுகூலம் 75
10. ஆகுது 63
11. ஆச்சு 68, 75
12. ஆச்சே 75
13. ஆதிக்கியசுகம் 77
14. இச்சையான வார்த்தை 76
15. இந்தப்படிக்கு 48, 49, 51, 52, 53, 54, 55, 58, 59, 61, 63, 64, 65, 66, 67, 68, 69, 70, 71, 74, 75, 76.
16. இப்போ 81
17. இருக்குது 60
18. இளிச்சவாயன் 57
19. உச்சி வினோதங்கள் 57
20. எல்லாரும் 50
21. எண்குது 63
22. ஏதையா 79
23. ஐயா 51, 53, 58, 59, 67, 79, 80
24. கங்குல் 62
25. கவடு 73
26. கன்மமோ 78
27. காணுது 62.
28. காண் (பல விடங்கள்)
29. கீர்த்தி 70
30. குரோதம் 77
31. கூட 62
32. கேளடி 58
33. கொள்ளுது 63
34. கோளுரைப்பான் 57
35. சமுகம் 70, 71, 74, 76 75
36. சரீரம் 79
37. சன்ம சாபல்யம் 68, 75
38. சாமி 53
39. சாத்திக்கொண்டு 49
40. சித்தம் 51
41. சினேகம் 69
42. சீக்கிரம் 75
43. சுகபோகம் 78
44. சுங்கான் 57

45. சுடுது 62
46. சுவாமி 52, 67, 74, 75, 77, 79
47. சூதையா 79
48. செய்குது 60
49. சொகுசாக 67
50. தயவு 69
51. தரித்திரம் 56
52. தன்மமோ 78
53. தீராது 63
54. துப்பட்டி 49
55. தூடணம் 56
56. தேகம் 62
57. தேடுது 63
58. தொடுலீலைகள் 74
59. தொனிக்கை 64
60. நாடுது 63
61. நினைக்குது 64
62. நித்தம் 69, 75, 81
63. நித்தியம் 58
64. நீதமோ 79
65. நீதம் 80
66. நேமம் 53
67. நோகுது 62, 80
68. பண்ணும் 68
69. பராமுகம் 78
70. பாரடி 63
71. பிடிக்காது 63
72. புளகிதம் 78
73. பூசாள் 73
74. பூசித்து 69
75. பூசை 79
7C. பெண்சன்மம் 78
77. பெம்மான் 78
78. பேதம் 79
79. போச்சு 77
80. மதுரசம் 77
81. மிடறு 78

82. மெத்தமனம் 62
83. மெலியுது 62
84. மையல் 79
85. யுகம் 79
86. யேச 62
87. யேசாள் 73
88. யோசனை 66, 70
89. ரம்மியமோ 78
90. ரோசம் 62
91. வருது 62
92. வன்மமோ 78
93. விடியாது 62
94. விடுவிக்க 64
95. விநாடி 78
96. விந்தை 63, 77
97. விம்முது 62
98. வீடு காதமோ 79
99. வேணும் 49, 65, 66, 72

திருவிடைமருதூர் நொண்டி நாடகம்

(எண்கள் பக்க எண்கள்)

1. அஞ்சாந்தேதி 13
2. அஞ்சு 9, 25
3. அஞ்சு கரணம் 26
4. அஞ்சு விதம் 23
5. அடடா 16
6. அதினாலே 32, 37
7. அதினால் 36
8. அதினுட 40
9. அந்தட்சணம் 20
10. அய்யனவாள் 33
11. அவடத்திலே 24
12. அனுதினம் 2, 7, 50, 55, 57
13. அனேகம் 55
14. அன்பது 20
15. அன்பது பொன்கிழி 14
16. ஆச்சுது 14, 16

17. ஆயிரங்கண் வேணும் 19
18. இங்கிதம் 22
19. இச்சை 50
20. இட்ட தெய்வம் 21
21. இட்டம் 57
22. இதுகளிலே 10
23. இன்னம் 11, 56
24. எப்பவும் 3
25. எல்லவர் 54
26. என்கச்சே 33
27. ஒகோ 27.32
28. ஒகோகோ 16, 18, 44
29. கங்கணம் 33
30. கடுதாசி 43
31. கடுதாசு 42, 43, 44
32. கமுக்கம் 18
33. சரடகம் 46
34. கரி கரணம் 25
35. களவாண்ட (த்தை) து 38
36. காணும் 11,20
37. கிட்ட 24
38. கேட்டீரோ 32
39. கைலாகு 21
40. சம்பாரித்த (தை) 12
41. சரட்டென்று 10
42. சாயரட்சை 55
43. சிலவு 46
44. சின்ன 42
45. சீட்டெழுதி 33
46. சீமான் 58
47. சீமை 60
48. சுணங்க 54
49. சுத்தக்கிரயம் 34
50. சுத்திக்கொண்டு 26
51. சுமுகம் 36, 47
52. சும்பனங்கள் 25
53. சுயம் 10

54. சுழிசுத்தங்கள் 45
55. சுறுக்காக 37
56. சுற்றவேணும் 18
57. செகத்தினில் 12
58. செகப்புச்சட்டை 44
59. செகம் 49
60. செபம்பண்ணி 16
61. செல்லிலைகாணும் 34
62. சேதி 11, 38
63. சேர்வை 61, 63, 68
64. சைகை 21, 24
65. சொந்தமாய் 4
66. சொற்கம் 49
67. சொற்பனம் 23
68. சொன்னத்தை 13
69. சோடு 45
70. சோரம் 36
71. ஞாயம் 19
72. டொம்பர் தொழில் 26
73. தட்சமயம் 34
74. தயிரியம் 41
75. தருணம் 57
76. தலகாணி 24
77. தவராமல் 47
78. தாட்சி 27
79. திரணம் 14
80. திருட 37
81. தின்னம் 30
82. தீர்க்கம் 16, 41, 57, 62
83. தீர்க்கயோகன் 36
84. துடைகள் 26
85. தெட் (டுதல்)டி 7, 23
86. தெட்டுகின்ற எத்துகள் 10
87. தெண்டனிட்டேன் 14, 17
88. தெண்டம் 13
89. தெரிசனம் 13, 17
90. தெரிசிக்கவே 49

91. தெரிசிக்கும் 18
92. தெற்று 42
93. தென்பு 17, 45
94 தேட்டு 12
95. தோணும் 51
96. நத்தி 37
97. நாட்டி விடுதல் 20
98. நாணிக்கோணி 22
99. நிசம் 18
100. நிதம் 57, 58
101. நித்தம் 6.20, 33, 60
102. நெரடினேனே 25
103. நேத்தி 60
104. நேமம் 13, 17, 55
105. நேயம் 11, 17, 36
106. நேயன் 63
107. நோகுதல் 21
108. பண்ணி 34
109. பண்ணினேன் 18
110. பண்ணினோம் 13
111. பண்ணு 58
112. பண்ணுவோர் 35
113. பேச்சு எடாமல் செய்வேன் 10
114. பேரு 9
115. போச்சுது 16
116. போச்சுதையா 61
117. போதை 10
118. முந்தாநாத்து 23
119. முந்தி 15, 20
120. முன்னம் 13
121. மெச்சி 9, 37
122. மெச்சினேனே 13
123. மெச்சினேன் 37
124. மெச்சுதல் 36
125. மெத்தப் பசப்புதல் 19
126 மெத்தவே 39
127. யெத்துப் பண்ணுதல் 29

128 ராத்திரி 18, 36
129. வந்தனம் 13, 50
130. வந்தனை 6
131. வயணம் 24
132. வரச்சே 46
133. வரப்பண்ணிய 23
134. வாச்சுது 36
135. வாடி 24
136. வாது 34, 54
137. விண்ணாணம் 22
138. வேணும் 12, 13, 41, 49

மதனசுந்தரப் பிரசாத சந்தான விலாசம்

(எண்கள் பாடல் எண்கள்)

1. அஞ்சு 9
2. அருளவேணும் 21
3. அன்பர் 5
4. அன்பன் 19
5. இச்சித்தேனே 18
6. இப்போது 15
7. உசிதம் 13
8. உத்தமம் 21
9. உத்தரவு 16
10. உல்லாசம் 6, 15
11. உல்லாசன் 3
12. உற்சாகம் 11,16
13. எற்றி 13
14. ஒண்ணான் 13
15. ஒயில் 3
16. காட்சி 19
17. காமித்த 21
18. கெட்டியாக 13
19. கேளுங்கள் 13
20. சட்டமாய் 13
21. சதுர் 11
22. சபை 7
23. சமர்த்தன் 3

24. சரிசமமாய் 11
25. ~ல்லாபன் 3
26. சாமி 21
27. சீர் 13
28. சுகமாய் 13
29. செல்லம் 23
30. சோதித்து (தேடி) 16
31. தடுக்கும்படி 12
32. தம்பிமாரே 13
33. தயவு 20,21
34. தரித்து 11
35. தருவீர் 23
36. தர்மம் 11
37. தவம் 6
38. தாண்டியே 14
39. தெண்டனிடுதல் 4
40. நாலான் 13
41. நாலுதிசை 10
42. நாலுபேர் 10
43. நேமித்து 16
44. பண்ணும் 24
45. பாடுமே 11
46. பாடும் 12
47. பார் 24
48. பூரிக்கவே 12
49. பூரித்து 11
50. முந்தி 15
51. முன்னமே 14
52. மூணான் 13
53. மேச்ச 3, 10
54. மெச்சி 20
55. மெச்சும்21
56. மொச்சி 13
57. ரெண்டான் 13
58. வகையாய் 13
59. வரங்கள் 19
60. வரம் 5

61. வாரும் 13
62. விந்தை 13
63. விளையாடி 11
64. விளையாடுவோம் 13, 16
65. வேணும் 18, 23
66. வைபோகம் 7

பாண்டி கேளீ விலாச நாடகம்

(எண்கள் பாடல் எண்கள்)

1. அருளுவையே 27
2. அன்பர் 27
3. அன்பு 18
4. ஆடுது 11
5. ஆவல் 18
6. ஆனந்தம் 6, 18
7. இதமி 17, 31
8. இலகுதுபாரும் 15
9. உண்டாக்குது 18
10. உலாவுவது 9
11. உல்லாசமாக 3
12. உல்லாசன் 1, 11
13. உற்சாகம் 31
14. ஒயிலாய் 1, 3, 9
15. ஒவ்வாதது 14
16. கண்மணியே 9
17. காட்டுதுபார் 9
18. காணுமே 13
19. காணுவோம் 9
20. காமுகசிங்காரனே 15
21. குளிரப்பேசும் 14
22. கொஞ்சி 14
23. கொலு 10, 11
24. சமர்த்தாய் 31
25. சிங்காரம் 1, 18
26. சிங்கார லோலன் 1
27. சித்தம் 22
28. சீக்கிரம் 31

29. சுகந்தரவேணும் 12
30. சுகம் 1, 5, 29, 31
31. செய்குவேன் 6
32. செய்குவையே 28
33. சேவை 1, 6
34. சொகுசாக 7, 11
35. சொல்லும் 22
36. தயவு 28
37. தாமசம் 26
38. தாரும் 17
39. தெம்பு 27
40. தோணுது 31
41. நம்பினபேர் 23
42. நிதம் 21
43. நிலவரம் 31
44. நேயம் 31
45. பாடுது 11
46. பாராய் 14
47. பாரும் 17
48. பார் 9
49. பேசி 20
50. பேசுது 13
51. போடுது 11
52. மயல் 1, 6
53. மாமி 26
54. மெச்ச 2, 13
55. மெச்சி 21
56. மெச்சும் 17
57. வந்தனம் 17
58. வல்லமை 20
59. வாக்கு 28
60. வாசனை 18
61. வாது 20
62. வெகுமானம் 31
63. வேடிக்கை 17
64. வேணும் 26

அதிரூபவதி கல்யாணம்

(எண்கள் பக்க எண்கள்)

1. அடியே (வசனம்) 16, 17, 24
2. அதிசயம் 5, 34
3. அம்மே (வ) 12
4. அய்யா 10, ஐயா 19 (வ) 11, 19, 25
5. அனுகூலம் 21
6. ஆச்சு (து) 8, 10, 19, 29; ஆச்சுதே (வ) 18, 28; ஆச்சே (வ) 15
7. ஆதிக்கியம் 26
8. ஆலோசனை 5
9. ஆவலாதி (வ) 14
10. ஆனேனடி (வ) 16
11. இங்கிதம் (வ) 29
12. இன்னம் (வ) 26
13. உருகுதே (வ) 31
14. எடடி (வ) 12, 13
15. ஏதடி (வ) 16
16. ஒய்யாரம் 8
17. காணும் (வ) 19
18. காண் (வ) 22
19. கார்யம் 19
20. கேளாய் 21, 29; கேளும் 19 – 21
21. சமுகம் 21 (வ) 23
22. சிங்காரிச்சு (வ) 7
23. சித்தம் (வ) 25
24. சினேகம் (வ) 23, 27
25. சேதி 19
26. சொல்லுறேன் (வ) 6, 9
27. சொல்லும் 5, 19
28. தாமே (வ) 13
29. துளைக்குது (வ) 7
30. நம்முடைய 8
31. நீச்சாச்சே (வ) 14
32. பண்ண 8
33. பண்ணலாகாது 23
34. பண்ணுகிறீர் 19

35. பண்ணுகிறோம் 21
36. பாக்கியம் (வ) 28.
37. பாரடி 5
38. பிள்ளாய் 5
39. பெண்ணே 7,8 ,10, 18, 19, 21
40. பேசலாச்சே (வ) 14
41. மனசு (து) 10, 18, 19, 21
42. முந்தவே 20
43. மெத்த 19
44. வருது (வ) 15
45. வாடி (வ) 16
46. வாரும் 7, 8, 20
47. விருத்தாந்தம் 11
48. வீணாச்சே (வ) 15
49. வேணுமடி (வ) 16
50. வேணுமே (வ) 9; வேணும் 8 (வ) 33.

சிவகாமசுந்தரி பரிணய நாடகம்

1. அடா
2. எதற்கடி
3. ஏனடி
4. ஓட்டாண்டி
5. கூறும்
6. கேளுமையா
7. கேளும்
8. கேள்
9. கொஞ்சகாலம்
10. சல்லிக்காசு
11. செல்லாதடீ
12. சொல்லுமையா
13. சொல்லும்
14. தெரியுமடி
15. நிற்காதடி
16. பண்ணுகிறாய்
17. பேர்
18. போ
19. போடி
20. வாயாடி

வாசுதேவகவியின் பாடல்கள்

(எண்கள் பாடல் எண்கள்)

1. அசட்டை 14
2. அடி 3, 11, 48; அடியே 31, 50
3. அதிசயம் 39
4. அதிபதி 3
5. அதிவேக நடை 89
6. அபசாரம் 2
7. அபிமானம் 90
8. அய்யோ 3
9. அல்லடா 31
10. அவலாதி 34
11. அழிந்ததடி 89
12. அறியாயோடி 14, 50
13. அனுகூலம் 42
14. அனுதினம் 10, 13, 15, 29, 58
15. அனுப்படி 13
16. ஆகுது 38, 43
17. ஆச்சு 34, 36
18. ஆச்சுது 27, 55
19. ஆமோடி 13, 18
20. ஆரடி 45
21. இங்கிதம் 91
22. இரக்கம் 21
23. இலங்குது 59
24. இல்லையோடி 14
25. இனிக்குது 16
26. இன்னைக்கு 30
27. உபசாரம் 21
28. உளவு 42, 91
29. எய்யுரானடி 50
30. எய்யுரான் 40
31. என்னடி 1, 14, 50
32. ஏசலமோ 37
33. ஏசுதல் 9, 15, 25
34. ஏச்சு 36
35. ஏதடி 30, 55

36. ஏதேதோ 13
37. ஏனடி 11, 38, 45, 50
38. ஐயய்யோ 40
39. ஐயா 33, 34, 36, 37, 39, 43, 44, 46, 90பி, 92பி
40. கலைத்ததடி 89
41. காணடி 15, 89
42. காண் 1, 15, 26
43. கிட்ட 52
44. குட்டிச்சுவர் 52
45. குத்திரம் 22
46. கும்பிடுரேன் 90
47. கேளடி 9, 26
48. கைலாகு 6
49. கோத்திரம் 41
50. சமுகம் 39
51. சாமான்யம் 39
52. சாமி 5, 7, 24, 26, 38, 39, 43, 48, 59, 87, 90
53. சும்மா 89
54. சேரடி 45
55. சொல்லடி 32, 38, 45, 48
56. சொல்லலாச்சே 15
57. சொல்லும் 87
58. சொல்லையா 91
59. சொன்னேனடி 50
60. தரிக்கலாச்சே 15
61. தாடி 11
62. தாரதேது 34
63. தாரும் 36
64. தீரடி 45
65. தீற்தம்1
66. தேடுது 7, 28
67. தேனடி 45
68. நண்ணாக 33
69. நம்பினானடி 45
70. நாகரிகக்காரி 41
71. நாடுது 28, 43
72. நாளைக்கு 30

73. நானடி 50
74. நில்லடா 31
75. நில்லடி 45
76. நீங்குது 59
77. நீலித்தனம் 48
78. நோகுது 43
79. பகிரி 54
80. பதறுது 31
81. பயல் 52
82. பள்ளப்பயல் 54
83. பள்ளிப்பயல் 54
84. பாரடி 45, 58
85. பிஞ்சுது 3
86. புல்லடி 45
87. பூவடி 45
88. பேசுறீர் 36
89. பையல் (பையன்) 40
90. போடி 13, 16, 55
91. போமய்யா 90, 91
92. போராதடி 50
93. போரான் 52
94. போலே 1, 3
95. மயக்குது 49
96. மானடி 45
97. மிஞ்சுது 5, 10
98. முந்தி 3
99. முழுங்குது 59
100. முலைவல்லடி 45
101. மெல்லடி 45
102. மேவுது 59
103. மொழிதானடி 50
104. மோடி 1, 3, 5, 49, 50, 58
105. யாரடி 6
107. யுகம் 38
108. ரோசம் 9, 13, 37, 40
109. லோலன் 2, 41
110. வக்கணம் 36

111. வசமல்லடி 45
112. வருத்துது 51
113. வல்லடிக்காரி 45
114. வழக்கு 48
115. வன்மம் 13, 89
116. வாடி 11, 12, 48, 50, 58
117. வாடுது 43
118. வாரான் 52
119. வாரீர் 35
120. விந்தை 59
121. விம்முது 43
122. வில்லங்கம் 30
123. விளையாட்டு 88
124. வீசுது 37, 59
125. வெய்யில் 40
126. வென்னீர் 43
127. வேடிக்கை 59
128. வேணும் 7, 8, 9
129. வேர்க்க 32
130. வேர்வை 55

இராமபாரதி பதங்கள்

(எண்கள் பாடல் எண்கள்)

1. அடங்குதில்லை 36
2. அடி 59, 72
3. அடியேன் 49.8, 63, 67
4. அடியோ 41, 46, 66, 68, 72
5. அண்டார் 49.26
6. அண்டி 71
7. அதல்லோ 12
8. அதிவொணாலு 57
9. அதுவேணது 31
10. அந்தமாச்சுது 27
11. அந்தா (அதோ) 25
12. அபூர்வம் 4
13. அம்மா 61
14. அய்ய 5, 6, 31, 60, 69

15. அய்யா 2, 61, 71
16. அல்லவோடி 35
17. அவகாசம் 62
18. அவளுட 55
19. அவுது 49.15
20. அழுந்துது 67
21. அறியாயோடி 35
22. அறிவேனோ 50
23. அனுகூலம் 18, 26, 37, 40
24. அன்னேரம் 71
25. ஆகுமோ 36, 49.1
26. ஆச்சு 48
27. ஆச்சுது 31
28. ஆச்சுதேம 31,69
29. ஆச்சையா 10
30. ஆச்சோ 57
31. ஆடவேணும் 40
32. ஆமோ 26, 33, 60
33. ஆம் 23
34. ஆருக்கு (யாருக்கு) 60
35. ஆரையா 21
36. ஆர் (யார்) 4, 12, 21.1, 35, 55, 61
37. ஆவதுண்டோ 35
38. ஆவலாதி 2
39. ஆனாளோ 34
40. இங்கார சத்தம் 28
41. இங்கிதம் 5, 24, 28, 40, 41, 49.7, 54, 56, 71, 73
42. இத்தனை 69
